SELECTIONS FROM

# TAMIL LITERATURE

# தமிழ் இலக்கியத் திரட்டு

## PART II—பகுதி 2

COMPILED BY

Diwan Bahadur S. BAVANANDAM PILLAI,
F.R.H.S. (Lond.) & M.R.A.S. (Lond.)

திவான் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ். (லண்டன்), எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்)

தொகுத்தது

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1919

*All Rights Reserved*

=/12/

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
TIRUVALLUVAR ... RESEARCH

3416

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

SELECTIONS FROM

# TAMIL LITERATURE

# தமிழ் இலக்கியத் திரட்டு

PART II—பகுதி 2

3416


COMPILED BY

Diwan Bahadur S. BAVANANDAM PILLAI,

F.R.H.S. (Lond.) & M.R.A.S. (Lond.)

தீவான் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

எப். ஆர். எச். எஸ். (லண்டன்), எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்)

தொகுத்தது



MACMILLAN & CO., LIMITED

MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON

1919



*All Rights Reserved*

கேடில் விழுச்செல்வம் கல்வி: ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

திருக்குறள்.

THE wealth everlasting, the wealth to be coveted, is the wealth of learning: all other kinds of wealth do not yield to a man true prosperity.

*Tirukkural.*

## உள்ளுறை

## CONTENTS

3416

### வசனபாகம்—PROSE SELECTIONS.

பக்கம்–PAGE.

1. கல்வியின் பெருமை—மாயவரம்-வேதநாயகம் பிள்ளை.
Greatness of Learning—Vedanayagam Pillai of Mayavaram .... .... .... .... 1

2. செல்வம் (சுருக்கம்)—தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.
Wealth (Abridged)—Professor T. Chelvakesavaroya Mudaliar, M.A. .... .... .... 4

3. கடன்படல்—நல்லூர்-ஆறுமுக நாவலர்.
Indebtedness—Arumuga Navalar of Nallur .... 12

4. மந்தரையின் சூழ்ச்சி (பாதுகா பட்டாபிஷேகம்: அங்கம் 1, களம் 4.)—திவான் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை.
Machinations of Mandarai (Exile of Rama: Act I, Scene 4.)—Diwan Bahadur S. Bavanandam Pillai .... .... .... .... .... 17

5. சுகிர்லாபம்—மூலகதை (பஞ்சதந்திரம்)—வித்வான் தாண்டவராய முதலியார்.
Gaining Friendship — Main Story (Panchathanthra)—Vidvan Thandavaroya Mudaliar. 32

6. கொலம்பஸ்—பி. விஜயரங்க முதலியார், எப். எம். யு.
Columbus—P. Vijayaranga Mudaliar, F.M.U. .... 42

7. வீட்டு நலம்—ஜனவிநோதினி.
Healthy quarters—Janavinodhini .... .... 48

பக்கம்—PAGE.

8. வாஸ்கோடிகாமா—திவான் பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார்.

Vascode Gama—Diwan Bahadur V. Krishnamachariar .... .... .... .... .... 53

9. போலிவைத்தியர்—ஜனவிநோதினி.

Quack Doctors—Janavinodhini .... .... 58

10. போனஉயிர் வருவதானாலும் பொய்புகலலாகாது—(அரிச்சந்திரன்—புராணப்படி இயற்றியது. அங்கம் 4, களம் 11.)—திவான் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை.

No lie should be uttered even to regain departed Life (Harischandra—Puranic Version. Act IV, Scene 11.)—Diwan Bahadur S. Bavanandam Pillai .... .... .... .... 63

11. உழைப்பு—ஜனவிநோதினி.

Labour—Janavinodhini.... .... .... .... 73

12. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை—தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.

A model wife—Professor T. Chelvakesavaroya Mudaliar, M.A. .... .... .... .... 79

13. யோக்கியமே உத்தம வழி—ஜனவிநோதினி.

Honesty is the best policy—Janavinodhini .... 87

14. தருமிக்குப் பொற்கிழி அளித்தது—(திருவிளையாடல்) நல்லூர்—ஆறுமுக நாவலர்.

Awarding the prize-purse to Dharmi—Arumuga Navalar of Nallur .... .... .... .... 99

15. அடாத செய்த சீமான்—பி. விஜயரங்க முதலியார், எப். எம். யு.

The cruel rich man—P. Vijayaranga Mudaliar, F.M.U. .... .... .... .... 102

## செய்யுள் பாகம்—POETRY SELECTIONS.

பக்கம்—PAGE.

1. நளவெண்பா: கலிநீங்கு காண்டம்—புகழேந்திப்புலவர்.
Nalavenba: Kali Neengu Kandam—Pugalendi Pulavar .... .... .... .... .... 108

2. தாயுமானவர் பாடல்.
Thayumanavar's Poems .... .... .... 113

3. குசேலோபாக்கியானம்: கண்ணனருள்—வல்லூர்-தேவராஜ பிள்ளை.
Kuchelopakyanam: Kannan's Grace—Devaraja Pillai of Vallur .... .... .... .... 117

4 திருவருட்பா—வடலூர்-இராமலிங்க சுவாமிகள்.
Thiruvarutpa—Ramalinga Swamigal of Vadalur 124

5. அரிச்சந்திர புராணம்—நல்லூர்-வீரகவிராயர்.
Harischandra Purana—Veerakaviroyar of Nallur. 125

6. நீதிச் செய்யுள் திரட்டு.
A collection of Ethical poems .... .... .... 135

i. நீதிநெறி விளக்கம்—குமரகுருபர சுவாமிகள்.
Needi Neri Vilakkam — Kumara gurupara Swamigal .... .... ...., .... 135

ii. நன்னெறி—சிவப்பிரகாச சுவாமிகள்.
Nanneri—Sivaprakasa Swamigal .... .... 136

iii. நீதிவெண்பா.
Needi Venba .... .... .... .... 136

iv. திரிகடுகம்—நல்லாதனார்.
Thirikadukam—Nallathanar .... .... 137

v. நான்மணிக் கடிகை— விளம்பி நாகனார்.
Nanmanikadigai—Vilambi Nakanar .... 139

பக்கம்—PAGE.

vi. ஏலாதி—கணிமேதாவியர்.
Elathi—Kanimethaviar .... .... .... 140

vii. பழமொழி—முன்றுறையரையர்.
Palamoli —Munruraiaryar .... .... .... 140

viii. நாலடியார் - ஜைன முனிவர்கள்.
Naladiyar—Jain Saints .... .... .... 141

7. ஸ்ரீராமர் தாலாட்டு—குலசேகராழ்வார்.
Sree Rama's Lullaby—Kulesakara Alwar .... 142

8. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.
Pattinathu Pillayar's Poems .... .... .... 144

9. தமிழ்
Tamil .... .... .... .... .... .... 146

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# தமிழ்

# இலக்கியத் திரட்டு

3416.

## வசன பாகம்

### 1. கல்வியின் பெருமை.

**கல்**வியின் பெருமை சொல்லுக்கு அடங்காததா யிருக்கிறது. பிரகாசத்திற்கும் அந்தகாரத்திற்கும், புண்ணியத்திற்கும் பாவத்திற்கும், சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும், எவ்வளவு பேதமோ அவ்வளவு பேதம் செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் இருக்கின்றது. செல்வம் புத்தியைக் கெடுக்கும்; கல்வி புத்தியைக் கொடுக்கும். செல்வம் கொடுக்கக்கொடுக்கக் குறையும்; கல்வி கொடுக்கக்கொடுக்க நிறையும். செல்வம் சிலநாளில் நாஸ்தியாம்; கல்வி அழியாத ஆஸ்தியாம். செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும்; கல்வி யாவராலும் உபசரிக்கப்படும். செல்வம் நம்மைத் துஷ்டர் கையில் ஒப்புவிக்கும்; கல்வி நம்மை ஆபத்திலிருந்து தப்புவிக்கும். செல்வம் காமாதிகளை உண்டாக்கும்; கல்வி காமாதிகளை நாசமாக்கும். செல்வர்களுடைய பேர் அன்னிய தேசங்களில் அப்பிரசித்தம்; கல்விமான்களுடைய பேர் ஜகத் பிரசித்தம். கல்வியே தனம். கல்வியே கனம். அழகில்லார்க்குக் கல்வியே அழகு. ஆபரணமில்லார்க்குக் கல்வியே பூஷணம். பலமில்லார்க்குக் கல்வியே பலம். துக்கமுள்ளார்க்குக் கல்வியே சுகம். தரித்திரர்களுக்குக் கல்வியே பாக்கியம். ஆபத்துவேளையிற் கல்வியே கவசம். கல்வி நினைத்ததெல்லாம் தருஞ் சிந்தாமணி.

ஆற்றின் மணலை யெண்ணினாலும் நக்ஷத்திரக் கூட்டங்களை யெண்ணினாலும் உலகம் உண்டானது முதல் 'வர்த்த

மான காலம்வரையில் இறந்துபோனவர்களுக்குத் தொகை சொல்லக் கூடுமா? அவர்களுடைய பெயர்களெல்லாம் அப்பிர காசமாய் மறைந்துபோய்விட்டன. வித்வான்களுடைய பெயர் களும் அவர்களுடைய கிரந்தங்களும் என்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. பூர்வீக சரித்திரங்களை யெழுதிப் பூர் வீக அரசர்களுடைய பெயர் விளங்கும்படி செய்தவர்களும் கல்விமான்களே. கல்விமான்களுடைய கிருபை யில்லாவிட் டால் அந்த அரசர்கள் இறந்த நிமிஷத்தில் அவர்களுடைய பெயர் அப்பிரகாசமாய்ப் போயிருக்குமென்பது சந்தேகமா? இங்கிலாந்து பிராஞ்சு முதலான ஐரோப்பா கண்டத்திலுள்ள நாகரீகமும், நீதியும், ஒழுங்கும், செல்வமும் அபூர்வமான வேலைகளும், அந்தத் தேசத்தாருடைய கல்வித்திறத்தினுலும் அவர்கள் அனுசரிக்கிற சத்தியவேதக் கொள்கையினுலும் உண்டாயினவே யல்லாமல் மற்றவைகளா லல்லவே. சமுத்தி ரத்தைக் கிணறு விழுங்கியதுபோல் இந்த இந்துதேசத்திலுள்ள கோடானுகோடி ஜனங்களைச் சில இங்கிலீஷ்காரர்கள் ஆளு வது கல்வியின் பலத்தினுலே யல்லாமல் சரீரபலத்தினு லல்லவே.

படியாதவர்கள் தங்கள் சுதேச காரியங்களையே அறியாத வர்களா யிருக்கிறுர்கள். படித்தவர்கள் பூமண்டலமெல்லாம் சஞ்சரிக்கிறவர்கள்போல் பூதபவுஷிய வர்த்தமானங்களை யெல்லாம் பல பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்துகொள்ளுகி றுர்கள். படியாதவர்கள் இப்போதிருக்கிற வித்வான்களையே அறியார்கள். படித்தவனே வென்றுல் தற்கால வித்வான்களை மட்டுமல்ல, பூர்வீக வித்வான்களையும் முகமுகமாகத் தரிசித் துச் சம் ரஷணஞ் செய்கிறவன்போல் அவர்களுடைய கிரந் தங்களிலுள்ள நீதிகளையும், அலங்காரங்களையும், வேதார்த் தங்களையும் கற்றுக்கொள்ளுகிறுன்.

படித்தவனுக்கு உலகமே ஒரு பெரிய புஸ்தகமா யிருக் கின்றது. பஞ்சபூதங்களும், பூமியிலுள்ள மலைகள், மரங் கள், கடல்கள், நதிகள், முதலியவைகளும், வானத்திலுல வும் சந்திர சூரிய நக்ஷத்திரங்களும், மேகங்களும் தத்துவ ஞானத்தை யுபதேசிக்கிற குருமூர்த்திகளா யிருக்கின்றன. பூமியிலுள்ள நானுபேத ஜீவாத்மகோடிகளையும், விருக்ஷ

ஜாதிகளையும், அந்த விருக்ஷங்களிலுள்ள மரகதத் தகடு போன்ற இலைகளையும், நவரத்தினத்தையொத்த பரிமள புஷ்பங்களையும், கற்கண்டுக் கட்டிபோன்ற மதுரக் கனிகளை யும், கல்விமான் பார்த்துப் பார்த்து நேத்திரானந்தத்தை யடைகிறான். வானம்பாடி, குயில், கிளி, பூவை முதலிய பக்ஷிகள்பாடும் சங்கீதத்தைக் கேட்டு சுரோத்திரானந்தத்தை யனுபவிக்கிறான். அந்த ஆனந்தங்களைக் கொடுத்த பரம கிருபாநிதியை உடனே தியானித்து ஆத்மானந்தத்தையும் அடைகிறான். படியாதவனோ வென்றால் அந்த ஆனந்தங் களை அனுபவிக்கத் தெரியாமல் சஞ்சாரப் பிரேதம்போலக் கண்ணிருந்தும் பாராதவனாகவும், காதிருந்துங் கேளாதவனாக வும், மனமிருந்தும் நினையாதவனாகவும் திரிகிறான்.

சர்வலோக கர்த்தாவும், சர்வஜீவதயாபரரும்,சர்வாந்தரியா மியும், சர்வவிபுவும், தர்மஸ்வரூபியும், அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகரும், ஆதியந்த மில்லாதவரும், மனோவாக் குக் கெட்டாதவரும், பஞ்சேந்திரியங்கட்கு அதீதரும், தேவாதி தேவரும், கோடிசூரியப் பிரகாசரும், பூதங்களுக்குக் காரணபூதரும். சூரியனுக்குச் சூரியனும், உடலுக்கு உடலும், உயிருக் குயிருமாய், இந்த உலகத்தைப்போல அநந்தகோடி உலகங்களையும், அநந்தகோடி சந்திர சூரிய நக்ஷத்திரங்களை யும் உண்டுபண்ணி, அவைகளை ஆதாரமின்றி அந்தரத்தில் நிறுத்திக் காப்பவரும், கற்பகோடி காலங்களை நிமிஷமாகக் கழிக்கிறவரும், நித்திய நிர்மல நிர்விகார நிர்த்தொந்த நிஷ் பிரபஞ்சப் பொருளும் ஆகிய பகவானைக் கல்வி அறிவினால் அறியலாமே அல்லாமல் வேறொன்றினாலும் அறியக்கூடாதே.

நம்மை ஞானாத்மாவாகப் படைத்து, நமக்காக அஸ்தி வாரம், தூண், சுவர் முதலியவைகளில்லாமலே பூமியாகிய பெரிய அரமனையைக்கட்டி; ஆகாசமண்டபம் வளைத்து; நக்ஷத் திரங்களாகிய முத்துமேற் கட்டி தூக்கி; செப்பும் நெய்யும் திரியும் தூண்டுகோலுமில்லாத சந்திர சூரியர் முதலிய தீபங்களை யேற்றி; புல்பூண்டு முதலிய பச்சை ரத்னக் கம் பளங்களைக் கீழே விரித்து; ஸ்வர்ணகோடிகளாலும் நவரத் னங்களாலும் நானாவித விநோத விசித்திரமாகச் சித்திர மண்டபத்தை அலங்கரித்து; மதுரமான கனிவர்க்கங்களும்,

பரிமள புஷ்பங்களும் நிறைந்த சோலைகளையும், சிங்காரத் தோட்டங்களையும், மலைகளாகிய உன்னத சிங்காதனங்களை யும், நதி, ஏரி, குளம் முதலிய நீராடுந் துறைகளையும், தாம ரைத் தடாகங்களையும், ஆனை, குதிரை, ரிஷபம் முதலிய வாகனங்களையும் கொடுத்து; சமுத்திரங்களும் மேகங்களுமா கிய மேளவாத்தியக்காரர்களையும், அன்னம், மயில் முதலிய நாடகசாலைப் பெண்களையும், மேககடங்களால் நீரிறைக்கிற ஆகாசப் பெண்ணையும், வாயுவாகிய ஆலவட்டக்காரனையும், அக்கினியாகிய சமையற்காரனையும், சம்பளமில்லாத ஊழி யக்காரர்களாக நியமித்து; பின்னும் எண்ணிமுடியாத நன் மைகளையும், சுகபோக பாக்கியங்களையும், நமக்குத் தந்தரு ளிய பரமதயாள மூர்த்தியைக் கற்றறிந்த ஞானிகள் உணர் வார்களேயன்றிக் கல்லாத மூடஜனங்கள் எப்படி உணர் வார்கள் ?

## 2. செல்வம்.

**சோ**றுண்ணும் ஒவ்வொருவனும் சோம்பித்திரியாமல் உழைத்தல் வேண்டும். பொருளைச் செலவழிக்கின்றவன் அப்பொருளைத் தேடுதல் வேண்டும். 'தோட்டிபோ லுழைத் துத் துரைபோல் சாப்பிடவேண்டும்.'

பொருவறு பந்தமெல்லாம் புணர்த்திடும் ; தெய்வசிந்தை
ஒருவமே விட்டுநிற்கும் ; உறக்கமும் இறக்கச்செய்யும் ;
கருவினுட் புகுத்தும் ; இன்ன கரிசுகண் டதனாலன்றோ,
இருநிலத் திடைவெ றுக்கை என்மனார் புலமைசான்றோர்.

என்பதும்,

முறைதவிர் கொடுங்கோன் மன்னர் முனிவிற்கு நனியும் அச்சம் ;
கறைகெழு களவு செய்வார் கரத்திற்கும் அழற்கும் அச்சம் ;
மறைவறு தாய மாக்கள் வௌவுவர் என்றும் அச்சம் ;
அறைபொருள் பெற்றா ரல்லர் : அச்சமே பெற்றார் போலும்.

என்பதும், புராண வைராக்கியம்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்.

பாடில்லாமற் பலனில்லை. புத்திசாலிகள் அருமையான காரியங்களைச் செய்வார்கள். பெருமையும் சிறுமையும் அவரவராலேயே வரும். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.'

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

யாதொன்று சம்பாதிப்ப தருமையோ அதைச் சம்பாதித்தல் வேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்றல் வேண்டும். காப்பாற்றினதை விர்த்திபண்ணல் வேண்டும். விர்த்திபண்ணினதைத் தானும் அனுபவித்து உத்தம பாத்திரத்தில் செலவழித்தல் வேண்டும். ஏனென்றால், காப்பாற்றாத திரவியம் நாசமாகும். விர்த்திபண்ணாதது குறையும். தானும் அநுபவித்துச் சற்பாத்திரத்தில் செலவழியாதது வீணாகும். பொருள் வரும் வழிகளாவன, வேளாண்மை சிற்பம் வாணிகம் கைத்தொழில் வித்தைகற்பித்தல் இராசசேவை நியாயவாதம் நல்ல நூல்களையும் உரைகளையு மியற்றுதல் முதலாயின. யாதொரு வழியால் பொருள் தேடுமிடத்துத் தருமநெறியாலே தேடுதல் வேண்டும். களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய்வழக்கு, பொய்ப்பத்திரம், விசுவாசகாதம், பரிதானம்வாங்குதல் முதலிய பாவநெறியால் பொருள்தேட லாகாது. பாவநெறியால் வந்த பொருளானது தீராத வசை இராசதண்டம் மனக்கவலை முதலிய தீமைகளைத் தரும். ஏதேனும் ஒரு தொழில் செய்து ஜீவனம்பண்ணத் திறனுடையவர்கள், அது செய்யாது, தாயப்பொருளைக்கொண்டும், மனைவியருடைய ஸ்ரீதனத்தைக்கொண்டும், அவ்விரண்டும் இல்லையாயின் யாசித்தும் சீவிப்பது, மானமின்மையேயாம். அறிவும் ஆண்மையும் மான்மும் உடையவர்கள் எக்காலும் இது செய்யார். 'தேடாதழிக்கிற் பாடாய் முடியும்.' 'போனக மென்பது தானுழந் துண்டல்.' கூழேயாயினும் தமது தொழின் முயற்சியாலே கிடைத்தது அமிர்தமேயாகும். சுவதேசத்தில் தொழின் முயற்சிகள் பலிக்காவிடின், தேசாந்தரம் சென்றும் தாமே வருந்திச் சம்பாதித்துச் சீவனஞ் செய்தலே மனிதர்க்கு அழகு. ஆகையால், 'திரைகட லோடியும் திரவியம் தேடு.'

அப்போதைக் கப்போது நாம் தேடும் பொருளை நான்கு பாகமாகப் பகுத்து, அவைகளுள் இரண்டு பாகத்தை நமது

அநுபவத்துக்குச் செலவிட்டு, ஒரு பாகத்தைச் சேர்த்து வைத்து, மற்றதைக்கொண்டு தருமம் செய்தல் வேண்டும் என நமது நூல்கள் வரையறுத் திருக்கின்றன. 'வருவாயுட் கால் வழங்கி வாழ்தல்' என்றது, இக்கருத்துப் பற்றியே. ஆயினும் இவ்விதியைத் தவறுமல் அங்ஙனமே கடைப்பிடித்து நடப்பது லௌகிகத்தில் கஷ்டசாத்திய மாகும். எவ்வித அளவாக வாயினும் பகுத்துச் செலவிடுவதும் சேர்ப்பதும் தருமஞ் செய்வதும் மனிதனைப் பொறுத்த கடமை

நமது அநுபவத்தின் பொருட்டுச் செலவிடுவதில், நாம் தேடும் பொருள் முழுவதையும் எவ்வாற்றுனும் அழித்த லாகாது. வருவாயின் அளவினும் செலவின் அளவு சுருங்கு தல் வேண்டும். அது இயலாதாயின் வரவுக்கொப்ப வாயினும் செலவிடுதல் வேண்டும்.

ஆன முதலில் அதிகம் செலவானுல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு.

எவனிடத்தில் வருவாயிற் செலவு மிகுமோ, அவன் வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இல்லாமற் கெடும்.

'அளகேசனுனுலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.' வரவு செலவு கணக்கு அப்பொழு தப்பொழுது எழுது தல் வேண்டும். எல்லா அமிசங்களையும் பன்னிப்பன்னி எழுதவேண்டு மென்கிற அவசியம் இல்லை. வந்த வரவு எவ்வளவு? வாங்கவேண்டிய பண்டங்களின் விலை எவ்வளவு? இன்னும் என்னென்ன செலவுகள் நேரிடுவதாக இருக்கின் றன? அவை அத்தனையும் அவசியமான செலவுகள்தானு? இவைகளை ஒருவாறுக அறிதல்வேண்டும். வந்த வருமானம் இவ்வளவு, செலவழிந்த மொத்தம் இவ்வளவு என்று அப் போதைக்கப்போது எச்சரிக்கையாகப் பார்த்து வருபவன் ஆராதூரித்தனமாகச் செலவிடமாட்டான். பாங்கு பரிசனை யறிந்து குடும்ப பாரத்தை நிர்வகிப்பவர் தமது வருவாயில் பாதிக்கதிகம் செலவிடல் ஆகாது. தனிகராக விரும்புவோர் மூன்றிலொரு பங்கில் தமது செலவுகளை அடக்கவேண்டும்

என்பது ஐரோப்பியரில் அநுபவ முதிர்ச்சி உடையவர்களது கொள்கை.

மிதமான வருமானம் உள்ளவர்கள், உயர்ந்த உடுப்பு உடுத்தால், அன்னப்பிடி, வெல்லப்பிடி ஆகிவிடும். 'உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு.' இவர்கள் போக்கியமான உணவை உண்ண விரும்பினால், சாதாரண உடை உடுப்பதும் கஷ்டமாகும். ஐசுவரியவான்களும், பல விதத்திலும் கங்குகரையின்றிச் செலவு செய்துவந்தால் விரைவிலே ஊதாரிகளாய் அழிவர். எப்படிப்பட்டவர்களும் அததற்குரிய செலவைத் தங்கள் வருமானத்துக்கும் இருப்பிற்கும் ஏற்றவாறாக வரையறுத்துக் கொள்ளவேண்டும். ஓரொரு சமயம் ஏதாயினும் ஒரு வழியில் செலவு மிகுவதாயின், மற்றொரு வழியில் நேர்தலான செலவைக் குறைத்தல்வேண்டும். 'குந்தித் தின்றால் குன்றுமாளும்'. ஆகையால், தனிகரானவரும் கலியாணம் முதலான விசேஷங்களில், தங்கள் நிலைமைக்கும் இருப்புக்கும் ஏற்றவாறு செலவைச் சிறிது தளரவிட்டாலும், மற்றை வாலாயமான செலவுகளை வரையறைப் படுத்தியே வைத்திருக்கவேண்டும். இன்னதற்கு இவ்வளவென்று செலவு ஏற்பட்டுவிட்டால், பின்பு அதைக் குறைப்பது இலகுவாய் இயலாது.

'உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை.' ஆகையால், கையிருப்பாக ஒருபண்டம் இருக்கும்போதே மேலுமேலும் வாங்குதலாகாது. அது செலவாகி முட்டுற்ற பின்னர் வாங்குவதே நலம். அப்போதுதான் அதன் அருமை விளங்கி, அதனைத் திட்டமாகக் கையாளும் வழக்கம் உண்டாகும். யாதொரு பண்டம் மலிவாக இருக்கிறதோ, எப்படியும் கையில் பொருள் இருக்கிறதே என்று, அந்தப் பண்டத்தை வாங்கவேண்டா. பார்த்த பார்த்த பண்டங்களையெல்லாம் வாங்க விரும்புவது கேவலம் குழந்தைகளின் இயற்கை. இன்றியமையாதவை நீங்க, ஏனையவற்றை வாங்குவது, வீண் விரயமே. இவ்வகை விரயம், உப்பின் குவியலிற் படிந்த நீருக்குச் சமானம்.

பண்டங்களைப் பாழாக்காமல், வீண்செலவு செய்யாமல், செய்த மட்டில் சீருஞ் செட்டுமாகச் செய்யும் குடித்தனப்

பாங்கைக் கண்டு எல்லோரும் நன்குமதித்து மெச்சுவர். உள்ள படி தமக்குள்ள நிலைமையைப் பின்னும் பெரிதாக ஊரிலுள் ளவர் மெச்சுமாறு, சூழ்குடித்தும் பன்னீர் கொப்பளிக்கின்ற வீணர்கள் விருதுக்கு வேட்டை யாடுவோராவர். உத்தியோ கத்துக்குத்தக்க சுகம் தேடாமல், காலத்துக்கேற்ற கோலங் கொள்ளாமல், குடுமிக்கேற்ற கொண்டைபோடாமல், வீம் புக்கு வேடங்கொண்டு வீண் விபரீதத்தால் பேதையர் வீண் செலவு செய்ய உடன்படுவர். இங்ஙனம் டால் டம்மாரம் போட்டுக்கொண்டு திரியும் டாம்பிகர்களுடைய கதி கடன் பட்டுக் கடை கெடுவதே ஆகும்.

'அழகுக் கிட்டால் ஆபத்துக் குதவும்' என்றபடி, சில பூஷணங்களைத் தேடிவைத்தாலும், ஆபத்துக்கு அவை உத வியா யிருக்கும். வீடு வாயில் தோட்டம் துரவு நிலம் நீர் முதலியவைகளைத் தேடிவைத்தாலும், அவைகளால் வரும் வருமானம் அவ்வாபத்துக் காலத்துக்கு ஆதாரமாக இருக் கும். செலவுகளும் தானதருமங்களும் போக, வருவாயில் எஞ்சியதை இறுகப் பிடித்துச் சேர்த்துவைத்தால் மாத்திர மே இவைகளைத் தேடுதல் முடியும். வரவுக்கு மிஞ்சின செலவு செய்யாமலும், வரவத்தனையுஞ் செலவழிக்காமலும் இருப்ப வர்களே, ஏதாவது சேர்க்கக்கூடும். வரவத்தனையும் செல வழிப்பதே பெரும்பாலார்க்கு இயல்பாக இருக்கின்றது. கொஞ்சமாயினும் இறுகப்பிடித்துச் சேர்மானம் செய்கிற வழக்கத்தைக் கஷ்டப்பட்டாயினும் செய்துகொள்ளல் வேண் டும். வரவுக்குமேல் செலவிடுதலான துர்வழக்கத்தை ஒழிப்ப தற்கு இதுவே உபாயம்.

வயது ஏற ஏற, சமுசாரபாரம் வெகுவாய்ப் பலத்துவரும். சமுசாரம் பெருகும்போது அதற்கேற்ப வருமானமும் பெரு காவிட்டால், சமுசார பாரத்தை நிர்வகிப்பது மிகவும் கஷ்ட மாகும். பிள்ளைகளுக்குக் கல்வியாவது வேறு வித்தையாவது கற்பித்தல் வேண்டும். பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு, பூஷணம் ஸ்ரீதனம் முதலியவைகளைத் தேடல்வேண்டும். பொருள் ஊறுநாளில் குருட்டுத்தனமாய் அதை வீணில் வாரி இறைத்துவிட்டால், பொருள் வரும்வழி தூர்ந்துபோகும் போது, சமுசாரம் வாடி வதங்கிப்போகுமே. யாதொரு

தொழிலாகிற வயலிலே, சோம்பலென்னும் களையைப் பிடுங்கி, ஊக்கமாகிய எருவிட்டு, உழைப்பென்னும் நீர் பாய்ச்சி, குடி சூது முதலிய பட்டிமாடுகள் மேயாமல், தனமாகிய தானியத்தை விளைவித்தவர்கள், தருமமான கடமைகளை யிறுத்து, உண்டதுபோக எஞ்சியதைப் பாங்கியாகிய குதிரில் சேர்த்து வைக்காவிட்டால், கைவறட்சியான கருப்புக் காலத்தில் முதலாளிகளுக்குக் கொத்தடிமை குலவடிமையாகிப் பஞ்சுபடாத பாடும் படலாகுமே. வருவாயிற் சிறிது தொகையும் இறுகப் பிடியாமல் விடுபவர், இந்த இன்னல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். தங்கள் எதிரிலே காணப்படும் புதுப்பாடங்களையும், இறந்த காலத்திற் கண்ட பழம்பாடங்களையும், பல முறையும் சிந்தித்து, அறிவு தெளியவேண்டும்.

கையில் ஒரு காசு மிகுந்திருக்கும்போது, இந்த ஒரு காசு எதற்காகும், இதனால் என்ன நன்மை உண்டாகப்போகிறது என்று அலக்ஷியமாக எண்ணி, அதை வீணிலே செலவழித்த லாகாது. ஒரு காசு பேணின், ஒரு காசு தேறும். தம்படி தம்படியாய்ச் சேர்ந்துதானே ரூபா ஆகும். ‘பல துளி பெருவெள்ளம்’ அல்லவா?

மெய்தான்: இவ்விதம் காலணு அரையணுவாகச் சில்லரை சில்லரையாகச் சேர்த்து, எக்காலத்திற் செல்வராகிறது என்று நினைக்கலாகாது. கொஞ்சம் வருகிறபோதே பொருள் சேர்க்கிற வழக்கம் இல்லாவிட்டால், அதிகம் வருகிறபோது அவ்வழக்கம் உண்டாகமாட்டாது. சீருஞ்செட்டுமாக வரவு செலவுகளை வரையறை செய்யும் குடித்தனப் பாங்கறியாது திடும்பிரவேசமாகச் செல்வம்பெற்ற வறிஞர்களுக்கு, அதை வைத்துப் படைக்க வழி தெரிகிறதில்லை. நிதியைக் கண்ட நித்திய தரித்திரர்கள் செய்கை, நகைபிழை நாடகமாகவே முடியும். ஆகையால், சிறிது சிறிதாகச் சேர்த்து வழக்கப் பட்டவர்களுக்கே பணத்தின் அருமை தெரியும். அவர்களிடம் திடும்பிரவேசமாக வந்த செல்வமும் சீரழியாது நல் வழிப்படும்.

‘பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்தது’போல், சிலர் பணஞ்சேர்க்கத் தொடங்கிப் பணப்பேய்களாக முடிகின்றனர். அங்கத்தைக் கட்டியும் சிலர் தங்கத்தைச் சேர்ப்

பவர் ஆகின்றனர். சிலர், 'தாக்ஷிணியம் தன நாசனம்,' என்று கொண்டு, நிர்த்தாக்ஷிணியராகி, பணமே பெண்டிர், பணமே மக்கள், பணமே உறவு, பணமே நட்பு, பணமே மற்றும் முற்றுமாகி, ஊணும் உறக்கமும் ஒழித்து, தாமும் அநுப வியாமல், பிறரையும் அநுபவிக்க வொட்டாமல், உலோபிக ளாகின்றனர்.

அப்பொருள் அவரிடம் இருப்பினென்: இராவிடிலென்? பொருளைச் சேர்த்துப் பெட்டியில் நிறையவைத்துப் பார்க்க வேண்டும் என்கிற அவாவுடன் அதனைச் சேர்த்தல் ஆகாது. ஏதாவது ஒரு தகுந்த நோக்கத்துடன் மாத்திரமே பொருளைச் சேர்த்தல் வேண்டும். எதிர் பாராத சில செலவுகள் அப்போ தைக் கப்போது நேரிடுவது உண்டு. அவைகளின் பொருட்டு அவரவர்களுடைய வரவிற்கும் நிலைமைக்கும் ஏற்ப இயன்ற வளவு சேர்த்துவைத்தல் வேண்டும்.

பிறரிடத்தில் கூலிவேலை செய்து இடர்ப்பட்டுப் பிழைப் பவர்கள், தங்கள் வருமானத்தில் சிறிது நிலுவை பிடித்துச் சேர்த்துவந்தால், அச்சேர்மானத்தைக் கொண்டு தாங்கள் சில காலத்தில் சுவதந்தரராகித் தங்கள் மட்டிலே ஏதாவது ஒரு தொழின் முயற்சி செய்து சீவிக்கலாம். ஊதாரிகளான எசமானரிடத்தில் உத்தியோகம் செய்பவர் எத்தனைபேர், இங்ஙனம் சுவதந்தரர்களாகிவிட, அவ்வெசமானர் பரதந்தர ராவதை நாம் காண்கிறேம். 'என் வர்த்தக சாலையில் வேண்டு மளவுக்கு அதிகமாகவே இலேககர்களும் மற்ற ஆள்களும் இருத்தலால் உன்னை வைத்துக்கொள்ள அவசியமில்லை' என்ற சாவகாரியின் வார்த்தையைக் கேட்டு மனம் புழுங்கித் தலைகுனிந்து திரும்பிச் செல்கையில், கீழே விழுந்து கிடந்த ஒரு குண்டூசியைக் கண்டு, சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவு மாகையால் இந்த ஊசியும் ஓர் ஆபத்துக்கு உதவு மென்று அதை யெடுத்துத் தனது உடையில் செருகிக் கொண்ட லப்பீட் என்பவன், அதுவே வியாஜமாக அந்தச் சாவகாரியிடம் வேலையிலமர்ந்து, தனது உழைப்பினாலும் யோக்கியதையாலும் அவ்வர்த்தக சாலையில் மேன்மே லுயர் ந்து, தலைமை உத்தியோகஸ்தனாகி, கடைசியில் தான் சேர்த்து வந்த சேர்மானத்தின் உதவியால் வர்த்தகத்தில் பாகஸ்தனாய், அப்பால் தனியே ஒரு வர்த்தகசாலையும் ஏற்படுத்திக்கொண்டு,

இறந்துபோன சாவகாரியின் மைந்தனுக்கு நன்றி யறிவுடனே பொருளுதவியும் செய்துவந்தான்.

'தனக்குக் கண்டு தானம் வழங்கவேண்டும்.' தாய் தந்தையர் பொருளின்றி வருந்தா நிற்கத் தனயர்கள் ஏனையர்க்குத் தானஞ்செய்வது கிரமமாகாது. நம்முடைய உறவினரில் நொந்திருப்பார்க்கு உதவி செய்யாமல் மற்றவர்க்கு உபகாரம் செய்வதும் பேதைமையே. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.' குடும்பச் செலவிற் குரியதுபோக, இங்ஙனம் உறவினர் முதலியோர்க்குச் செயக் கடவ கடப்பாடுகளைச் செய்து எஞ்சிய பொருள், வறியார்க்கு ஈதற் குரியது.

நமது நூல்கள் வரையறுத்திருக்கும் தானவகை முப்பத்திரண்டில் சிலவற்றை, இக்காலத்தவர், ஏற்புடையனவாகக் கொள்ளார். அங்ஙனம் தள்ளுபடி ஆயினபோக, ஏனையவற்றில் பல, வெகுஜன நன்மைக்கு உரியனவே. ஏழைகள், தங்களளவில் தனித்தனியாகவும், பலர்கூடி ஒருமிக்கவும், தேடிக்கொள்ள முடியாத நன்மைகளைத் தேடுவதே, செல்வர்கள் செய்தற்குரிய சிறந்த தானம். செல்வர்களும் தங்களளவில் தனித்தனியாக இப்படிப்பட்ட தானங்களைச் செய்து முடிக்க இயலாவிட்டால், பல செல்வர்கள் ஒருங்குகூடி அவற்றை நிறைவேற்றுவது உசிதம். கல்விச்சாலை ஸ்தாபித்தல், தருமவைத்தியசாலை ஏற்படுத்தல், அநாதப் பிள்ளைகளைக் கல்வியுங் கைத்தொழிலுங் கற்பித்து வளர்த்து விடுதல், திக்கற்ற விதவைகளுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்தல், ஏழைகள் தீயொழுக்கத்தைவிட்டு நல்வழியில் நடப்பதற்கான உபாயங்களைத் தேடுதல் என்றூற் போன்றனவே, இலக்ஷாதிகாரிகளும் கோடீசுவரர்களும் மேற்கொண்டு செய்யத்தக்க தருமங்கள்.

விசேஷ செல்வத்தால் இன்பமும் அஃதில்லாமையால் துன்பமும் உண்டாகும் என்பதில்லை. எவ்வளவு இருந்தும் அவா அடங்காதவர்கள் எளியரே. வருந்தித் தேடியது சிறிது பொருளே யாயினும், அதனாலாவக்கூடிய சௌகரியங்களைத் தேடிக்கொண்டு திருப்தியாக அமைந்திருப்பவர்களே, அஷ்டைசுவரியம் பெற்றவர்கள். 'போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.'

## 3. கடன் படல்.

சரீர சுகத்தின் பொருட்டும், தருமத்தின் பொருட்டும், யாவரும், தங்கள் தங்கள் வரவுக்கேற்ப, மட்டாகச் செலவு செய்தல் வேண்டும். வரவுக்குமேலே செலவுசெய்யப் புகுவோர் கடன்படத் தலைப்பட்டுப் பெருந்துன்பத்தையும் அவமானத்தையும் அடைவர். கடனுடையவருக்கு இம்மை மறுமை இரண்டினும் இன்பமே இல்லை. எத்துணைப் பெருஞ் செல்வராயினும், கடன்படத் தலைப்படுவோர், விரைவிலே தங்கள் செல்வமெல்லாம் இழந்து, தரித்திரராவர். இம்மையிலே மனிதர்கள் அநுபவிக்கும் துன்பங்க ளெல்லாவற்றினும், கடனால் உண்டாகுந் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை. தனிகனைத் தாயைக் கண்டாற்போலப் பேரானந்தத்தோடு கண்டு அவனிடத்தே கடன்பட்டவர் பின்பு அவன் எதிர்ப்படும்போது அவனைப் பேயைக் கண்டாற்போலப் பெரும் பயத்தோடு கண்டு, நடுநடுங்கி ஒளிப்பிடந் தேடி ஓடுவர்.

பொருளில்லையானால், கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கினும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசிநோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம். இவைகளெல்லாம் அவமானங்களல்ல ; இவைகளினாலே பிறருக்கு யாதொரு கேடும் இல்லை; இவைகளினால் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இவைகளாலே துன்பம் உண்டாயினும், அத்துன்பமோ மிகச் சிறிது; அச் சிறுதுன்பமும், நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது, நீங்கிவிடும். கடனோ இப்படிப்பட்டதன்று. பெருவியாதி முதலிய கொடு நோய்களினால் உண்டாகுந் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனால் உண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது.

கடன்படக் கூசாதவர் பொய்சொல்லக் கூசார்; பொய் வழக்குப் பேசக் கூசார்; விசுவாசகாதஞ் செய்யக் கூசார்; கொலைசெய்யக் கூசார். கடன் படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித் தழைக்குந் தூது.

நம்முடைய தேசத்தாருள்ளே கடன்படும் வழக்கம் மிகப் பெரிது. கடன் படாதவர் நூற்றுக்கு ஒருவர் கிடைப்பதும் மிக அரிது. அநேகர் சுபாசுப கருமங்களிலே பிறர் செலவு செய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யா தொழிந்தால் தங்களுக்கு அவமானமாகும் என்று எண்ணிக், கண்ணை மூடிக்கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவு செய்கின்றார்கள். கடன்பட்டு வட்டி வளர்ந்தபின், முன்னுள்ளதும் இழந்து பசிநோயால் வருந்துதலும், கடனைத் தீர்க்க இயலாது தனிகர் குடியைக் கெடுத்தலும் அவமானமல்லவாம்; வரவுக்கேற்ப மட்டாகச் செலவு செய்து முட்டின்றி வாழ்தல் அவமானமாம். ஐயையோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை!

நம்முடைய தேசத்தார்கள் சுபாசுப கருமங்களிலே செலவிடும் பொருள் பெரும்பாலும் யாவரிடத்தே சேர்கின்றது? தொழில் செய்து சீவனஞ்செய்யச் சக்தியுடையவர்களாய் இருந்தும் அது செய்யாத சோம்பேறிகளிடத்தன்றோ? யாசித்துப் பொருள் சம்பாதிக்கும் இச்சோம்பேறிகளுள்ளே அநேகர் உண்டுடுத்து, எஞ்சிய பொருள்கொண்டு ஆபரணஞ் செய்வித்து, வீடு கட்டுவித்து, விளைநிலம் தோட்ட முதலியவை வாங்கி, நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு, செல்வர்களாய் இருக்கின்றார்களே. தொழில் செய்து வருந்திச் சம்பாதிப்பவர்களுள்ளே அநேகர் சுபாசுப கருமங்களிலே இவர்களிடத்திலே கடன்பட்டு, இவர்களுக்கே இறைத்துவிட்டு, வட்டி வளர்ந்தபின், இவர்கள் தங்கள் வீட்டு வாயிலில் வந்து சிறிதும் கண்ணோட்டமின்றித் தங்களை வாயில் வந்தபடி பேச, அவமானமடைந்து, தங்கள் தாவர சங்கமப்பொருளை விற்றுக் கொடுத்துவிட்டு, அன்னத்திற்கு அலைகின்றார்களே.

அநேகர் ஆபரணஞ் செய்வித்தற்கும், வண்டி குதிரை வாங்குதற்கும், வீடு கட்டுவித்தற்கும், விளைநிலம் தோட்ட முதலியவை வாங்குதற்கும், கடன் படுகின்றார்கள். வட்டி வளர்ந்தபின், கடன்தீர்க்கப் பிறிது வழி இன்மையால், அவ்வாபரண முதலியவற்றை விற்கின்றார்கள். அவைகள் வாங்கிய விலைக்கு விலைப்படுதலே அரிது. அப்படியாகவே, அவைகளின் விலைப்பொருள் வட்டிக்கும் முதலுக்கும் எப்

படிப் போதும்! போதாமையால், தங்களிடத்து முன்னுள்ள தாவர சங்கமப் பொருளையும் விற்றுக் கொடுத்துவிட்டு, வறியவர்களாய் வருந்துகின்றார்கள்.

கடன்பட்டு ஆபரணந் தரிப்போரும், வண்டிகுதிரை ஏறுவோரும், பவனி வருவோரும், பிறர் பார்த்து இன்பம் அநுபவிக்கத், தாங்கள் தங்கள் கடனை நினைந்து நினைந்து நெஞ்சந் திடுக்குத் திடுக்கெனப் பெருமூச்செறிந்து, துன்பமே அநுபவிக்கின்றார்கள். தாங்கள் துன்பக்கடலின் மூழ்கியும் பிறருக்கு இன்பத்தைக்கொடுக்கும் இந்த டாம்பீகர்களுடைய சீவகாருணியத்தை யாது சொல்வோம்!

வாணிகஞ்செய்ய விரும்புவோர் இயன்றமட்டும் தங்கள் கைப்பொருளைக் கொண்டு வாணிகஞ்செய்வதே தகுதி. கைப்பொருளில்லாதவர் கடன் சொல்லிச் சரக்குகளை வாங்கி வாணிகஞ்செய்ய முயன்றால், கடன் கொடுப்பவன் வட்டி வாசிகளை அச்சரக்கின் விலையோடு சேர்த்தே கொடுப்பான். ஆதலினால், அவ்வாணிகம் தலையெடுக்காது.

கைப்பொருள் சிறிதும் இல்லாதவர், நிலத்திற்கென்றும், கலப்பைக்கென்றும், கடன்பட்டுப் பயிர்த்தொழில் செய்கின்றார்கள். கடன் கொடுத்தவர்களெல்லாரும் அறுப்புக் காலத்தில் வந்திருந்துகொண்டு, ஒன்றுக்கு இரண்டாக அளந்துகொண்டுபோகத், தாங்க்ள் போசனத்துக்கு முட்டுப்பட்டு வருந்துகின்றார்கள்.

கடனில் மூழ்கினவருள்ளே அநேகர், உத்தியோகத்தினாலே சீவிக்கப் புகுந்தும், தங்களுக்குக் கிடைக்கும் வேதனத்தைத் தனிகர்கள் மாசந்தோறும் வந்து வட்டியின் பொருட்டு வாங்கிக்கொண்டு போய்விடத் தாங்கள் செலவுக்கு முட்டுப்படுகின்றார்கள். கடன்தீர்க்க் வழியில்லாமல் உத்தியோகத்தை விட்டு ஒளித்துக்கொண்டு திரிவாரும், ஊரைவிட்டு ஓடிப்போவாரும், அநேகர். சிலர், இப்படிச் செய்தற்குக் கூடாமையால், மனவருத்தத்தினாலே நாடோறும் சரீரமெலிந்து துயருறுகின்றார்கள்.

கடனுடையவர் சிலர், ஒரு தனிகனுக்குக் கொடுக்கவேண்டிய முதலையும் வட்டியையும் மற்றொரு தனிகனிடத்தில் வாங்கித் தீர்த்தும் வருகின்றார்கள். இப்படியே கடன் விருத்தி

யாய்விட, முடிவிலே தங்கள் தாவரசங்கமப் பொருளெல்லாவற்றையும் விக்கிரயஞ்செய்து கொடுத்துவிட்டு, வருத்தமடைகின்றார்கள். ஆதியிலே, வட்டி வளர்தற்கு முன்னரே, தங்கள் தாவரசங்கமப் பொருள்களிலே சிலவற்றை விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டு, எஞ்சிய பொருளைக்கொண்டு முட்டின்றிச் சீவிக்கலாமே. ஐயையோ! இவர்கள் பேதைமைக்கு யாது செய்யலாம்! பரிதாபம்! பரிதாபம்!!

கடன்படத் தலைப்படுவோர், தாம் கடன்படுதற்கு முன்பே "இப்போது நமக்கு இந்தப் பணத்தொகை ஆவசியகமா? இந்தக் கடனைத் தீர்த்தற்குப் பொருள் வரும் வழி உண்டா? பொருள் விரைவில் வருமா? தாமதத்தில் வருமா? தாமதத்தில் வருமாயின், இதற்கு வட்டி வளர்ந்துவிடு மன்றோ? பொருள் வராதவிடத்து இக்கடனைத் தீர்க்கப் பிறிது வழி உண்டா? இப்பொழுது இப்பணத்தொகை ஆவசியகமே யாயினும், கடன்படாமல், நம்முடைய தாவரசங்கமப் பொருளிலே சிலவற்றை விற்றே செலவு செய்யலாமே: இப்படிச் செய்தால் வட்டி மிஞ்சுமே! இப்படிச் செய்யா தொழிந்தால், வட்டி வளர்ந்தபின், நம்முடைய தாவரசங்கமப் பொருள் முற்றும் போய்விடுமே! அதன் பின்பு சீவனத்துக்கு யாது செய்யலாம்?" என்று இவைகளெல்லாவற்றையும் செவ்வையாக ஆலோசிக்கக் கடவர்.

அநேகர், பலர் குடியைக்கெடுத்துத் தாமே வாழ நினைந்து, அவரிடத்தே கடன் வாங்கிக்கொண்டு, அவரை வஞ்சிக்கும் பொருட்டு, எல்லாப் பொருளையும் தங்கள் பந்துக்களுள்ளும் சிநேகருள்ளும் யாரையேனும் நம்பி, அவரிடத்தே வைத்துவிட்டு, பின்பு தாம் அவராலே வஞ்சிக்கப்பட்டு, யாதொன்றும் பேசமாட்டாது, ஏங்கி வருந்துகின்றார்கள். தாம் பிறரை வஞ்சித்தும், தம்மைப் பிறர் வஞ்சியார் என்று நினைக்கும் பேதைமையை யாது சொல்லலாம்! "நாமொன்றெண்ணத் தெய்வமொன்றெண்ணியது" என்னும் பழமொழியின் உண்மையை இவர்களிடத்தே காணலாம்.

அநேகர் தாங்கள் சிறிதும் கடன் படாதவர்களே யாயினும், கடன்படத் தலைப்பட்டுப் பிறர் பொருளை நம்பித் திரிகின்றவர்களோடு சிநேகஞ்செய்து, அவர்கள் பொருட்டுப்

பிணை நின்று, தங்கள் தாவரசங்கமப் பொருளெல்லாம் இழந்து, தங்கள் பெண்டு பிள்ளைகளாலும் அவமதிக்கப்பட்டுப் பசிநோயால் வருந்துகின்றார்கள்.

நம்முடைய தேசத்தாருள் அநேகர் கடன்பட்டுப் பிறர் குடியைக் கெடுத்துத் தருமஞ் செய்கின்றார்கள். இது தருமமாகுமா? ஆகாது. பொருளின்றிச் செயப்படுவனவாகிய தருமங்கள் எண்ணில்லாதன உண்டு. அவை கடவுளைச் சிந்தித்தல் துதித்தல் வணங்கல், அவர் குணமகிமைகளைக் கேட்டல், அவைகளைப் பிறருக்குப் போதித்தல், கொல்லாமை, பிறர் பொருளிச்சியாமை வாய்மை, பொறை, இரக்கம் முதலியவைகளாம். பொருளில்லாதவருக்கு இத்தருமங்களே அமையும். பொருளுடையவருக்கோ, பொருளாற் செய்யப்படுந் தருமங்களோடு இத்தருமங்களும் வேண்டும். இத்தருமங்களின்றி அத்தருமங்கள் சிறிதும் பயன்படாவாம்.

கடனுடையவன் தான் வாங்கின கடனைக் கொடாவிடின், அவன் செய்த புண்ணியமெல்லாம் தனிகனைச்சாரும்: வாங்கின கடனைத் தீராமல் இறந்துபோன கடனுடையவன், அளவில்லாதகாலம் நரகத் துன்பத்தை அனுபவித்த பின்பு, தனிகன் வீட்டிலே கூலியாளாகவும், பெண்ணாகவும், அடிமையாகவும், குதிரையாகவும், மாடாகவும், கழுதையாகவும் பிறந்துழைப்பான்.

ஒருவன், தன்னிடத்தே பிறனால் நம்பி வைக்கப்பட்ட பொருளைத் தன் புத்திரனைப்போலக் காத்து, பொருளை வைத்தவன் கேட்கும்பொழுதே கொடுக்கக் கடவன். அப்படிப் பொருளைக் காத்துக்கொடுத்தால், அவன் இரணியதான முதலிய தானங்களைக் கொடுத்தவனுக்கு உண்டாகும் பலத்தையும், அடைக்கலம் புகுந்தவனைக் காத்தவனுக்கு உண்டாகும் பலத்தையும் அடைவான். அந்தப் பொருளைக் கவர்ந்தவன் தன் புத்திரனையும் சிநேகன் முதலானவர்களையுங் கொன்ற பாவபலத்தை அடைவான்.

ஒருவன் வாக்குத்தத்தம் பண்ணின பொருளைக் கொடாது விட்டாலும், கொடுக்கப்பட்டதை மீட்டுங் கொள்ள விரும்பினாலும், அவன் பாவியாவான். ஒருவன் வாக்குத்தத்தம் பண்ணின பொருளைக் கொடாவிடின், அந்தப் பொ

ருள் கடன்பொருளைப்போல அவனை இம்மையினும் மறுமை யினுந் தொடரும். அவன் பலவகையாகிய நரகங்களை அடைந்து, நாய்ப்பிறப்பு முதலிய இழிவாகிய பிறப்பையும் அடைவான். தருமந்தப்பி நடக்கின்றவன் பொருட்டு வாக்குத்தத்தம் பண்ணின பொருளைக் கொடாதவன் குற்றமுடையவனல்லன்.

## 4. மந்தரையின் சூழ்ச்சி.

**இடம்:**—அயோத்தி அரமனையில் கைகேயியின் அந்தப்புரம்.

**காலம்:**—பிற்பகல்.

**பாத்திரங்கள்:**—கைகேயி, மந்தரை.

[கைகேயி மஞ்சத்தில் நித்திரை செய்கிருள். மந்தரை வருகிருள்; கைகேயி உல்லாசமாய்ப் படுத்து உறங்குவதை உக்கிரத்துடன் பார்க்கிருள்; முக்கிய சமயத்தில் நித்திரைபங்கஞ் செய்வதால் தோஷமில்லையென்று திடங்கொண்டு, 'அம்மா' என்று பலமுறை கூப்பிடுகிருள்; எழுந்திராததைக் கண்டு கையைத்தட்டிச் சத்தமிட்டு எழுப்புகிருள். கைகேயி உறக்கந் தெளிந்து எழுந்து உட்கார்ந்து, உறக்க மயக்கத்தோடு,]

**கைகேயி.**—என்னடி வெகு அவசரமாய்த் தட்டி எழுப்பி விட்டாய்!

**மந்தரை.**—(கோபத்தோடு,) அவசரமா! உங்கள் வாழ்வைத் தொலைக்க வருகிறதம்மா ஒரு சரம். அதனுல்தா னம்மா இவ்வளவு அவசரம். தலைக்குமேல் வந்துவிட்டதே வெள்ளம்! கலங்குகிறதே என் உள்ளம்! சௌபாக்கியங்களெல்லாம் தங்களைவிட்டு ஓடுகிறவே! எல்லாப் பாக்கியங்களும் கோசலையை நாடுகிறவே! பரதனில்லாச் சமயம் பார்த்துப் படுகுழியை ஆழமாய்ப் பறித்துவிட்டார்களே! அவன் வாழ்வை நாசமாக்க நாளுங் குறித்துவிட்டார்களே! ஊரெங்கும் பாருங்கள் பெருமுழக்கம்! உங்களுக்கின்னுமா உறக்கம்? தங்களைச் சூழ்ந்துள்ள இடர் இன்னதென்றறியா திருக்கிறீர்களே. இதற்கு நானென்ன செய்வேன்!

**கைகேயி.**—என்னடி உளறுகிருய்! எனக்கேதடி இடர்? உலகமெல்லாம் புகழும் புத்திர சிகாமணிகள் நால்வர் க்ஷேமமா

யிருக்கும்போது எனக்கு என்னடி குறை? சர்வஜீவர்களுக்கும் வேதம்போல விளங்கும் ஸ்ரீராமச் சந்திரனைப்பெற்ற எனக்கென்னடி துன்பம்! உலகம் முழுகிப் போய்விட்டது போலப் பதறி என் உறக்கத்தைக் கலைத்து ஏதேதோ உளறுகிறாயே என்னடி? என்னடி மோசம் வந்தது? யாருக்கு என்ன அபாயமடி விளைந்தது? சமுத்திரம் பொங்கிவிட்டதா? எனக்கு வந்த தாழ்வென்ன? அக்காள் கோசலைக்கு வந்த வாழ்வென்ன? குழந்தை இராமன் வில்லுண்டையா லடித்ததை ஒரு பெருங்குறையாக முன் ஒருதரம் என்னிடம் சொல்ல வந்தையே, அவ்விதமான பெருங்குறை யேதேனும் இப்பொழுது வந்துவிட்டதா? அவசரப்படாமல் நிதானித்துச் சொல்.

**மந்தரை.**—எனக்கொன்றும் குறைநேரவில்லை யம்மா. தங்கள் வாழ்வுதான் தாழ்ந்தது. தங்கள் கௌரவந்தான் குலைந்தது. தங்கள் க்ஷேமந்தான் தொலைந்தது. தங்கள் பாக்கியந்தான் உலைந்தது. எனக்கென்னகுறை வந்தால்தா னென்ன? வேறு யாருக்கு என்னகுறை வந்தால்தான் எனக்கென்ன? உங்கள் நிலைமை உங்களுக்கே தெரியாமல் என்னை நிதானித்துப் பேசச் சொல்லுகிறீர்களே.

**கைகேயி.**—மந்தரை! நீ சொல்லுகிறதொன்றும் நன்றாய் விளங்கவில்லையே. விஷயம் இன்னதெனச் சற்று விளக்கமாகச் சொல்லமாட்டாயா?

**மந்தரை.**—விஷயமென்ன? புருஷர்கள் பார்த்துச் சிரிக்கவும், ஆண்மை பழுதுபடவும் தாடகை யென்னும் பெயருடைய ஒரு பெண்ணைக் கொல்ல, வில்லை வளைத்தானே சக்களத்திமகன் இராமன், அவனுக்கு நாளையதினம் பட்டங்கட்டத் திட்டமாயிருக்கிறது. இது தெரியாமல் தாங்கள் நித்திரை செய்கிறீர்களே.

**கைகேயி.**—(அகங்குளிர்ந்து, முகமலர்ந்து புன்னகை கொண்டவளாய்,) என் மகன் இராமனுக்கா பட்டாபிஷேகம்! மெத்தச் சந்தோஷம். மந்தரை! இச்செய்தி கேட்டு என் இரு செவிகளும் குளிர்ந்தனவடி. இனிதானடி இந்த நாட்டுக்கு க்ஷேமாபிவிருத்தி; இனிதான் என் காதலருக்கும் கஷ்டநிவர்த்தி; ஜனங்களுக்கும் இனிதான் மனத்திருப்தி. இராமனுக்

குப் பட்டாபிஷேகமென்று முதன்முதல் எனக்குச் சொல்ல வந்த உனக்கு, நான் என்ன வெகுமதி செய்யப்போகிறேன்! (கழுத்திலிருந்த முத்தாரத்தைக் கழற்றி,) இந்தா, இந்த முத்தாரத்தை அணிந்துகொள். (மந்தரையிடம் ஆரத்தைக் கொடுக்கிறாள்.)

மந்தரை.—(முத்தாரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு,) அம்மா, உங்களைப்போல் ஒரு பெண்ணை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இராமனுக்குப் பட்டாபிஷேகமென்று கேள்விப்பட்டதும், உங்களுடைய க்ஷேமத்தை எண்ணி நான் அடைந்த துயரத்துக் களவில்லை. நான்கு புறமும் தீப்பற்றி எரிய நடுவே நிற்பவளைப்போல, நான் வயிறெரிந்து, மனமெரிந்து வந்திருக்கிறேன். நீங்கள் சந்தோஷம் கொண்டாடுகிறீர்கள். சமயமல்லாத சமயத்தில் சந்தோஷமா? துன்பசாகரத்தின் மத்தியில் நீங்கள் இருப்பது உங்களுக்கே தெரியவில்லை. உங்களுக்கு வந்திருக்கும் ஆபத்தை நினைக்க எனக்குத் துயரம் பெருகுகிறது; உங்கள் மடமையைப் பார்க்க ஒருபக்கம் சிரிப்பும் வருகிறது. நீங்கள் க்ஷேமமாயிருந்தால் உங்களையடுத்த எங்களுக்கு க்ஷேமமுண்டு. இராமன் முடி சூடிக்கொண்டால் கோசலைபாடு கொண்டாட்டம். பிறகு உங்கள் பாடும் உங்களை அடுத்த எங்கள் பாடுமே திண்டாட்டம். அப்புறம் உங்களுக்கு வாழ்வேது? நீங்களும் உங்கள் மகனும் அவளுக்கு அடிமையாய் இருக்க வேண்டியதுதான். அவள் தாதிக்குந் தோழிக்கும் அடிமையாய் இருக்க என்றால் முடியாதம்மா.

கைகேயி.—என்னடி, பித்தம் கொண்டவள் போல் மெத்தப் பிதற்றுகிறாய்? க்ஷத்திரிய தருமப்படி மூத்தபிள்ளைக்கே பட்டமென்பது உனக்குத் தெரியாதா? எனது குழந்தைகள் நால்வருள்ளும் இராமனன்றோ மூத்தவன்? அவனுக்குப் பட்டங்கட்டுவதைத் தடுப்பதற்கு நீ யாரடி? இராமன் மூத்தகுமாரன் என்ற ஒரு யோக்யதை மட்டும் உடையவனல்லன்; உத்தம குணங்களெல்லாம் ஒத்து ஓர் உருவெடுத்து வந்தாற்போல்பவன். அவன் விஷயத்திலா நீ இப்படி நினைப்பது? அடிபாவி! நீ கூறியதைக் கேட்டபிறகும் உன் எண்ணத்தை அறிந்தபிறகும் உன்னைக் காணக் கண் கூசுதடி. பரதனைவிட அவனிடத்தில் எனக்குப் பிரியம் அதிகம். அவனுக்கும் கோசலையை

விட என்னிடத்திற் பற்றுதல் மெத்தவடி. இராமனுக்குப் பட்டமானல் அது பரதனுக்குப் பட்டமானது போலத்தான். பரதன் தமையனிடம் மிகவும் பற்றுதலுடையவன். இவை ஒன்றையும் யோசியாது ஏன் கண்டபடி பிதற்றுகிறாய்?

**மந்தரை.**—அம்மா, 'இராமனுக்குப் பட்டமானல் அது பரதனுக்குப் பட்டமானது போலத்தான்' என்கிறீர்களே. அவ்வளவு வித்தியாசமில்லாதபொழுது உங்கள் கணவர் பரதனுக்குப் பட்டங்கட்டி அதை இராமனுக்குக் கட்டியது போலவே பாவித்துக் கொண்டா லாகாதோ?

**கைகேயி.**—அடி, பாதகி! சூரிய குலத்தில் அவ்விதம் முறைமாறி ஒரு காரியத்தைச் செய்ததாரடி, எப்போதடி?

அடி கொடியவளே, சூரியன் முதலாகவரும் இக்குலத்து அரசர் தமது உயிருக்கே கேடுவரினும் முறை தவறாதவர். இவ்வாறு குற்றமற்ற முறையையுடைய எங்கள் குலத்து வழக்கத்திற்கும், மனுமுதலிய மேலோர்வழி வந்த எங்குலத்திற்கும் குற்றம் வரத்தக்கதாக என்ன காரியத்தைச் சொல்ல வந்தாயடி? தகாத காரியத்தை நினைத்தது மல்லாமல் அதை வாய்விட்டுச் சொல்லவும் துணிந்து விட்டாயல்லவா? விஷஜந்துக்களுக்கு வயதேற ஏற விஷம் அதிகப்படுவது போல வயதேற ஏற உனக்கு விஷமகுணம் அதிகமாகிறது போலிருக்கிறது. எனது பெற்றோர் எனக்குத் துணையாகக் கேகயநாட்டிலிருந்து உன்னை அனுப்பியது இதற்குத்தானோ? அடி அறிவற்றவளே! நீ எனக்கும் நல்லவளல்லை; என் மகன் பரதனுக்கும் நல்லவளல்லை; எல்லார்க்கும் ஒன்றாகிய நீதியைப் பார்த்தால் உனக்கும் நீ நல்லவளல்லை. நீ செய்த தீவினை வந்து உன்னைத்தூண்ட உன் மனத்துக்குத் தோன்றுவனவற்றை யெல்லாம் பேசுகிறாய். அடி உனக்கு உணர்வழிந்து விட்டதா? பித்தம் மேலிட்டு விட்டதா? நீதி நியாயம் ஒன்றுமே நீ அறியாயா?

உலகத்தில் மக்கள் பிறந்தும் இறந்தும், அடைவதும் அல்லது இழப்பதும் எதுவென்றால் பழுதற்ற புகழ். அவ்வாறிருக்க, குணம்மாறினாலும், நியாயம்மாறினாலும், நன்னெறியின் வகைமாறினாலும், செய்யுந் தவம்கெட்டாலும், குற்றமற்ற வீரங்கெடுவதானாலும் தொன்று தொட்டுவரும் ஒரு முறைமையை மாற்றத் தகுமா? உணர்வு கெட்டவளே! உன் தீய

எண்ணங்களை என்னிடம் தெரிவித்ததுபோல் என் மகன் பரதனிடம் தெரிவித்திருப்பாயானால் உன்னை இது வரையில் என்ன செய்திருப்பான் தெரியுமா? உன்னுடைய நாவை இரண்டு துண்டாக வெட்டி எறிந்திருப்பான். பேதை மதியினளே!

என் எதிரே நில்லாதே போ. நீயது சொன்ன உன் நாவைத் துண்டியாது விடுத்தேன். ஏனெனில் இது முதன் முறை. வெளியில் யாரேனும் இதை அறிந்தால் என்னாகும்? நீதிமுறையில்லாத காரியத்தை நினைத்தாய். அறிவில்லாதவளே! உன் அதிகப் பிரசங்கித்தனத்தை இம்மட்டோடு அடக்கு. இனி இவ்வித விஷயங்களை என்னிடத்திலாயினும் வேறு யாரிடத்திலாயினும் தெரிவிப்பதற்குமுன் அதன் பலாபலங்களை யோசித்துத் தெரிவி. இவ்வித துர்நடத்தைகளை இனி உன்னிடத்திற் காண்பேனாயின், அன்றைய தினமே உன்னைக் கேகய நாட்டிற்கு அனுப்பிவிடுவேன். அப்புறம் நீ இந்த அரமனையில் அடிவைப்பதற்கும் தகுதியுள்ளவளல்லை. துராலோசனை கற்றவளே! என் எதிரே இராதே. உன்னைப் பார்க்கப்பார்க்க எனக்குக் கோபம் அதிகரிக்கிறது. எழுந்து எங்கேனும் தொலை.

மந்**தரை**. — அம்மா, தங்களுக்குத் துராலோசனை சொல்லித் தங்களைக் கெடுத்து, நான் தங்கமாளிகை கட்டிக்கொள்ளப் போகிறதில்லை. ‘தங்கள் தாய்தந்தையர் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக்கூடாது. அவர்கள் என்னை நம்பித் தங்களுக்குத் துணையாயனுப்பி யிருக்கத் தங்களை நட்டாற்றில் கைநழுவ விட்டுவிடக்கூடாது’ என்றெண்ணியே இவ்வளவு தூரம் சொல்ல வந்தது. தாங்கள் இப்படி எடுத்தெறிந்து பேசியமாதிரிக்கு என்னையன்றி வேறொரு தாதியாயிருந்தால் ‘நமக்கென்ன’ வென்று போய்விடுவாள். எனக்கு அவ்விதம் போக மனமில்லை. என் மனசாட்சி இடங்கொடுக்கவில்லை. தங்கள் தந்தையாரிட்ட சோற்றை உண்டு வளர்ந்தவள் நான். அவர்கள் சோற்றை உண்டு அவர்கள் புத்திரியாகிய தாங்கள் கெட்டுப்போவதைப் பார்த்திருக்க என் மனம் சகியாது. கேகயதேசத் தரமனையில் எத்தனையோ தாதிகள் இருக்க அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு என்னைத் தங்களுடன் இங்கு அனுப்புவானேன்? நான் தங்களைப்போலப் பெண்ணா யிருந்தாலும் மந்திரிபோல் யோசனையில் வல்லவளென்

பதற்காக வல்லவா? அதனுலல்லவா எனக்கு மந்தரையென்று பெயரு மிட்டார்கள்? அம்மா! ஒருவருக்கு இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப் படுவதில் அனேக கெடுதிகளுண்டு. அதிலும் இராஜகுடும்பத்தில் இரண்டாவது பட்டஸ்திரீயாய் வருவதில் அனேக கஷ்டங்களுள்ளன. அவைகளை உங்கள் தந்தை அறியாதவரல்லர். அறிந்தும் தங்களை இரண்டாந்தாரமாகக் கொடுத்தது எதனுலென்ருல், நான் தங்களுக்குத் துணையாயிருக்கும் வரையில் தங்களுக்கு ஒரு கெடுதியும் வராதென்ற நிச்சயத்தால்தான். தாங்கள் இப்படி என்னுடைய துணையை உபேக்ஷை செய்வீர்களென்று தங்கள் தாய்தந்தையர் அறிந்திருந்தால், தங்களை இங்கு இரண்டாந்தாரமாகக் கொடுத்திருக்கவே மாட்டார்கள்.

**கைகேயி**.—மந்தரை! நீ யூகசாலி யென்பதையும், சாமர்த்தியசாலி யென்பதையும் நான் மறுக்கவில்லை; உன்னுடைய துணையும் யோசனையும் வேண்டாமென்றும் சொல்லவில்லை. உள்ளபடி எனக்குக் கெடுதல் நேரிட்டா லல்லவோ உனது துணைவேண்டும்? அவ்விதம் ஒன்று மில்லையே.

**மந்தரை**.—அம்மா, மனிதர்கள் தமக்கு வரும் இடையூறுகளைத் தாமே அறிந்துகொள்ளக் கூடுமானுல், அவர்களுக்குத் துணை எதற்கு? தங்களுக்கு வந்திருக்கும் இடையூறு தங்களுக்கே தெரியாதது சகஜந்தான். அதற்காகத்தான் என்னைப் போல் ஒருவர் துணையாக இருப்பது. இதை யறியாமல் தாதி யென்று என்னை எடுத்தெறிந்து பேசித் துரத்திவிடுவதா அழகு?

**கைகேயி**.—தாதியென்று உன்னை நான் உபேக்ஷிக்கவில்லை. 'இடையூறு, இடையூறு' என்று கூறுகிருயே யொழிய, அது இன்னதென விளங்கக் கூறமாட்டே னென்கிருயே. 'இராமன் பட்டத்துக்கு வரப்போகிருன்' என்கிருய். வந்தாலென்ன? அதனுல் எனக்கு நேரும் கெடுதலென்ன? வேறு யாருக்குத்தான் என்ன கெடுதல் நேரும்? அதைச் சற்று விளக்கமாகக் கூறலாகாதா?

**மந்தரை**.—தங்களுக்கு மாத்திரமல்ல வம்மா. 'ஆலமரத்தைப் பிடித்த பிசாசு அரசமரத்தையும் சேர்த்துப் பிடித்தது' போலத் தங்கள்மகன் பரதனையுமல்லவா கெடுதல் சூழ்ந்திருக்

கிறது. என்ன கெடுதல் என்றால், விவரமாய்ச் சொல்லு கிறேன்; சற்றுப் பொறுமையாய்க் கேளுங்கள்.

சிறிது செல்வமுடையவர் வீட்டுப் பிள்ளைகளும் ஒருவ ருக்கு அடங்கியிருக்க நாணுவார்கள். அப்படியிருக்க, இராஜ குடும்பத்திற் பிறந்த ஒருவன் மற்றொருவனிடம் தலைகுனிந்து நிற்பதென்றால் எவ்வளவு வருத்தமான காரியம்? பரதன் இராஜ குடும்பத்திற் சக்கரவர்த்தியின் காதல்மனைவியின் வயிற்றிற் பிறந்தவ னன்றோ? பிறந்தும் அவன் கதி என்ன? இராமனும் சீதையும் நாளையதினம் உயர்ந்த ஆசனத்தில் வெகு கம்பீரமாக உட்கார்ந்திருப்பார்கள். அப்பொழுது உன் மகன் பரதன் தலைதாழ்ந்து நிலத்தில் நிற்பான். அக்காலத்தில் அவன் மனம் என்ன பாடுபடும்? அந்தக் காட்சியைப் பார்க் கத் தங்களுக்குத்தான் சகிக்குமா' இந்த நிலையில் காரியங் கள் இருக்க, நீங்கள் சந்தோஷம் மிகுந்து எனக்கு முத்தாரம் பரிசளிக்கின்றீர்கள்! தாங்கள் அரசர்க்குக் காதற்கிழத்தியா யிருந்து என்ன பயன் கண்டீர்கள்? தங்களைப்போல கோசலை யும் ஒரு பெண்தானே? அவளுடைய கெட்டிக்காரத்தனத் தைப் பார்த்தீர்களா?

அவள், தனக்கும் தன் மகனுக்கும் உறுதிதேடத் தங் களைப்போல மறந்திருந்து விடவில்லை. அவள் மகனுக்கு இராச்சியம் கிட்டிவிட்டது. தங்கள் மகன் பரதன்தான் ஒன்றும்பெறாது தவிக்கப்போகின்றவன்; உயிரோடிருக்கி றானே அது ஒன்று தவிர அவனுக்கு வேறு என்ன பயன் உள்ளது? இப்படி அவன் எவ்வளவுகாலம் சகித்திருப்பான்? அம்மா! தங்கள் வயிற்றில் பிறந்ததால் பரதன் பிறந்தும் பிறவாதவனாகவே இருக்கிறான். அவன் நிலைமையை நினைத் தால் என் நெஞ்சம் நெருப்பிற்பட்ட புழுப்போல் துடிக் கிறதே.

இராமன் இலக்ஷ்மணனோடு இராச்சியத்தை ஆள்வது என்று ஏற்பட்டுவிட்டால் அப்புறம் பரதனுக்கும் சத்ருக்ந னுக்கும் நாட்டிலென்னம்மா வேலை? அவர்களிருவரையும் நீரே காட்டிற்கு அனுப்பி அங்கே தவஞ் செய்துகொண் டிருக்க விட்டுவிடுவது நல்லதாகும். என் கண்மணி பரதா! நீயேன் இவ்வுலகிற் பிறந்தாய்! பிறந்தென்ன பயனைப்

பெற்ருய்! நீ இறந்துபோனாலும் எனக்கு இவ்வளவு துக்க மிராதே, ஐயோ!

நிறைந்த கல்வியும், சிறந்த இளமையும், அளவற்ற பராக்கிரமும், வில்வளைக்கும் உரிமையும், கண்கவரும் அழகும், எதற்குமஞ்சா வீரமும் ஆகிய அளவிறந்த அற்புத உத்தம குணங்களனைத்தும் என் செல்வன் பரதனிடத்துத்தானே அமைந்துள்ளன? அந்தோ! அக்குணங்களெல்லாம் பாம்பின் புற்றை மூடியுள்ள புல்லிற்கொட்டிய அமுதம்போல் வீணுக வன்றே போய்விட்டன! அம்மா, உமக்கும் உமது மகனுக்கும் பொல்லாங்கியற்றுபவன் அந்த நயவஞ்சகன் இராமனன்றே? அவனுக்கல்லவோ நாளைக்கு மகுடாபிஷேகம்? கேகயராஜன் அருந்தவச் செல்வப் புதல்வியே! இராமன் யார் தெரியுமா? உமது சக்களத்தி புத்திரன்.

**கைகேயி.**—மந்தரை! நீ வீணே உன் மனத்தைப் புண்படுத்திக் கொள்ளுகிருய். இராமன் மாற்றவள் மகனுயிருந்தால் என்ன? அது அவன் குற்றமல்லவே. பரதன் நற்குணங்கள் நிறைந்தவன் என்பதுண்மை. அதனுல் இராமன் கெட்டவனுவானே? கொஞ்சமேனும் யோசனையின்றிப் பேசுகிருயே. இராமன் சக்கரவர்த்தியின் மூத்த குமாரன்; அவனுக்குப் பட்டமாவதுதான் நீதி; அப்படிப் பட்டமாவதால், நீ சொல்லுவதுபோல எனக்கேனும் என்மகன் பரதனுக்கேனும் ஒரு கெடுதலு முண்டாகப் போகிறதில்லை. அவன் பரதனைக்காட்டிலும் குணவான்; தன் தாயினும் மேலாக என்னிடத்தில் அன்பு பாராட்டுபவன். ஆதலால் காரணமின்றி நீ கொண்ட அச்சங்களை விட்டொழி.

**மந்தரை.**—அம்மா, காரணமின்றி நான் ஓர் அச்சமுங் கொள்ளவில்லை. தாங்கள் நான் சொல்வதைத் தயவுசெய்து கவனித்துக் கேளுங்கள். இராமன் மகா சற்குணவான் என்கிறீர்கள். அது உண்மையே. அவன் தந்திரசாலி; தன் நடக்கை செவ்வையா யிராவிட்டால் தனக்குப் பட்டமாகா தென்பதை நன்ருயுணர்ந்தவன்; அதனுல்தான் அப்படி நடந்து கொள்ளுகிருன். தங்களிடத்து அவன் பரதனிலும் அதிகப் பிரியம்வைத் துள்ளானென்று கூறுகிறீர்கள். அதிலேயே அவன் தந்திரம் விளங்கவில்லையா? தன் தாயைப்பார்க்கிலும்

மாற்ருன் தாயிடத்துப் பிரியம்வைப்பவன் எங்கேனும் உண்டா? 'தங்கைபிள்ளை தன்பிள்ளையானல் தவத்துக்குப் போவானேன்' என்ற பழமொழியைத் தாங்கள் கேட்டதில்லையா? தங்களிடத்து பரதனுக்கில்லாத அன்பு இராமனுக்கு எங்கிருந்து வரும்? எல்லாம் வெளிவேஷம். தாங்கள் சக்கரவர்த்திக்குத் தன் தாயினும் மிகவும் உரிமையுடையவர்கள் என்பதை அவன் நன்ருயறிந்துள்ளான். தங்களுக்கு அதிருப்தியாய் நடந்துகொண்டால் தனக்குப் பட்டம் கிடைப்பதைத் தாங்கள் தடுத்துவிடக் கூடியவர்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஆதலால், முன் ஜாக்கிரதையாக இருக்கின்ருனே யொழிய வேறல்ல. இதைக்கண்டு களங்கமற்ற நீங்கள், அவன் உண்மையாகத் தங்களிடத்து மிகவும் அன்புடையவனென்று எண்ணி ஏமாந்திருக்கிறீர்கள்.

உள்ளபடி அவன் தங்களிடத்துப் பிரியமுள்ளவ ஞயினும், எப்பொழுதும் அப்படியே இருப்பானென்பது என்ன நிச்சயம்? மனிதர்குணம் பல காரணங்களாலும் மாறுதலடையக்கூடியது; அந்தஸ்து உயர்ந்தால் மாறும்; பலம் அதிகரித்தால் மாறும்; படை அதிகரித்தால் மாறும்; பிறர் போதனையாலும் மாறும். ஆதலால் இராமன் எப்பொழுதும் இதே குணத்தோ டிருப்பான் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள். உத்தமமான ரிஷிகளுக்கும் குணம் சில சமயங்களில் மாறிவிடுதலைத் தாங்கள் கண்டதில்லையா? மேலும், குறைந்தது முப்பது வயதிற்கு மேற்பட்டால்தான் ஒருவருடைய குணம் சிறிது ஸ்திரப்படும். இராமன் சிறுவன், அவன் தற்கால குணங்கள் எப்பொழுதும் ஸ்திரமாயிருக்குமா?

இது ஒருபுறமிருக்க, இராமனுக்குப் பட்டமென்ருல் அதன் அர்த்தமென்ன? 'பரதன் பட்டத்திற்குரியனல்லன்' என்பதுதானே. இராமனுக்குப்பின் அவன்மகன்; அவனுக்குப்பின் அவன்மகன், இப்படியேதான் போய்க்கொண்டிருக்கும். அப்புறம் பரதனுடைய சந்ததி தலைகாட்ட முடியுமா? அம்மா, பரதன் யார்? தங்கள் குமாரனல்லவோ? தாங்கள் யார்? கோசலையைப்போல அரசர்க்குச் சுதந்தரமான பட்டஸ்திரீ. இன்னும் சொல்லப்போனல் கோசலையைவிட உங்களுக்குச் சுதந்தர மதிகம். எவ்வாறென்ருல் தாங்கள் சக்கரவர்த்திக்குப் பட்டஸ்திரீயாவதோடு அவருக்கு ஆசைநாயகி

யாயும் இருக்கின்றீர்கள். இப்படியிருக்கத் தங்கள் பாத்யதை யெல்லாம் மண்ணுண்டுபோக அந்தக் கோசலைக்கே முழுவுரிமையும் போவானேன்? அவள்மகன் நாளைக்குப் பட்டத்துக்கு வந்துவிட்டால் அப்புறம் உங்களுக்கு இங்கே என்ன சுதந்தரம் இருக்கும்? இப்பொழுது உங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பணத்தைப் பிடிபிடியாய் அள்ளிக் கொடுக்கிறீர்கள். நாளைமுதல் அப்படி முடியுமா? சிலநாளைக்குத் தங்களிஷ்டப்படி விட்டிருந்தாலும் என்றைக்கும் அப்படி விட்டிருக்கக் கோசலை சம்மதிப்பாளா? ஒருகாலும் சம்மதியாள். பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? எதுவேண்டியிருந்தாலும் ஒரு தாதி சேடியைப்போல் அவளைப்போய் இரந்து கேட்பீர்களா? அல்லது தங்களை எதிர்பார்க்கிறவர்களைச் சீறியடிப்பீர்களா?

இன்னொன்று பாருங்கள்: தங்கள் தந்தை வந்தார், தங்கள் பந்துக்கள் வந்தார்கள், கேகயநாட்டிலிருந்து வேறு யாரேனும் வந்தார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் யார் வாழ்வை வந்து பார்ப்பது? தங்கள் வாழ்வையா, தங்கள் சக்களத்தி வாழ்வையா?

இதுவும் ஒருபுறமிருக்க, தாங்கள் சக்கரவர்த்தியின் சலுவையால் அரமனை அந்தப்புரத்திற் செலுத்திவந்த அதிகாரங்கள் ஒவ்வொன்றும், கோசலையின் ஞாபகத்துக்கு வரும்; வரவே அவள் அந்தப் பொறாமையினால் மகனுக்கு ஏதும் சொல்லத் தொடங்குவாள். இராமனா தாய்சொல்லைத் தட்டி நடப்பவன்? ஒருநாளுமில்லை. அவன் நேரே தங்களுக்கு ஏதும் தீங்குசெய்யப் பின்வாங்கினாலும் வேறு வகையால் தங்கள் மனம் தயங்கும்படி செய்வான். அப்பொழுது உங்கள் மனம் என்ன பாடுபடும்? உங்கள் புத்திரன் பரதனுக்கு அது தெரிந்தால் அவன்மனம் என்ன பாடுபடும்?

மற்றொரு முக்கியமான விஷயம் கூறுகின்றேன் கேளுங்கள்: உங்கள் தந்தைக்கும் ஜனகனுக்கும் ஜன்மப்பகை. தங்கள் கணவருக்காக அஞ்சியே இதுவரையில் ஜனகன் உங்கள் தந்தையை எதிர்க்காம லிருக்கிறான். நாளையதினம் அவன் மருமகன் இராமன் பட்டத்துக்கு வந்துவிடுவான்; சக்கரவர்த்தி தவஞ்செய்யச் சென்றுவிடுவார். பிறகு தங்

கள் தந்தையின்கதி என்னுகும்? தாங்கள் மகன் வாழ்வுக்கு இடையூருய் இருப்பதோடு, தந்தைக்குப் பழிகாரியாகவு மன்ரே ஆய்விடுகிறீர்கள்? தங்கள் கணவரின் வஞ்சகத்தைப் பாருங்கள். பரதன் நாட்டிலில்லாத சமயத்தில் இராமனுக் குப் பட்டம்கட்டத் தீர்மானித்திருக்கிருர். இதில் ஏதோ சூதிருக்கிற தென்பதைத் தாங்கள் கவனிக்கவில்லையா? இரா மன் மகா குணவான் என்கின்றீர்களே! தம்பி இல்லாதபோது அவன் பட்டங்கட்டிக்கொள்ள எப்படிச் சம்மதித்தான்? நீங்களே எல்லாவற்றையும் தீர்க்காலோசனை செய்து பாருங் கள். அம்மா! தாங்கள் என்னைப்போல் சாமானிய பதவியி லுள்ளவர்களா?

தாங்கள் இராஜ குடும்பத்திற் பிறந்து, இராஜ குடும்பத் தில் வளர்ந்து, இராஜ குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர்கள்; சக்கரவர்த்தியின் பட்டஸ்திரீயானவர்கள். இருந்தும், அள வற்ற துக்கசமுத்திரத்தில் விழுந்து தவிக்கின்றீர்களே. நான் ஏதாவது யோசனை கூறினுலும் கேட்கமாட்டேனென்கிறீர் களே. தங்களுக்கு இன்னமும் தங்கள் நிலைமை தெரிய வில்லையா?

**கைகேயி.**—(சற்று யோசித்துவிட்டு,) மந்தரை! நீ சொல் வன யுக்தமாகவே தோற்றுகின்றன. நீ என் க்ஷேமத்தை இவ் வளவு கருதி யிருக்கின்ருய் என்பது எனக்கு இதுவரையில் தெரியாது. என் சேடியர்கள் பலருள்ளும் நீதான் என் நன்மையிற் கண்ணுயிருப்பவள். உன்னுடைய சாமர்த்தியம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. நீ சொல்லாவிட் டால் இவ்வளவு முன்யோசனைகள் எனக்கு வருமோ? சக் கரவர்த்தியின் வஞ்சம் எனக்கு இப்பொழுதுதான் தெரி கிறது. அதை நினைக்க நினைக்க என் மனத்தில் அடங்காத கோபம் மூளுகிறது. எனக்கொன்றுந் தோன்றவில்லை. மந் தரை! நோயை அறிவித்த நீயே மருந்தையும் தெரிவி; மேல் நடத்தவேண்டிய தென்ன?

**மந்தரை.**—மேல் நடத்தவேண்டிய விஷயமென்ன? இந் தப் பட்டாபிஷேகத்தைத் தடுத்துவிட வேண்டியதுதான்.

**கைகேயி.**—அது எனக்குந் தெரிகிறது. அதை எப்படித் தடுப்ப தென்பதல்லவோ யோசனை?

**மந்தரை.**—அம்மா, என் யோசனையைப் பெரிதாய் மதித்துக் கேட்க ஒருப்பட்டீர்களே, இதுவே போதும். இனித் தங்களுக்கு ஆபத்தொன்றும் வராது. கவலைப்பட வேண்டாம். தங்கள் கணவர் தாமாக, பரதனுக்குப் பட்டங்கட்டத் தவறினால், அவனுக்கு எப்படிப் பட்டங் கட்டுவ தென்பதைப் பற்றி, இப்பொழுதல்ல, பரதன் பிறந்ததுமுதல் நான் யோசித்து வைத்திருக்கிறேன். அந்த யோசனை இப்பொழுது பயன் பட்டது.

**கைகேயி.**—என்னடி அது?

**மந்தரை.**—தங்கள் கணவர் சம்பராசுரனோடு யுத்தஞ் செய்தாரல்லவா?

**கைகேயி.**—ஆம்.

**மந்தரை.**—அப்பொழுது நீங்கள் அவருக்கு ஒரு பேருதவி புரிந்திருக்கிறீர்க ளல்லவா?

**கைகேயி.**—ஆம்.

**மந்தரை.**—அவ்வுதவிக்குப் பிரதியாக அவர் தங்களுக்கு இரண்டு வரங்க ளளித்தா ரல்லவா?

**கைகேயி.**—ஆம், ஞாபகமிருக்கிறது.

**மந்தரை.**—அவ்வரங்க ளிரண்டையும் பெற்றுக்கொண்டீர்களா?

**கைகேயி.**—இல்லை.

**மந்தரை.**—ஏன்?

**கைகேயி.**—அவைகளை நான் வேண்டியபோது பெற்றுக் கொள்ளலாமென்று அவர் கூறினார். நானும் அதற்குச் சம்மதித்தேன். அப்புறம் அவைகளைப் பெறத்தக்க சமயம் ஒன்றும் நேரவில்லை. ஆதலால் பேசாமலிருந்து விட்டேன்.

**மந்தரை.**—அம்மா, அந்தச் சமயம் இதோ வந்துவிட்டது. அவ்வரங்களை இப்பொழுது உபயோகப்படுத்தாமல் வேறெப் பொழுது உபயோகப்படுத்தலாமென் றிருக்கிறீர்கள்?

**கைகேயி.**—அது வாஸ்தவந்தான். அவைகளை எப்படி உபயோகப்படுத்தலா மென்கிறாய்?

**மந்தரை**.—இதுகூடவா கேட்கவேண்டும்? நமக்கு ஆக வேண்டிய காரியங்கள் இரண்டு: ஒன்று இராமபட்டாபி ஷேகத்தைத் தடுப்பது, மற்றொன்று பரதபட்டாபிஷேகத்தை முடிப்பது. இரண்டுக்கும் இரண்டு வரங்கள் சரியாய்ப் போய்விட்டன. முதல்வரம் பரதன் நாடாளவேண்டு மென்பது, இரண்டாவதுவரம் இராமன் காடேகவேண்டு மென்பது.

**கைகேயி**.—என்னடி மந்தரை! இராமன் நமக்கென்ன செய்தான்? அவன் நாட்டிலிருந்தால் நமக்கென்ன? நாம் வேண்டுவது பரதனுக்குப்பட்டம். அது முடிந்துவிட்டால் அப்புறம் நமக்கென்ன கஷ்டம்? இராமன் இங்கிருப்பதா லென்ன நஷ்டம்? அவனை அனுப்புவதில் இஷ்டமில்லை எனக்கு. இந்தத் துஷ்டபுத்தி ஏன் உனக்கு?

**மந்தரை**.—அம்மா! நீங்கள் பின்வருவ தொன்றையும் யோசியாமற் பேசுகிறீர்கள். இராமன் நாட்டிலிருந்தால் பர தனுக்குப் பட்டமென்று வாயாற்கூடச் சொல்லலாமா? இரா மன் சக்கரவர்த்திக்கு மூத்தகுமார னென்பதை எல்லோரும் அறிவர். இராமனுக்கென்று பட்டம் குறித்திருப்பதும் எல் லோருக்கும் தெரியும். இந்த நிலையில் பரதனுக்குப் பட்டம் நிலைக்குமா? பரதனுக்குப் பட்டமாகும்பொழுது இராமன் நாட்டிலிருந்தால், அவனுடைய முயற்சியில்லாமலே ஜனங் களால் கலகமும் அராஜகமும் நேரிடும். ஜனங்கள் கண் ணுக்கு மறைவாய் அவன் காட்டிலிருந்தால் தேசம் அமை தியாயிருக்கும். இது ஒரு ராஜதந்திரம். அரசியாயிருக் கும் தாங்கள் இதை அறியாது பேசுகிறீர்களே.

**கைகேயி**.—மந்தரை, நீ சொல்வது சரி. இராமன் சக் களத்திமகனா யிருந்தாலும் சிறுவனாயிற்றே. அவனைக் காட் டுக்கனுப்பிக் கஷ்டப்படச் செய்வது என் மனத்துக்கு அவ் வளவு உசிதமாகத் தோன்றவில்லை.

**மந்தரை**.—கஷ்டமா? காட்டுக்குப் போவதில் கஷ்டமென் னம்மா? ஆழ்ந்து பார்த்தால் அதில் அவனுக்கு அனேக நன் மைகள் உண்டு. புண்ணிய நதிகளில் நீராடலாம்; மகரிஷி களைத் தரிசிக்கலாம்; அவர்களால் அனேக நன்மைகளைப் பெறலாம்; நிர்ச்சிந்தையாய்க் காலங்கழிக்கலாம். இதில் உங்களுக்கு என்ன கவலை? முன் விசுவாமித்திரர் யாகத்தை

முற்றுவிக்க வனத்திற்குச் சென்ருனல்லவா, அப்பொழுது அவனுக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? ஒன்றுமில்லையே. அப்பொழுது அவன் அடைந்த லாபங்கள் எவ்வளவு? விசுவாமித்திரரிடம் அனேக அஸ்திரமந்திரங்களைக் கற்றுக் கொண்டான்; அகல்யைக்குச் சாப விமோசனம் செய்து கௌதமர் அனுக்கிரகத்தை அடைந்தான்; ஜனகன் மகளை மனைவியாகப் பெற்ருன்; பரசுராமரைப் பங்கப்படுத்திப் புகழ்பெற்ருன். சிறிதுகாலம் வனவாசஞ் செய்ததால் இவ்வளவு நன்மைகளைப் பெற்ருனே; இன்னும் கொஞ்சம் நீடித்த காலம் வனத்தில் வாசம் செய்வானுனல் எவ்வளவு லாபங்களை அடைவான், தெரியுமா?

**கைகேயி.**—மந்தரை, நீ சொல்வதும் ஒருவகையில் நியாயமாய்த்தா னிருக்கிறது. எனக்கும் மனசம்மதமாகி விட்டது. சக்கரவர்த்தி அதற்கு ஒப்பவேண்டுமே?

**மந்தரை.**—அதுவா ஒரு பெரிய காரியம்? முன்னம் விசுவாமித்திரர் வந்து இராமனைக் காட்டுக்கனுப்பும்படி கேட்டபோதும் தங்கள் கணவர் வெகுவாகத்தான் மனங் கலங்கினுர். பிறகு வசிஷ்டரால் மனந்தேறி அவனை அனுப்பவில்லையா? ஒரு கிழவரால் முடிந்த காரியம், யௌவனஸ்திரீ, அதிலும் பட்டஸ்திரீ, பட்டஸ்திரீயிலும் இஷ்டஸ்திரீயாகிய தங்களால் ஆகாதா?

**கைகேயி.**—உண்மை. மந்தரை! நன்ருய்ச் சொன்னுய். நீ இவ்வளவு யோசனைகூற அதற்குமேலாகவேண்டிய அற்ப விஷயம் என்னுல் முடியாவிட்டால் அப்புறம் எனக்குப் பெண்ணென்ற பெயரேன்? அரசரை நான் கேட்கவேண்டிய வரங்கள் இரண்டு: ஒன்று என்மகன் பரதனுக்கு முடிசூட்டல்; மற்றென்று இராமனைக் காட்டுக்குத் துரத்தல். இந்த இரண்டு வரங்களையும் அவர் கொடுக்காவிட்டால் அவரெதிரிலேயே நான் தற்கொலை செய்துகொண்டு உயிர்துறப்பேன். இனி நீ போகலாம்.

**மந்தரை.**—அம்மா, அப்படிப் பதஷ்டமாக ஒன்றும் செய்து விடாதீர்கள். உயிர்துறப்பதுபோல நடிக்கவேண்டுமேயொழிய உயிரைத் துறந்துவிடக் கூடாது. சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திர மெழுதவேண்டும்.

**கைகேயி.**—மந்தரை! என்மேல் உனக்குள்ள பிரியத்திற்குப் பிரதி நான் என்ன செய்யப்போகிறேன். உலகத்தில் அனேக கூனிக ளிருக்கின்ருர்கள். அவர்களெல்லாம் வெகு துர்க்குணமும் மிக அவலக்ஷணமும் பொருந்தியவர்கள். நீயோ, கண்ணுக்கினிய கமலமொன்று காற்ருல் ஒரு புறம் வளைந்து நிற்பதுபோல, உனது கூனல் வளைந்து அழகாய் நிற்கிருய். நீ வெண்பட்டொன்றை விசித்திரமாய் உடுத்து அழகாக என் முன்னே நடக்கும்போதெல்லாம் ஒரு சிறந்த இராஜஹம்ஸப் பேடுபோல் தோற்றுகிருய். சக்கரவர்த்திக்குச் சாரதியாய்ச் சென்றபொழுது சம்பராசுரன் மாயைகளைப் பார்த்துள்ளேன். அவ்வசுரர் தலைவனைக்காட்டிலும் நீ மாயையில் வல்லவள். தேரின் கோணம்போல் உயர்ந்து தோன்றும் உனது கூன் எவ்வளவு புத்திகளையும், யுக்திகளையும், அரச வித்தைகளையும், மாயைகளையும் அடக்கிக்கொண்டிருக்கிறது! எனக்கு நீ செய்த உதவியை நான் என்றும் மறவேன். இராமன் காட்டுக்குப் போய், பரதன் பட்டத்துக்கு வந்தவுடன் நான் ஆணிப்பொன் மாலை யொன்று உன் கூனிற்பொலியச் சூட்டுகிறேன். என் காரியம் கைகூடினதும் களிப்போடு உனது கூனுக்குச் சந்தனம் பூசுகிறேன். எனது மனோரதம் முற்றினுல், குற்றமற்ற பொற்றிலக மொன்று, உனது நெற்றிக்கிடுவேன்; கழுத்திற்குப் பல அணிகலன்களும் தருவேன். அவைகளை யெல்லாம் அணிந்து கொண்டு, விலையுயர்ந்த பட்டாடைகளை உடுத்திக் கொண்டு, ஒரு தேவதைபோல் நீ என் கண்முன்பாக உலாவிக் கொண்டிருப்பாய். அந்தரத்துள்ள சந்திர பிம்பமோ என்று யாரும் ஐயுறும்படியான முகத்துடன் விளங்கி சத்துருக்களைப் பார்த்துச் செருக்குற்று நீ நடக்கப் போகிருய். எனக்கு நீ பணிபுரிவதுபோல, பல கூனிகள் பட்டாடையும் பலவாபரணங்களும் பூண்டு உனக்குப் பணிவிடை செய்வார்கள்.

**மந்தரை.**—எனக்குப் பட்டாடையும் வேண்டாம், பணிப் பெண்களும் வேண்டாம்; என் கண்மணி பரதனுக்குப் பட்டமானுல் அதுவே போதும். நேரமாயிற்று; நான் போய் வரட்டுமா?

**கைகேயி.**—சற்றுப்பொறு, சக்கரவர்த்தி வரும்பொழுது நான் இருக்கும் கோலத்தையும் பார்த்து விட்டுப்போ.

[கைகேயி படுக்கையைவிட்டு வந்து கோபக்கிரகத்திற் புகுந்து தரையிற் படுக்கிருள்; மாலையைக் கழற்றி ஒரு மூலையிலெறிகிருள்; ஆபரணங்களைக் கழற்றி அங்குமிங்கும் போடுகிருள்; கண்ணிலிட்ட மையைக் கலைக்கிருள்; நெற்றியிலணிந்த திலகத்தை அழிக்கிருள்; அழகாய் உடுத்தியிருந்த ஆடையை அலங்கோலப்படுத்திக் கொள்ளுகிருள்; பூமுடித்த கூந்தலை அவிழ்த்து, பூமியிற் புரளவிடுகிருள்; பிறகு மந்தரையைப் பார்த்து,]

தோழீ! கொண்ட கோலத்தில் ஏதும் குறையுண்டோ?

மந்தரை. — ஒன்றுமில்லை; எல்லாம் சரியாயிருக்கிறது. இன்னும் இரண்டு விஷயம் மறந்து விட்டீர்கள். முகம் வாட வேண்டும்; கண்ணீர் ஆருய் ஓடவேண்டும். ஆனுல் அவைகளை நான் போனபிறகு செய்துகொள்ளுங்கள். பொய்யாகவேனும் தங்கள் சந்திரவதனம் வாட நான் சகிக்கமாட்டேன்; தங்கள் கண்ணில் நீர்புரள நான் பொறுக்கமாட்டேன். போய்வருகிறேனம்மா. (போகிருள்.)

## 5. சுகிர்லாபம்.

**கோ**தாவரிக் கரையில் ஒரு பெரிய வன்னிமரத்தில் **லகுபதனன்** என்னுங் காகம் வாசஞ்செய்து கொண்டிருக்கையில், ஒருநாள் விடியற்காலத்தில் அங்கே எமனைப்போல மிகவும் பயங்கரமான வேடன் ஒருவன் வந்தான். **லகுபதனன்** அவனைப் பார்த்துப் பயப்பட்டு, இந்தத் துராத்மா என்ன பண்ணுவானே தெரியவில்லை: ஆகையால் இதைச் சோதிக்க வேண்டுமென்று, இரை தேடும் யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ்வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியங்களையும் தெளித்து அங்கே ஒரு செடிமறைவிற் பதுங்கிக்கொண் டிருந்தான். அதன் பிறகு தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின **சித்திரக்கிரீவன்** என்னும் புரு அரசு அங்கே இறைந்திருக்குந் தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புருக்களுடனே, "இந்த நிர்மானுஷ்யமான காட்டிலே தானியம் எப்படி வரும்? யாராயினுங் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும்: இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது" என்று கூறிப் பின்னும்

'மிகவும் ஆலோசனை பண்ணி எதோன்று செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது' என்றிப்படிச் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஒரு புறு கர்வத்தோடு, 'இப்படி ஆலோசித்தால் ஓர் இரையும் நமக்கு அகப்படாது. மேலும், வெட்கப்படுகிறவன், பொறுமை யுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், தீராச் சந்தேக முள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கிறவன், இந்த ஆறுபேரும் துக்கத்தையே யனுபவிப்பார்கள்' என, இதைக் கேட்டுப் புறுக்களெல்லாம் தானியத்தைத் தின்னும் பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையில் அகப்பட்டன. புறுவரசு அதைப் பார்த்து, 'எல்லாரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள்; இப்போது நான் ஒன்றியாயிருந்து பலனில்லை' என்று சொல்லி அதுவும் வலையில் வந்து அகப்பட்டது.

வேடன் பக்ஷிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப் பார்த்து அதனிடத்திற்கு வரத் தொடங்கினான். அதைப் புறுக்கள் கண்டு சித்திரக்கிரீவனைப் பார்த்து, 'நாங்கள் நீசன் புத்தியைக் கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம்; அதன் பலன் பிராப்தியாயிற்று' என்றன. அப்போது சித்திரக்கிரீவன் 'இப்போது இதைச் சொல்லிப் பயனென்ன? இதற்கு ஓர் உபாய மிருக்கிறது. எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும்; அப்படிச் செய்தாற்றான் பிராணனைக் காப்பாற்றலாம்' என்றது. இதைக்கேட்டவுடனே எல்லாப் பறவைகளும் வலையோடுகூடச் சடுதியிற் பறந்து போயின. அதை வேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டு, இவைகள் ஒரே மனதாய் வலையைக் கொண்டுபோயின; ஆயினும் இவைகளுள் ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும்; அப்போது என் கையில் அகப்படும் என நினைத்துக் கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது புறுக்கள் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்விட்டன. பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான்.

இவ்வாச்சரிய மெல்லாம் பார்த்திருந்த லகுபதனன் என்னுங் காகம் அந்தப் புறுக்களின் பின்னே போயிற்று. கபோத ராஜா தன் கூட்டத்தைப் பார்த்து, 'கண்டகிநதி தீரத்திலிருக்

குஞ் சித்திரவனத்தில் என் சிநேகிதனான **இரணியகன்** என்னும் எலியரசன் ஒருவன் இருக்கிறான். அவன் தனது பல்லினாலே நம்முடைய வலையை அறுப்பான். ஆகையால் அங்கே நடவுங்கள்' என்றது. இதைக் கேட்டு அவை அப்படியே சென்று எலியரசன் வளையண்டை இறங்கின.

அப்போது, ஏதாவது ஆபத்து நேரிடும் என்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறுவழி செய்துகொண்டு உள்ளேயிருந்த எலியரசன் புருக்கள் இறங்கின சப்தத்தைக் கேட்டுப் பயந்து அடங்கியிருக்கையில், **சித்திரக்கிரீவன்** 'சிநேகிதா! **இரணியகனே!** எங்களோடே ஏன் பேசவில்லை" என, **இரணியகன்** இதைத் தன் சிநேகிதனுடைய தீங்குரல் என்றறிந்து சந்தோஷத்தோடுகூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து, 'நான் புண்ணியவானாகையாற் **சித்திரக்கிரீவன்** என்னும் மித்திரன் என் வீட்டுக்கு வந்தான். இவ்வுலகத்தில் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிப்பதிலும் வேறே ஆனந்தமேது?' என்று உபசாரஞ் சொல்லிப் பிறகு அதனுடைய அவஸ்தையைப் பார்த்து மிகவும் துக்கித்து, 'மித்திரா! நீ யாவரினும் மிக்க சமர்த்தனல்லையா? உனக்கு இப்படிப்பட்ட காரியம் எப்படி நேரிட்டது?' என, 'எந்தக் காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும்! விதி வலிது. அதன்முன் யாருடைய உபாயம் நடக்கும்! **கடல்** பெருகி **மேலிட்டால்** அதற்**குக் கரை**யேது!' என்றது.

**இரணியகன்** "இந்தப் பேச்சு மெய்யே. நூறு நாழிகை வழித் தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துகொண்டு போகிற நீ இன்றைக்கு வேடன் வலையைப் பாராமற் சிக்கிக்கொண்டாயே பார்! சந்திர சூரியர்களுக்கு ராகு கேதுக்களாற் பீடை வருதலும், யானையும் பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையே யல்லாமல் வேறல்ல" என்று சொல்லிச் **சித்திரக்கிரீவன்** கட்டுண்டிருந்த வலைக்கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது **சித்திரக்கிரீவன்** "மித்திரா! முன்னே என் பரிவாரத்தினுடைய கயிற்றை அறு. பிறகு என் பாசத்தைத் துணி" என, அதைக் கேட்டு எலி "என் பல் மிகவும் மெதுவானது. அதற்குப் பலமுங் கொஞ்சம். ஆகையால் இத்தனை பெ

யருடைய பந்தனைகள் எனக்கு எப்படி அறுபடும்? உன் தளை யை அறுத்துப் பின் என் சாமர்த்தியத்துக்குத் தக்கபடி அவர் களுடைய தளையையும் அறுப்பேன்" என, சித்திரக்கிரீவன் "நல்லது, முன்னே இவர்களுடைய பாசத்தை அறு" என்றது.

இரணியகன் "தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவா ரங்களைக் காப்பாற்றவேண்டும்; ஏனென்றால், அறம் பொருள் இன்பம் வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய சாத னம்; ஆகையால் அதைக் காப்பாற்றினால் எல்லாவற்றையுங் காப்பாற்றினாற் போலாகிறது" என, சித்திரக்கிரீவன் "இந்த நீதி சரிதான்; ஆயினும் இப்படிப்பட்ட வேதனையினின்றும் பால னம் பண்ணுவதற் காகவன்றோ என்னை இவர்கள் ராஜாவாக நினைக்கிறார்கள். ஆகையால் என் பிராணனிடத்தில் இச்சை யைவிட்டு இவர்களைப் பிழைப்பி" என, அதைக் கேட்டு எலி "நீ பரம சாது. அடுத்தவர்களை ஆதரிக்கிறவனா யிருக்கிறாய். எசமானனிடத்தில் விசுவாசமா யிருக்கிற சேவகனும், சேவக னிடத்திற் பிரீதியாயிருக்கிற எசமானனுஞ் சுகமடைவார்கள்" என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துப் பின்பு சித்திரக்கிரீவனுடைய கட்டையும் சேதித்தது.

பிறகு ஒன்றுக்கொன்று தழுவிக்கொண்டு பிரிய வார்த்தை கள் சொல்லின. சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடுகூடத் தன் னிடத்திற்குப் போயிற்று.

லகுபதனன் என்னுங் காகம் இவையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இரணியகனை நோக்கி, "நீ பாக்கியவானா யிரு க்கிறாய்; ஆகையால் நானும் உன் சினேகத்தை விரும்புகிறேன். நீ தயைசெய்து எனக்குச் சினேகிதனாக வேண்டும்" என்றது. அப்போது இரணியகன் "நீயார்?" என, காகம் "நான் லகுபத னன் என்கிற காக்கை" என, அதைக்கேட்டு எலி "ஆனால் உனக் கும் எனக்கும் வெகுதூரம்; உலகத்திற் சமானஸ்தர்களுக் குள்ளேயே சினேக முண்டாகிறது; நான் உனக்கு இரை, நீ என்னைத் தின்கிறவன்; இப்படி இருக்கையில் இஃது எப்படி யாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாம். உன் உறவு உபயோக மன்று" என்றது. காகம் "உன்னைத் தின்றால் எனக்குப்போது மா? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப் போலச் சுக மடைவேனென்று உன் நட்பை விரும்புகிறேன்" என, பின்னும்

**இரணிய**கன். "நீ எனக்குப் பகைவன்; உன்னுடனே நான் சினேகம் பண்ணுவே னல்லேன். சத்துரு தனக்கு அனுகூல மாயிருந்தாலும் அவனோடே சினேகிக்க லாகாது. தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை யவிக்கும்.

"ஆகையால், எது தக்கதோ அதைச் செய்யவேண்டும். தண்ணீரில் வண்டியும் பூமியின்மேற் கப்பலும் நடக்குமா? இதனாற் சத்துருக்களிடத்திலும் வியபசாரியிடத்திலும் நம்பிக்கை வைக்கலாகாது" என்றிப்படிப் பலவிதமாகச் சொல்லிற்று.

காகம் "நான் உன்னுடனே சினேகிப்பேன் இல்லாவிட்டாற் பட்டினியாக விருந்து இங்கேயே பிராணனை விடுவேன். நெருப்பின் வெப்பத்தினாற் பொன் முதலானவை உருகி யொன்றாகின்றன. யாதேனுமொரு நிமித்தத்தினாலே விலங்கு பறவைகள் மித்திரத்துவத்தை யடைகின்றன. பயத்தினா லாகிலும் யாதோராசையினா லாகிலும் மூடர்களுக்குச் சினேகமுண்டாகிறது. ஆனால் சாதுக்களுடைய சினேகமோ கண்ட மாத்திரத்தில் உண்டாகிறது. மண்பானை சீக்கிரமாயுடைகிறது, பிறகு பொருந்துகிறதில்லை; பொற்குடமோ சீக்கிரத்தி லுடையாது, உடைந்தாலும் ஒன்றும்; இப்படியே துர்ச்சன சற்சனர்களுடைய சினேகமு மிருக்கிறது" என்றது.

இதைக் கேட்டு **இரணிய**கன் "உன் வார்த்தையால் நான் சந்தோஷ மடைந்தேன். இப்போது உனக்கும் எனக்கும் சினேகமிருக்கட்டும். இனிமேல் நாமிருவரும் ஒரு மனதினராய் இருக்கவேண்டும். உபகாரம் பண்ணுகிறவன் சத்துருவென்று அறிந்தும் மனக்களங்க மில்லாமல் நடக்கவேண்டும்" என்றிப்படிப் பேசி நிச்சயித்தபின், **இரணியகன் லகுபதனனு**க்குச் சிறிது ஆகாரங்கொடுத்துத் தன் வளையிற் போயிற்று. சினேகலாபம் பெற்ற காகமும் அதனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தன்னிடத்திற்குப் போயிற்று.

அதுமுதலாய் இவைகள் அத்தியந்த சினேகமாய் ஒன்றுக்கொன்று ஆகாரங் கொடுத்துக்கொண்டு பலபல வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு நாள், **லகுபதனன்** எலியைப் பார்த்து, "மித்திரா! இப்போது இங்கே இரையகப்

படாமையால் வேறேரிடத்திற்குப்போகஇச்சிக்கிறேன்" என, அதைக் கேட்டு **இரணியகன்** "எங்கே போகிறாய்?" என்ன, அப்போது அது "தண்டகாரணியத்தில் கர்ப்பூர கௌர மென்னுந் தடாகத்தி லிருக்கிற ஆமையாகிய **மந்தரன்** என்பவன் எனக்குச் சினேகிதனாயிருக்கிறான். அவன் எனக்கு விதம் விதமான மீன்களைக் கொடுத்துப் போஷிப்பான். அதைக் குறித்து நான் அவனிடத்திற்குப் போகிறேன்" என்றது.

அதைக்கேட்டு, **இரணியகன்** "மித்திரா! அவ்விடத்துக்கு என்னையுங் கொண்டுபோகவேண்டும். நான் தேசாந்தரம் போக விரும்புகிறேன்" என்றது. அப்போது காக்கை, "நீ அப்படி விரும்புவானேன்?" என, **இரணியகன்** "அங்கே போனபின்பு சொல்வேன்" என்றது. அப்பால் **லகுபதனன்** **இரணியகனை** யெடுத்துக்கொண்டு அந்த இடத்துக்குப் போயிற்று. அவைகளைப் பார்த்து **மந்தரன்** சந்தோஷித்து அவ்விரண்டுக்கும் ஆதித்யம் பண்ணிற்று.

அப்போது **லகுபதனன்** **மந்தரனைப்** பார்த்து, "இந்த **இரணியகன்** மிகவும் பரோபகாரி; இவன் **சித்திரக்கிரீவனை** அவன் கூட்டத்தோடுகூட வலையினின்றும் விடுவித்தான்; அப்போது இவன் நட்பு நிலைமையைப் பார்த்து நானும் இவனுடனே நட்புக்கொண்டேன்" என, அதைக் கேட்டுக் கூர்மம் சந்தோஷப்பட்டு **இரணியகனைப்** பார்த்து, "மித்திரா! நீ இந்த மனித சஞ்சாரமில்லாக் காட்டில் வருவானேன்?" என, அப்போது எலி சொல்லுகிறது:

"**சம்பகாவதி** யென்னும் பட்டணத்தில் **சூடாகர்ணன்** என்னுஞ் சந்நியாசி யொருவன், உண்டு மிகுந்த சோற்றைக் கப்பரையிற் போட்டு உறியின்மேல் வைத்துவிட்டு நித்திரை பண்ணிக்கொண் டிருப்பான். அந்தச் சோற்றை நான் தின்று கொண்டு சுகமாயிருக்கிற நாளில் அங்கே **வீணாகர்ணன்** என்னும் ஒரு சந்நியாசி வந்து அவனோடுகூட அநேக கதாப் பிரசங்கம் பண்ணிக்கொண் டிருக்கையில், அந்தச் **சூடாகர்ணன்** கையிலொரு தடியினாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காபபாற்றிக் கொண்டிருந்தான். அப்போது **வீணாகர்ணன்** 'என்னுடைய கதையை அநாதரவுபண்ணி நடுவே வேறே என்ன வியாபாரத்தி லிருக்கிறாய்?' என, **சூடா**

கர்ணன் 'உன் வார்த்தையை அநாதரவு பண்ணவில்லை. ஆனால் இவ்வெலி என் பாத்திரத்திலிருக்கிற அன்னத்தை நாடோறுந் தின்னுகிறது; அதை யோட்டுகிறேன்' என்றான்.

"வீணாகர்ணன் அப்போது உறியைப் பார்த்து, 'கொஞ்ச பலமுள்ள இந்த எலி இவ்வளவு உயரம் எப்படிக் குதிக்கிறது? இதற்கு ஏதோ ஒரு காரண மிருக்கவேண்டும். அது தான் எதுவா யிருக்கலாமென் றாலோசித்துப் பார்த்தால் இங்கே மிகுந்த திரவிய மிருக்கவேண்டும்; உலகத்தில் திரவிய முள்ளவர்கள் பலமுள்ளவர்களா யிருக்கிறார்கள்; அசாத்திய மான காரியங்களைச் சாதிக்கிறார்கள்; ராஜத்துவத்துக்கும் இது காரணமாகும்; எல்லாம் இதனாலாகின்றன' என்று சொன்னான். அந்தச் சந்நியாசி இதைக்கேட்டு மெய்தானென்று நம்பிப் பூமியை வெட்டி, ஐயோ! என் திரவியத்தை யெடுத்துக்கொண்டான். அன்று தொடங்கி நான் இளைத்துப் போனேன். பின்பு எனக்கு இரையுங் கிடையாததனால் மெள்ள மெள்ள நடந்துகொண் டிருக்கையில் அந்தச் சந்நியாசி பார்த்து, 'பார்! இந்த எலி இப்போது தன்னுடைய சாதித் தன்மையை யடைந்திருக்கிறது. முன்னிருந்த தனமதம் போய்விட்டது. ஆகையால் பணமில்லாதவர்களை எல்லோரும் அற்பமாய் நினைக்கிறார்கள்' என்றான்.

"இதைக் கேட்டு நான், இப்போது இங்கே இருப்பது சரியன்று. இதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது. பொருளிழவுங் கிருகச்சித்திரமுந் தானமும் மானமும் அவமானமும் ஆயுளுந் தனமுமாகிய இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது; தன் விதி பிரதிகூலமா யிருக்குங் காலத்தில் பராக்கிரமும் முயற்சியும் வீணாகின்றன; பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக் காட்டிலுஞ் சுகமில்லை; எந்த விடத்தில் நாம் பணக்காரரா யிருந்தோமோ அந்த விடத்தில் ஏழையாயிருப்பது உத்தமமன்று என்று மறுபடி இழந்த பணத்தை எடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன். அப்போது சந்நியாசி என்னைத் தடியாலடித்தான். அதனாலே மிகவுந் துக்கப்பட்டு உன் சினேகிதனோடேகூட இங்கு வந்தேன்" என்றது.

மந்தரன் "மித்திரா! நீ இதனால் அதைரியப் பட்டு உறைவிடந் துறந்தோமென்று வருத்தப்பட வேண்டாம். சாதுக்

கள் எங்கே போனாலும் மரியாதை பெறுகிறார்கள். சிங்கம் வேறொரு காட்டுக்குப் போனாலும் புல்லைத் தின்கிறதில்லை, யானையையே தின்னும். உற்சாகமுள்ளவன், சந்தோஷமுள் ளவன், தைரியசாலி, சூரன், களங்கமில்லாதவன், இவர்களி டத்தில் லக்ஷ்மி தானே வந்தடைகிறாள். நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடியிருக்கிறாய். ஆகை யால் உனக்கிருக்கிற சுகம் பணத்தாசையால் மயங்குகிறவர் களுக்கில்லை. இன்னுங் கேள்: மேகச் சாயை, துஷ்டனுடைய தயை, இளம்புல், பாலஸ்திரீ, யௌவனம், தனம் இவைகள் வெகு நாளைக்கு நில்லா. ஆகையால், இவற்றை யிழந்து போனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்து ஏங்கி யிருக்கலாகாது. ஏனெனில், எவன் கர்ப்பத்தி விடுகிறானோ அவன் பிறக்கிறதற்கு முன்னேதானே தாய் மார்பிற் பாலை யமைத்து வைக்கிறான். அப்படிப்பட்டவன் ஆயுள் உள்ள வரைக்குங் காப்பாற்றமாட்டானா! நீ நல்ல விவேகியா யிருக் கிறதனால் இவையெல்லாம் உனக்குத் தெரிந்தே யிருக்கும். இனிச் சினேகமாய் என்னிடத்திற் சுகமாயிரு" என்றது.

இவையெல்லாங்கேட்டு **லகுபதனன்** "மந்தரா! நீ சகல குண சம்பன்னன்; மேலுஞ் சற்குணன். சாதுக்களுக்கு வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்தி பண்ணுகிறார்களென் றறிந்து நாங்கள் உன்னை நாடி வந்தோம்" என்று சொல்லி, நீண்ட பெரிய மாத்தின்மேற் போய் உட்கார்ந்து தன் சுபா வப்படியே இங்கு மங்கும் பார்த்துக்கொண் டிருக்கையில், ஏதோ ஒரு பய முகாந்தரத்தை யறிந்து, "நீங்கள் உங்களிடத் தில் ஒளித்துக்கொண்டிருங்கள்" என அவ்விரண்டுக்கும் சொல்ல, **மந்தரன்** தண்ணீரிற் போயிற்று; எலி வளையில் நுழைந்தது. காகம் விருக்ஷத்தின் நுனியிலிருந்து பார்க்கை யில் ஏதொன்றுங் காணப்படாமையால் பின்பு அம்மூன்றும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்கையில், அங்கு அவை களின் சமீபத்தில் **சித்திராங்கன்** என்னும் ஒரு கலைமான் வந்து, "நான் வேடர் பயத்தால் உங்களிடத்தில் இருக்கலாமென்று வந்தேன்" என்றது. அதைக்கேட்டு **மந்தரன்** அதற்குச் சம்மா னம் பண்ணி, "இது உன் வீடு. நான் உன் சேவகனென் றெண்ணிக்கொண்டு சுகமாயிருக்கவேண்டும்" என முக

மலர்ந்து மனங்கலந்த இன்சொற் சொல்ல, பிறகு அதுவும் இவைகளுடன் நட்புக்கொண்டிருந்தது.

அப்படி யிருக்கையில் ஒருநாள் **சித்திராங்கன்** புல்மேய வேறோரிடத்திற்குப்போய் மீண்டும் சாயங்காலம் வராமையால், ஆமை மேயப்போன மான் இன்றைக்கேன் சாயந்திரம் வரவில்லையென்று விசனப்பட, அதையறிந்து எல்லாம் விசன மடைந்தன.

மறுநாள் விடியற்காலத்தில் காக்கை பறந்து நாலுபக்கத் திலும் பார்த்துக்கொண்டு போகையில், **சித்திராங்கன்** தோல் வலையி லகப்பட்டிருப்பதைக் கண்டு, அதன் அருகிற்போய், "மித்திரா! உனக்கு இந்த அவஸ்தை எப்படி நேரிட்டது?" என, மான் "இப்போது இதைக்கேட்டுப் பிரயோஜனமில்லை. நீ போய் **இரணியகனை**ச் சீக்கிரமா யிட்டுக்கொண்டு வந்தால் அவன் வேடன் வருவதற்குள் என் பாசத்தை யறுத்து என்னை விடுவிப்பான். வேடன் வந்தால் ஒருபாயமும் நடவாது" என்றது.

இதைக்கேட்ட காக்கை உடனே விரைவாகப் போய் அவைகளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி **இரணிய கனை** யிட்டுக்கொண்டு வந்தது. அந்த இரணியகன் மானைப் பார்த்து, "நீ சமர்த்தனுயிருக்கையில் வலையி லெப்படி யகப் பட்டாய்?" என, மான் "வல்லமையிருந்தாலும் வருவது வரும். இப்போது என்னைச் சீக்கிரமாய் விடுவி," என்றது.

இதற்குள்ளே மித்திரத்துவத்தினலே **மந்தரனும்** அங்கே வந்து **இரணியகனை**ப் பார்த்து, "மித்திரா! இப்படித் தாமசம் பண்ணுவது சரியன்று. இப்போது வேடன்வந்தால் நாமெல் லாம் ஓடிப்போவோம். அவன் வலையிலகப்பட்ட **சித்திராங் கனை**ப் பிடித்துக்கொள்வான். அதைக் குறித்து எனக்குக் கிலேசமா யிருக்கிறது. நினைப்பின்படி மனதிலிருக்கிறதை யறிகிற சினேகிதனும், மனோகரமான ஸ்திரீயும், பிறர்துக்க மறிகிற பிரபுவுங் கிடைக்கிற தருமை" என்றிப்படி **மந்தரன்** சொல்லிக்கொண்டிருக்கையில், வேடன் சடுதியில் எமனைப் போல் தூரத்தில் வருவதை **லகுபதனன்** கண்டு எலியைப் பார்த்து, "மித்திரா! வேடன் வந்தான். இப்போது பெரிய சங்

கடம் நேரிட்டது" என, அதைக் கேட்டு, இரணியகன் அதி சீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை யறுத்தது.

அறுத்தவுடனே அருகில் வந்த வேடனைப் பார்த்து எல்லாம் ஓட்டம்பிடிக்க, அப்போது அவன் விசன மடைந்து நாலண்டையும் பார்க்கையில் மந்தரன் தன் நடையின்படி நடந்துகொண்டிருந்தது. வேடன் அதைப்பார்த்துப் பிடித்துத் தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு கொஞ்சஞ் சந்தோஷத்தோடே போகும்போது, மானும் எலியுங் காகமும் மிகவும் வருத்தப்பட்டு இப்போதென்ன செய்யலாமென்று வேடன் பின்னே போகத்தொடங்கின. அப்போது இரணியகன் "ஒருசங்கடம் நிவிர்த்தி யாகிறதற்குள்ளே மற்றொன்று வந்து நேரிட்டது. ஆகையால் சீவனுக்குத் தேகத்தோடேகூட அநேக துக்கங்களை யனுபவிக்கவேண்டி யிருக்கிறது. இந்தத் துன்பம் சினேகத்தினால் நமக்கு வந்தது. எவன் மித்திரனிடத்தில் விசுவாசம் வைக்கிறானோ அந்த விசுவாசம் அவனுக்குத் தாய், தந்தை, சகோதரன், பிள்ளை, சுற்றங்களிடத்தி லிராது" என்றிப்படி வெகு விதமாய்த் துக்கித்துப் பின்னும் "வேடன் தூரமாகப் போவதற்குமுன்னே மந்தரனை விடத்தக்க உபாயம் பண்ணவேண்டும். பிறகு ஆகமாட்டாது" என்றது. அப்போது அவைகள் "என்ன செய்யலாம்? சொல்" என்றன

எலி, "சித்திராங்கன் ஏரிகரையில் செத்தவனைப்போலக் கிடக்கவேண்டும். அவன்மேற் காகம் உட்கார்ந்துகொண்டு பொய்யாகக் குத்தவேண்டும். அப்படியிருந்தால் அதைவேடன் பார்த்து மந்தரனைப் பூமியில் வைத்துவிட்டு மானண்டை போவான். இதற்குள்ளே நான் ஆமையின் கட்டைச் சேதிப்பேன். பிறகு அவ்வாமை தண்ணீரி லோடிப்போய" என்றது. இதைக்கேட்டு எல்லாம் அவ்வாறே செய்து மந்தரனை விடுவித்தன. பிறகு அந்த வேடன் 'வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவள்போல வெட்கி மிகவும் வருத்தமடைந்து, கைக்கு வராத பெரிய லாபத்தை இச்சித்துக் கைக்குவந்த சிறிய லாபத்தை யிழந்தேனே! யார்க்கும் அதிக ஆசை அதிக நஷ்டம். கிடைத்த மட்டும் போதுமென்று நினைக்கிறவனே

மகா புருஷன்' என்றிங்ஙனம் எண்ணிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனவுடனே, அந்தக் காகமும் ஆமையும் மானும் எலியும் மிகவுஞ் சந்தோஷமடைந்து தங்களிடத்தில் முன் போல வாழ்ந்திருந்தன.

## 6. கொலம்பஸ்.

**கொ**லம்பஸ் என்பவன் ஜிநோவா என்னும் பட்டணத்தில் ஓர் எளிய குடும்பத்திற் பிறந்தவன். அவன் பிதா ஆட்டு மயிரைச் சிக்கெடுத்து ஜீவனஞ் செய்பவனாக விருந்தும் தன் சக்திக்குக் கூடியமட்டும் அச்சிறுவனைக் கல்விபயிலச் செய்வித்தான். அச்சிறுவன் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டு, கணிதத்திலும் படம் எழுதும் வித்தையிலும் பயின்று, லாட்டின் பாஷையையும் சிறிது அப்பியசித்தான். அவனுக்கு விரிந்த கடலின்மீது போக விருப்புண்டாயிற்று. அவனுடைய சுதேசிகள் கப்பல் யாத்திரை செய்வதில் அதிக பழக்கமுள்ளவர்களா யிருந்தமையாலும், அக்காலத்தில் அநேகர் நூதன தீவுகள் முதலானவற்றைக் கண்டுபிடிக்க முயற்சியுள்ளவர்களாய் மிகுந்த துணிவுகொண்டு கப்பலேறிப் போக்குவரவு செய்து வந்தமையாலும், அச்சிறுவனும் சாதாரணமாகத் திரைகடலின்மீது போய்க் கப்பற்பிரயாணம் செய்யப் பிரியங்கொண்டு, பதினான்கு வயதிலேயே அத்தொழில் செய்யத் தொடங்கினான். அக்காலத்தில் ஜனங்கள் கப்பலோட்டும் வித்தையாகிய மாலுமி சாஸ்திரத்தில் மிகுதியும் தேர்ச்சி அடைந்திருக்கவில்லை. கப்பல் யாத்திரை செய்வதென்றால் மெடிட்டரேனியன் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, நீரெலிகளைப்போல எப்பொழுதும் கடலின்மீதே வசித்துக்கொண்டு சிறிதும் இரக்கமில்லாக் கொலைபாதகர்களாகிய பார்பரிதேசத்துக் கப்பற் றிருடர்களுடைய பயத்தோடு வேறு துறைமுகங்களுக்குக் கரையோரமாகச் செல்வதே. இவ்விதமாகக் கொலம்பஸ் சிறு வயதில் பலவிசை யாத்திரை செய்து அக்கப்பற் றிருடர்களிடத்தி லகப்பட்டுப் பலவித வருத்தங்களை அனுபவித்தான். தான் கற்ற கல்வி மிகச் சிறிதாயிருந்தும் அதைத் தகுதியாக உபயோகப்படுத்தி

மேலுமேலும் விருத்திசெய்து வந்ததுமல்லாமல், தான் வறுமையினால் மிகுதியும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தும், தன்னோடிருப்பவர்கள் அப்போதைக்கப்போது தங்களுக்குவேண்டியவைகளைத் தேடிக்கொள்வதே தவிர வேறு பெரியகாரியங்களைப் பற்றி யோசிக்கும் திறமையற்றவர்களாக விருந்தும், அவன் கொண்ட சில உயர்ந்த கருத்துகள் அவன் மனத்தைவிட்டு நீங்காமலே பதிந்திருந்தன.

போர்ச்சுகல் தேசத்தரசனான ஹென்றி என்பவன் செய்யுங் காரியங்களைக் குறித்தும், அதிசயிக்கத்தக்க அனேக விஷயங்கள் கண்டுபிடிக்கப் படுவதைப்பற்றியும் அக்காலத்தில் ஜனங்கள் வியந்து பேசிக்கொள்வார்கள். சில தேசங்களில் சிவக்கக் காய்ந்திருக்கும் பாறைகளும் கொதிக்கும் சமுத்திரமும் உண்டென்றும், ஜனங்கள் தங்கள் தலைகளைக் கைகளுக்குள் வளைத்து வைத்துக்கொண்டு நடக்கிறார்கள் என்றும் சொல்லுவார்கள். சில நாடுகளில் பட்டணங்களிலுள்ள வீதிகள் பனித்துளிகள் எவ்வளவு சாதாரணமாகவிருக்குமோ அவ்வளவு சாதாரணமாகத் தங்கத் தகடுகளாலும் இரத்தினங்களாலும் தளவரிசை செய்யப்பட்டிருக்கின்றனவென்று பேசிக்கொள்வதுண்டு. கொலம்பஸ் இவற்றையெல்லாங் கேட்டு ஆச்சரியப்பட்டு, இவை உண்மையாயிருக்கக் கூடுமோவென்று ஆலோசிக்கலாயினான். சமுத்திரத்திற்கப்புறம் இன்னும் கண்டுபிடிக்கப்படாத பூமிகளிருக்கக் கூடுமோவென்று ஆராயும்போது, அப்படிக்கில்லாவிட்டால் சமுத்திர அலைகளால் அடித்துக்கொண்டுவரப் படுவனவாகத் தானுங் கேள்விப்பட்டிருந்த ஒருவித மூங்கில்களும் ஆப்பிரிக்காக் கண்டத்துக் கடற்கரையில் அடித்துக் கொண்டுவந்த சித்திர வேலைசெய்த மரத்துண்டும் எவ்விடத்திலிருந்து வந்திருக்க வேண்டுமென்றும், அக்காலத்தில் ஜனங்கள் நம்பியிருந்தபடி பூமி தட்டையாக ஒரே பரப்பாக விருக்கிறதென்பது உண்மையாயிருக்கக் கூடுமாவென்றும் இவனுக்குள் சந்தேகம் பிறந்து, இவ்விஷயங்க ளெல்லாவற்றையும் பற்றிப் பகற்காலத்தில் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது மல்லாமல் இரவில் கனவிலும் அவ்விஷயங்களை மறவாமலிருந்தான்.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வைகளைப்பற்றிய விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொள்வதன்பொருட்டு லிஸ்பனுக்

குச் சென்ற கொலம்பஸ் அவ்விடத்திலேயே நிலைத்துவிட்டான். சென்ற சில நாட்களுக்குள் அவ்விடத்திலுள்ள சௌரியவானான ஒரு வயதுசென்ற கப்பற்காரனுடைய குமாரத்தியை விவாகஞ் செய்துகொண்டான். இக் கலியாணத்தினால் இவன் தனது எண்ணங்களை நிறைவேற்றுவதற்குரிய உதவிகளைச் செய்யக்கூடிய சிலர் நட்பு இவனுக்குக் கிடைத்தது. பூமி தட்டையுருவா யில்லாமல் உருண்டை வடிவாய் இருக்கவேண்டுமென்றும், மேற்கு மகா சமுத்திரத்திற் கப்புறம் இதுவரையும் காணப்படாத தேசம் இருக்கவேண்டுமென்றும், இந்துதேசத்திற்குப் போவதற்கு மேற்காக ஒரு மார்க்க மிருக்கவேண்டுமென்றும் உறுதியாய் நம்பினதுமல்லாமல், அது தன்னால் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்பதும் கடவுளுடைய கட்டளையென்று தன் நெஞ்சில் நன்றாய் ஊன்றியிருந்தமையால், அவ்விஷயத்திலேயே தன் வாழ்நாளை முற்றுஞ் செலுத்தவேண்டுமென்று துணிந்தான்.

இச்சமயத்தில் கொலம்பஸுக்குச் சில சங்கடங்கள் நேர்ந்தன. வியாதியும் மரணமும் அவன் குடும்பத்தைப் பீடித்தன. ஒன்றன்மே லொன்றாகப் பல இடுக்கண்கள் அவனை வருத்தின. அவன் மனைவி தேகவியோகமடைந்தாள். அக் காலத்தில் அத்தேசத்தை அழிவு செய்துகொண்டிருந்த போரினால் தன் சொத்துகளையெல்லாம் இழந்து, தன் சிறு குமாரன் தவிர வேறோர் ஆதரவுமின்றி, வீட்டையும் துறந்து வெளிப்படும்படி நேரிட்டதனால், ஒரு மடத்தை அடைந்து, தன் சிறு குழந்தையின் பொருட்டே இரந்து உயிர்வாழ்ந்தான். அக் காலையிலும் புதிய தேசமொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் எண்ணம் அவனை விட்டு அகலவில்லை.

மேற்குத்திசையில் ஒரு புதிய கண்டமாவது இருக்கவேண்டும், அல்லது அவ்வழியாக இந்தியாவுக்குப் போக ஒரு சமீப மார்க்கமாவது இருக்கவேண்டுமென்று தான் உறுதியாக எண்ணிக்கொண் டிருந்ததைப் பரிசோதித் தறியும்பொருட்டுக் கப்பல்யாத்திரை செய்வதற்கு ஓர் உபாயத்தைப் போர்ட்சுகல் தேசத்தரசனுக்கு அறிவித்தான். அவ்வரசனோ அதைப் பராமுகஞ் செய்ததுமல்லாமல் கடைசியாக அம்முயற்சி பயனற்றதாகுமென்றும் மறுத்துவிட்டான். அதன்மேல் கொலம்பஸ் இவ்விஷயத்தைப்பற்றி ஸ்பெயின் தேசத்து அரசியிடத்

தில் விண்ணப்பஞ்செய்யத் தீர்மானித்து, அத்தேசத்து ராஜதானிக்கு மெல்ல மெல்லப் போய்ச்சேர்ந்தான். அவ்விடத்தில் பல வருஷம் அதிகக் கஷ்டத்தோடு வசித்துக்கொண்டு சமயம் வாய்த்தபோதெல்லாம் தன் கருத்தை அரசியாருக்கு வெளிப்படுத்திக் கொண்டுவந்தான். தன் கருத்தை நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லையென்று பலமுறை மனஞ்சலித்து வெறுப்படையும்படி நேரிட்டும் தன் பிரயத்தனத்தைத் தளரவிடாமல் மிகுதியும் முயற்சிசெய்து வந்தமையால், கடைசியாக இஸபெல்லாள் என்னும் ராணி மனமிளகி, மந்திரிகள் தன்னை எவ்வளவோ அதைரியப்படுத்தியும் அவர்கள் சொல்லைத் தட்டிவிட்டு, தன் சொந்த ஆபரணங்களைக் கொதுவை வைத்து, வேண்டிய திரவியத்தை வாங்கி, 'இம்முயற்சியின் நயநஷ்டத்தை என் சொந்தமாகிய செலவில் இராஜாங்கமடையும்படி நான் கொலம்பஸைப் பிரயாணஞ் செய்தனுப்புவேன்' என்றாள்.

அதுபோலவே, 1492-ஆம் ஏப்பிரல்மீ 17உ ஓர் உடம்படிக்கை நடந்தது. அவ்வுடம்படிக்கையில் கொலம்பஸ் ஸ்பெயின்தேசத்து ராணிக்கு ஓர் உண்மையான தொண்டனாக நடந்துகொள்வதாக ஒப்புக்கொண்டான். அவ்வருஷத்திலேயே ஆகஸ்டுமீ 3உ மூன்று சிறிய கப்பல்களோடு கொலம்பஸ் புறப்பட்டான். அநேக நாள்வரையும் நிலக்குறியைச் சிறிதேனுங் காணாமல் கப்பல்களை நடத்திக்கொண்டு போனான். இந்த யாத்திரையில் அவன் பலவகைத் துன்பங்களை அனுபவித்தான். அவனுடன் வந்த கப்பற்காரர்கள் தங்கள் தேசத்தையும் மனைவி மக்களையும் விட்டு இவன் பேச்சை நம்பிவந்து மோசம் போனோமென்று துயரமுற்று, இவனை நொந்துகொண்டு வெளிப்படையாக வைததுமல்லாமல், ஒருமுறை இவனைத் தூக்கிக் கடலிலெறிந்துவிட்டுக் கப்பல்களைத் திருப்பிக்கொண்டு தங்கள் தேசத்திற்குப்போய்ச் சேரலாமென்று தீர்மானித்தார்கள். கடைசியாக இன்னும் மூன்று தினங்களுக்குள் நிலத்தைக் காணாவிடின் கப்பல்களைத் திருப்பிக்கொண்டு உங்களை ஸ்பெயின் தேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேனென்று முழங்காற்படியிட்டுப் பயபக்தியோடு சத்தியஞ்செய்து கொடுக்கவும் செய்தார்கள்.

அன்றிராத்திரி இரண்டுமணிக்குக் கரையில் எரிவது போல் ஒரு விளக்கு வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று தெரிய வந்தது. அதைக் கண்டபோது கொலம்பஸுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டா யிருக்கவேண்டும்! அதைப் பார்த்ததற் கடையாளமாக ஒரு பீரங்கி வெடிதீர்த்து, பாய்களை இறக்கிக் கப்பல்களை நிறுத்தி, இராமுழுவதும் உறங்காமலும் வாய் திற வாமலும் அதிக ஆவலோடு எல்லாரும் சூரியோதயத்தை எதிர் பார்த்திருந்தனர். விடியல் கண்டவுடனே தங்களுக்கு முன் பாக ஒரு தீவும் அதில் ஜனங்களும் மரங்களுமிருக்கிறதைப் பார்த்து எல்லோரும் "நிலம், நிலம்" என்று ஒரு சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். உடனே கப்பற்காரர்கள் கொலம்ப ஸின் காலில் வீழ்ந்து அவனை நோக்கி, வழியிலே தாங்கள் மிகவும் மனவருத்த முண்டாகும்படி செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார் கள். பிறகு கொலம்பஸும் மற்ற கப்பற்காரர்களும் ஸ்பெயின்தேசத்து அரசனது குறிக்கொடியைப் பிடித்துக் கொண்டு அத்தீவிலிறங்கி, கப்பற்காரர்களெல்லாம் கொலம் பஸை "அட்மிரல்" என்னும் பட்டத்தைக்கொண்டு வாழ்த்தி அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குத்தத்தஞ் செய் தார்கள். அக்கரை இந்து தேசத்தின் கீழ்க்கரையென்று உறுதி யாக நம்பியிருந்தமையால் அதுமுதல் அத்தேசத்தார்கள் இந் தியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அக்காலத்தில் இந்து தேசத்தை மகா கான் என்னும் மகம்மதீயன் ஆண்டுகொண் டிருந்தானென்பது பிரசித்தமாயிருந்தபடியால் அச்சக்கர வர்த்தி அத்தீவி லிருப்பானென் றெண்ணிக் கொலம்பஸ் தூதர் களை அனுப்பினான்; அவர்களோ அப்பெயரையுடைய சக்கர வர்த்தி ஒருவனுமில்லையென்று திரும்பி வந்துவிட்டார்கள். முடிவில் அவர்கள் இறங்கின இடம் பெரிய கண்டமல்லவென் றும், பல விருக்ஷங்களும் கனிகளும் புஷ்பங்களும் பக்ஷிகளும் நிறைந்துள்ள மேற்கு இந்தியத் தீவுகளென்று இப்போது சொல் லப்படுகின்ற பற்பல தீவுகளில் இது ஒன்றென்றும் தெரியவந் தது. பிறகு கொலம்பஸ் அமெரிக்காக் கண்டத்தையும் கண்டு பிடித்தான்.

கொலம்பஸ் தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றி வெற்றியாளனாக ஸ்பெயின் தேசத்துக்குத் திரும்பிவந்த

வுடனே ஜனங்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு உபசரித்ததும் அல்லாமல், அவன் புதிய தீவுகளிலிருந்து கொண்டுவந்த நாகரிகமற்ற ஆறு மனிதர்களையும், பல மிருகங்களையும், அழகிய பறவைகளையும், புதுமையான செடிகளையும், பொன்னாபரணங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தி, ஒரு பெரிய ஊர்கோலத்தோடு அவனைப் பார்ஸிலோனாவுக்கு அழைத்துக் கொண்டு சென்றார்கள். அவ்விடத்திலுள்ள அரமனையில், பெர்டினாண்டு என்னும் அரசனும் இஸபெல்லாள் என்னும் அரசியும், பொன்னாலமைந்த ஒரு விதானத்தின் கீழ் வீற்றிருந்து கொலம்பஸை வரவழைத்து, எல்லோருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, புதிய கண்டமொன்று கண்டுபிடித்ததைப்பற்றியும் கொலம்பஸுவின் மனோதைரியத்தைப் பற்றியும் கடவுளுக்கு வந்தனஞ் செலுத்தினார்கள்.

ஸ்பெயின் தேசத்துக் கிரான்டு கார்டினல் என்னும் பிரபு வீட்டில் கொலம்பஸ் ஒருநாள் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், இவன் எண்ணங்களெல்லாம் நிறைவேறினவே யென்று இவனிடத்தில் அழுக்காறடைந்திருந்தவர்களில் ஒருவன் "புதிய கண்டத்தைக் கண்டுபிடித்ததில் விசேஷமென்னவிருக்கிறது? வேறே யாரும் இவனைப்போல அக்கண்டத்திற்குச் செல்லும் மார்க்கத்தைச் சுலபமாகக் கண்டுபிடித்திருக்க மாட்டார்களா?" என்று கேட்டான். அதற்கு மாறாகக் கொலம்பஸ், அங்கு வந்திருந்தவர்களில் ஒவ்வொருவரையும் ஒரு முட்டையை மேசையின்மேல் நிற்கச் செய்வீராவென்று வினாவினான்.

அவர்களில் ஒருவனாலும் அவ்வாறு செய்ய முடியாமற் போய்விட்டது. அதன்மீது கொலம்பஸ் ஒரு முட்டையின் முனையைச் சிதைத்து நேராக நிறுத்தி "இதோ நான் செய்து காட்டினே னல்லவா? இனி நீங்கள் அவ்வாறு செய்வது எளிது தான்" என்றான். அப்படியே ஒவ்வொருவனும் முட்டையைச் சாப்பாடு வைத்திருக்கும் பலகையின்மீது நேராக நிற்கச் செய்தான்.

அது அதிக சுலபமாக விருந்தும் அப்புத்திசாலிகளில் ஒருவனுக்காயினும் கொலம்பஸ் காட்டுகிறவரையில் அந்த யுக்தி தோன்றவில்லையே. ஆகையால் அமெரிக்கா கண்டு

பிடிக்கப்பட்ட பிறகு அதைக் கண்டுபிடிப்பதாகச் சொல்வது எளிது தானே. ஒரு புதிய கண்டத்துக்கு வழி காட்டுவது எவ்வளவு மேன்மையான காரியம்! கொலம்பஸ் அநுபவித்த இடுக்கண்களையும் சரீரப் பிரயாசங்களையும் யோசிக்கையில் அது மிகவும் பெரிய காரியமென்று யார்தான் ஆச்சரியப் படமாட்டார்கள்!

## 7. வீட்டு நலம்.

பலவிடங்களில் பிரஜைகள் வியாதியினால் வருந்துகிறார்களே; அவை சாதாரணமாய் வீட்டுநல மில்லாமையால் உண்டாகிறவை. வீட்டு நலமாவது, நாம் குடியிருக்கிற கிருகம் பரிசுத்தமா யிருத்தல். வீடுகளுடைய நன்மையைப்பற்றி நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டியவை ஐந்து. அவை யாவன: 1. நல்ல காற்று, 2. நல்ல நீர், 3. வாட்டமான ஜல தாரைகள், 4. பரிசுத்தி, 5. வெளிச்சம். இவைகளுள் ஒன்றேனும் குறைவுபட்டால் ஒரு வீடும் சுகமாய் இருக்கமாட்டாது. இவ்வைந்துள் எது எவ்வளவு குறைகிறதோ, அவ்வளவு சௌக்கியமும் குறைந்துபோம்.

1. நமது வீடுகளில் நாம் உட்கொள்ளுகிற காற்று எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். நல்ல காற்றுள்ளவைகளாயிருப்பதற்கு வழி யென்னவென்றால், அவ்வீடுகளின் எப்புறத்தும் எந்தமூலைகளிலும் வெளியிலிருந்து சுத்தமான காற்று தடையில்லாமல் பிரவேசிக்கவும், அங்கே தங்கிக் கெட்டுப்போன காற்று வெளியேபோகவும் வாட்டமான வழிகளிருக்கவேண்டும்; அவ்வாறு இருந்தாலொழிய உள்ளே நல்ல காற்று வந்து அடையமாட்டாது. முதலில் வீடுகட்ட மாதிரி ஏற்படுத்துகிறவர்கள் இந்த நன்மையை நன்றாய் ஆலோசிக்க வேண்டும். அவர்கள் இந்த நன்மையை ஒருபோதும் எண்ணுகிறதில்லை. தங்களுக்குக் கூலி வரவேண்டுமென்று கருதி வேலை செய்கிறார்களே யொழிய அவ்வீட்டுக்காரன் அடிக்கடி வைத்தியன் வீட்டுக்கு ஓடி அவஸ்தைப்படாமல் சுகப்பட வேண்டுமென்று எண்ணியன்று. வீட்டுக்கு உடையவர்கள் இதனால் உண்டாகும் நன்மை தீமைகளை அறிந்து தீமை

விளக்கத்தக்க மாளிகைகளில் குடியிருப்பதை ஒருமிக்க விலக்குவார்களாயின், உடனே இந்த வேலைக்காரர்கள் நல்ல வழியில் திரும்பிவிடுவார்களென்பதற்குச் சந்தேகம் உண்டோ?

இப்போதோ எப்படிச் செய்தால் தங்களுக்கு லாபம் உண்டாகுமோ அவ்விதமாய்க் கட்டிமுடிக்கிறார்கள். விவேகமற்ற ஜனங்கள் அதிலுள்ள குணகுணங்களை ஆராயாமல் குடிபோகின்றனர். அதன்பிறகு நாளளவில் அவ்வீட்டிலுள்ள அசௌக்கியத்தால் அங்கே வசிப்பவர்களுக்குக் கெடுதியுண்டாகின்றது. அப்போது அனைவரும் தெய்வத்தைச் சுட்டிக் குற்றஞ் சாட்டுகின்றனரே யொழிய, யானை தன்தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல், தங்களுக்குத் தாங்களே கெடுதி விளைவித்துக் கொண்டார்களென்று ஒருபோதும் ஒருவரும் நினைக்கிறதில்லை. சிலர், இது விதிவசத்தால் வந்தது; அதற்கு நாம் என்னசெய்யலாம் என்று சமாதானம் சொல்லுவார்கள். ஒருதடவை வீட்டிற்குள் நுழைந்த காற்று கொஞ்சநேரம் அங்கேயே நிலைநிற்குமானால் உடனே வியாதியும் தொடர்ந்துவரும். அப்படி நோய்கள் உண்டாகாம லிருப்பதற்காக நாம் அதிகமாய் ஒன்றும் செய்யவேண்டுவதில்லை. எப்போதும் நமது வீடுகளில் கெட்டகாற்று தங்க ஒட்டாமல் ஜாக்கிரதையாக இருப்போமேயாகில், நோய்கள் எவ்வளவு குறைந்துபோம்? நமது வீடுகளில் மாத்திரமேயல்ல, ஊரிலேயே வியாதி மட்டிட்டுப்போம். இவ்விஷயத்தை ஒருவரும் கவனிக்கிறதில்லை.

வீடுகளில் ஜனங்கள் அடர்ந்திருப்பதனால் அவர்களுடைய மூச்சுக்காற்று வந்து கலந்து அங்குள்ள ஆகாயம் கெட்டுப் போவதுபற்றி அவை அங்கே தங்கவொட்டாமல் அடிக்கடி சுத்தி செய்யவேண்டும். சிலவிடங்களில் இரண்டொரு அறைமாத்திரம் வைத்துக்கொண்டு அவைகளிலேயே சமையல் படுக்கை முதலிய சகல காரியங்களையும் நடத்துகிறார்கள். அவ்விடங்களில் ஆகாயம் எவ்வளவு அசுத்தமாய்ப்போகாது? சாதாரணமாய் அனைவரும் படுக்கையறைகளைத் திறந்துவைக்கிற வழக்கமே கிடையாது. அவ்விடங்களில் அனேகமாய்த் தீபமேற்றுகிற வழக்கமுமில்லை. அப்

படியானல் அவ்விடங்கள் சுத்தப்படுவதற்கு வழியென்ன? மறுநாள் அவ்விடங்களில் போய்ப் படுப்பவர்களும் எப்படி சுகப்படுவார்கள்? படுக்கையறைகளை இராக்காலங்களில் திறந்துவைத்தல் வெகு நலமானது. எப்போதும் நாலைந்துபேருக்குக் குறையாமல் ஜனங்கள் நடமாடிக்கொண்டிருக்கிற மடப்பள்ளி முதலிய விடங்கள் விசாலமுள்ளதாகவே கட்டப்படவேண்டும். புகைபோக்கிகளும் பெரிதாயும் வாட்டமாயுமிருக்கவேண்டும்.

2. ஜனங்களுக்குச் சுகாதாரமான வஸ்துக்களில் ஜலமொன்று: அதைக் கவனிக்கவேண்டுவது மிகவும் அவசியமானகாரியம். நாம் உபயோகிக்கின்ற ஜலம் நல்லதோ கெட்டதோ வென்பதை முதலில் ஆராயவேண்டும். மனித தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாத ஜலங்கள் அனேகமுண்டு. நல்ல ஜலம் கிடைக்காத விடங்களில் அனேகர் கெட்ட ஜலத்தையே உபயோகிக்கின்றார்கள். நிறமும் ருசியுமுள்ள ஜலம் ஒருபோதும் உதவாது. அப்படிப்பட்ட ஜலத்தை உபயோகிப்பவர்களுக்குத் தலைநோய் இருமல் முதலிய ஜலதோஷங்கள் வெகுவாய் நேரிடும். ஜலத்தைப் பாத்திரங்களில் திறந்துபோட்டுவைக்கிறார்களே; அது மிகவும் புத்தியீனமான காரியம். நாம் விடுகிற சுவாசக்காற்றிலுள்ள விஷவஸ்துக்கள் அந்த ஜலத்தில் போய்விழுந்து அவைகளையும் விஷமாக்கிவிடும். இதைக் கவனியாதவர் அனேகர். நாலுபேர் சஞ்சரிக்கிற இடங்களில் வீட்டுக்கு உபயோகமான ஜலத்தை ஒருபோதும் வைக்கக்கூடாது.

3. அனேக வீடுகளில் ஜலதாரையே கிடையாது; இருந்தும் நீர்வாட்டம் இல்லாதவை எத்தனையோ. அதனல் விளையும் தீங்குகளை அறியாதவர் அனேகருண்டு. வீடுகளில் ஊற்றுகிற அழுக்குத் தண்ணீர்கள் கொஞ்சநேரம் ஓரிடத்தில் நிலையாய்த் தங்கினல், அந்த நீர் அழுகித் துர்க்கந்தம் வீசத்தலைப்படும். வீட்டிலுள்ள ஜலதாரைகள் வாட்டமுள்ளவைகளா யிருந்தாலும் அந்த நீர் போய்விழுகிற தெருவாய்க்கால் நல்லதா யிராவிட்டால் இந்த நீரெல்லாம் அங்கேபோய்த் தேங்கி, அவ் வீட்டில் வசிப்பவர்களுக்கு மாத்திரமேயல்ல, அவ்வூரிலுள்ளவர்களுக்கும் வியாதியை விளைக்கும். இவையெல்லாம் தக்கபடி இசைந்திருந்தாலும் அவைகளை அடிக்

3416

கடி கழுவிச் சுத்திசெய்யா விட்டால் அவ்வள்வும் என்ன பயன்படும்? நாட்டுப்புறங்களில் ஜலதாரைகளைச் சீராய்ச் செப்பனிடாமையால் எவ்வளவோ கெடுதிகள் நேரிடுகின்றன.

4. நாடுகளில் ஒருவராவது பூமிமட்டத்திற்குமேல் வீட்டுத்தரையை உயர்த்துகிறதில்லை. அவர் வீட்டின் அடிப்புறம் தரையோடு தரையாயிருக்கின்றது. அதனால் பூமியிலுள்ள சீதோஷ்ணங்கள் உறைக்க உறைக்கத் தேகத்தில் நோய்கள் உண்டாகின்றன. மழைகாலங்களில் வீட்டுச் சுவர்களில் இரண்டு மூன்று முழ உயரம் ஓதமேறிப்போனால் அந்தத் தரையில் வசிப்பவர் குளிர்ச்சியால் எவ்வளவு வருந்துவார்களோ, அதை நாம் வாய்விட்டுச் சொல்லவேண்டுமோ? அந்தத் தரைமேல் படுக்கப் பாயாவது உண்டா? மேலும் அவர்கள் மாட்டுத்தொழுவங்களையும் குப்பைமேடுகளையும் வாயிலுக்கெதிரே அமைக்கிறார்கள். அப்படிப்பட்ட வீடுகள் எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் வெளியிலிருந்து வருகிற நல்ல காற்று அந்தக் குப்பைக் களத்திலுள்ள கெட்ட நாற்றத்தை அடிக்கடி கொண்டுசேர்க்கும். அதனால் அவ்வீடுகளில் வசிப்பவர்கள் ஒருபோதும் சௌக்கிய மடையமாட்டார்கள். தாங்கள் குடியிருக்கும் கிரகம் எவ்வளவு சிறிதாயிருந்தாலும் அதிலேயே மாடு, கன்று முதலியவைகளைக் கட்டி, சாணி, குப்பை முதலியவைகளைப் பக்கத்திலேயே கொட்டித் தாம் வசிக்குமிடத்தை அவலக்ஷண மாக்குகிறார்கள். அந்த வீடுகள் ஒருபோதும் சுத்தப்படா; எப்போதும் துர்க்கந்தம் வீசிக்கொண்டே யிருக்கும்.

ஒரு சிறு வீட்டில் வெளியேபோகவும் உள்ளேவரவும் கூட வழியில்லாமல் ஜனங்களடர்ந்து நாலைந்து குடித்தனமிருப்பது அனேக இடங்களில் வழக்கம். அவ்வீடுகளில் வெளியிலிருந்து யாராவது வந்து நுழைவானாயின், அவன் உடம்பு கதகதவென்று வெந்துபோய் சுகமாய்ச் சுவாசம் விடக் கூடாமல் வருத்தப்படுவான். அத்தன்மையான வீடுகளில் காற்று ஒருபோதும் சுத்தப்படாது. சாக்கடை நாற்றம் ஓயாமல் வீசிக்கொண்டேயிருக்கும். அவ்விடங்களில் அப்போதைக் கப்போது உண்டாகிற தீங்குகள் அவர்களுக்குத் தோன்றாவிடினும் ஒவ்வொரு வேளைகளில் வாந்திபேதி முறைக்காய்ச்சல் முதலிய கொள்ளைநோய்களுண்டாகி அனே

கமாய் அனர்த்தம் நேரிடும். வெளிப்புறமும் உட்புறமும் சுத்தமாயிராத வீடுகளில் காற்றுவாட்ட மிருப்பதனால் பயனென்ன? சில ஏழைகள் கதவைத்திறந்தால் கெட்டகாற்று வந்து புகுந்துகொள்ளப் போகிறதென்று பயந்து கதவை ஒருபோதும் திறக்கிறதே யில்லை.

5. இருட்டு வீடுகள் எந்நாளும் அசௌக்கியமே. சூரிய கிரணம்படாத தரை ஜலம் முதலியவை எல்லாம் நோய்க் கிடமாகும். அவ்வீடுகளில் வசிப்பவர் ஒருநாளும் சுகமாயிரார்கள். அவர்களுக்கு வியாதிவந்தால் மறுபடி திரும்பாது. விளக்கேற்றாத வீடுகளில் வசிப்பதைவிட புத்தியீனம் வேறொன்றுமில்லை. வீடுகளில் விளக்கேற்றாவிட்டால் பூதங்காக்குமென்று சொல்லுகிறார்களே, ஒருவாறு உண்மையென்றே சொல்லலாம். விளக்கேயிராமல் இருள்மூடி யிருக்கிற இடத்திற்போய்ப் புகுந்தவுடனே மனதில் ஒரு திகிலுண்டாகிறது. அப்படித் திகில்பிடித்தவர்கள் ஒருபோதும் தேறுகிறதில்லை. விளக்கேற்றியவிடம் எவ்வளவு விநோதமாயிருக்கின்றது! விளக்கேற்றாவிடம் எவ்வளவு பயங்கரமாயிருக்கின்றது! முக்கியமாய் வெளிச்சத்துக்குக் காற்றிலுள்ள விஷவஸ்துக்களைப் போக்குகிற குணமுண்டு; அதனால் விளக்கேற்றிய விடம் சுத்தமாகின்றது.

பார்வைக்கு லக்ஷணமாயும் தனிப்புறமாயு மிருக்கிற வீடுகளில் நோய்க ளுண்டாகின்றனவே, அவைகளுக்குக் காரணம் எதுவா யிருக்கலாம்? ஜலதாரைகளைச் சுத்திசெய்யாமல் வைத்திருப்பதும், நல்லகாற்று உள்ளே நுழையவொட்டாமல் கதவை மூடிவைப்பதும், கலங்களைக் கழுவாமலிருப்பதும், வீட்டை அடிக்கடி சுத்திசெய்யாமலிருப்பதும், படுக்கைகளை அடிக்கடி எடுத்து உதறி வெயிலில் காற்றாடவிட்டுச் செம்மைப்படுத்தாதிருப்பதும், உபயோகமற்ற அறைகளில் ஒருபோதும் நல்ல காற்று புகவொட்டாமல் மூடிவைப்பதும், இராக்காலங்களில் அனைவரும் ஒரு சிற்றறையில் படுத்துக் கதவை அழுந்த மூடிவைப்பதுமே. இன்ன கதவைத் திறக்க வேண்டுமென்றும், இதை மூடவேண்டுமென்றும் நன்றாய் ஆராயவேண்டும். காற்றுக்கு நேராகிய கதவைத் திறவாமல் வீட்டுச்சுவர்க் கெதிராயிருக்கின்ற கதவைத் திறப்பதிற் பயனென்ன? மேலும் அத்தன்மையான வீடுகளில் சீதகாலத்

தைவிட உஷ்ணகாலத்தில் அதிகமான வியாதிகளுண்டாகின் றன. அதன் குறிகளை ஒருவரும் ஆராய்கிறதில்லை. அவை களுக்குக் கடவுள் என்ன செய்வார்? அவர் ஏற்படுத்திய சட் டங்களை நாம் அறிந்துகொள்ளாமலிருக்க, அவர் மேன்மேலும் அதை நமக்குக் கற்பிக்கிறார்.

நாம் நமக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் அறிந்து கொள்ளும்படிக்குக் கடவுள் தத்துவ சாஸ்திரத்தை ஏற்படுத் தியிருக்கிறார். நாம் அதை நன்றாய் அறிந்து அதன்படி நடவாமற்போனால் நாம் எப்படி அவரிடத்தில் பக்தியும் கவுரவமும் நம்பிக்கையும் உடையவர்களாவோம்?

தெய்வகடாக்ஷத்தால் அது அவனுக்கு அனுகூலமாயிற்று என்று சொல்வது உலகவழக்கம். அதுமாத்திரமேயல்ல, அனுகூலமாகா திருப்பதும் தெய்வகடாக்ஷமே; ஒருவனுக்குக் கெடுதி நெரிடுவதும் தெய்வகடாக்ஷமே; ஒருவன் பிறப்பதும் தெய்வகடாக்ஷமே; இறப்பதும் தெய்வகடாக்ஷமே; உலகத் தில் நடக்கின்றவை அனைத்தும் தெய்வகடாக்ஷமே; வாந்தி பேதி முதலிய கொள்ளை நோய்களாகட்டும், இன்னும் எவ் வகைத் தீங்குகளாகட்டும், எது நேர்ந்தாலும் எல்லாம் தெய்வ கடாக்ஷத்தால் வருவனவேயன்றி வேறன்று. ஈசுவரன் நமக்குத் துன்பங்களை யுண்டாக்குவது நம்மைக் கெடுக்கவேண்டுமென் றன்று. பெற்ற தகப்பன் பிள்ளைக்கு என்றைக்காவது கெடுதி நினைப்பானா? அதுபோல் தெய்வம் இவ்வாறெல்லாம் செய்வது தான் ஏற்படுத்திய விதிகளைத் தவறாமல் தன்னாணைக்குட்பட்டு நன்மையடைய வேண்டுமென்பதற்காக, தான் ஏற்படுத்திய சட்டப்படி நடவாமல் தாம் ஒன்றியாய்த் திரிபவர்களைத் தன் வழியில் திருப்பும்படி செய்கிற தண்டனையே யொழிய வேறல்ல.

## 8. வாஸ்கோடிகாமா.

பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கும் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. மாலுமி சாஸ்திரம் விசேஷ மாக விருத்தி யடையலாயிற்று. புத்தகங்கள் எவர்க்கும் எளிதில் கிடைக்கும்படி அச்சிடும் வகை கண்டுபிடிக்கப் படுவ

தாயிற்று. கம்பஸ் என்னும் திசையறிகருவி முதலியவற்றின் உபயோகங்களைக் கற்பிப்பதற்குப் பாடசாலைகள் ஏற்பட, ரகசியமாயிருந்த அக்கருவிகளை அநேகர் அறிந்துகொள்ள ஏதுவாயிற்று. புதுவகைக்கோட்பாடுகள் பரவப்பரவ பழைய கோட்பாடுகளெல்லாம் ஒழியலாயின. நவநவமான ஏற்பாடுகளுண்டாகத்தக்க சமயம் கிட்டியது. அச்சமயத்தோடுகூட அதற்கேற்ற மனிதரும் வாய்த்தனர். காரியத்தளவில் இத்தனை பரபரப்பு உண்டானதற்குக் காரணம் என்னவெனின், அக்காலத்துப் போர்த்துகல் தேசத்தரசனான ஹென்ரியினுடைய முயற்சியேயாம். 'நன்மை செய்ய நாடுவதிலேதான் மன்னவர்க்குப் பேராசை பொருந்தும்' என்பதையே அவ்வரசன் தனக்கு விருதாகக் கொண்டிருந்தனன். அப்போது போர்த்துக்கல் தேசத்துப் பிரஜைகள் ஒவ்வொருவர் உள்ளமும் மிகுந்த உற்சாகத்தால் பொங்கிப் பொலிவுற்றது. அதுவரையில் அவர்கள் அறிந்திராத தீவுகளும் தேசங்களும் பல உளவெனத் தெரியவந்தது. எவ்விதமான இடையூறுகளுக்கும் இடங்கொடாமல் நெடுங்கடலையும் நெட்டிக்கொண்டு நெடுந்தூரமாயினும் சென்று அத்தேசங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் வீராவேசமும் விடாமுயற்சியும் போர்த்துகல் தேசத்தார்க்குப் போதாதென்பதுண்டோ? இல்லை. அவர்கள் உயிர்க்குத் துணிந்து அதிக ஊக்கத்தோடு கப்பலேறக் காத்திருந்தார்கள். யாத்திரைக்குக் கப்பல்கள் உடனே சித்தமாகிச் செல்லவேண்டுமெனவும், பொன்விளையும் பூமியெனப் பெயர்பெற்ற இக்கீழ்நாடுகளை அவைவே ய்த் தேடிவரவேண்டுமெனவும் ஏற்பாடாயிற்று ஆப்பிரிக்கா தேசத்துத் தென்முனைவரையில் பூமி முன்னமே அவர்களுக்குத் தெரிந்திருந்ததாயினும், 1497–ஆண்டில் முன்செய்த முயற்சியை அவ்வளவோடு கைவிடாமல், இன்னும் அந்தக் கடல் யாத்திரையை நெடுந்தூரம் நடத்திப் புதிய நாடுகளைக் காண்பதற்கு வழிதேடலாயிற்று. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் பழமொழிப்படி அதுவே இமானுவேல் என்னும் அக்காலத்து அரசனுடைய அரசாட்சிக்கு அதிக ஏற்றமுண்டாவதற்கு ஏதுவாகியது.

அந்தப் பெருங்கடல் யாத்திரைக்காக மூன்று கப்பல்கள் சித்தம் செய்யப்பட்டன. சிறந்த சாமர்த்தியமும் செய்

தொழிற் றிறமுமுள்ள சூரனொருவனை அதற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தனர். அந்த மகா சமுத்திர யாத்திரையை முற்றுப்பெற நடத்தத்தக்க திறமையுள்ள தீரன் வாஸ்கோடிகாமாவைவிட மற்றெவனுமில்லை. லிஸ்பன் நகரத்துக்கருகே ஸைனிஸ் என்னும் ஊரில் வாஸ்கோடிகாமா பிறந்தவன். அவன் வமிசம் அப்போதுதான் ஏற்றமான நிலைபெற ஓங்கி உயர்வுபெற்று வந்தது. அவனுடைய வடிவம் மிகக் குறுகியதுமன்று, மிக நீண்டதுமன்று; நடுத்தரமானது. அவன் மிகுந்த தைரியசாலி; எடுத்த காரியத்தை எவ்விதத்திலாயினும் முடிக்கவேண்டுமென்னும் மனவுறுதி உடையவன். தென்றிசையாய் இந்தியாவுக்கு வழிதேடவேண்டிய பெருங்காரியத்தை மேற்கொள்ளத்தக்க திறமையுடையவன் அவனொழிய வேறில்லை. ஆதலின், அவன் ஆதீனத்தில் அவனுக்கு உதவியாய் அநேகம் ஆட்களை ஒப்புவித்து, இத்தேசத்து அரசர்கட்கும் பிரபுக்களுக்கும் அத்தேசத்தரசன் கைப்படவெழுதிய பத்திரிகைகளுடனே அவனை அனுப்பவேண்டியதென்று உத்தரவாயிற்று. அந்த வருஷமே ஜூலை மீ 8வ அவர்கள் தேகஸ் என்னும் நதியை விட்டுப் புறப்பட்டனர்.

அப்பொழுது அவர்கள் செய்த சமுத்திர சஞ்சாரம் மிகவும் சாகசமானது. ஆப்பிரிக்கா தேசத்துத் தென்முனை போய்ச் சேருவதற்கே நான்கு மாதமாயின. அதுவரையில் அம்முனைக்குப் பெரும்புயல் முனையெனவே பெயர் வழங்கிற்றாயினும், பிறகு நன்னம்பிக்கை முனையெனப் பெயரிடப்பட்டது. அவ்விடம் சேர்ந்தபின் சிலநாள் அந்தக் கப்பற்படை டேபில்பே என்னும் குடாவில் அடைக்கலம் புகுந்து களிப்புற்றுத் தங்கியிருந்தது. பின்பு அம்முனையைச் சுற்றி யாத்திரை செய்தபோது, பயங்கரமாய் விடாமல் பெரும்புயலடிக்கவே, அக்கப்பற் படையாட்களெல்லாம் அதைரியமடைந்து கலக்கப்பட்டு, அவ்வளவோடு போர்த்துகல் தேசத்துக்குத் திரும்பிவிடவேண்டுமேயொழிய முன்னோக்கிச் செல்லக்கூடாதென்று வாஸ்கோடிகாமாவை வற்புறுத்தினார்கள்.

கடல்முழுதும் பொங்கிவரத்தக்க புயல்தான் அடிக்கட்டும்; கப்பலாட்கள் அனைவருமே ஒருமிக்கக் கலகப்படட்டும்; 'ஊக்கமது கைவிடேல்' என்பதை மேற்கோளாகக் கொண்ட வாஸ்கோடி காமாவுக்கு அவையெல்லாம் இடை

யூருகுமா? அவன் ஒன்றையும் லக்ஷியம் பண்ணுகிறவனல்லன்; மார்க்கங்களில் எவ்விதமான அபாயங்கள் நேர்ந்தாலும் அவை அனைத்திற்கும் ஈடுகொடுத்து எப்புறத்திலும் கண்ணுய்த் துணிந்து செல்லுகிற சாமர்த்திய முடையவன்.

இந்துதேசத்துக்குக் கப்பல்வழி தெரிந்த ஒருவனை அவ் வாப்பிரிக்கா கண்டத்துக் கரையிலிருந்து தனக்குத் துணைவனுக வரவழைத்துக்கொண்டு அந்தக் கரைவிட்டு நீங்கி, நடுவில் இறங்கும் இடங்களிலெல்லாம் அவ்வவ்விடத்து ஜனங்களோடு வெகு சாகசங்கள் செய்துகொண்டு, எதற்கும் அஞ்சாமல் இந்துமகா சமுத்திரத்து நடுவே கப்பலைச் செலுத்தி வந்து வாஸ்கோடிகாமா கள்ளிக்கோட்டை சேர்ந்தான். இப்படியாகக் கடைசியில் அவனது விடாமுயற்சி காரிய சித்தி பெற்றது.

பின்பு 1502–ஷூத்தில் இரண்டாந்தடவை அவன் இவ் விந்தியாவுக்கு வந்தனன். பிறகு போர்த்துகல் தேசத்தாருக்கு இந்துதேசத்தில் ஏற்பட்ட ஆட்சிகளுக்கெல்லாம் அவனே ராஜப் பிரதிநிதியாக 3–வது ஜான் என்னும் அரசனுல் நியமிக்கப்பட்டான். அதேவிதமாய் அவனுடைய பிள்ளைகளும் ராஜப் பிரதிநிதிகளாகிப் பிரசித்திபெற்ருர்கள். இவ்வாறு காமா இந்துதேசத்தைக் கண்டுபிடித்தபின் இவ்விடத்து வர்த்தக வியாபாரங்கள் அதுவரையிலிருந்த வழியைவிட்டு மற்ருெரு வழியில் திரும்பலாயின: வெனிஸ் நகரத்தாரும் ஜினேவா நகரத்தாரும் பாரசீகக் குடாக்கடல் வழியாக வந்து வெகு காலமாய் இத்தேசத்து வியாபாரத்தைக் கைக்கொண்டிருந்தார்கள். போர்த்துகல் தேசத்தார் இங்குவந்து சேர்ந்தபின் அவ்வர்த்தகத்துள் சிறந்தவை இவர்கள் கைவசமாயின. பின்பு சிலகாலம் கழித்து அங்கிலேயரும் அதன் பயனைக் கொஞ்சம் அடையலாயினர். எங்ஙனமெனில், 2–வது சார்லெஸ் என்னும் இங்கிலாந்து தேசத்தரசன் காத்தரயன் என்னும்போர்த்துகல்தேசத்தரசன் மகளை மணம் புரிந்துகொள்ள, அவ்வரசிக்குக் கொடுத்த சீதனங்களுள் ஒன்ருகப் பம்பாய்த் தீவும் 1662–ஷூத்தில் அவனுக்கு அளிக்கப்பட்டது. வாஸ்கோடிகாமாவின் அபாயத்திற்கு இளைக்காத ஊக்கத்தையும், கம்பஸ் என்னும் திசையறி கருவியைக் கண்டறிந்தது முத

லாகச் சமுத்திர சஞ்சாரத்திற்கு வேண்டிய சாதனங்களை அவன் விருத்தி பண்ணினதையும் யார் மறப்பார்கள்! இவை யன்ரூே இந்தச் சிறந்த மீகாமனுக்குச் சகாயமாயின.

காந்தக்கல்லின் சொரூபம் முன்னமே தெரிந்ததாயினும், விசேஷங்களைக் கண்டுபிடித்த காலமான பதினைந்தாவது நூற்ருண்டுக்கு முன்னே அதை ஒரு விசித்திரமான விளையாட்டுக் கருவியாகமட்டும் கண்டிருந்தனரே யல்லது முக்கியமான காரியங்களுக்கு உபயோகமானதென்று கண்டறிந்தார்களில்லை. பதினைந்தாவது நூற்ருண்டின் முடிவிலேதான் காந்தத்திலுள்ள அதிசயங்களைக் கண்டுபிடித்து, அதை மாலுமிகளுக்கு வழிகாட்ட முதற்கருவியாகச் செய்யலாயினர். திசையறி கருவியைக் கைக்கொண்டு கப்பலோட்டிகள் எவ்விடத்திலும் இப்போது அச்சமின்றிச் சஞ்சரிக்கின்றனர். முற்காலத்தில் நக்ஷத்திரங்களே அவர்கட்கு வழிகாட்டிகள். மேகங்களால் அவை மறைபட்டுப் போம்போது கரை கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் கப்பலை ஓட்டவே மாட்டார்கள்; ஓட்டிஞல் திசைதப்பித் தடுமாறவேண்டுவதுதான். அப்படிப்பட்ட காலத்தில் இக்கருவி தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்டு அந்தக்ஷணமே காரியகாரியானது என்ன அதிசயம் பார்த்தீர்களா!

உலகமெங்கும் தெளிவாய் விளங்கும்படி விண்ணுலகத்தினின்றும் தோன்றிய ஒரு பெருஞ்சோதிபோலத் திசையறி கருவியானது, பிறதேசங்களைக் கண்ணுக்குத் தெரியவொட்டாமல் மறைத்திருந்த பேரிருளை விலக்கிவிட்டது. தைரியசாலிகளும் தனவான்களும் கடல்மார்க்கமாய்ச் செல்லத் துணிவு கொண்டார்கள். டியஸ் என்பவன் புயல்முனையெனப் பெயர்பெற்ற ஆப்பிரிக்காக் கண்டத்துத் தென்முனையைச் சுற்றிவர வழிகாட்டிஞன்; வாஸ்கோடி காமா இந்தியாவுக்கு வழிதேடிப் பிடித்தான்; இதற்கு இடையில் கொலம்பஸ் அமெரிக்கா கண்டத்தைக்கண்டு கரையேறிஞன். இவ்வளவுக்கும் சென்றகாலம் பன்னிரண்டு வருஷங்களுக்கு அதிகப்படவில்லை.

# 9. போலி வைத்தியர்.

“கற்க கசடறக் கற்பவை” என நாயனுர் திருவாய்மலர்ந் தருளினுர். ‘கிஞ்சித் அறிவு கேட்டிற் கேடு.’ இது யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அங்கிலேய பழமொழி. “அற்ப கல்வியா லவனியில் அதிக கேடுறுமால்” என்பது புராணீகர் வாக்கு. நெடுங்கால உஷ்ணத்தால் உபத்திரவப்பட்ட பூமிக்கு மழை ஆவசியகமானுலும், பெருமழையே பெய்தல்வேண்டும். சிறு மழை அழுதபிள்ளையை அடித்து, கிடந்த பசியையுங் கிள்ளி விட்டதுபோலவும், எரிகிற நெருப்பில் நெய் வார்த் ததுபோலவும் பின்னும் அதிக உபத்திரவத்திற் கிடமாகும். அறிவின்மையாகிய நெருப்பினுல் காய்ந்து வறண்ட ஆன்மாக் களுக்கும் கல்வி யமிர்தமாகிய மழை செழிக்கப் பெய்தல் வேண்டும். அல்லாவிட்டால் அஞ்ஞானத்தாலாகுங் கேட்டி லும் அற்ப கல்வியால் வருங் கேடு அதிகமாகும். உண்டோர்க்கு அமிர்தமும் கண்டோர்க்குப் பெருவிஷமுமாவது கல்வியே. ஆதலால் யாதொரு சாஸ்திரத்தை ஒருவன் கற்க முயல்கின்றுனே. அதை அவன் நுட்பமாகக் குருமுகமாய்க் கற்றல் வேண்டும். கற்றபின்னர் கேள்விவேண்டும். “ஆசானுரைத்த தமைவரக் சொளினுங் காற்கூறல்லது பற்றலனுகும்” எனப் பவணந்தி முனிவர் கூறினுர். கல்வி கேள்வி இரண்டும் உடையாரும் அனுபவ மிலராயில் அரை வித்துவான்களேயாம். அறம் பொருள் இன்பமென்னும் விஷயங்களில் தலைபிட்ட கல்விகளுக்கிது பிரமாணமாயின், இவை எவற்றிலும் சிறந்த ஜீவவிஷயத்திற் பிரயோகிக்கப்படும் வைத்திய சாஸ்திரத்திற் கிவ்விதி எவ்வளவு அவசியமென்பது சொல்லிக் காட்டல் வேண்டுமா? பட்டமரத்துக்கு இப்படியானுல் பச்சை மரத் துக்கெப்படி? எல்லாருக்கும் அருமையானது ஜீவன். அதற்கு மிஞ்சினதில்லை. அரசனுயிருந்தாலும் குடியாயிருந்தாலும் அவனவன் தன் ஜீவனைப் பேணுவதே முதல் விஷயமும் முக்கிய கடமையுமாம். ஆதலால் ஜீவமோசத்தை நீக்குவேனென்று வருகிறவனிடத்தில் எவனும் தன்னை ஒப்பிக்கிருன். ஆத்திரமுள்ளவனுக்கு ஆலோசனைமட்டம். தண்ணீரில் அமிழ்ந்தித் தத்தளிக்கிறவன் துரும்பென்றுந் தூணென்றும் பாரான்; பார்ப்பதற்குச் சாவகாசமுமில்லை: கையில் எது

அகப்பட்டதோ அதைத் தாவிக் கட்டிப்பிடிப்பது அவனுக்கு இயல்பு. அப்படியே நோயாளியும் அகப்பட்ட வைத்தியனை அண்டிச் சாருவான்.

உலகத்திலே ஜீவனுடைய அருமையும் நோயுடைய இயல்பும் இன்னவாதலால் எவரையும் இலேசில் அனுப்பக்கூடிய தொழில் போலி வைத்தியமே. போலி வைத்தியமாவது வைத்திய சாஸ்திரத்தைக் கிரமமாகக் கற்றுக்கொள்ளாது அதனைக் கற்றவர்போல நடித்து ஔஷதப் பிரயோகம் பண்ணுதலாம்: இத்தொழிலிற் கையிட்டவர் இத்தனை அத்தனை பெயரல்லர். வீட்டுக்கொரு கற்றுக்குட்டியும், மூலைக்கொரு மூடவைத்தியனுமாய்த் திரிகிறார்கள்.

"அன்னமே கோழியோணன் மயிலென நடக்கில் வாதம்
பின்னையோ ராமையட்டை பெருகவே நடக்கிற் பித்தம்."

என்று இரண்டு வரியைப் பாடம் பண்ணுவதும், சுர நாயகன் மாத்திரை, சருவவிஷ சஞ்சீவினி, வாதகோடரி, சேடநாச சங்காரசிம்மம், அமிர்த கடவீரசூரகாரி, குன்ம குலாந்தகன், காளமேக நாராயண சிந்தூரம், சன்னிவாத ராக்ஷஸன், சண்டரசபதங்கம் என்று பப்பத்து முழத்தில் பற்பல பெயர்களைச் சொல்லிக்கொள்வதும், நாலு செப்புக் குடுவைகளிலே கறுப்புஞ் சிவப்புமாகச் சில மாத்திரைகளைப் போட்டுக்கொண்டு நம்முடைய மாத்திரையின் பெயர் கேட்டால் அந்த நோய் பத்துக் காதமகலாதா? மருந்தும் மந்திரமும் வேண்டுமா? என் கைவாசி போதாதா? இன்னாருக்கு இன்னது செய்தேன், அன்னாருக் கன்னது செய்தேனென்று தம்மைத்தாமே புகழ்ந்துகொள்வதும், பிறர் இக்கட்டைத் தமக்கு ஊதியமாக எண்ணிப் பேதைகளை மருட்டுவதுமே இவரது வைத்தியத்தின் சாரமாம். கைவிட்டுக் கடந்துபோகிற காலத்திலே "நோயாளி விதியாளியானாற் பரிகாரியும் பேராளி." "நோய்க்கு மருந்தன்றி ஆயுசுக்கு மருந்தா" என்று போக்குச்சொல்லி விதியிலே பழியைப் போட்டுத் தாம் மெதுவாய்க் கழன்று விடுவார்கள். நாய்க்குத் தன் ஜாதியே முதற்பகையாவது போல, இவர்களுக்கும் முதற்பகை தம்போலொத்த பிற வைத்தியரே.

வைத்திய சாஸ்திரத்தை நன்கு கற்ற ஆயுள்வேத பண்டிதர்கள் தாம் ஒரு வியாதியை மட்டிட்டுக் கொள்ளாதிருக்கும் போது தம் போலும் பிற பண்டிதரோடு கூடி ஆலோசனை செய்து ஔஷதங்கொடுப்பார்கள். பாமர பண்டிதருக்கோ வைத்திய நூலின் மணமும் அறியாவிட்டாலும் பிற வைத்தியர் கிட்டவுமாகாது முட்டவும்போகாது. குற்றஞ் செய்தவனை அரசர் மண்ணுக்குப் போடுவதுபோல நோயாளிகளை இவர்கள் நாற்பதுநாள் ஒரு மண்டலம், இருபது நாள் அரை மண்டலமென்று மண்டலக்கணக்காக உப்புமில்லாமற் புளியுமில்லாமல் உள்ள உணவையும் கெடுத்து அரும் பத்தியத்திற் போட்டு வைப்பார்கள். பாவிநோயாளிக்குக் கடைசியிலே பத்தியத்திலேதான் பழி: நாம் என்னசெய்யலாம் அம்மா, பிள்ளை பத்தியத்தை முறித்துப்போடுகிறான்போலத் தோற்றுகிறது என்று தந்தை தாயருக்குச் சொல்லி, போகட்டும் இன்னும் ஒரு மருந்திலே இந்த நோயைப்பிடிக்கிறேன் பார்; மருந்துக்கு இப்போது இரண்டு ரூபா கொடுவென்று வாங்கித் தன் வீட்டுச் செலவுக்குக் கொண்டுபோவார்கள். வாய்தான் இவர்கள் சாமர்த்தியம்; வாயில்லாவிட்டால் நாயுந் தேடாது இவர்கள் பாடு.

"கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி;
மற்றைய ராவார் பகர்வார்: பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும்; என்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொ:லி."

என்று நாலடி ஆசிரியர் சொல்லியருளியதுபோல வாய்ச் சலசலப்பு எவனுக் கதிகமுண்டோ அவனை வெறுங்காவடி என்றே கொள்ளல்வேண்டும். நிறைந்த குடம் ததும்புமா? உட்கார்ந்த இடத்திலே ஒன்பது பாட்டுச் சொல்லாமல் எழுந்திரார்களே. "ஆயிரம்பெயரைக் கொன்றவன் அரைப்பரிகாரி, மூவாயிரம் பேரைக் கொன்றவன் முக்காற் பரிகாரி" என்னும் பழமொழிபோய் இப்போது வாய்நிறைந்த புளுகுக் கவிகளே வல்ல வைத்தியமாய் விட்டது. புளுகென்றாலும் கொஞ்சப் புளுகா? ஊமைக்கு உளறுவாயன் உற்பாதபிண்டம் ஆவது போல, அங்கசாஸ்திரம் அறியாத பேதைகளிடம் அவர் சொல்லும் எலும்புக்கணக்கும் நரம்புக் கணக்கும் எவ்வளவு?

பூமியின் நீளம் அகலம் அறிந்து சொல்லாவிட்டால் மந்திரிக்குச் சிரச்சேதமென்று தண்டம் விதித்த அரசனுக்கு அம் மந்திரியின் மாட்டுக்காரப் பையல் பூமி பன்னிரண்டு கோடியே முப்பத்துநாலு லக்ஷம் யோசனை நீளமும், பத்துக்கோடியே ஐம்பது லக்ஷம் யோசனை அகலமுமுள்ளதென்று சொல்லிச் சமுசயமிருந்தால் அளந்துபார், இது ஞானதிருஷ்டியால் அறியத்தக்கது என்று ஏமாற்றிவிட்ட மந்திரியாய், உடம்பில் நாலாயிரத்து நானூற்று நாற்பத்துநாலு எலும்பாமே. அப்படிப் பார்த்தாலும் விகடகவி, இப்படிப் பார்த்தலும் விகடகவி என்றாற்போல, எப்படிப் பார்த்தாலும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்து நாலுதான். நல்ல விகடகவிக் கணக்கு!! தீண்டலுந்தகாது பிணத்தைக் காண்டலுந் தகாதென்று நிற்கும் ஆசார சிகாமணிகளுக்கு எலும்புக்கணக்கு எவ்வாறு புலப்பட்டதோ? "கைம்மணிச் சீரன்றி வேறறியாக் கம்பநாடன் சொன்ன—மும்மணிக்கோவை முதற்சீர் பிழைபிழை" என்றாயதுபோல, அங்காதி பாதத்தில் "ஹரி ஓம் நம" என்று ஆரம்பிக்கும் நெடுங்கணக்காகிய எலும்புத் தொகையே தவறென்றால் அப்பாலே பேசவேண்டியதென்ன? பிறக்கும் போதே முடமென்றாற் பிள்ளை நடந்தாற்போலத்தான்!

களைகள் வளர்ந்து பயிரைப் பாழாக்கினதுபோல இவர்கள் எழும்பியல்லவா நமது வாகடம் இப்போது இழிவுபட்டுப் போய்விட்டது. அகஸ்தியர் தன்வந்திரி முதலிய பெரியோர்களது சாஸ்திரத்தைத் தப்பென்று நாம் சொல்லவில்லை. ஒரு வைத்திய பண்டிதர்க்கு ஒன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மூடவைத்திய ரென்றால், வைத்தியத்தின் உண்மை எப்படிப் பிரதாபிக்கும்?

"உலகினிடை சாதிமணி யொடுபோலி மணிபுரையும்;
உலவுவை தர்ப்ப நடையி
னொடுகவுட நடைசிவணும்; உரைவாச்சி யத்தொடு
வியங்கிய முறழ்ந்து மருவும்;
இலகிய சொயஞ்சமய மோடிதர சமயங்கள்
இகல்செயும்; இலக்க ணமுடன்
இலக்கணை பயின்றெழுதும் எல்லியுடன் அல்லுலவும்
இவையெங்க ணும்வ ழக்கே."

என்றொரு வேளை சொல்வீர்கள் போலும். ஆனால் இவ்வளவு அநியாயமா? வைத்தியம் தமக்குத் தெரியாதென்பதைத் தாமே முற்றும் அறிந்தும் ஏழைகளை மருட்டிப் பணம் பிடுங்கவா? அதுவும் அவருயிர்க்கு மோசம் செய்தா? பெரும் வழித்திருடர் இவரிலும் உத்தமராவாரே! அவரை நம்பித் தம்முயிரை அவர் வசம் கொடுத்தோர் உயிருக்கா இப்படி மோசஞ்செய்வது? இத்தொழிலை விட்டு இரந்துண்டு வயிறு வளர்க்கலாமே. இவர்களால் அநுகூலமில்லையா? பல நோய்களை இவர்கள் ஔஷதம் கொடுத்து மாற்றவில்லையா? என்று கேட்பீர்களாக்கும். ஐயோ, உலகத்தில் மனுஷனுக்கு வரும் நோயெல்லாம் மரணநோயா? மருந்தின்றி மாறும் நோய் எப்படியானாலும் மாறித்தான் போகும். அப்படி மாறினால் அப்பலன் இவர்களுக்கா? செத்தால் நமக்கென்ன, எப்படியாவது செத்துப்போ; பிழைத்தால் நமக்குப் பணம் என்று சொல்லாமற் சொல்லி ஏமாற்றுகின்றார்களே. ஒரு கற்றுக்குட்டி வைத்தியர் செங்கல்லைக் கரைத்துப் புட்டியில் விட்டு வந்து மருந்துக்கடையிலே வாங்கிவந்தேனென்று கொடுத்து ஐந்து ரூபா வாங்கிப்போனதும், நோயாளி அந்நீரைக் குடித்துச் சௌக்கியமடைந்ததும் உண்டு. அடா பாவி! ஒரு கால் ரூபா வாங்கினாற் போதாதா என்று கேட்டவர்க்கு, வாங்கின ரூபாவுக்குத் தக்கதுதானே அவர்கள் நம்பிக்கையும் தமது பெயருமென்று வைத்தியர் சமாதானம் சொல்லிவிட்டாராம்.

மேலும் இவ்வளவு அநியாயம் இத்தேசத்தைப்போல மற்றெந்தத் தேசத்திலும் இல்லை. மறுதேசங்களில் வைத்திய சாஸ்திரப் பரிக்ஷை கொடுத்து ராஜ சங்கங்களில் உத்தரவு பெற்றோரன்றி மறுபெயர் வைத்தியஞ் செய்யக்கூடாது. செய்து யாதாயினும் மோசம் வந்தால் அம்மோசத்துக்கு அவர்கள் உத்தரவாதிகளாகிறார்கள். இங்கே தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டமென்று அவர்கள் பேச்சே சிலாமணியாகின்றது. சபையுமில்லை சங்கமுமில்லை. ஜாண் வயிறு வளர்க்க வேறு வழியில்லாத பெயரெல்லாம் மருந்தும் குடுக்கையும் எடுத்துக்கொண்டு வைத்தியம் செய்யவா? வைத்தியவித்தை நன்றாயிருந்தது!

வைத்தியரென்று பெயர் வகித்தவுடனே இவர்களுக்கே பைத்தியம் தாவி விடுகிறது. உலகறியக் குளிர்மைபெற்ற

தண்ணீர் பனிக்கட்டி முதலிய பதார்த்தமெல்லாம் சூடு சூடு என்று குளறுவார்கள். வெந்நீரைக் குளிர்ந்த வஸ்துவென்று உளறுவார்கள். இப்படிப் பித்தேறிய பெயரையா வைத்திய ரென்பது!

கட்புலனுக்குத் தெரியாமல் உடலிலே உற்பத்தியாகும் நோய்க்குத்தான் இப்படியாவது மருண்டீர்கள்; சத்திரவித்தை குயவனுக்குப் பாரம்பரையா? பனையிலே படவாள் பார்த்த குயவனையா எலும்பிலே கோணல்தீர்க்க வைக்கிறீர்கள்? அம்பட்டச்சி வயிற்றிலே பிறந்தவளெல்லாம் மருத்துவிச்சியா? தேகமெல்லாம் வருந்தி, இடுப்பு நொந்து பிரசவித்த பெண்ணுக்கு முதல் வைத்தியம் மூன்று நாட்பட்டினி. இலங்கணம் பரமௌஷதம். அநியாயம்! அநியாயம்! விஷத்துக்குக் குறத்தி, மருத்துவத்துக்கு அம்பட்டச்சி, சத்திரத்திற்குக் குயவன். ஆ! நமது வைத்தியத்திற்கு வந்த இழிவை என்னென்று சொல்வோம்!

## 10. போன உயிர் வருவதானாலும் பொய் புகல லாகாது.

[*சந்திரமதி பாம்பு கடித்திறந்த தன் புத்திரனை எடுத்துத் தோள் மீது கிடத்திக் கொண்டு சுடலையை நாடி, புலம்பிக்கொண்டு போம் போது விசுவாமித்திரர் சூழ்ச்சியால், வழியில் ஒரு சித்தரைச் சந்திக்க அவர் அவள் நிலைக்குப் பரிதபித்து அவள் வரலாற்றை வினவிவிட்டு யோகத்தில் அமர்வதாக நடித்து நேரஞ்சென்று விழித்து மீட்டும்வினவ சந்திரமதி கூறுகிறாள்.*]

**சந்திரமதி.**—சுவாமி! யான் கன்னோசி நாட்டுக் காவலராகிய சந்திரதய மன்னவரது மகள்.

**சித்தர்.**—ஆ, ஆ, அப்படியா! அடாடா! இது என்ன பரிதாபம்! பிறகு சொல்லம்மணி.

**சந்திரமதி.**—அவர் நெடுங்காலம் புத்திரப் பேறில்லாமல், அருந்தவம் புரிந்து, அடியாளைப் பெற்றனராம். யான் பிறக்கும் பொழுதே கழுத்தில் மங்கல நாணுடன் பிறந்தேன். ஆனால் அது கண்ணாடி நிழலிலும், என்னை மணக்கும் கணவர்

கண்ணிலும் புலப்படுமே யன்றி வேறெவர் கண்ணிலும் புலப் படாதென்று பரமேஸ்வரர் அருள் செய்தனராம். பின்பு என் தாய் தந்தையர் அருமையாக வளர்க்க வளர்ந்து கன்னிகைப் பருவத்தை யடைந்தேன். அது கண்ட என் தந்தை எனக் குச் சுயம்வரமென்று பல தேசத்து ராஜ குமாரர்களுக்கு மணவோலை யனுப்பினர். குறித்த அத்தினத்தில் அரசிளங்கும ரர் பலர் கன்னோசி மாநகரத்தில் திருமண மண்டபத்தை யடைந்து வீற்றிருந்தனர். பின்பு; எனது தோழியர் என்னைப் புண்ணியநதி தீர்த்தத்தினால் மங்கல ஸ்நானஞ் செய்வித்து, ஆடையணிகளால் அலங்கரித்து திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அவ்விடத்தில் தெய்வத்தின் திரு வருளாலும், தேவரீரையொத்த பெரியோருடைய ஆசீர்வாதப் பயனாலும், அடியாளது மங்கல நாணைக் கண்ணுறக்கண்ட அரிச்சந்திரராம் அயோத்தி மகிபருக்கு மணமாலை சூட் டினேன்.

சித்தர்.—ஆ, ஆ, அரிச்சந்திர மன்னவருடைய மனை வியா! பிறந்த விடமும் புகுந்த விடமும் மிக மேன்மையாகவே இருக்கின்றனவே. பிறகு,

**சந்திரமதி**.—பிறகு மலரும் மணமும் போல ஒரு மனப் பட்டு இருவரும் மகிழ்வுடன் வாழ்ந்திருந்தோம். பின்பு, அரியதவம் பல புரிந்து ஓர் ஆண் மகவை யடைந்தோம். ஐயோ தெய்வமே. என்ன செய்வேன்!

சித்தர்.—அம்மா, வருந்தாதை. ஒன்றும் குறை நேரிடாது. மற்றவற்றையும் சொல் அம்மா.

**சந்திரமதி**.—சுவாமி, இவ்வாறு இன்புற்று வாழுநாட்களில் ஒரு நாள் விசுவாமித்திர முனிவர் ராஜசபா மண்டபத்திற்கு வந்து, அரசர்க்கு ஆசீர்வாதம் கூறியபின், அரிய யாகம் ஒன்று முடிப்பதற்கு நூறு லட்சம் பொன் வேண்டினர். மன் னவர் அம்முனிவர் கேட்டவாறே அப்பொருள் முழுதும் உதவ உடன்பட்டனர். ஆயினும் அம்முனிவர் அதை அப் போது பெற்றுக்கொள்ளாமல் வேண்டும்போது பெற்றுக் கொள் வதாகச் சொல்லிச் சென்றனராம். சில நாட்களின் பின்பு குடிகள் முறைப்பாட்டிற்கு இரங்கி, வேந்தர் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றார். அங்கு நெடுநேரம் வேட்டையாடிக்

களைத்து, அரசர் ஒரு மரத்தின் நிழலில் தங்கினர். அப் போது இரண்டு பெண்கள் வந்து அரசர்முன் இன்னிசையா கப் பாடினராம் அது கேட்டு மனமகிழ்ந்த மன்னவர் ஒரு மணிமாலை யளித்தனராம். அதை அப்பெண்கள் மறுத்து வேண்டாம் என்றனராம். பின்பு அரசர் "உங்களுக்கு வேண் டுவன யாவை?" என்றனர். அவர்கள் தம்மை மணக்கும்படி வேண்டினராம்

சித்தர்.—அடா, அடா, என்ன துணிவு! பெண் பால்களா ஆண்பாலை வேண்டினர்! என்ன காலம்!

**சந்திரமதி**.—ஆம், சுவாமீ. அப்போது மன்னவர் அப் பெண்களுக்கு ஏற்றவாறு இன்சொல் கூறி, புத்தி புகட்டி மறுத்து வந்தனர். அது கேட்டுத் திரும்பிச் செல்லுகையில் மன்னவர் உடன் படாமைக்கு மனம் வருந்தி அவரைப் பல வாறு வைததைக் கேட்ட நமது பாங்கன் ஒருவன் அவர்க ளைத் தண்டித்தனன்.

**சித்தர்**.—அதிருக்கட்டும். இவ்வார்த்தைகள் உனது மணா ளர் சொல்ல நீ கேட்டவைதானே. விஷயம் நீ நேரிற் கண்ட தல்லவே?

**சந்திரமதி**.—கேட்டவையே யன்றி அடியாள் நேரிற் கண் டவை யல்ல சுவாமீ. ஆயினும் அவர் வாசகத்தில் தேவரீ ருக்கு எள்ளளவும் ஐயுறவு வேண்டுவதில்லை. மற்றும் நட ந்தவற்றைத் தயைகூர்ந்து கேட்டருளினுல் இதன் உண்மை விளங்கும், சுவாமீ.

**சித்தர்**.—ஆனுல் சரி, சரி. மற்றதும் சொல்லம்மா. உல கத்தில் பெண்பால்கள் ஆண்பாலாரை வலிந்து கேளார். அவ் வாறு கேட்பினும் புருடர் அவர்களது வேண்டுகோளுக்கு உடன் படாமற் போகார். இது முற்றும் மாருகவன்றோ இருக்கின்றது! ஆனுல் மணாளர் தன்மை உனது மனமறியும். யாம் என்னறிவோம்? பிறகு,

**சந்திரமதி**.—சுவாமீ! அடியாள் சொல்வதில் சற்றும் ஐயம் வேண்டா. உண்மைக்கு மாருனதை ஒருபோதும் உரையோம் சுவாமீ.

**சித்தர்.**—ஆனல் சரி. இனி யாம் ஒன்றும் ஐயமுற்றுக் கேட்கமாட்டோம். மற்றும் சொல்லலாம்.

**சந்திரமதி.**—சுவாமீ! பாங்கன் அப்பெண்களைத் தண்டித்த சங்கதியை அரசர் உணர்ந்து அவனுக்கு நற்புத்தி யுரைத்துக் கொண்டிருந்தனர். அப்போது விசுவாமித்திர முனிவர் கடுங் கோபத்துடன் வந்து மன்னர்மீது சீற்றங் கொண்டனர்.

**சித்தர்.**—ஏன்? காரணம் ஒன்று மில்லாமலா?

**சந்திரமதி.**—காரண மில்லாமலன்று சுவாமீ! முன் இசை பாடிய பெண்கள் அவரால் வளர்க்கப் பட்டவர்களாம். அவர் களைப் பாங்கன் அரசரது ஏவலினுல் தண்டித்தான் என்று கருதி வந்து கோபித்தனர். அப்போது அரசர் அம் முனி வரை வணங்கி மன்னிக்க வேண்டினர். முனிவர் "செல்வச் செருக்காலன்ரே இத்தீங்குகள் புரிந்தாய்" என்றனர். அதற்கு அரசர் "சுவாமீ, இவ்வரசை ஒரு சிறை என்று எண்ணியிருக் கிறேனேயல்லது, சீர் என்று எண்ணினேனல்லன்" என்றனர். முனிவர் "ஆயின் எமக்கதை அளித்துவிடுகிறதுதானே!" என, "அப் பூபாரத்தை மகரிஷியாகிய தாங்கள் தாங்கிக் கொள்வதா ஞல் மனக்களிப்புடன் கொடுத்துவிடுகின்றேன்" என்று எனது மணுளர் அரசை முனிவர்க்கு உரிமைபாகத் தத்தம்செய்து விட்டனர். இவ்வளவும் எனது மணுளர் கூற அறிந்தேன்.

**சித்தர்.** — முனிவரா மனமார அரசுவேண்டுமென்ருர்? அதுவும் ஒரு சொல்லளவில்! நன்ருயிருக்கிறது. பிறகு,

**சந்திரமதி.**—பிறகு யாங்கள் வானப்பிரஸ்த நிலையை யடைய, காட்டிற்குப் புறப்பட்டோம். அப்போது முனிவர் வனத்தில் தவம் புரிவார்க்கு ஆடையணிகள் ஏன் என, யாங் கள் அவற்றைக் கழற்றி அம்முனிவருக்குக் கொடுத்துவிட்டு அப்பெருமான் அருளிய இளஞாயிற்றின் நிறம்வாய்ந்த வஸ்தி ரத்தை உடுத்திக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டோம். உட னே முனிவர் அரசனைக் கூப்பிட்டு, "முன்பு எனக்கு யாகஞ் செய்யக் கொடுத்த பொருள் எங்கே?" என்று கேட்டார். அப் போது அரசர், "சுவாமி அது ராஜாங்கத்துப் பொருட் சாலை யிலேயே இருக்கின்றது" என்ருர். "அரசைத் தத்தஞ் செய் தபோது அவ்விஷயத்தைக் குறிப்பிடாமையின் அதுவும்

ஏம்மதே யாகிவிட்டது. முன்பு வாக்குக் கொடுத்தபடி பொன் முழுதும் கொடுக்கின்றாயோ? இல்லையோ?" என்று முனிவர் கேட்டார். சொன்ன மொழியை மறுத்தல் கூடாமையால், அவ்வாறே நாற்பது தினங்களில் கொடுத்துவிட ஒப்புக் கொண்டோம்.

**சித்தர்.**—அடடா! இதேது முனிவர் சங்கதி முழுமோசமாக விருக்கின்றதே.

**சந்திரமதி.**—சுவாமீ; மோசம் ஒன்றுமில்லை. முறைப்படியே நாம் சொல்லியதைக் கொடுத்துத்தானே தீரவேண்டும்.

**சித்தர்.**—நன்று யிருக்கிறதே. நீங்களென்ன அப்பொருளை வேறாகவா எடுத்து வைத்தீர்கள். ஒன்று மில்லையே. பொருட் சாலையில்தானே இருந்தது. இதற்கென்ன தொடர்வழக்கு?

**சந்திரமதி.**—அரசை யளித்தபோது அப்பொருளைப் பற்றிக் குறிப்பிக்க வேண்டுமென்பது உண்மைதானே. அவ்வாறு குறிப்பியாதபடியால் அப்பொருளைக் கொடுக்கநேர்ந்தது, சுவாமீ.

**சித்தர்.**—நீங்களே அவ்வாறு நினைத்தால், முனிவர் பெறுவதற் கென்னதடை. ஐயோ, என்ன விதி! பின்பு,

**சந்திரமதி.**—சுவாமீ, அப்பொருளைப் பெறும்படி எங்களோடு நட்சத்திரேசர் என்பவர் ஒருவரை யனுப்பினர். ஆகவே நாங்கள் நால்வரும் நகரத்தை விட்டுப் புறப்பட்டோம். அப்போது நகரமாந்தர்கள் கூக்குரலிட்டு வருந்தினர். அது கண்ட முனிவர் இனி ஒரு கணமும் அங்கிருக்கப் படாதென்றும், மறுபடி அந்நகருக்கு யாங்கள் வருதல் கூடாதென்றும் கூறினர். அவ்வாறே உடன்பட்டு வந்து விட்டோம். இரண்டு நாட்களுக்குப் பிறகு சத்தியகீர்த்தி என்னும் மந்திரியும் அரசரைப் பிரிந்திருக்க மனம் பொறாமல் வந்து எங்களோடு கலந்து கொண்டனர். பின்பு நாங்கள் ஐவரும் பெருங் கஷ்டப்பட்டு அன்ன பானாதிகளின்றி கந்தமூலாதிகளை யருந்திக் கொண்டே கால்நடையாய்க் காசிமாநகரத்தை யடைந்தோம். அங்கே பலவகையில் முயன்றும் கைகூடாமல் வருந்திக்கொண்டு ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தோம். எங்கள் வருத்தங்களைக் கண்ட நட்சத்திரேசர் வெளியேசென்று முயன்று ஓர்

அந்தணரை அழைத்து வந்தனர். அவ்வந்தணர் ஒரு பெண்ணடிமை வேண்டுமென்று, என்னையும் என் மைந்தனையும் அடிமைகொண்டு முனிவர்க்குச் சேரவேண்டிய பொன் முழுவதையும் அளித்து விட்டனர். பின்னர், என் மணாளர் முதல் ஒருவரும் யாங்கள் அடிமைப்பட்ட வீட்டண்டை வருதல் கூடாதென்று, அவ்வந்தணர் மறுத்துவிட்டனர். அது கேட்டு எமது மன்னர் மனங்கசிந்து மந்திரியோடும் எங்கோ சென்று விட்டனர். யானும் என் மைந்தனும் மறையவர் வீட்டையணுகி, வேலைகள் பலவும் செய்து, இட்டதை யுண்டிருந்தோம். ஐயோ, தெய்வமே!

(சற்று நிறுத்தி யழுகின்றாள்).

**சித்தர்** — பிறகுதான் ஏதோ நடந்திருக்கின்றாற்போல் காண்கின்றது. வருந்தாமல் மற்றவற்றையும் சொல்லம்மா.

**சந்திரமதி**.—சுவாமீ! என்னென்று சொல்வேன். இன்று காலையில் அந்தணர், நாளைவரும் வருஷப் பிறப்புக்காக, தருப்பை சமிதை முதலியவற்றைத் தேடிக்கொண்டுவரும்படி, மற்ற பிராமணப் பிள்ளைகளுடன் என் மைந்தனையும் அனுப்பினர். சுவாமீ, என்ன சொல்வேன். என் அருமை மைந்தன் தருப்பை கொய்யும்போது அரவந்தீண்டி யிறந்தான் என்று சேர்ந்து போயிருந்த பிராமணப் பிள்ளைகள் வந்து சொல்லினர். ஐயோ சுவாமீ! இதோ பிணமாகக் கிடக்கின்றான் அவன்! என்ன செய்வேன்! என் மணாளர் எங்குச் சென்றாரோ அறியேன்! திக்கற்ற இப்பிணத்தை அடக்கஞ் செய்யச் சுடலையைத் தேடிச் செல்கின்றேன். சுடலை எங்கிருக்கின்றதோ, அதையும் அறியேன். இந்த நள்ளிருளில் இக் காசி நாதரே தேவரீரைத் துணையாக்குவித்தாரோ, யாதோ அறியேன். சுவாமீ, என்ன செய்வேன்!

**சித்தர்**.—ஐயோ, என்ன துக்கம். இப்படியும் துன்பங்கள் தொடர்ந்து வருமோ! எல்லாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும். இருக்கட்டும், ஏதோ நற்காலத்திற்குத்தான் நமது கண்ணில் பட்டீர்கள். விஷந் தீண்டியது என்பது உண்மைதானோ.

**சந்திரமதி**.—சுவாமீ! யான் அதை நேரிற் காணவில்லை. அந்தணர் பிள்ளைகள் கூறவே அறிவேன்.

**சித்தர்.**—எதனால் மரணம் சம்பவித் திருந்தாலும் இருக்கட்டும். யாம் முன்பு கூறியவாறே அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமாசித்திகளும், பரகாயப்பிரவேசம் முதலிய அற்புதங்களும் பயின்று, முடிவில் ஜீவகாருண்யம் மிகுந்து, இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் மகத்துவ மகிமையால் சித்தர் என்னும் சிறப்புப்பெயரும் பெற்றிருக்கிறோம். அதிருக்கட்டும், இப்போது உடலில் உயிர்ப்பே இல்லையோ? உடலிற்சூடுமில்லையோ?

**சந்திரமதி.**—சுவாமீ, உயிர்ப்பேது. வெறுங் கட்டையாகவே இருக்கின்றது. உடலிற் சூடும் இல்லை. ஐயோ, சுவாமீ. தாங்கள்தான் அருட்கண் வைக்கவேண்டும்.

**சித்தர்.** — விஷமானால் எதுவாயினும் நீக்கிவிடலாகும். அதிலும் அர்த்த ராத்திரியாகவில்லை. எல்லாம் ஒடுங்கினும் தனஞ்சயன் என்னும் வாயுமாத்திரம் விரைவிற் பிரியாது. பார்க்கலாம், கடவுள் செயல். இருக்கட்டும். மற்றொரு விஷயம் சொல்லவேண்டும்.

**சந்திரமதி.**—சுவாமீ, திக்கற்றோர்க்குத் தெய்வமே கதியென்பது உண்மையாகக் கண்டேன். இப்புதல்வனை உயிர்ப்பிப்பது தேவரீர் கடமை. அருளே உருவாக வந்துள்ள தேவரீருக்கு யான் என்ன செய்ய வல்லேன்.

**சித்தர்.**—அது இருக்கட்டும், ஏதோ தெய்வத் திருவருளை முன்னிட்டு முடித்துவிடுகின்றோம். அஞ்சவேண்டாம். இப்பிள்ளையை உயிர்ப்பித்த பிறகு, நீங்கள் இருவரும் எம்மிடம் இருந்து தொண்டுபுரிய வேண்டும் இதற்கு இஷ்டமானால், உடனே செய்கின்றோம்.

**சந்திரமதி.**—சுவாமீ! என்ன செய்வேன். முன்பே எமது வரலாறு முழுதும் உரைத்தேன் மனம்புரிந்து அனைத்தும் கேட்டருளினீர்கள். இப்போது எவ்வாறு தங்களுக்குத் தொண்டு புரிவது. தேவரீரது அடிகளை இரவும் பகலும் மனனம் செய்து கொண்டிருப்போம். தாங்கள் ஒரு தெய்வம். எங்கள் அடிமைத் தன்மை நீங்கியபின்பு தங்கள் அடிகளுக்கே குடிமுழுதும் அடிமைபூண்டு தங்கிக் கிடக்கின்றோம். இதனினும் யாங்கள் பெறும்பேறு யாது? சுவாமீ, திருவுளங்கொண்டு இப்பாலனை உயிர்ப்பிக்கவேண்டும். இனித் தங்கள் பாதங்களே கதி.

(சந்திரமதி சித்தர் பாதங்களில் விழுந்து வணங்குகின்ருள்.)

**சித்தர்.**—அம்மா, இதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இப் பிள்ளையை உயிர்ப்பிக்கத் தடையில்லை. நீங்கள் இருவரும் எமக்குத் தொண்டுசெய்ய வேண்டும்.

**சந்திரமதி.**—சுவாமீ, தேவரீர் அறியாதது ஒன்றுமில்லை. எமது அடிமைத்தன்மை நீங்கினுலன்றி எமக்குச் சுதந்தர மில்லை. என்ன செய்வோம்? எனது மணுளர் எம்மை மீட் கும் நாள்முதல் தமது அடிகளுக்கே அடிமை பூண்டு ஒழுகுவோம். சுவாமீ சற்றுக் கடைக்கண் பார்க்கவேண்டும்.

**சித்தர்.**—நீங்கள் இப்போது போகாவிட்டால் அவ்வந் தணர் என்னசெய்யப் போகின்ருர்? மைந்தனேடு தாயும் இறந்துவிட்டாள் என்றே எண்ணுவார். ஆகையால் நீங்கள் இங்கே இருந்து விடலாமே.

**சந்திரமதி.**—சுவாமீ, யாருக்கு எதை மறைப்பினும் இறை வனுக்கு எதையும் மறைத்தல் கூடாது. அவரோ தலைக்கு மேல் நின்று சாட்சியாக விளங்குகின்ருர். மனிதர்க்குப் பயப்படாது ஒழியினும், தெய்வத்திற்கு பயப்படாதொழிவ தெப்படி! சுவாமீ, யான் விரைவில்வந்து விடுவதாய்ச் சொல்லி விடைபெற்று வந்திருக்கின்றேன். ஆதலால், விரைவில் கிருபை செய்யவேண்டும்.

**சித்தர்.**—அப்படியாயின் இயலாது. எமது குருநாதர் கட்டளை அப்படி. அதனைக் கடத்தல் முடியாது. நமக்குத் தொண்டு செய்வதானுல் உடனே உயிர்ப்பிக்கின்ருேம்.

**சந்திரமதி.**—சுவாமீ, அதனைமட்டும் மன்னித்து அருள் புரியவேண்டும். இனித் தங்கள் பாதமே கதி. (விழுந்து காலைப் பிடித்துக்கொள்கிருள்.) சுவாமீ, தெய்வமே முன் னின்று தங்களை யனுப்பியிருக்க, தாங்கள் எவ்வாறு மவுன மாயிருக்கக் கூடும்? சுவாமீ, கிருபைகூர்ந்து அருள்புரிய வேண்டும். தேவரீரது பாதங்களே எங்களுக்குப் புகலிடம். இப்பாதங்களை ஒரு கணமும் மறவோம். சுவாமீ, இந்த மைந் தன் முகத்தைப்பார்த் தருள்செய்ய வேண்டும்.

**சித்தர்.**—அம்மா, நீசொல்வதைக் கேட்கவும், செய்வதைப் பார்க்கவும் எமது மனம் கரைந்துபோகின்றது. ஆனுல் ஒன்று

சொல்லுகின்றோம். யாரேனும் இறந்தவன் எவ்வாறு உயிர் பெற்றான் என்றால், "அவன் இறக்கவில்லை, மூர்ச்சையா யிருந் தான், நான் போய் எடுத்து அணைத்துத் தண்ணீர் குடிப் பித்தேன். மூர்ச்சை தீர்ந்து எழுந்துகொண்டான்" என்று சொல்லிவிடு.

**சந்திரமதி.**—சுவாமீ, இப்படியும் சொல்லலாகுமா? தெய் வந்தான் பொறுக்குமா? அவ்வாறு சொல்லின் பொய்யாக வன்றோ முடியும் அன்றி செய்ந்நன்றி கொன்றதாகிய குற்ற மும் சம்பவிக்குமே, சுவாமீ. அவ்வாறு எப்படிச் சொல்ல லாகும், சுவாமீ. என்ன செய்வேன். ஐயோ காசிநாதா, கடைக் கண் பார்த்தருளாயா!

**சித்தர்.**—அம்மா, இதெல்லாம் வீண்பேச்சு. இறந்தவனை உயிர்ப்பித்தல் எவர்க்கும் அரிது. அது எமது குருநாதர் கடாக்ஷத்தினால் எமக்குக் கிடைத்திருக்கின்றது. அதனை ஒரு வரும் அறியக்கூடாது. ஒருவரறிந்தால் உலகமறியும். ஒரு வருக்கும் தெரியப்படாது என்பதற்கே எமக்குத் தொண்டு செய்துகொண் டிருக்கவேண்டும் என்றோம். அது கூடாமை என்கிறாய் அதனால் இவ்விஷயத்தைச் சற்று மாற்றி உலகத் தார் கேட்கும்போது உரைக்கும்படி சொல்கின்றோம். அதற் கும் நீ உடன்படுவதாகக் காணோம். இனி உங்கள் கதிபோ லாகட்டும், யாம் போகின்றோம்.

(விரைந்து போகின்றார்.)

**சந்திரமதி.**—(பின்தொடர்ந்து) சுவாமீ, சுவாமீ! தயை செய்யவேண்டும். கிருபை செய்யவேண்டும். அடியாள் யாரு மற்றவள். தமது பாதங்களில் விழுந்து வேண்டுகின்றேன். சுவாமீ, கடைக்கண் பார்த்தருளும்.

**சித்தர்.**—முடியாது, முடியாது. எம்மால் ஒன்றும் ஆகாது. யாம் போகின்றோம் இல்லாவிடில் யாம் முன்னே கூறியபடி இரண்டில் ஒன்று ஏற்படவேண்டும்.

(சிறிது தூரத்தில் நிற்கின்றார்.)

**சந்திரமதி.**—சுவாமீ! "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக் கம் உயிரினும் ஓம்பப்படும்." ஆதலால், நாங்கள் பழிபாவங் களுக்குப் பாத்திரராகாமல், எதைச் செய்யக் கட்டளையிடி னும் செய்யச் சித்தமாயிருக்கின்றோம். 'போன உயிர் வருவ

தானுலும் பொய்புகல லாகாது' என்பர் பெரியோர். தம்மை யொத்த மகரிஷிகள் விலக்கிய கருமங்களை எவ்வாறு செய்வது. கிருபைகூர்ந்து இப்புதல்வனை உயிர்ப்பித்தல் வேண்டும். நமஸ்கரிக்கின்றேன்.

(விழுகின்ருள்.)

சித்தர்.—எமது குருநாதர் கட்டளையை யாம் மீறிச்செய்தல் கூடாது. செய்யினும் அது பலியாது. என்ன செய்யலாம்! "ஆவாரை யாரே யழிப்பர் அதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பவர்". இனி யாம் ஒன்றும் செய்ய இயலாது; செல்கின்ருேம்;

(விரைந்து போகின்ருர்.)

சந்திரமதி.—சுவாமீ, சுவாமீ, மன்னிக்கவேண்டும். திக்கற்றுத் தவிக்கின்றேன். சுடலையைக் காட்டுவாரையும் காணுமல் தவிக்கின்றேன், சுவாமீ.

சித்தர்.—நீ நின்ற விடத்திலிருந்து நேர்முகமாக நோக்கினுல், சிறிது தூரத்தில் தீப்பற்றி எரிவது தோன்றும். அதுவே சுடலை ; போகலாம்.

(விரைந்துசென்று மறைந்து விடுகின்ருர்.)

சந்திரமதி.—(தனியே) ஐயோ தெய்வமே! காசிநாதா! இவ்வாறும் தீவினை எய்துமா! நமது துக்கத்திற்கு உவமையும் உண்டோ! 'பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்' என்பதற்கு நாமன்ருே திருஷ்டாந்தமா யிருக்கின்ருேம். ஐயோ தெய்வமே, கைக்கெட்டியதும் வாய்க்கெட்டாமற் போயிற்றே. நமது வினை இவ்வாறிருந்தது, என்செய்வோம்? முதலில் கொண்டதேபோலச் சுடலையை நண்ணித் தகனம் செய்து விரைவில் வேதியரது வீட்டையடைவோம். அப்பா மகனே, வரவரக் கனமாகத் தோன்றுகின்ருயே. காலிலோ முள்ளுந் தைக்கின்றது. ஐயோ, உன்னைத் தாங்கிச் செல்லவும் கூடவில்லையே. என்ன செய்வேன். தீப்பற்றி எரிவதும் சமீபத்தில்தான் தோற்றுகின்றது. ஆ, தெய்வமே! என் மணுளர் எங்கிருக்கின்ருரோ? பிள்ளையைத் தகனம் செய்யவும் இல்லாமற் போயினுரே. அந்தோ பரமேசா! இதுவும் உன் திருவிளையாடலா!

# 11. உழைப்பு.

உழைப்பென்பது திரவிய உற்பத்திக்கு இன்றியமையாத சாதனங்களில் ஒன்றென்று நாம் அறிவோம். அது எத்தனை வகைப்படுமென்று சற்று விசாரிப்போம்.

நாம் நாடோறும் சாப்பிடுகிறோம். நாம் சாப்பிடும் சாதத்தைச் சமைத்தவன் சமையற்காரன். அவனுடைய உழைப்பில்லா விட்டால் சாதம் கிடையாது. ஆகையால் சமையற்காரனுடைய உழைப்பு அரிசியைச் சாதமாக்குவதற்கு இன்றியமையாத சாதனம் என்னத் தகும். அரிசியைச் சமையற்காரனிடம் கொடுப்பதற்கு முன்னே அதைக் குத்தித் தீட்டவேண்டும். குத்தித் தீட்டுவதற்குமுன் நெல்லை உமி போக்கி அரிசியாக்கவேண்டும். நெல்லைக் கடையிலிருந்து ஒருவர் வாங்கி வரவேண்டும். கடைக்காரன் நாட்டுப்புறத்துக்குப்போய் நெல்லை வாங்கி வருகிறான். நாட்டுப்புறத்தில் குடியானவர்கள் நெல்லைப் பயிர்செய்கிறார்கள். நெல்லைப் பயிர் செய்து சமையற்காரனிடம் வருகிறவரையில் பலபேர் அது விஷயத்தில் உழைக்கிறார்கள். அவர்கள் உழைப்பெல்லாம் சமையற்காரனுடைய உழைப்பைப்போல் விசேஷமானதுதான். அவ்வுழைப் பில்லாவிடில் நெல் விளையாது; விளைந்தாலும் வீடு வந்து சேராது. இவ்விஷயத்தில் உபயோகப்பட்ட பலவகை உழைப்புக்கும் அரிசியின் விலையே பிரயோஜனமாகும். அதில் வேலைசெய்த உழைப்பாளிகளுக்குத் தகுந்த கூலி கிடைக்காவிடில் அவர்கள் வேலைசெய்ய மாட்டார்கள். நெல்லும் அகப்படாது. நெல் விளைந்து வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு மேற்சொல்லிய உழைப்புத் தவிர வேறு சில கருவிகள் உண்டு.

ஏரும் கலப்பையும் நிலத்தை உழுவதற்கு வேண்டிய முக்கிய கருவிகள். அவற்றைச் செய்தவர்கள் கருமார். அவர்களுக்கு இருப்புச்சன்னமும் விறகும் வேண்டும். இருப்புச் சன்னத்தைப் பூமியிலிருந்து வெட்டியெடுப்பவர் சிலர். அதை உருக்குவதற்குச் சாலைக்குக் கொண்டுவருபவர் சிலர். உருக்கும் தொழிலில் உழைப்பவர் சிலர். உருக்கியான இருப்புப் பாளங்களைக் கடைக்குக் கொண்டுபோவோர் சிலர். அதை

விற்று வியாபாரம் செய்வோர் சிலர். விறகும் இப்படியே. நாம் சாப்பிடுகிற சாதத்துக்கு இவ்விதமான உழைப்புகள் வேண்டியிருக்கின்றன. இந்தப் பலவகைப்பட்ட உழைப்பில் சமையற்காரனுடைய உழைப்பு நேராகப் பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்றது. மற்ற உழைப்பெல்லாம் யோசித்துப் பார்த்தால் தெரியவரும். இருப்புச் சன்னத்தை வெட்டியெடுப்பது முதல், நெல்லைக்குத்தி அரிசியாகச் செய்வது வரைக்கும் உழைப்பு பரம்பரையாக உபயோகப்படுகின்றது.

பரம்பரையாக உபயோகப்படுகிற உழைப்பை இவ்வளவென்று தீர்மானிப்பது அருமை. அது கணக்குக்கு அடங்காது. மேற்சொல்லிய வேலைக்காரரெல்லாம் அரிசி விலையாகிற வரைக்கும் காக்கிறதில்லை. கடைக்காரனிடத்தில் அரிசி வாங்கும்போது அவனுடைய உழைப்புக்கும் அவனுக்கு முன் உழைத்த வேலைக்காரருடைய வேலைக்கும் போதுமான பிரயோஜனத்தை அரிசியின் விலையாகக் கொடுக்கிறோம். நெல்லை வியாபாரி வாங்கும்போது அதைப் பயிரிட்டது முதலாகிய பலவித உழைப்புக்கு அவன் பிரயோஜனம் செய்கிறான். இவ்வாறே ஒவ்வொரு வியாபாரியும் தனக்கு முன்னிட்ட உழைப்பாளிகள் யாவருக்கும் மொத்தமாகப் பணங்கொடுத்துப் பொருள்களை வாங்குவார்கள்.

சிலசமயங்களில் சாமான்களைத் தூரதேசங்களிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டுவருகிறோம். நமக்கு வருகிற பளிங்கு சாமான்களும் வஸ்திரங்களும் இங்கிலாந்து தேசத்திலிருந்து கப்பலில் கொண்டுவரப்படுகின்றன. அப்பொருள்களை விலைக்கு வாங்கும்போது கப்பல் செய்த வேலைக்காரருக்கும், கப்பலோட்டிகளுக்கும் அவரவர்கள் உழைப்புக்குத் தக்கபடி பிரயோஜனம் செய்கிறோம். சாமான்களை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குக் கொண்டுபோகிற வண்டிக்காரருடைய உழைப்பும், அவ்வண்டிகளைச் செய்த தச்சருடைய உழைப்பும் மேற்சொன்ன மாதிரியாகவே பிரயோஜனமடைகின்றன. இவர்களுடைய உழைப்பெல்லாம் பரம்பரையான உழைப்பு. இது ஐந்து வகைப்படும். அவற்றை ஒவ்வொன்றாகக் கீழேசொல்லி விவகரிப்போம்.

**முதலாவது:**—சாமான்களை உற்பத்தி செய்கிற உழைப்பு. வீடு கட்டவேண்டுமானால் மரம், கல், சுண்ணாம்பு முதலிய

சாமான்களை முதலில் சேகரித்து வைக்கவேண்டும். இந்த சாமான்களைக் கொண்டு கொத்தரும் தச்சரும் இன்னும் சிற் சில கூலி ஆட்களும் சேர்ந்து வீட்டைக் கட்டி முடிப்பார் கள். கொத்தர் முதலான வேலைக்காரருக்குப் பயன்படுவ தால் கல், மரம் முதலானவற்றைச் சாமான்களென்று சொல் கிறோம். பருத்தி பயிர் செய்கிறவர்களுடைய உழைப்பெல் லாம் பின்னிட்டுத் துணி நெய்கிறவர்களுடைய வேலைக்குச் சாமான் உண்டாக்குவதுதான். திருநெல்வேலியில் விஸ்தார மாகப் பருத்தி பயிர்செய்கிறார்கள். அந்தப் பருத்தி விளைந்த பின்பு அதைக் கொட்டைபோக்கி இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்புவார்கள். அங்கே இருக்கிற கைக்கோளர் அந்தப்பருத் தியால் துணி நெய்வார்கள். கைக்கோளருடைய வேலைக்கு உதவிய சாமான் பருத்தி. அப்பருத்தியை உற்பத்தி செய்த வர்கள் திருநெல்வேலி ரெட்டிகள். ஆகையால் அந்த ரெட்டி கள் உழைப்பெல்லாம் வேலைக்கு உதவுகிற சாமான்களை உற் பத்தி செய்வதற்கு உபயோகப்பட்டன. கப்பல் செய்ய வேண்டுமானால் மரமின்றி முடியமாட்டாது. மரத்தை வெ ளித் தேசங்களிலிருந்தும், உள் நாட்டிலிருக்கிற சில காடுகளி லிருந்தும் கொண்டுவருகிறோம். கோயம்புத்தூரில் விஸ்தார மான காடுகள் உண்டு. அங்கிருந்து விற்பனைக்காக மரங் கொண்டுவருகிறார்கள். காடுகளில் அனேக கூலி ஆட்களை நியமித்து மரங்களை வெட்டிச் சாய்த்து அவற்றைத் துண்டுக ளாக்கிச் செதுக்கி வெளியே அனுப்புகிறது வழக்கம். மேற் சொல்லிய ஆட்களுடைய உழைப்பு கப்பல் வேலைக்குச் சாமான் உற்பத்திசெய்கிற உழைப்பாகும். நெல் முதலாகிய தானியத்தைப் பயிர்செய்கிறவர்களுடைய உழைப்பும் இப் போது பேசிவரும் வகுப்பில் சேர்ந்ததுதான். தானியமெல் லாம் சமையற்காரனுடைய வேலைக்குச் சாமானாகின்றது. இவ்வகுப்பில் சேர்ந்த வேலைகள் பல உள. அவற்றை யெல் லாம் சாமான்களை உற்பத்தி செய்கிற உழைப்பாகவே பாவிக்க வேண்டியது.

இரண்டாவது:— பரம்பரையான வேலைகளில் முதலா வதை இன்னதென்று ஒருவாறு சொல்லி முடித்தோம். இனி இரண்டாவதான உழைப்பு எப்படிப்பட்டதென்று ஆலோ சித்துப் பார்ப்போம். தச்சனுடைய வேலைக்கு மரம் இன்றி

யமையாத சாமான். மரம் இல்லாவிடில் தச்சன் வேலைசெய்ய இடமிராது. மரத்தைப் போலவே உளி முதலிய கருவிகளும் இன்றியமையாத சாதனங்களாம். உளி இல்லாமல் தச்சன் வேலைசெய்ய முடியாது. தச்சனுடைய வேலைக்கு இன்றி யமையாததாகிய மரத்தை உற்பத்தி செய்கிறவர்களுடைய உழைப்பைச் சாமானுற்பத்திசெய்கிற உழைப்பென்று சொன் ேனாம். அவனுடைய உளி முதலிய கருவியையும் முன்ன தாக ஒருவன் செய்திருக்கவேண்டும். அந்த உழைப்பே கருவிகளைச் செய்யும் உழைப்பென்று சொல்லப்படும். இவ் வுழைப்பில்லாமல் அனேக வேலைகள் முடியா. சாமானும் கருவியும் இன்றி யாதொன்றும் நிறைவேறுவதாகக் காணோம். வண்டி செய்வதற்குப் பலகையும், உளி, வாள் முதலிய கருவிகளும் வேண்டும். இவற்றில் எதைச் சாமானென்றும், எதைக் கருவியென்றும் சொல்கிறது? சாமானுக்கும் கருவிக் கும் இருக்கிற வித்தியாசம் என்ன? மரமும் கல்லும் வீடு கட்டுவதற்குச் சாமான்களாயிருக்கின்றன. வீடுகட்டி ஆன பின்பு மரத்தையும் கல்லையும் அதினின்று பிரித்தெடுத்தல் கூடாது. உளியும் கொல்லறுமோ என்றால் அனேக வீடுகள் கட்டுவதற்கு உபயோகப்படும். ஒரு வேலைக்கு உபயோகப் பட்டு அதினின்றும் பிரிக்கப்படாதவை யெல்லாம் சாமா னென்று சொல்லப்படும். பலவேலைக்கு உபயோகப்படுகிற தெல்லாம் கருவியென்று சொல்லப்படும். கலப்பையும் மண் வெட்டியும் கருவிகள்; பட்டும் பருத்தியும் சாமான்கள், கருவியைச் செய்கிற உழைப்பெல்லாம் இரண்டாவது வகுப் பிற் சேர்ந்த பரம்பரையான உழைப்பு.

மூன்றாவது:—உழைப்புக்குச் சாமானும் கருவியும் வேண் டுமென்றும், அவைகளில்லாமல் ஒருவேலையும் நிறைவேற மாட்டாதென்றும் இதுவரைக்கும் சொன்னோம். உழைப் புக்கு இவைகள்மாத்திரம் போதா. கைக்கோளர் துணி செய்கிறதற்கு நூலும் கருவியும் மாத்திரம் இருந்தால் வேலை நிறைவேறாது. வேலைசெய்வதற்குத் தக்க இடமும் வேண்டும். வண்டிசெய்கிறதற்கு மரமும் உளி முதலிய கருவியும் தவிர ஒரு தகுந்த இடமும் வேண்டும். அந்த இடத்தைத் தச்ச வாடி என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். நெல் விளைந்த பின்பு அதைப் பதர் நீக்குவதற்குக் களமும், நெல்லைக்

கொட்டிவைப்பதற்குக் களஞ்சியமும் வேண்டும். பயிரிடுவ தற்கு மாடுகளிருக்கவேண்டும். அவற்றைக் காற்றிலும் மழை யிலும் அடிபடாதபடி காக்கும்பொருட்டு ஒரு கொட்டகை கட்டவேண்டும். தச்சவாடி, களஞ்சியம், கொட்டகை முத லியவற்றைக் கட்டுகிறவேலை மூன்றாவது உழைப்பில் சேர்ந் தது. அது பாதுகாக்கும் உழைப்பென்று சொல்லப்படும் ஆடுமாடு மேய்க்கிற இடையர் உழைப்பெல்லாம் மேற்கூறிய வகையில் சேர்ந்தவைதாம். பயிர்களை ஆடுமாடுகள் மேய்ந்து விடாதபடி வயல்களைச்சுற்றி வேலிபோடுவதுண்டு. வேலி போடுகிற உழைப்பும் பாதுகாக்கிற உழைப்பென்று சொல் லப்படும். தோட்டத்தைச் சுற்றிச் சுவர் கட்டுகிற வேலையும் அப்படியே; நியாயாதிகாரியின் உழைப்பும் போலீஸ் சேவகர் உழைப்பும் தேசத்திலுண்டாகிற திரவியத்தைக் காப்பாற் றும்பொருட்டு உபயோகப்படுகின்றன. ஆகையால் அவர்க ளுடைய வேலையையும் மேற்சொல்லிய வகுப்பிலேயே சேர்த் துப் பேசவேண்டும்.

**நான்காவது:**—கிராமங்களில் தானியம் விளைந்தபின்பு அது எவ்விதமாக ஜனங்களுக்குப் பயன்படுகின்றது? விளைந்த இடத்திலேயே அது இருக்குமானால் ஒருவருக்கும் உப யோகப்படமாட்டாது. அதை விலையாகிற இடத்திற்குக் கொண்டுபோகவேண்டும். ஓரிடத்திலிருந்து வேறொரு இடத் துக்குச் சரக்குக் கொண்டுபோக வேண்டுமானால் தரையிலா வது ஜலத்தின்மேலாவது கொண்டுபோவார்கள். தரையின் மேல் போவதற்கு வண்டிகளும் கூலிஆட்களும் வேண்டும். புகைவண்டிபோகிற இடமானால் அதுவழியாகச் சாமான் எளி தில் அனுப்பலாம். ஜலத்தின்மேல் சாமான் போகவேண்டு மானால் கப்பலாவது தோணியாவது இருக்கவேண்டும். இப் படிப் பலவிதமாக சாமான்களை ஓர் இடத்திலிருந்து மற் றொரு இடத்திற்குக் கொண்டுபோவார்கள். கொண்டுபோகிற உழைப்பெல்லாம் நாம் சொல்லிவருகிற நான்காவது வகுப்பில் சேரும். வண்டி, கப்பல், தோணி, ரோட்டு முதலானவற் றைச் செய்த உழைப்பும் மேற்படி வகுப்பில் சேர்ந்ததுதான். சாமான்களை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டு போய் விற்று ஜீவனஞ்செய்கிறவர்கள் அனேகர் உண்டு. சென்னபட்டணத்தில் நெல் விளைகிறதில்லை. அங்கிருக்கிற

ஜனங்களுக்கு வேண்டிய நெல், கம்பு, கேழ்வரகு முதலிய தானியமெல்லாம் வெளித்தேசத்திலிருந்து புகைவண்டியிலாவது, கட்டைவண்டியிலாவது, தோணி, அல்லது கப்பலிலாவது கொண்டுவரப்படுகின்றன. கொண்டுவருவதற்கு அனேக ஆட்கள் உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பும், வண்டி முதலான கருவிகளைச் செய்த உழைப்பும் இல்லாமல் நாட்டில் விளைந்த நெல் சென்னபட்டணம் வந்து சேராது. தானியத்தை விளைவிக்கிற உழைப்பைப்போலவே அதைக் கொண்டுவருகிற உழைப்பும் விசேஷமானது. இந்த உழைப்பெல்லாம் தானியத்தின் விலையாற் பிரயோஜனம் அடைகின்றது. சென்னபட்டணத்தில் கட்டியிருக்கிற வீட்டுக்கு ஏராளமான மரம் செலவாயிருக்கிறது. இந்த மரம் சென்னபட்டணத்தில் விளைகிறதல்ல. வெளித்தேசங்களில் உள்ள காடுகளிலிருந்து வெட்டி நிலமார்க்கமாய், புகைவண்டியிலாவது, கட்டைவண்டியிலாவது; நீர்மார்க்கமாய், கப்பலிலாவது தோணியிலாவது கொண்டுவருகிறார்கள். அங்கிருந்து வந்தாலொழிய வீட்டில் மரவேலை நிறைவேறாது. வெளியிலிருந்து மரம் கொண்டுவருவதற்குச் செலவு அதிகமாய்ப் பிடிக்கும்; அந்தச் செலவையும் மரத்தின் கிரயத்தையும் கொடுத்து அதைவாங்கி வீடுகட்டுவார்கள். ரோட்டுகளெல்லாம் துரைத்தனத்தாரால் போடப்படுகின்றன. ஆயினும் அதற்குச் செல்லும் செலவை நிலவரியாகவும் ரோட்டுவரியாகவும் குடித்தனக்காரர் கொடுத்து வருகிறார்கள்.

ஐந்தாவது:—மன உழைப்பு. வீடுகட்டுவதற்குச் சாமானும் கருவியும்போல, இன்னவிதமாக வீடுகட்டி முடிக்க வேண்டுமென்று அறிவும் இருக்கவேண்டும். கல்லும் மண்ணும் மரமுமாத்திரம் இருந்தாற் பயனில்லை. வீடுகட்டுந் தொழில் தெரிந்திருக்கவேண்டும். இது மன உழைப்பு என்று சொல்லப்படும். கொத்தனிடத்தில் வேலைசெய்து வீடுகளும் மண்டபங்களும் ஆலயங்களும் எவ்விதமாகச் சமைப்பதென்று கற்றறியவேண்டும். அதற்கு மன உழைப்பின்றி முடியாது. பயிரிடுவதற்கும் மன உழைப்பு வேண்டியிருக்கின்றது. இத்தேசத்தில் பயிரிடுகிற விதத்தை யாவரும் எளிதில் கற்றுணரலாம். அது பயிரிடுகின்ற முறைமையன்று. பயிரிடுகிற சாஸ்திரத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டு

மானுல் நாலைந்து வருஷம் செல்லும். எத்தொழிலிலாவது தேர்ச்சியடைய வேண்டுமானுல் நெடுநாள் செல்லும். அது வரைக்கும் மன உழைப்பும் இருக்கவேண்டும். மேஜையும் நாற்காலியும் செய்யவேண்டி யிருந்தால் யாவரும் அவற்றைச் செய்து முடிப்பது கூடாது. தச்சனுடைய வேலை கற்றவனுல்தான் முடியும். துணி நெய்கிறதானுலும், நகைகள் செய்கிறதானுலும் அவ்வவ்வேலை கற்றவனுல்தான் முடியும். அவற்றைக் கற்பதற்கு மன உழைப்பு வேண்டியதாய் இருக்கின்றது.

ஒருவரிடத்திலிருந்து வேலை கற்றுக்கொள்வது எளிது. ஒருவருக்கும் தெரியாத வேலையைப் புதிதாய்க் கண்டுபிடிப்பது மிகவும் அரிது. நீராவி யந்திரங்களை முதலிற் செய்தவர்கள் விசேஷமான மன உழைப்பு எடுத்திருக்கவேண்டும். இதைப்போன்றன வெல்லாம் மன உழைப்பென்று சொல்லப்படும்.

## 12. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை.

முன்னெரு காலத்தில் குட்பிராண்டு என்று சொல்லப்படும் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு மலைச்சாரலிலே பயிர் வைத்திருந்தான். அவனுடைய பெண்டாட்டி மகா உத்தமி: கணவன் பேச்சுக்குக் குறுக்குப் பேசுகிறதே கிடையாது. சில துஷ்டைகள், புருஷன் வாவா என்ருல், போ போ என்பார்கள். கணவனுக்கு எது இஷ்டமோ அது அவர்களுக்கு வெகுகஷ்டம். அவன் ஒன்று சொன்னுல் இவர்கள் ஒன்பது சொல்வார்கள். அவன் வேண்டாமென்பதை இவர்கள் வேண்டுமென்பார்கள். செய்யவேண்டுமென்பதைச் செய்யவே மாட்டார்கள். இந்தக் குட்பிராண்டு என்பவன் மனைவியோ என்ருல் தன் பர்த்தாவுக்கு வேண்டியதைக் குறிப்பறிந்து செய்வாள். அவன் காலாலிட்ட வேலையைக் கையாலே செய்வாள். அவன் துக்கப்பட்டால் இவளுங்கூடத் துக்கப்படுவாள். அவன் சந்தோஷமா யிருந்தால் இவளும் சந்தோஷமாயிருப்பாள். அவனைப் பூசிப்பதே இவளுக்குக் குருபூசை. அவன் பாதமே இவளுக்குக் குரு பாதம். அந்த நாயகனே இவளுக்குச் சர்வலோக நாயகன். இப்படியாக இந்தப் பதிவிரதையும் இவள் பர்த்தாவும் ஊசி

யும் சரடும்போல ஒத்துவாழ்ந்தபடியினால், இடையிடையே உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் இன்னலிடைஞ்சல்களையும் இலக்ஷியஞ் செய்யாமல் அதிக இன்பமாக வாழ்ந்திருந்தார்கள்.

பயிரிட்டதில் தாங்கள் உண்டு உடுத்ததுபோக மீதியை விற்றுக் கையில் கொஞ்சம் உரொக்கரோஜனை நகைநட்டும் வைத்திருந்தார்கள். அவர்களிடத்தில் நல்ல கறவைப் பசுக்களும் இரண்டிருந்தன. அவர்களுக்கு நாளைக்கு என்ன செய்யப் போகிறோம் என்கிற ஏக்கமே இல்லை. ஒரு வீட்டுக்கு முறந் தூக்கிக்கொண்டு போகவேண்டிய அவசியமுமில்லை. இவர்களைப் பார்த்து ஒருவர் ஐயோ பாவம் என்று இரங்கவேண்டிய நிமித்தமுமில்லை. ஒரு குறைவுமின்றித் துரையும் துரைசானியும்போல க்ஷேமமாய் வாழ்ந்திருந்தார்கள்.

இவர்கள் இரண்டுபேரும் ஒருநாள் சாயரக்ஷை வீட்டுக் காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண் டிருக்கும்போது குட்பிராண்டை நோக்கி அவன் பெண்டாட்டி "ஐயா! எனக்கு ஒரு எண்ணமுண்டு. நம்மிடத்தில் இரண்டு பசுக்கள் இருக்கின்றனவே. எப்படியும் நமக்கு ஒரு பசுவின்பாலே, பாலுமாகும் தயிருமாகும் மோருமாகும் வெண்ணெயுமாகும் நெய்யுமாகும். இந்தத் தள்ளாத காலத்தில் வீட்டு வேலைகளைச் செய்வதே கஷ்டமாயிருக்கின்றது: இந்த இரண்டையும் வைத்துக்கொண்டு அவைகளுக்கு வேண்டிய பாடுபடுவது நமக்கு அதிக வருத்தமாயிருக்கிறதே. ஆகையால் ஒரு பசுவை ஓட்டிக்கொண்டுபோய், பட்டணத்தில் விற்றுவிட்டு வாரும். நமக்கென்ன குழந்தையா குட்டியா? நாம் கொஞ்சநஞ்சம் சேர்த்து வைத்திருப்பதே நமக்குப் போதுமே. ஏதோ கிருஷ்ணா ராமா கோவிந்தா என்றும் அரகரா சிவசிவா என்றும் நாளைக் கழித்து விடலாமே" என்று சொன்னாள்.

குட்பிராண்டும் அவள் சொல்வது சரிதானென்று நினைத்து, அதிகாலையில் கோழிகூவ எழுந்திருந்து ஒரு பசுவை அவிழ்த்துக் கையில் பிடித்துக்கொண்டு பட்டணம் போனான். ஆயினும் அன்று சந்தைகூடுகிற நாளல்ல. ஆனதினாலே அந்தப்பசு விலைபோகவில்லை. அதன்மேல் அந்தக் கிழவன் "இப்போது முழுகிப்போனதென்ன. எப்படியும் வீட்டில் இதற்கென்ன புல்லில்லாமல் போயிற்று, வைக்கோலில்லாமல் போ

யிற்று. எனக்கும் வந்தவழியைத் தொலைப்பதும் ஒரு பிர யாசையல்லவே" என்றெண்ணி வீட்டு முகமாகத் திரும் பிஞன்.

வீட்டு முகமாகக் கொஞ்சதூரம் போவதற்குள் இந்தக் கிழவனுக்கு இளைப்புங் களைப்பும் மேலிட்டன. அப்போது வேருெருவன் பட்டணத்தில் கொண்டுபோய் விற்பதற்காகச் சேணங் கடிவாளம் முதலிய முஸ்திப்போடு உரமான ஒரு குதி ரையை ஓட்டிக்கொண்டு எதிரில் வந்தான். இந்தக் கிழவன் "வழியோ இன்னும் வெகுதூரமிருக்கிறது. பொழுதோ வெகு சீக்கிரமாய்ப் போகிறது. எப்படியும் நான் இந்தப் பசு வையிட்டுக்கொண்டு நகர்ந்து நகர்ந்து வீடுபோய்ச் சேர்வதற் குள் அர்த்தராத்திரி யாகிவிடும். மறுபடியும் பொழுது விடி வதற்குள், திரும்பப் பிரயாணப்பட்டு வரவேண்டும். இந்தக் குதிரை கிடைக்குமாளுல் நன்றாய், துரைபோல அதன்மேல் ஏறிக்கொண்டு பெருமையாய் வீடுபோய்ச் சேருவேன். குதி ரையின்மேல் ஏறிக்கொண்டு நான் ஒரு பெரிய சேனுபதி போல வருவதைக் கண்டால் என் மனைவியும் அடங்காத ஆனந்தங்கொள்வாள்" என்று யோசித்து அந்தக் குதிரைக் காரனை நிறுத்தி "என் பசுவை உனக்குக் கொடுக்கிறேன். இது குடநிறையப் பால்கறக்கும். எனக்கு உன் குதிரை யைக் கொடுக்கிறையா?" என்று கேட்டான். அந்தக் குதி ரைக்காரனும் அதற்குச் சம்மதித்துப் பசுவைத் தான் ஓட்டிக் கொண்டு குதிரையை அவனிடம் கொடுத்துப் போய்விட் டான். கிழவனும் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு போனுன். குதிரை நல்ல விடைப்பிராயமுள்ள தாகையால் படபட என்று நடந்தது. இவன் கிழவனுனபடியால் தாளக்கூடவில்லை. அரை நாழிகை நேரத்தில் கிழவன்பாடு ஆசைதீர்ந்து அலு த்துப் போய்விட்டது. அப்புறம் "ஐயோ! என்ன புத்தி கெட்டவேலை செய்துவிட்டேன்" என்று எண்ணிக் கீழே இறங் கிக் கடிவாளத்தைப் பிடித்துக் குதிரையைக் கால் நடையாய் நடத்திக்கொண்டு போனுன்.

பின்பு ஒரு குடியானவன் விற்பனைக்காக ஒரு பன்றியை எதிரிலே ஓட்டிக்கொண்டு வருவதைக்கண்டு அந்தக் குதி ரையைக் கொடுத்துப் பன்றியை வாங்கிக்கொண்டான். ஆனல்

அந்தப் பன்றி நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பினாலே அடியெடுத்து வைக்கவில்லை. அதை இழுத்துப்பார்த்தான், தள்ளிப் பார்த்தான், கை கொண்டமட்டும் அடித்தும் பார்த்தான். ஒன்றுங் காரியமில்லை. ஒரு உளையில் படுத்துக்கொண்டு, கடலோரத்தில் கரைதட்டின கப்பலைப்போல, அப்படியிப்படி அசையாமல் ஓட்டாரம் பண்ணிக்கொண்டிருந்தது.

"அட! இதென்ன கிரகசாரம்! தலைவலி போய்த் திருவலியாயிற்றே," என்று வருந்திக்கொண் டிருக்கும்போது, ஒருவன் எதிரில் ஒரு வெள்ளாட்டை ஓட்டிக்கொண்டு வருகிறதைக் கண்டான். அந்த ஆடும் துள்ளித்துள்ளி எகிறிக் குதித்து ஓடிவந்தது. "சரி, இந்தத் தடிஇழவைக் கட்டிக்கொண்டழுவதைக்காட்டிலும் அந்த ஆட்டைக் கொண்டுபோனால் நன்றாயிருக்கும்" என்றெண்ணி, அதை மாற்றிக்கொண்டு கொஞ்சதூரம் போனான். அதுவரையில் அந்த வெள்ளாடு அவனைப் பரபரவென்று இழுத்துக்கொண்டே ஓடிற்று. அவனும் சிரித்துக்கொண்டே அதன்பின் ஓடினான். பாவம், கிழவனானபடியால் மேட்டிலும் பள்ளத்திலும் கல்லிலும் கரட்டிலும் எத்தனைதூரம் அவன் அதனோடு குதித்து ஓடுவான்!

அதன் பிறகு, எதிரில் ஒரு ஆட்டுமந்தையை மடக்கிக்கொண்டிருந்த ஒரு இடையனிடத்தில் அந்த வெள்ளாட்டைத் தொலைத்துவிட்டு ஒரு செம்மறியாட்டைப் பிடித்துக்கொண்டுபோனான். "இது கறக்கிற பால் நமக்குப் போதும். இது குதிக்காது துள்ளாது ஓடாது. சாந்தமாக இருக்கும். இதனால் எனக்கும் நஷ்டமில்லை. என் பெண்டாட்டிக்கும் கஷ்டமில்லை. சௌக்கியமாக இருக்கும்" என்று எண்ணினான். அவன் அப்படி எண்ணினதில் தப்பு ஒன்றுமில்லை. அந்த ஆடு இடிக்கவுமில்லை முட்டவுமில்லை. ஆனால் முன்னுக்காக மாத்திரம் போகமாட்டேன்: மந்தைக்கே போவேன் என்று பின்னுக்காகவே வலித்தது. "இதென்ன இழவு! வருவதெல்லாம் இப்படித்தானா! 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்கிறதுபோ லிருக்கிறதே. என் அண்டை வீட்டுக்காரன் பெண்டாட்டி நீலியைப்போல 'அம்மே மேமே' என்று குணுகுணுத்துச் சிணுங்கி அழுகிறதே. இந்தச் சனியனைத் தொலைத்துவிட்டால் சந்தோஷமாக இருப்பேன்" என்று அதனோடு முட்டி முரண்டிக்கொண் டிருக்கையில்,

வழியே போய்க்கொண்டிருந்த ஒருவன் "ஐயா! பெரியவரே! பாவம் ஏன் இப்படி அழுகிறீர்? இந்த வாத்தை எடுத்துக் கொண்டு அந்த ஆட்டைக் கொடும்" என்றான்.

உடனே இந்தக் கிழவன் "அப்பா! அந்தமட்டில் என்னைப் பிடித்த சனியன் கழிவிடையாயிற்று" என்று சொல்லிக்கொண்டே அந்த வாத்தை வாங்கி அக்குளில் இடுக்கிக்கொண்டு போனான். அதுவும் 'போதாத குறைச்சலுக்குப் பொன்னியம்மாள் குறை' என்பதாக மூக்கால் குற்றுவதும் சிறகைப் படபடவென்று தட்டுவதுமாகத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தது. ஒரு நாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரிக்கத் திருநாளும் வெறுநாளாயினாற்போல, இவனும் அந்த மட்டில் பசுவை விற்கவந்தகொள்ளை போதும் என்று வேசாறி, அந்த வாத்தையும் ஒருவன் கையில் கொடுத்துவிட்டு ஒரு கோழியை வாங்கிக்கொண்டு போனான். அந்தக் கோழி வெகு நேர்த்தியாய் யாதொரு அங்க சேஷ்டையுமின்றி அமைவாயிருந்தது. அதை வாங்கிக்கொண்டு மனக்கலக்கமில்லாமல் கொஞ்சதூரம் போவதற்குள், பொழுது சாய்ந்தது. அதிகாலையில் புறப்பட்டவனாயிற்றே; முழங்கால் பூட்டு விட்டுப் போகிறாற் போலிருந்தது; காதடைத்துக் கண்ணிருட்டிக் கொண்டு பசியினாலே வயிறு கிள்ளத் தொடங்கிற்று. அதனாலே வழியில் ஒரு கடையில் அந்தக் கோழியை இரண்டே சில்லறை அணுவுக்கு விற்றுவிட்டு, அதை அண்டையிலிருந்த ஒரு சத்திரத்திற் கொடுத்து, "நான் பசியினால் பிராணனை இழந்துவிட்டால் ஒரு கோழியினால் ஆகப்போகிற பிரயோசன மென்ன" என்று எண்ணிக்கொண்டே, வயிற்றுப்பாட்டைப் பார்த்துக்கொண்டு மற்ற வழியையும் நடந்து வீட்டிற்குச் சமீபத்தில் போய்ச்சேர்ந்தான். தான் பண்ணின பிரயாண மிருந்தபடியை எண்ணியெண்ணி ஆலோசித்தான். வீடுபோய்ச் சேர்வதற்கு முன்னே அண்டைவீட்டுக்காரனாகிய நரைதாடி என்னும் வக்கணைப் பெயருடைய பீட்டர் என்பவனிடஞ்சென்று நடந்த சங்கதிகளையெல்லாம் சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னான்.

அதுகேட்ட நரைதாடி "ஆஹா, நீ செய்ததெல்லாம் நன்றாயிருக்கிறது. உன் பெண்டாட்டியினிடத்தில் இதையெல்லாம் என்னவென்று எடுத்துச் சொல்லப்போகிறாய். எத்தனை வரு

வதா யிருந்தாலும், நானுனல் இப்படிப்பட்ட காரியஞ் செய்துவிட்டுப் பெண்டாட்டி எதிரில் போக மனந்துணிய மாட்டேன்" என்று சொன்னுன்.

அதற்கு அந்தக் குடியானவன் "நான் செய்தது தப்பா யிருக்கட்டும், ஒப்பாயிருக்கட்டும்; என் வீட்டுக்காரி என் னமோ அதைப்பற்றி படுக்கென்று ஒரு வார்த்தையும் சொல் லவே மாட்டாள்" என்ருன்.

அப்போது நரைதாடி "நீ சொன்னதெல்லாங் கேட்டேன். நீ செய்ததெல்லாம் என்ன அதிசயமான வேலை. ஐயோ! சுத்தப் பைத்தியக்காரன்கூட இப்படிப்பட்ட வேலை செய்ய மாட்டானே. ஆனுலும் இதையெல்லாம் கேட்டு உன் மனை யாள் சும்மா இருப்பாள் என்று நான் நம்பவே யில்லை" என்ருன்.

அதற்குக் குட்பிராண்டு "வேண்டுமானுல் பந்தயம். என் னுடைய பெட்டியில் எப்படியும் இருநூற்றுச் சில்லரை ரூபா இருக்கிறதினுல் அதில் நாற்பதே சில்லரையைப் பந்தயமாக வைக்கிறேன். நீயும் அவ்வளவு பந்தயம் வைக்கிருயா?" என்று கேட்டான்.

உடனே அந்த அண்டை வீட்டுக்காரன் "ஆஹா! நல்லது, இதோ வைத்தேன்" என்று சொன்னுன்.

இப்படியாகப் பந்தயம் முடிவானதும், இருவருமாகப் புறப்பட்டுப் போனுர்கள். பீட்டரை வெளியில் வாயிற்படி யண்டை நிறுத்திவிட்டுக் குட்பிராண்டு உள்ளேபோனுன். பீட் டரும் உள்ளே நடப்பதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

குட்பிராண்டு "ஏண்டி! என்ன செய்கிருய்" என்று சொல் லிக்கொண்டே உள்ளே போனுன். அவன் பெண்டாட்டி "நீங்களா? அத்தான்! வாருங்கள். என்ன சங்கதி? காயா? பழமா?" என்று கேட்டாள்.

அதற்கு அவன் "காயுமில்லை பழமுமில்லை. பசுவை யாரும் வாங்குவாரில்லை. அதனுல் அதை ஒரு குதிரைக்கு மாற்றிக்கொண்டேன்" என்று சொன்னுன்.

அப்போது அவள் "குதிரைக்கா மாற்றினீர்! பேஷ்! நல்ல காரியம் எனக்கு மெத்தச் சந்தோஷம்! நாம் துரையுந் துரை

சானியும்போலச் சவாரிபோகலாம். நமக்கென்ன குறைச்சல்? ஒரு குதிரையை வைத்துக்கொள்ள நிர்வாகமில்லாமல் போயிற்று. குதிரை எங்கே? அதைக் கொண்டுபோய்க் கொட்டத்தில் கட்டலாம்." என்று சொன்னாள்.

அதன்மேல் அவன் "நான் அநதக் குதிரையை என்னுடனே கொண்டுவரவில்லை. வழியில் மனம் மாறிப்போகவே அதை ஒரு பன்றிக்காக மாற்றிக்கொண்டேன்" என்றான்.

அவள் அதைக் கேட்டு, "பார்த்தீரா! நான்கூட அங்கிருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன். இப்படிச் செய்ததற்காக அநேக வந்தனம், ஆயிரங்கும்பிடு. குதிரையினால் ஆவதென்ன. யாராகிலும் விருந்தினர் வந்தால் இந்தப் பன்றியின் தொடையை உப்புக்கண்டம் போட்டு வைத்திருந்து நன்றாய்ப் பாகப்படுத்தி வைப்பேன். குதிரை வைத்திருந்தால் அண்டையசல் 'அடேயப்பா! காடு வாவா என்கிறது; வீடு போபோ என்கிறது: இருந்த நாளெல்லாம் இருந்து இந்தக் கிழப்பிணங்களுக்குக் குதிரைதானா ஒன்று குறைச்சல்' என்பார்கள். இந்தப் பன்றியைப்பற்றி ஒன்றும் சொல்லமாட்டார்கள். அது எங்கே? அதைக் கூண்டில் விட்டு அடைப்போம்" என்று சொன்னாள்.

பின்பு அவன் "அந்தப் பன்றியைக் கூடக் கொண்டுவரவில்லை. வழியில் அதை ஒரு வெள்ளாட்டுக்காகக் கொடுத்துவிட்டேன்" என்றுரைத்தான்.

அந்த உத்தமி "சரி. வெகு நல்ல காரியம். நீர் மகா சமர்த்தர்: நல்ல புத்திசாலி. நாமென்ன பெருமைக்குப் பன்றி வளர்க்கின்றவர்களா? அது கெட்டது. வெள்ளாடாகுமா? பாலுமுண்டு! பாற்கட்டியுமுண்டு! குட்டிகளும் பெருகிக் கொண்டே யிருக்கும். எதோ! அந்த வெள்ளாட்டைக் கொண்டுபோய்ப் பட்டியில் விடுவோம், வாரும்" என்றாள்.

குட்பிராண்டு "அந்த வெள்ளாட்டையும் கூடக் கொண்டு வந்தேனில்லை. வழியில் அதைக் கொடுத்துவிட்டு ஒரு செம்மறியாடு வாங்கினேன்" என்றான்.

அதற்கவள் "நீங்கள் இப்படிச் செய்தது என்னுடைய நன்மைக்காகவே அல்லவோ. வெள்ளாட்டின் பின்னே காடு

மேடெல்லாம் ஓடித்திரிய நான் என்ன வயதுக்குமரியா, சின்னஞ்சிறுக்கியா. எப்படியும் இந்தச் செம்மறியாட்டின் உரோமம் சீலை நெய்தற்கு உதவும். அதைக் கொண்டுபோய்த் தொழுவத்தில் கட்டுவோம்" என்று சொன்னாள்.

"ஆனால் நான் அந்த ஆட்டைக் கொண்டுவரவில்லை. அதைக் கொடுத்து ஒரு வாத்தைக் கொண்டேன்" என்றான்.

அதைக் கேட்டதும் அவள் அதிக சந்தோஷத்துடனே "அதுதான் சரி. ஆட்டினாலாவதென்ன? அதன் மயிரை நெய்வதற்கு நம்மிடத்தில் தறிகூட இல்லை. அதுவுமன்றி நெசவுத்தொழில் வெகு கஷ்டமான வேலை. அந்த இழவு நெய்வதோடு ஒழிந்து போகிறதில்லை. நெய்த சீலையைக் கத்தரிக்கவேண்டும். ஊசிநூல் தேடி அதை அப்புறம் தைக்கவும் வேண்டும். தைத்து விற்கிற துணிகளை வாங்கிக் கொள்வதே நல்ல காரியம். வாத்து, நல்ல கொழுத்த வாத்து, அதன் மேலேதான் எனக்கு எப்போதும் அதிகப் பிரியமுண்டு. அதை வறுத்து உண்ணுதற்கு எனக்கு அதிக ஆவலாக இருக்கிறது. எதோ! அதைக் காட்டுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டாள்.

"அந்த வாத்தைக் கொண்டுவரவில்லை. அதை ஒரு சேவலுக்காக மாற்றிக்கொண்டேன்" என்றான் குட்பிராண்டு.

"என் ஆசை நேசரே! இப்படிச் செய்தது உத்தமோத்தமம். இந்தச் சேவல் இரவில் ஜாமத்தை அறிவிக்கும். கோழி கூவப் பொழுது விடியும் அல்லவா? நாமும் அதறிந்து அதிகாலையில் எழுந்து நியமநிஷ்டை தேவாராதனை முதலியவைகளை முடித்துவிட்டுச் சீக்கிரம் வீட்டுக் காரியங்களைப் பார்க்கலாம்" என்றாள்.

அதைக் கேட்டதும் அவன் "ஐயோ! அந்தச் சேவலைத் தானும் கொண்டுவரவில்லையே. நான் வரும்போது வழியிலே பொழுதுபோய்விட்டது. பசி பொறுத்து முடியவில்லை. உடனே அதை இரண்டே சில்லரை அணாவுக்கு விற்றுவிட்டேன். இல்லாவிட்டால் பசியால் இந்நேரம் இறந்து போயிருப்பேன்" என்று சொன்னான்.

அதற்கு அவள் "அந்தமட்டில் அந்த வேளையில் உங்களுக்குச் சுவாமி அந்தப் புத்தி கொடுத்தாரே, அதுவே போதுமானது: அதுவே எனக்குப் பதினாயிரம்: எப்பொழு

தும் நீங்கள் செய்கிறதெல்லாம் சரியென்றே என் புத்தியில் படுகிறதுண்டு. நானும் பார்த்து வருகிறேன்: அது தப்புகிறதே யில்லே. நமக்கென்ன சேவல் அத்தனை அவசியமானதா? நமக்கு நாமே எஜமானர். நம்மை எவர்கள் அதிகாரம் செய்யப் போகிறுர்கள்? நாம் வேண்டினபோது காலையில் எழுந்திருக்கலாம். ஒன்றும் முழுகிப்போவதில்லே. நீங்கள் வந்து முகத்தைக் காண்பித்ததே போதும். அதுவே மகாபாக்கியம்" என்று சொன்னுள்.

உடனே குட்பிராண்டு கதவைப் படீர் என்று திறந்து "ஏ! அண்டை வீட்டுக்கார பீட்டரே! என்ன சொல்லுகிருய்? போய் நீ வைத்த பந்தயத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிடு" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு, இப்பொழுதுதான் நேற்றுக் கட்டிக்கொண்ட பெண்டாட்டியைப்போல அந்தக் கிழவியைச் சேர்த்துக் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு முத்தங் கொடுத்தான். இங்ஙனம்,

> பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானுல்
> எத்தாலும் கூடி யிருக்கலாம்;—சற்றேனும்
> ஏறுமா ருக விருப்பளே யாமாயிற்
> கூறுமற் சந்நியாசங் கொள்.

# 13. யோக்கியமே உத்தம வழி.

(ஒரு நீதி கதை.)

**பா**லாற்றங்கரையிலுள்ள ஒரு குக்கிராமத்தில் நல்லதம்பி சின்னதம்பி என்று இரண்டு ஏழைச் சிறுவர் இருந்தனர். அவர்கள் தகப்பன் படியாள் வேலேசெய்து பிழைத்துக் கொண்டிருந்தான். அவன் திடீரென்று ஒரு பெருவாரிக்காய்ச்சலில் இறந்துபோனுன். அப்போது நல்லதம்பிக்கு வயது பன்னிரண்டு. சின்னதம்பிக்கு வயது ஒன்பது. இவ்வளவு சிறு பிராயத்தில் அந்தப் பிள்ளேகளுக்குத் தகப்பன் இறந்ததும் தவிர, ஒருவருஷத்துக்குள்ளே, மிகவும் அன்பனுயிருந்த புருஷன் மரித்ததைப்பற்றிய மனோவியாதியால், தாயும் இறந்தாள்.

இப்படியாக நல்லதம்பியும் சின்னதம்பியும் இன்னும் கூடப்பிறந்த மூன்று சிறு குழந்தைகளும் ஆதரவற்றவர்களாய் நிற்க, அடுத்த குப்பத்திலிருந்த இவர்களின் சிற்றப்பன் வந்து பார்த்துத் தான் பெரிய பிள்ளைகளிரண்டையும் ரக்ஷிப்பதாக ஒத்துக்கொண்டு, மற்ற மூன்று குழந்தைகளையும் பக்கத்து ஊரில் அநாதப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தியிருந்த தருமசத்திரத்தில் விட்டுவிட்டான்.

அவன் தோட்டக்கால் பயிரிட்டுப் பிழைக்கிறவன். அவனிடத்தில் அவ்விரண்டு பிள்ளைகளும் இட்ட வேலை செய்து கொண்டு சில நாளிருந்தார்கள். அப்படியிருக்கையில், அவன் தங்கள் விஷயத்தில் கொடுமையாய் நடத்துவதுமன்றி, சரியாய்ச் சாப்பாடு போடாமலும் இருந்ததனால் அப்பிள்ளைகள் அவனைவிட்டு ஓடிப்போக நிச்சயித்து, ஒருநாள் விடியற்காலத்தில் சற்று முன்னே எழுந்திருந்து சிற்றப்பன் தூங்கிக்கொண்டிருக்கையில் அடி ஓசைப்படாமல் வீட்டைவிட்டு வெளிப்புறப்பட்டுத் துரிதமாய் நடந்துபோய்ச் சென்னபட்டணத்துக்குப் போகும் பாதையைச் சேர்ந்தார்கள்.

இரண்டு நாழிகைவழி சென்றபின் கடுநடையால் இளைப்புத்தட்டி வியர்த்துப் பெருமூச்சும் உண்டாய் வழிப்பக்கத்தில் ஒரு மரத்தடியில் சற்றுநேரம் இளைப்பாற உட்கார்ந்தார்கள். அப்பொழுது நாம் நினைத்தபடி நெடுகப் போவோமா அல்லது ஊருக்கே திரும்பி விடுவோமா என்று அவர்களுக்கு ஒரு கவலையுண்டாயிற்று. சின்னதம்பி தான் நெடுந்தூரம் நடப்பதற்கு அஞ்சித் திரும்பிவிடுவோமென்று சொன்னான். நல்ல தம்பியோ சற்றுநேரம் யோசித்து: "தம்பி! நீ சொல்லுகிறபடி திரும்பிப்போகிறது எனக்கு ஒரு விதத்திலும் சரியாய்த் தோன்றவில்லை. நம்முடைய சிற்றப்பன் முரட்டுத்தனத்தினால் முகங்கடுத்துப் பேசுவதும், அடிக்கொருதரம் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேனென்று பயமுறுத்துவதும் தவிர, தோட்டத்தில் பயிரான கறிகாய்களைக் கூடையில் வைத்துக் கடைக்குக்கொண்டுபோய் விற்கச்சொல்லி அனுப்பி, அதில் எல்லாம் விற்றுப்போகாமல் சில மிகுந்தால் அதற்காக ஏன் முழுதும் விற்கவில்லை என்று அடிக்கவும் அடித்தானல்லவா? இப்போது நாம் திரும்பிப்போனால் சொல்லாமற் போனதற்காக அவசியம் தோலுரிய அடிப்பான். ஆகையால் நீ

நடக்கமாட்டாமல் போனாலும், உன்னை என் முதுகில் எடுத்துக்கொண்டாவது போவேனேயல்லாமல் அந்தத் திக்கில் திரும்பமாட்டேன்" என்றான்.

இதைக்கேட்டுச் சின்னதம்பி: "ஆம், ஆம். முன்னொரு நாள் 'வாடிப்போன கத்தரிக்காய்களையும் நீ ஏன் விற்கவில்லை? நீ மட்டிப் பையனானதால், உனக்கு விற்க வகைதெரியாமல் வந்தாய்; இது வாடின காயல்ல, இன்று காலைதான் பறித்தது என்று சொல்லித் தண்ணீர் தெளித்துச் சாதனைபேசி விற்று வரலாமே, பாதிகூடைக் காயைக் கொண்டுவந்து வீடுசேர்த்தாயே, துஷ்டா' என்று முன்பின் பாராமல் அடித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது" என்றான்.

"ஆம் தம்பி, நான் அதற்குமுன் ஒருகாலும் அப்படி அடிபட்டதில்லை. அவன் மோசஞ்செய்யச் சொன்னதற்கு, "நான் அது செய்யமாட்டேன்" என்று பேசினதனால் அவனுக்கு அதிக கோபம் வந்தது. இப்போது அவனைவிட்டு நீங்குவதற்கு முக்கிய காரணம் எதுவென்றால், அவன் தன்னைப் போலே என்னையும் அயோக்கியனாக்கப் பார்த்தானே அது தான்," என்று நல்லதம்பி சொன்னான்.

இப்படி அந்தப் பிள்ளைகள் சிலநேரம் பேசிக்கொண்டு இளைப்பாறியிருந்து, மறுபடி புறப்பட்டுச் சற்று ஓட்டமாயும், சற்று நடையாயும் சென்னபட்டணத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் அங்கங்கே இவர்களுக்கு எதிர்ப்பட்டவர்கள் எவரும் நீங்கள் யார் என்று விசாரிக்கவில்லை. அப்படியிப்படியாய் நாலு நாழிகைவழி கடந்து போகையில், ஒரு சுமைவண்டி வெகுவேகமாய்ப் பின்னேவந்து தங்களுக்கு முன்னே போவதை அவர்கள் கண்டார்கள்.

அந்த வண்டிக்காரன் ஈரநெஞ்சுள்ளவனாதலால் சின்ன பையனைப் பெரிய பையன் முதுகில் எடுத்துக்கொண்டு வருத்தமாய் வழிநடப்பதைப் பார்த்து மனமிரங்கி, "பையல்களே, எங்கடா போகிறீர்கள்? என் சுமைவண்டியில் கொஞ்சம் இடம் கொடுக்கிறேன்; ஓட்டிக்கொண்டு வருகிறீர்களா?" என்று கூவினான். அதற்கு நல்ல தம்பி: "நீர் தயைசெய்தால் எங்கள் பாக்கியந்தான்; எதிரிலிருக்கிற ஊருக்குப்போய்ச் சேரவேண்டும்" என்று வணக்கமாய்ச் சொன்னான். "அப்

படியே ஆகட்டும், ஏறிக்கொள்ளுங்கள். முன்னிருக்கிற ஊர் இன்னும் நான்கு நாழிகை வழிதான்" என்று சொல்லி, வண்டிக்காரன் அப்பிள்ளைகளைக் கைகொடுத்து ஏற்றிக்கொண்டு போய் அந்த ஊர் சத்திரத்தண்டை நிறுத்தி, இவர்கள் இளைப்பாயிருக்கிறதைப் பார்த்து, அவல்கடலை கொஞ்சம் வாங்கிக் கொடுத்து, வண்டியிலிருந்து இவர்களை இறக்கிவிட்டான்.

இந்தச் சிறு பிரயாணிகள் அவன் செய்த உபகாரத்துக்கு அவனைக் கையெடுத்துக் கும்பிட்டு நன்றியறிந்தவர்களாய்ப் பிரிந்து போனார்கள். நல்லதம்பி தான் சிற்றப்பனிடத்தில் இருந்தபோது அயலார்க்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பது முதலான சிற்றூழியம் செய்ததற்காக அவர்களால் பெற்ற சில செப்புக் காசுகள் முடிந்துவைத்துக் கொண்டிருந்ததை இப்பொழுது அவிழ்த்தெடுத்து, அந்த ஊர்க்கடையில் சில சிற்றுண்டிகள் வாங்கித் துணியில் மூட்டை கட்டிக்கொண்டு, தம்பியைக் கைபிடித்து மறுபடி கொஞ்சதூரம் வழிநடந்தான். இப்படியாக சென்னபட்டணத்திற்கு ஏறக்குறைய பாதிதூரம் போய்ச்சேர்ந்தனர்.

நடந்த இளைப்பினால் சாலையின் பக்கத்தில் கிடந்த ஒரு வெட்டு மரத்தின்மீது உட்கார்ந்து பசிவருத்த முண்டாகியதால் மடியில் வைத்திருந்த சிற்றுண்டிகளைச் சாப்பிட்டனர். சின்னதம்பி தன் பங்கைத் தின்று பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் தாகத்துக்குச் சாப்பிட்டு, அடுத்த மரத்தின் குளிர்ச்சியான நிழலில் உதிர்ந்த பழுப்பின்மேல் சற்றுப் படுக்கவே அலுப்பினால் நித்திரை போய்விட்டான். ஆகிலும் நெடுநேரம் தூங்க அவனுக்கு அனுகூலப்படவில்லை. நல்லதம்பி பின்னே வண்டி வருகிற சத்தத்தைக் கேட்டுத் தம்பியை எழுப்பி, "நாம் முன் ஏறிவந்த வண்டி வருகிறது போலக் காணுகிறது; புறப்படு, போவோம் வா" என்றான். இதற்குள் நினைத்தபடியே முன் தாங்கள் ஏறிவந்த வண்டி சமீபத்தில் வந்துவிட்டது. அந்தத் தயாளகுணமுள்ள வண்டிக்காரனுக்கு இந்தச் சிறுவர் வந்தனம்செய்ய, அவன் அவர்களைப் பார்த்து: "நீங்கள் மறுபடியும் எங்கே போகிறீர்களடா?" என்று கேட்டான். அவன் தங்களைப் பிரீதியாய் நடத்தினவனாகையால் தங்களுடைய வரலாற்றை அவனுக்கு முழுதும் உண்மையாய்ச் சொன்னார்கள். அதைக் கேட்டு வண்டிக்கா

ரன் மிகவும் மனதிரங்கி: "உங்கள் நிலே எனக்கு மனவருத் தத்தை யுண்டுபண்ணுகிறது. ஆகிலும் நானென்ன உதவி செய்யப்போகிறேன்; சென்னபட்டணம் வரையில் இந்த வண் டியில் உங்களே ஏற்றிக்கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். அது தான் என்னலாகும்" என்று சொல்லி, அப்படியே அச் சிறு வரை வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய், பட்டணத்தின் வண்டி மேட்டிலிறக்கி, அவர்கள் கையில் இரண்டணு கொடுத்து, "இத ற்குமேல் உதவிசெய்ய என்ஞல் முடியாது. இந்தச் சாலேவழி யேபோய் பட்டணத்தில் நல்லவர்களே யடுத்துப் புத்தியுடன் பிழையுங்கள்" என்று சொன்னுன். அவன் தங்களுக்குச் செய்த உபகாரத்தை உணர்ந்தவர்களாய் அவனுக்கு வந்தனஞ் செய்து, அவனே விட்டுப் பிரியமாட்டாமல் துக்கத்தோடு செ லவுபெற்றுக்கொண்டு பட்டணத்தை நோக்கி நடந்தார்கள். அப்பொழுது சூரியன் அஸ்தமிக்கிற சமயம். அவர்கள் பட் டணத்துக்குச் சமீபத்திலிருக்கும் பாலத்தின்மீது வந்து நின்றுகொண்டு இனி எங்கே போகலாம், யாரை நாம் அறி வோம் என்று திகைத்து ஒன்றும் தோன்ருதவர்களாய்ப் போ கிற வருகிற ஜனங்களேப் பார்த்துக்கொண் டிருக்கையில், பதி னைந்து வயதுள்ள ஒரு தடித்த பையல் இவர்களே உற்றுப் பார் த்து, கிட்டவந்து "நீங்கள் இன்ன ஊரல்லவா? என் பெயர் குப்பனல்லவா? நீங்கள் எங்கேபோக வந்தீர்கள்?" என்ருன். அவனே நல்லதம்பி இன்னவனென்று அறிந்து கலந்துபேசித் தாங்கள் வந்த காரியத்தைச் சொன்னுன். குப்பன் விசனப் பட்டு: "நான் இவ்விடத்தில் ஆறுமாதமாய் வந்திருக்கிறேன். நான் இருக்கிற இடத்தில் நீங்கள் வந்திருங்கள். பிறகு நீங் கள் வேறு நல்ல இடம் அகப்படும்போது போகலாம்" என்று ஆதரவாய்ச் சொன்னுன்.

அவர்கள் குப்பன் தங்களேப் பிரீதியோடு அழைக்கிற தற்குச் சந்தோஷப்பட்டு அவனுக்கு வந்தனஞ்செய்து அவ னேடு போகச் சம்மதித்தார்கள். அவன் இவர்களே இட்டுக் கொண்டு பட்டணத்திற்குள்ளே போகையில், இவர்கள் வழி நடையினுல் மிகவும் இளேப்படைந்து பசிதாகத்தினுல் வாடி யிருக்கிருர்கள். இப்பொழுதே இவர்களுக்கு ஆகாரங் கொடுக்க வேண்டுமென்று நினைத்து முதல் ஒற்றைவாடையி லிருக்கிற சத்திரத்தில் சாப்பாடு போடுவித்து, அப்புறம் தன்

வீட்டிற்கு இட்டுக் கொண்டுபோய்த் தான் படுக்கும் அறையில் பாய் முதலியவை சமுதாயித்துப் படுத்துக்கொள்ளச் சொன்னான். படுத்து வெகுதூரம் வழிநடந்தவர்களாதலால் அயர்ந்து நித்திரை செய்தார்கள். மறுநாள் காலையில் எழுந்திருந்து தந்தசுத்திசெய்து முகம் அலம்பியானபின் அலுப்புத் தீர்ந்திருந்தார்கள். அன்று காலையும் தன்னுடன்கூட அவர்களைக் காலைபோஜனம் செய்யச்சொல்லி, போஜனம் செய்தானபிறகு குப்பன் நல்லதம்பியைப் பார்த்து: "இன்றைப் பொழுதை நீங்கள் எப்படிப் போக்க நினைக்கிறீர்கள்? என்னுடன் கூட வந்தால் இந்தப் பட்டணத்தில் ஜீவிக்கும் வழியை நான் காட்டுவேன்" என, அதற்கு நல்லதம்பி: "கிரமமான வேலைமாத்திரம் கிடைத்தால் கஷ்டப்படுவதற்கு நான் பின்வாங்கமாட்டேன்" என்றான்.

அதைக் கேட்டுக் குப்பன்: "போடா பைத்தியக்காரா, உன்னைப்போல் இம்மாதிரியாய் நானும் ஒருகால் பேசிக்கொண்டிருந்த துண்டு. வேலைசெய்யாமல் யாசகம் பண்ணுகிறதும் விளையாடுகிறதும் தப்பென்று முன்னே நானும் நினைத்திருந்தேன். இப்பொழுது நான் அப்படிப்பட்ட பைத்தியக்காரனல்ல. பணம் சம்பாதிப்பது முக்கியம். எவ்வழியிலே சம்பாதித்தாலென்ன? வேலைசெய்து சம்பாதித்த பணத்துக்குத்தான் மதிப்புண்டோ? கஷ்டப்படாமல் தந்திரமாய்ச் சம்பாதித்த பணம் செல்லாதோ? பணமெல்லாம் ஒன்றுதானே" என்று நகைத்துக் கேலிசெய்தான். அதற்கு நல்லதம்பி: "என்னுடைய அவயவங்களெல்லாம் வலுவுள்ளதாயிருக்கும் போது யாசகம்பண்ணியா துட்டு சம்பாதிக்கச் சொல்லுகிறாய்? நான் அதைச் செய்யமாட்டேன். யாசகம் செய்து உண்பதைவிட, பட்டினி கிடப்பது உத்தமம்" என்றான்.

குப்பன் அதைக்கேட்டு: "உன்னை நான் சிறுபோதிலேயே கர்வி என்று அறிந்திருக்கிறேன். நீ இப்போது எவ்வளவு உயரம் வளர்ந்திருக்கிறையோ இதற்குப் பாதியளவாயிருக்கையிலேயே, யாராவது துட்டு பணம் கொடுக்கவந்தால் நீ வேண்டாமென்கிறது எனக்கு ஞாபகமிருக்கிறது. நாமெல்லாம் ஊரிலிருக்கையில் என் தாயார் உன்னைக் குறித்து. 'நல்லதம்பி தன் வீட்டிலிருக்கிற ஊசிப்போன ஓட்டடையாவது தின்பானேயல்லாமல், யாராவது மதுரமான லட்டு

அதிரசம் கொடுத்தாலும் இலவசமாய் வாங்கித் தின்னமாட்டான்; சிறு வயதிலேயே பெருமைக்காரனா யிருக்கிறான்' என்று சொல்லுவாள். இனி அந்தச் சிறு பிள்ளைத் தனத்தை விட்டுவிடு. இன்றைக்கு என்னுடன் கூட வந்து நான் சொல்லுகிறபடி செய்து, உனக்கு வருகிற லாபத்தைப் பார்த்துக்கொள்" என்றான். "நேற்றையதினம் விளையாட்டிலேயே நான் சம்பாதித்ததில், செலவானது போக இதோ பார்" என்று மடியிலிருந்த முடிச்சை அவிழ்த்துக் கைநிறையப் பைசாவைக் காண்பித்தான். நல்லதம்பி இதைப்பார்த்துப் பேசாமல் நின்றான்.

"இந்தப் பட்டணத்தின் கீழ்த்திசையில் சாவுகாரிகள் வீடுகளும், மளிகைக் கிடங்குகளும், கடைவீதிகளும், தெருவில் குதிரைகளின்மேலும் நாகரிகமான வண்டிகளிலும் சீமான்களும் சிறப்பான ஆடை ஆபரணங்கள் தரித்த பெருமாட்டிகளும் அனேகர் போக்குவரவு செய்கிறதும் உண்டு. அவைகளையெல்லாம் காண்பிக்கிறேன் வாருங்கள்" என்று குப்பன் அவர்களை அழைத்தான்.

அதற்கு நல்லதம்பி "வீணாய் வேடிக்கை பார்த்திருக்கிறது எனக்குச் சம்மதமில்லை; நான் அது செய்யமாட்டேன்" என்றான்.

அப்பொழுது குப்பன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொண்டு: "ஆனால் உங்களுக்கு இஷ்டமானபடி செய்யுங்கள். என்வழியே நான் போய், காலத்தை வேடிக்கையாகக் கழித்து இன்னும் கொஞ்சம் பணம் சம்பாதித்துக்கொண்டு வருகிறேன். சாயங்காலம் மறுபடி சந்திக்கும்போது நீங்கள் வேலையினால் சம்பாதித்ததையும், நான் விளையாடிக்கொண்டு சம்பாதித்ததையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்" என்று சொல்ல, மூவரும் வீட்டைவிட்டு வெளிப்பட்டு அவன் ஒரு திசையும் இவர்கள் ஒரு திசையுமாய்ப் பிரிந்துபோய் விட்டனர்.

குப்பன் கண்ணுக்கு மறைந்த உடனே இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த சின்னதம்பி அண்ணனைப் பார்த்து, "இவன் நமக்கு உபகாரிதான்; சங்கடவேளையில் சகாயஞ் செய்தான்; ஆயினும் இவன் நடக்கைமாத்திரம் கெட்டதா யிருக்கிறது. மறுபடி இவனிடத்திற்கு வருவது சரி

யல்ல" என்று சொல்ல, அதற்கு: "தம்பி, நீ சொன்னது சரியே. இவன் என்னுடன் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த நாளில் இப்படி யில்லை. இப்போதுதான் குணம் சீர் கெட்டிருக்கிறது. ஆகையால் இனி நாம் பணம் சம்பாதித்து வேறிடம் தேடிக்கொள்ள வேண்டும். அதற்கு வழியென்ன?" என்று நல்லதம்பி சிந்தையோடு சொன்னான்.

அதற்குச் சின்னதம்பி: "நம்மைத் தெய்வம் காப்பாற்றும். நம்முடைய தாய் அடிக்கடி இப்படிச் சொல்லுகிறதுண்டல்லவா? அவள் சொன்னதெல்லாம் உண்மைதானே" என்றான்.

இவ்வாறு இவர்கள் இருவரும் யோசனை செய்துகொண்டே தெருவில் போய்க்கொண் டிருக்கையில், சில பிள்ளைகள் ஒரு வீட்டுத் தெருப்பக்கத்தில் ஒட்டடை தட்டுகிறதையும் வெள்ளை யடிப்பதையும் பார்த்து, இந்த மாதிரி வேலை தமக்கும் கிடைத்தால் செய்யலாம். அவர்களைப் போலத் தாங்களும் கசங்குத் தட்டும் குச்சுமட்டையும் வாங்கிக்கொண்டு போனால் வேலை கிடைக்கும் என்று நிச்சயித்துக் கொண்டனர். மறுநாள் சங்கிராந்தி பண்டிகையானதுபற்றி பட்டணம் முழுமையும் வீடுகளைச் சுத்தி செய்வதற்காகப் பல வேலைக்காரர்களை வைப்பார்கள் என்பது உண்மைதான். அப்படியே மூத்தவன் தம்பியோடு ஆலோசித்து இருவரும் இந்த வேலைசெய்யத் தீர்மானித்து, அருகிலிருந்த கடைத்தெருவிற்குப் போய் இரண்டு தட்டும் குச்சுமட்டையும் வாங்கிக் கொண்டார்கள். எந்தத் தெருவில் போனால் வேலைகிடைக்கும் என்று யோசித்து, வெகு நாளைக்குமுன் தகப்பனோடுகூட சென்னபட்டணம் வந்து சில தினம் தங்கியிருக்கையில் தான் பார்த்திருந்த சில வீதிகள் நல்லதம்பிக்கு இப்பொழுது ஞாபக மிருந்தமையால், தங்கசாலைத் தெருவிற்போவோம் என்று நிச்சயித்துச் சீக்கிரமாய் நடந்துபோனார்கள். அங்கே வீடுகள்தோறும் சிற்றாள்கள் அமர்ந்திருக்கிறதைக் கண்டு ஒவ்வொரு வீடாய்ப் பார்த்துக்கொண்டு போகையில், ஒரு வீட்டில் நாலுநாழிகை நேரத்துக்குச் சுத்திசெய்யும் வேலை கிடைத்தது. அதைச் செய்துவிட்டுக் கூலி வாங்கிக்கொண்டு திரும்பி வருகையில், ஒரு சுமை தாங்கியண்டை சின்னதம்பியை நிறுத்திவிட்டு, அவனை அவ்விடத்திலேயே ஜாக்கிரதையா யிருக்கச்சொல்லி மற்றவன் கீழண்டை வீதிகளில் வேலைகிடைக்குமாவென்று பார்த்து

வரப்போனான். போனவிடத்தில் பொழுதாய் விட்டபடியால், எங்கும் வேலை மிஞ்சிப் போய்விட்டது. எங்கே பார்த்தாலும் வீடுகள் சுத்தி செய்தாய்விட்டது. இப்படி வேலைக்காகத் தெருத்தெருவாய்த் திரிந்ததனால் கால் ஓய்ந்துபோய்க் காசுக் கடைத் திருப்பத்தில் நாட்டியிருந்த தீபஸ்தம்பத்தின் மேல் சார்ந்து நின்றுகொண்டு சற்று இளைப்பாறினான். அப்படியிருக்கையில் ஒரு பெரிய மனிதன் தன் மனைவியோடு சில பழவகைகளும் சவுளிதினுசுகளும் கையில் வைத்துக்கொண்டு, ஒரு கிடங்கிலிருந்து புறப்பட்டுத் தூரத்தில் விட்டிருந்த தங்கள் வண்டிக்காரனைச் சுட்டி அழைக்க, அவன் கவனியாமல் பேசிக்கொண் டிருப்பதை நல்லதம்பி பார்த்து, சீக்கிரமாய் ஓடி, அந்த வண்டிக்காரனுக்கு யஜமான் அழைப்பதைக் காட்டி வண்டியைத் திருப்பிக்கொண்டு போய்க் கதவைத்திறந்து அவர்கள் கையிலிருந்த சாமான்களைத் தான் தாங்கிக்கொண்டு அவர்களை வண்டியிலேறும்படி உபசரித்தான். இதைப்பார்த்து அந்தச் சீமாட்டி சந்தோஷப்பட்டுத் தன் கையிலிருந்த சில்லரையை இவன் கையில் கொடுத்தாள். இவன் வண்டிக்கதவை மூடி உங்கள் வீட்டில் நன்றாய்ப் பால்பொங்கவேண்டுமென்று வாழ்த்தி வந்தனம் செய்ய, அந்தப் பெருமாட்டி இந்த ஏழைப் பிள்ளையைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்து, இது சமர்த்துள்ளபிள்ளை என்று சொல்லிப் போய்விட்டாள். வண்டி போய்விட்டபின் நல்லதம்பி தன் கையில் கொடுத்த சில்லரையைப் பார்த்தான்.

"இது ஐந்தாறு பைசாவிருக்கலாம்" என்று அவன் எண்ணிப்பார்க்கையில், செப்புக்காசுகள் மத்தியில் மஞ்சள் நிறமுள்ள ஒரு சிறு நாணயமிருக்கக் கண்டான். அது கால்சவரன் என்கிற புதிய பொன்நாணயம். அதைப் பார்த்தவுடனே ஆச்சரியத்தால் திடுக்கிட்டுச் சட்டென்று நிமிர்ந்து வண்டி போன வழியைப் பார்க்க, தெருக்கோடியில் அது போய்க் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. உடனே வண்டியைப் பிடிக்கக்கூடிய வேகமாய் ஓட, வண்டியும் வேகமாய்ச் சென்று மற்றொரு தெருவில் திரும்பிப் போனவழி தெரியாமல் போய் விட்டது. இனி என்ன செய்கிறதென்று கவலைப்பட்டு "அந்த அம்மாள் இந்தப் பொன்நாணயத்தைத் தெரியாமல் செம்புநாணயம் என்று கொடுத்து விட்டாள். இதை எப்படி அவளிடத்

தில் மறுபடி சேர்க்கிறது" என்று சொல்லிக்கொண்டு ஒன்றும் தோன்ருமல் திரும்பிவருகையில், அங்கிருந்த ஒரு கோயில் வாசற்படியில் உட்கார்ந்து அந்தப் பொன்நாணயத்தை ஒரு காகிதத்துண்டில் மடிதது அதற்குத் தான் ஒருநாள் உத்தரவு சொல்லவேண்டி வரும், இந்த உத்தரவாதம் தன்னேவிடாது என்று அரைத்துணியில் அதைப் பத்திரமாய் முடிந்து மடியில் செருகிக்கொண்டான். தன் தம்பிக்குத் துணி கந்தலாயிருப்பதை நினைத்து, இந்தப் பொன்னுக்கு இரண்டு துணி வாங்கிக் கொடுக்கலாமாவென்று ஒரு இச்சை அவனுக்கு தக்ஷணம் தோன்றிற்று. மறுக்ஷணத்தில்: "இது என்னுடைய சொந்தப் பணமல்லவே, இதை எப்படிச் செலவழிக்கிறது. நான் அதைச் செய்யமாட்டேன்" என்று தீர்மானித்து அந்த இச்சையை விட்டுவிட்டான்.

இந்தச் சமயத்தில் பின்புறமாய் வந்து முதுகில் ஒருவன் அயர்ப்பில்தட்டத் திடுக்கிட்டுத்தான்வைத்திருந்தபொன்னேப் பற்றி வேவுகாரர் யாரோ அறிந்துகொண்டு தன்னேப் பிடித்துக்கொள்ள வந்தார்களோ என்று பயந்து திரும்பிப் பார்த்தான். குப்பன் என்பவன் முன்னே வந்து நின்று: "இங்கே என்னடா செய்கிருய்? ஆந்தைபோல் விழிக்கிருயே? சின்ன தம்பியை எங்கே விட்டாய், என்னடா சங்கதி?" என்று கேட்டான். "என் தம்பி சமீபத்திலேதான் இருக்கிருன். அதிக தூரமில்லே; நான் சீக்கிரத்தில் அவனேடு போய்ச் சேரவேண்டும்" என்று நல்லதம்பி சொல்ல, குப்பன்: "சரிதான், போவோம் வா" என்ருன். நல்லதம்பிக்கு அவனுடன் சேர்வது சம்மதமில்லாமலிருந்த போதிலும், வேறுவிதியில்லாமல் கூடப்போக ஒத்துக்கொண்டான்.

சின்ன தம்பியை விட்டுப்போன சுமைதாங்கிக்குச் சமீபமாய் வருகையில், அண்ணன் இன்னும் வரவில்லேயே என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தபடியால், அவன் வருவதைக் கண்டமாத்திரத்தில் தம்பி முகமலர்ச்சியுடன் எதிர்கொண்டோடி, அவன் தோளில் கைபோட்டுக் காதோடு: "நீ போன பிறகு நான் இரண்டணு கூலி சம்பாதித்தேன்" என்று சொன்னுன்.

அப்பொழுது குப்பன் இச்சிறுவரைப் பார்த்துச் சிரித்து, "ஆ! ஆ! நல்ல தொழில் சம்பாதித்தீர்கள்; வீடு விளக்கவும்,

குப்பை சுமக்கவும் ஏற்பட்டீர்களே! இதனல் உங்களுக்கு வரும்படி அதிகமாகும். ஏன் இப்படிக் கவைக்கு வராத தொழிலைச் செய்யத் தொடங்கினீர்கள்?" என்று பரிகாசம் செய்து, "இது இருக்கட்டும். அதோ இருக்கிற கள்ளுக் கடைக்குப்போய், தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் வாருங் கள். நல்ல சாராயம் வேண்டுமாளுலும் வாங்கிக் கொடுப் பேன்" என்ருன்.

நல்லதம்பி இதைக்கேட்டு, "அந்தப் பழக்கம் எனக்கில்லை. நான் அது செய்யமாட்டேன்," என்று கண்டிப்பாய்ச் சொல்ல, குப்பன் மீசையை முறுக்கிக்கொண்டு: "உனக்குச் சினேக குணமில்லை. நீ சரஸியல்ல. நான் போகிறேன். உனக்கும் எனக்கும் இனி என்ன இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போக்கிரிப் பயல்களைப்போல் ஈசல் கொட்டிக்கொண்டு போய் விட்டான்.

அப்போது தம்பி தமைய னிருவரும் தம்மைப் பிடித்த பீடை விட்டுத் தொலைந்ததென்று மனங் களித்தவர்களாய் அப்புறம் கொஞ்சதூரம்போய் ஏழுகிணற்றண்டை சுளுவான குடிக்கூலியுள்ள சற்று நல்ல அறைவீடொன்றை விசாரித்து, அவ்விடத்தில் வெகுநாள் தங்கியிருந்து சிற்ருள்வேலை செய்து ஜீவித்து வந்தனர். செய்து வந்தது அற்பத்தொழிலே யன்றி மேன்மையான நிலையுள்ள வேலையொன்றும் கிடைக்க வில்லை. இப்படி மூன்றுமாதம் சென்ற பின்பு ஒருநாள் சவு ளிக் கடைத்தெருவில் நல்லதம்பி போய்க்கொண் டிருக்கையில் எதிரில் முன்னே பொன்நாணயம் கொடுத்த புண்ணியவதி வண்டியில் வருகிறதைக் கண்டு, வணக்கத்தோடு கிட்டப் போய், தன் மடியில் காகிதத்தில் மடித்து முடிந்து வைத்திரு ந்த முடிச்சை அவிழ்த்து, கால்சவரனை எடுத்து: "முன்னெரு தரம் செம்பு நாணயத்தோடு மறந்து கொடுத்தீர்களே, இதை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று கைநீட்டிக் கொடுக்கப்போ ஞன். அப்பெருமாட்டி இச்சிறுவனுடைய அபூர்வமான யோக்கியத்தையும் நற்குணத்தையும் பார்த்து ஆச்சரியப் பட்டு, அவனுடைய பெயர் இருப்பிடம் இவைகளைக் கேட்டு அறிந்துகொண்டு: "இந்தப் பொன்னை நீ எடுத்துக்கொள்;

இதற்கும் மேலான காரியம் உனக்கு நான் செய்ய நினைத்திருக்கிறேன்" என்று சொல்லிப் போய்விட்டாள்.

சில தினங்களுக்குள் பெரிய வர்த்தகனுகிய அவளுடைய புருஷன் தன்னை வந்து பார்க்கும்படியாக நல்லதம்பிக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினுன். அவன் கடிதத்தைப் பார்த்துக் கொண்டு, அவ்வர்த்தகனிடத்திற்குப் போக, அவனுடைய வர்த்தகசாலையில் தகுந்த வேலை ஒன்றைக் கொடுத்துத் தன்னிடத்தில் அமர்த்திக் கொண்டான். இந்தச் சீரான ஜீவனம் கிடைத்ததால் முன்னிருந்ததைவிட சற்று நல்ல வீடொன்றைத் தேடிக்கொள்ளவும் தம்பியைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவும் அவனுக்குச் சக்தி உண்டாயிற்று.

புதுவீட்டிற்கு வந்தபின் சிலநாள் கழித்துக் குப்பனென்னும் துஷ்டப்பயல் தான் செய்துவந்த திருட்டுப்புரட்டு, தந்திரம் சூதுவாதுகளால் வருத்தத்தில் அகப்பட்டு, சோற்றுக்கும் வழியில்லாமல் நல்லதம்பி சின்னதம்பி நல்லஸ்திதியிலிருக்கிறதைக் கேள்விப்பட்டு, அவர்களைக் கண்டால் ஏதாவது உதவிபெறலாம் என்று நினைத்து, அவர்கள் இருக்குமிடத்தை விசாரித்துத் தேடிவந்து அவர்களை ஆவலோடு கண்டான். அச்சிறுவர்கள் இருக்கும் சீர்மையும் சுகமும் தனது கேடு கெட்ட நிலைமைக்கு முற்றும் மாருயிருப்பதைப் பார்த்து, வெட்கப்பட்டவனுய் எதிரில் நின்ருன். அச்சிறுவர்கள் இவனை விசுவாசமாய் விசாரித்த போதிலும், இவன் துர்மார்க்கங்களையும்துஷ்ட சகவாசங்களையும் விட்டுவிட ஒப்புக்கொண்டாலொழிய இவனுக்குச் சகாயஞ்செய்ய உடன்படக் கூடாதென்று நிச்சயித்துக் குப்பனைநோக்கித் தங்கள் கருத்தை வெளியிட, "அப்படி விட்டுவிடக் கூடுமானுல் நல்லதுதான். ஆயினும் நெடுநாளைய வழக்கங்களிலும் சினேகத்திலும் நான் சிக்கிக் கொண்டிருப்பதனுல் அவைகளை விட்டு நீங்க என்னு லாகவில்லை" என்று சொல்லி இரண்டொரு ரூபாயாவது கடனுகக் கொடுக்கும்படி வணங்கி வேண்டிக்கொண்டான்.

நல்லதம்பி குப்பனுடைய ஈனஸ்திதியைப் பார்த்து மனதில் வருத்தப்பட்டாலும் அவனை நோக்கி: "குப்பா, கேள்; நான் சொல்லுகிற புத்தியின்வழியாய் நடந்தால் க்ஷேமப்படுவாய். 'யோக்கியமே உத்தமவழி' என்பதை நீ இனியாவது

அறிந்து நட. அப்படி நடக்க உனக்கு இஷ்ட மில்லாவிட்டால் என் மனசாக்ஷிக்கு விரோதமாய்க் கெட்டசெயல்களைச் செய்யச்சொல்லி நீ என்னை ஏவின பொழுதெல்லாம் நான் சொல்லிவந்த எனக்கு வழக்கமான வாக்கியத்தைத்தான் இப்பொழுது நீ கேட்கும் உதவிக்கும் சொல்லவேண்டி யிருக்கிறது. அதாவது: நான் அது செய்யமாட்டேன்" என்று தீர்ப்பாய்ச் சொல்லி அனுப்பிவிட்டான்.

## 14. தருமிக்குப் பொற்கிழி யளித்தது.

வம்மிச சூடாமணி பாண்டியன், சோமசுந்தரக் கடவுள் பொருட்டுத் திருநந்தனவனம் உண்டாக்கிச், சம்பகவனமுந் தனியே வைத்தான். அதிலே மலர்ந்த சம்பகப்பூக்களைக் கொய்து, இண்டை முதலிய பலவித மாலைகளைத் தொடுத்துச், சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்துவித்தான். சம்பகமாலை யணிந்த சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோலத்தைத் தரிசித்து, வியந்து: "இவர் சம்பகசுந்தரர்" என்று சொல்லி வணங்கினான். இன்றைக்கும் அக்கடவுளுக்கு அத்திருநாமம் வழங்குகின்றது. அவருக்குச் சம்பகமாலை சாத்துவித்த காரணத்தினாலே, வம்மிச சூடாமணிபாண்டியனுஞ் சம்பக பாண்டியன் எனப் பெயர் பெற்றான். சம்பக பாண்டியன் சம்பகசுந்தரருக்குப் பணிசெய்துகொண்டு வருநாளிலே, இள வேனிற்காலம் வந்தது.

அவ்விளவேனிற் காலத்திலே, ஒருநாள், சம்பகபாண்டியன், தன்னுடைய தேவியோடும், வெப்ப நீக்கத்தின் பொருட்டு, அச்சம்பக வனத்தில் ஒரு சந்திரகாந்தக் குன்றில் இருந்தான். அவனுக்கு நேரே, ஒரு நறுமணந் தோன்றும் படி, தென்றற்காற்று வீசிற்று. பாண்டியன், அவ் வாசத்தை மோந்து: "இது ஒரு திவ்விய வாசம். தென்றற் காற்றானது சோலையில் வெளவிய வாசமன்று. காற்றுக்கும் வாசமில்லை. இது எவ்வாசமோ!" என்று நினைந்து, தன்னுடைய தேவியைத் திரும்பிப் பார்த்தான்; அவளுடைய கூந்தலின் வாசமாயிருந்ததைக் கண்டு: "இவ்வாசம் வண்டுக்குந் தெரியாது" என்று நினைந்து மகிழ்ந்து: "இவ்வாசங் கூந்தலுக்கு இயற்

கையோ செயற்கையோ!" என் றையங்கொண்டான் "நான் ஐயுற்ற கருத்தை யாவராயினும் அறிந்து பாடல்செய்வா ராயின், அவரே இவ்வாயிரம் பொன்னுக்கும் உரியர்" என்று சொல்லி, ஒரு பொற்கிழியை ஏவலாளர் கைக்கொடுத்தான். அவர்கள், அதைக் கொண்டுபோய்ச், சங்கமண்டபத்தின் முன்னே தூக்கினுர்கள். சங்கப் புலவர்களெல்லாரும், தனித் தனியே ஆராய்ந்தாராய்ந்து, பாண்டியனுடைய மனக்கருத்தை அறியாது வருந்தினுர்கள்.

அப்பொழுது, ஆதி சைவருள் ஒருவனும், தந்தைதா யில்லாதவனும், பிரமசாரியும், விவாகத்தில் விருப்புடைய வனுமாகிய தருமியென்பவன், சோமசுந்தரக்கடவுள் சந் நிதியை அடைந்து, வணங்கி: "எம்பெருமானே! அடியே னுக்குத் தந்தையுந் தாயுமில்லை. விவாகத்தில் விருப்பமுற் றிருக்கின்றேன். அதற்குப் பொருள் சிறிதுமில்லை. அடி யேன் வேதசிவாகமங்க ளெல்லாம் ஓதினேனுயினும், இல் வாழ்க்கையின்றி உமது பூசைக்கு அருகனுவேனே! ஆகேன். நீர் சர்வஞ்ஞர். பாண்டியனுடைய மனக்கருத்தை யறிந்து, ஒரு செய்யுள் செய்து தந்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே, சோமசுந்தரக்கடவுள், ஒரு தமிழ்ச் செய்யுளைச் செய்து கொடுத்தருளினுர். அது இது:—

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே ?

தருமி, வணங்கி, அச்செய்யுளை வாங்கிக்கொண்டுபோய்ச், சங்கமண்டபத்தை அடைந்து, அங்குள்ள புலவர்கள் கையி லே நீட்டினுன். அவர்கள் யாவரும், வாங்கி வாசித்துச், சொற்சுவையையும் பொருட்சுவையையுந் தூக்கி: "நன்று நன்று" என்று மகிழ்ச்சியடைந்து, பாண்டியனெதிரே போய், அப்பாட்டைச் சொன்னுர்கள். பாண்டியன், தன் மனக் கருத் தொத்தலினுலே, முடியசைத்து, மனமகிழ்ந்து: "இச் செய்யுள் கொண்டுவந்த பிராமணன், இப்புலவர்களோடுபோய், ஆயிரம்பொன்னையுங் கிரகித்துக்கொள்ளக்கடவன்" என்றுன்.

அரசனேவலினாலே தருமி புலவர்களோடு போய்ச் சங்க
மண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கும்
பொழுது, நக்கீரர், அவனை விரைந்தணுகி; "நில் நில்" என்று
தடுத்து: "இச்செய்யுளிலே குற்ற மிருக்கின்றது" என்றார்.
உடனே தருமி ஏங்கி, மெல்லச் சென்று, அச்செய்யுளைச்
சோமசுந்தரக்கடவுள் திருமுன் வைத்து: "எம்பெருமானே!
ஏழையேனுக்கு நீர் இப்பிழைப்பாட்டைத் தந்தது என்னை?
வறுமை நோயினால் வருந்திப் பலநாள் உம்மை வழிபடும்
அடியேன் உம்மால் இப்பொழுது பெற்ற பொருளை இழந்
தேன் என்று தமியேன் பேசிலேன். எவ்வெவர்க்கு மேலா
கிய உமது செய்யுளுக்குச் சில்வாழ்நாட் சிற்றறிவினையுடைய
புலவர் குற்றஞ்சொன்னாராயின், யார் உம்மை மதிப்பார்! இவ்
விகழ்ச்சி உமக்கல்லது எனக்கேது" என்று சொல்லி, நின்
றிரங்கினான்.

3416

அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள் ஒரு புலவர் வடி
வங்கொண்டு, விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்துக், கண்
டிகை பதக்கங் குண்டலம் மோதிர முதலியவைகளை அணி
ந்து, திருவடிகளிலே பாதுகை மாட்டிக்கொண்டு, முத்துக்
குடை நிழற்ற, வெண்சாமரம் வீசக், கற்றுச் சொல்லிகள்
பின்வரச் சென்று, சங்கமண்டபத்தை யடைந்து நேர்நின்று,
அங்கிருந்த புலவர்களை நோக்கி: "நமது செய்யுளுக்குக் குற்
றஞ் சொன்னவர் யாவர்?" என்றார். என்னு முன்னர், நக்
கீரர், அஞ்சாது: "நானே சொன்னேன்" என்றார். புலவர்:
"யாது குற்றம்?" என, நக்கீரர்: "சொற்குற்றமின்று; பொருட்
குற்றம்" என்றார். புலவர்: "பொருட் குற்றம் என்னை?" என,
நக்கீரர்: "கூந்தலுக்கு வாசம், பூவின் சார்பாகிய செயற்கை
யாலன்றி, இயற்கையாயில்லையே" என்றார். புலவர்: "பது
மினியுடைய கூந்தலோ" என, நக்கீரர்: "அதுவும் அத்தன்
மையதே" என்றார். புலவர்: "தெய்வப் பெண்களுடைய
கூந்தலோ" என, நக்கீரர்: "அதுவும் மந்தார நறுமலர் அளை
ந்து மணத்தலாற் செயற்கையதே" என்றார். புலவர்: "நீர்
வழிபடுகின்ற திருக்காளத்தி யப்பருடைய சத்தியாகிய
ஞானப்பூங்கோதை யம்மையாருடைய கூந்தலும் அத்தன்மை
யதோ" என, நக்கீரர்: "அதுவும் அத்தன்மையதே" என்றார்.
உடனே புலவர் நெற்றிக் கண்ணைச் சிறிதுகாட்ட, நக்கீரர்

அதற்கு மஞ்சாது: "இந்திரனுக்குப்போல உமதுடம்பு முழுதுங் கண்ணுனாலும், உமது பாடல் குற்றமே குற்றம்" என்றார். நக்கீரர், சிவபெருமானது நெற்றிக் கண்ணினுடைய அக்கினி வெப்பத்தினாலே பொறுக்கலாற்றாது, பொற்றாமரை வாவியிலே போய், விழுந்து அழுந்தினார். அவரை வென்ற புலவர் திருவுருக் கரந்தருளினார்.

## 15. அடாத செய்த சீமான்.

சாதாரணமாகத் தென் சமுத்திரமென்று சொல்லப்படும் பெருங் கடலில் சாலமன் என்னுஞ் சில தீவுகள் உண்டு. அத்தீவுகளில் ஒன்று மற்றவைகளிலும் மிகப் பெரிதாக நடுவில் அமைந்திருக்கிறது ; மற்ற தீவுகள் அதைச்சுற்றி வெகு தூரத்தில் இருக்கின்றன. அத்தீவை ஆண்டுவந்த மன்னர்களுள் சாலமன் என்னும் ஒருவன் பேரறிவுள்ளவனாய் நீதி நியாயத்தோடு எல்லாவற்றையும் நடத்தித் தன் குடிகளைச் சீர்திருந்தச் செய்ததனால் அத்தீவுகளுக்கெல்லாம் சாலமன் தீவுகள் என்று நெடுநாளாகப் பேர்வழங்கி வருகின்றது.

இந்த ரம்மியமான தீவில் வாழ்ந்திருந்த ஒரு பிரபுவினுடைய சந்ததியான் ஒருவன், சொற்ப காலத்துக்குள் மிக்க திரவியத்தையும் அதிகாரத்தையும் அடைந்து, செல்வத்தினால் அறிவு மயங்கி, தன் முன்னோரைப் பெருமைப்படுத்தின நல்லொழுக்கங்களை யெல்லாம் கைவிட்டு, புத்தியின்மையா லுண்டாகும் அகங்காரத்தினாலும் சிற்றின்பத்தில் அமிழ்ந்த துராசையினாலும் தனக்குண்டா யிருந்த கனத்தையே பாராட்டி வந்தான்.

அவனுக்குக் கடலோரத்தில் ஒரு மாளிகை இருந்தது. அதில் அவன் பலநாள் வசித்து வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் காலத்தைப் போக்கிவந்தான். அந்த வீட்டுக்கும் கடலுக்கும் இடையில் பெரிய நாணல் அடர்ந்த ஒரு நீண்ட சதுப்பு நிலம் இருந்ததனால் தன் இஷ்டப்படி வேட்டையாடும் பெரிய காரியத்திற்குத் தடையாக இருந்தது.

அந்தச் சதுப்புநிலம் ஒரு குறவனுடையது. அக்குறவன் அதில் வளரும் நாணல்களைக்கொண்டு வேறொருவர்க்கும்

முடையத் தெரியாத ஒருவித கூடைகளை முடைந்து விற்று அத்னாலேயே நாணயமாகச் சீவனஞ் செய்து வந்தான். அப் பாக்கியவான் அந்த நிலத்தைத் தனக்கு விற்றுவிடும்படி அக் குறவனைப் பலதரங் கேட்டும் அவன் சம்மதியாமையினால் கோபித்து, கைத்தொழில் செய்து ஜீவனஞ்செய்யும் பிடிவாதக் காரனான ஓர் அற்ப மனிதனுடைய சௌக்கியத்தைக் குறித் தும் பிரயோசனத்தைக் குறித்தும் தன்னைப்போன்ற பெரிய நிலைமையில் இருப்பவருடைய சௌக்கியத்திற்குத் தடை யுண்டாவது தகுதியல்லவென்று கருதி, பெருங்காற்று அடிக் கிற சமயம்பார்த்துத் தனக்குத் தடையாக விருந்த செடி களையெல்லாம் சுட்டெரித்துவிடத் தன் வேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்தான்; அவர்களும் அவ்வாறே எரித்தார்கள்.

குறவன் தான் ஆதரவற்றுப் போனது கண்டு, அந்தச் செல்வனுடைய நிலையைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல், அவனிடத்திற்போய் அவ்வநியாயத்தைப் பற்றித் தன் வருத் தத்திற்கேற்றபடி முறையிட்டுக் கொண்டான். பாக்கியவான் குறவனை வைது அடித்துப் பலவகையாய் அவமானப் படுத் தித் துரத்திவிட்டான்.

குறவனுக்கு வேறொன்றும் செய்யத் தோன்றாமல் தான் பட்ட காயங்களோடு ராஜதானிக்குப்போய், அரசன் காலில் வீழ்ந்து புலம்பினான். அஃதறிந்த அரசன் அக்கொடியனுக் குக் கட்டளையனுப்பி வரவழைத்துக் கேட்டதற்கு, அவன் தான் செய்த கொடுமைகளை ஒப்புக்கொண்டு, "உயர்ந்த நிலை மையும், பெருந் தகைமையுமுடைய மேலோர்களுக்குக் கீழோர்கள் அடங்கி நடக்காமற்போனால் அவர்களைத் தண் டிப்பது நியாயந்தானே" என்றான்.

அதற்கு அரசன் "உன் பூட்டனுக்கு என்ன அந்தஸ்து உண்டாயிருந்தது? அவன் நீ கீழோர்களென்று மிகுதியும் மதிப்பில்லாமல் பேசுகிற சாதாரண மனிதர்களில் ஒருவனாய், என் முன்னோர்களுடைய அரண்மனையில் கட்டைபிளந்து போட்டுக் கொண்டிருந்து, தன் எஜமானனுக்கு அதிக உண் மையோடும் வீரத்தோடும் ஒரு சமயத்தில் செய்த சகாயத் திற்காக உயர்த்தப்பட்டான். உன்னைப் பார்க்கிலும் அவனு டைய நிலைமை சிறந்ததல்லவா? உன்னுடைய நிலைமை செல்

வத்தினால் வந்தது; அவனுடைய நிலைமையோ நற்செய்கையினால் உண்டானது. ஒருவனுக்குச் சௌக்கியமும் செல்வமும் கொடுக்கப்படுதல் எதற்காகவென்று எண்ணுகின்றாய்? தன்னுடைய ஜீவனத்துக்காக உழைத்துச் சம்பாதிக்கவேண்டிய அவசியம் இல்லாதபோது, தன் மனத்தையும் புத்தியையும் அவயவங்களையும் பரோபகாரமான விஷயங்களில் உபயோகப்படுத்துவான் என்னுங் கருத்தினாற்றானே? அதை மறந்து அக்கிரமத்திற் பிரவேசிக்கும்படியான உன்னைப் போன்ற ஒரு பிரபு என் இராச்சியத்திலிருப்பது எனக்கு அதிக விசனமாக இருக்கிறது" என்றான்.

இவ்வாறு அரசன் பேசும்பொழுது அக்குற்றவாளி, அதிக அகங்காரத்துடனே முகத்தைச் சுளித்துக்கொள்ளவே, அரசன் மிதமற்ற கோபத்தோடு அவனை உற்றுப்பார்த்தான். அப்போது அவன் அரசனை நோக்கி "இப்படிப்பட்ட நீதியைக் கற்பித்தால், கீழோர் மேலோருக்கு அடங்கிப் பயபத்தியோடு நடப்பதை விட்டுக் கர்வித்து அவர்களை அலட்சியஞ் செய்யார்களோ" என்று மெல்லச் சொன்னான்.

அதற்கு அரசன் மிகவும் வெறுப்போடு புன்னகைசெய்து, "ஒழுங்கு தப்பி நடப்பவர்கள் வருந்தி உழைத்தால்தான் தங்கள் தப்பிதங்களைத் தெரிந்துகொள்ளுவார்கள்" என்று சொல்லி உடனே ஒரு தோணியின் மாலுமியைப் பார்த்து, "இவ் வாதி பிரதிவாதி இருவர்களுடைய துகிலையும் உரிந்து, மிகத் தூரத்திலிருக்கும் ஒரு நாகரீகமற்ற தீவிற்குக் கொண்டுபோய் இரவில் இறக்கிவிட்டு வா; அவனவன் அதிர்ஷ்டப்படியாகிறது" என்று உத்தரவுசெய்தான்.

அப்படியே அந்தப் பிரபுவும் குறவனும் ஒரு சதுப்பு நிலத்தில் கொண்டுபோய் விடப்பட்டார்கள். அப் பாழுந் தீவிலும் அக்குறவனோடு சேர்ந்திருப்பது தனக்குத் தகுதியல்லவென்று நினைத்து அப்பணக்காரன் குறவனை விட்டுப் பிரிந்து அவ்விடத்தில் அடர்ந்துள்ள செடிகளின் மறைவில் தனித்துப்போய் ஒன்றியிருந்தான். இவர்களை ஏற்றிக்கொண்டு வந்த தோணியிற்றோன்றின வெளிச்சத்தைக் காட்டு மிருகத் தன்மையுள்ள அத் தீவார் கண்டு, சூரியோதய மானவுடனே அவ்விடத்திற்கு வந்து, மறைந்திருந்த அவ்விருவரையுஞ்

சூழ்ந்து, பயங்கரமான கூச்சலிட்டுக்கொண்டு நெருங்கிப் போய்ச் சிறிதேனும் இரக்கமில்லாமல், பெருந் தடிகளால் ஓங்கி அடித்து அவர்களைக் கொல்லப் பிரயத்தனப்பட்டார்கள்.

அக்காலத்திலேதான் தன் பெருமை உண்மையான தல்லவென்று அப்பிரபு தெரிந்துகொண்டான். தான் அதற்கு முன் எப்பொழுதும் ஆடையில்லாம லிருந்தவனல்ல ஞதலால், அவமானத்திஞலும் குளிரிஞலும் வருந்தி, தன்னைக் கொலை செய்ய வந்த கொடியர்களுக்குப் பயந்து, அவர்கள் தன்னிடத்தில் இரக்கமுண்டாகும்படி செய்யத்தக்க ஒரு விஷயமும் தெரியாதவனுய், தன் பெருமையை யொழித்து, இப்படிப்பட்ட கெட்ட காலத்திலும் தன்னேடு சேருவதற்குத் தகுதியானவனல்ல னென்று சிறிது பொழுதிற்குமுன் தான் நினைத்த அக்குறவனுடைய சகாயத்தைப் பெறும்பொருட்டு அவனிடத்திற்கு ஓடிப்போய் அவனை முன்னிறுத்தித் தான் அவனுக்குப் பின்னுல் உடம்பு குன்றி நின்றுன்.

குறவனே வறுமையினுல் வஸ்திரமில்லாமற் றிரிந்து வழக்கப்பட் டிருந்தது மல்லாமல், கஷ்டப்பட்டு அலைந்து தன்னுயிரை வெறுத்தவனுதலால், அக்கொடியர்களுக்குச் சிறிதும் பயப்படாமல், தனக்குத் தெரிந்திருக்கும் சில கைத்தொழில்கள் அவர்களுக்குத் தெரியாமையினுலே அத்தொழில்களைச் செய்துகாட்டி அவர்களை வசப்படுத்தித் தப்பித்துக் கொள்ளலாமென்கிற தைரியத்தோடு சிறிதும் அஞ்சாமல், அங்கிருந்த செடிகளின் ஓலைகளைக் கிழித்து அவர்கள் முன் உட்கார்ந்து, அவர்கள் பார்த்துச் சந்தோஷப்படும்படி ஏதோ ஒன்றைத் தான் செய்யப்போகிறதாகச் சைகைகாட்டிச் சிரித்துக்கொண்டும் தலையை அசைத்துக்கொண்டும் ஆரம்பித்தான். அக்கொடியர்கள் நெருங்கிப்போய் அவன் செய்கிறதை அதிக ஆவலோடு பார்த்திருந்தார்கள்.

குறவன் அதிசீக்கிரத்தில் அழகான மகுடம் ஒன்று அவ்வோலையினுல் முடைந்து, அக்கொடியர்களுடைய தலைவனிடத்தில் கொண்டுபோய், அதை மிகுந்த பயபக்தியுடன் அவன் சிரசில் சூட்டினுன். அம் மகுடம் அத்தலைவனுக்கு அதிக அலங்காரமாக இருந்தலைக்கண்டு, அம்மனிதர்கள் தடிகளையெல்லாம் தரையில் விட்டெறிந்து, அக்குறவன் தங்களுக்குச்

செய்த மரியாதையைப்பற்றி அதிக சந்தோஷமடைந்து அவனைச் சுற்றி ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அக்காட்டாட்களில் ஒவ்வொருவனும் தங்கள் எஜமானனைப்போல அலங்கரித்துக் கொள்வதற்குத் தான் இஷ்டங் கொண்டிருத்தலை அக் குறவனுக்குத் தெரிவித்தான். குறவனும் கை ஓயாமல் முடைந்து கொண்டிருந்தான். அக் காட்டு மனிதர்கள் தங்கள் கையிலகப்பட்ட இருவரில் ஒருவன் மாத்திரம் தங்கள் நிமித்தம் மிகுதியாக வேலைசெய்து கொண்டிருக்க, மற்றொருவன் ஒன்றும் செய்யாமல் சும்மா இருத்தலைக் கண்டு தடிகளையெடுத்து அச்சோம்பேறியை அடிக்க ஆரம்பித்தார்கள்.

அத்தருணத்தில் குறவன் இரக்கமுற்று, தனக்கவன் செய்த கெடுதியையும், தான் அதனால் பட்ட வருத்தத்தையும் மறந்து, எழுந்து அக்கொடியர்களிடத்திற்கு ஓடிப்போய், அவனுக்கு முடையத் தெரியாதென்று சைகைகாட்டி, வேண்டுமானால் அவன் ஓலைகளைக் கொண்டுவந்து கொடுத்துத் தனக்குச் சகாயஞ் செய்யக்கூடுமென்று அவர்களைச் சமாதானஞ் செய்து, தனக்கு முன் கெடுதி செய்தவனைக் காப்பாற்றினான்.

குறவனுடைய யோசனை அவர்களுக்கு அதிக சந்தோஷமாக விருந்தது. தாங்கள் ஓலைகளைக் கொணர்ந்து கொடுப்பதை விட்டுக் குறவனைச் சுற்றி உட்கார்ந்து அவன் செய்யும் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பதில் மிக்க களிப்படைந்தார்கள். அப் பாக்கியவானைக் குறவனுக்குக் கையாளாக விருந்து சகாயஞ்செய்யும்படி திட்டம்பண்ணி, அது முதல் அவனைத் தங்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கும் குறவனுடைய வேலைக்காரனாக வைத்து நடத்தி வந்தார்கள்.

ஓலை முடிகள் செய்துகொள்ளும் பொருட்டு அத்தீவின் எல்லாப் பக்கங்களிலுமிருந்து புருஷர்களும், ஸ்திரீகளும், சிறுவர்களும் திரள் திரளாக வந்ததுமல்லாமல், அத்தனவானை மரங்களும் கிளைகளும் வெட்டிவரும்படி செய்து, அவைகளினால் அக்குறவன் வசிப்பதற்கு நேர்த்தியான குடிசை ஒன்று கட்டிக்கொடுத்து, தாங்கள் தின்னும் பதார்த்தங்களைத் தினந்தோறும் அத்தீவிலிருந்து சேகரித்துக் கொண்டு வந்து முதலில் குறவனுக்குக் கொடுத்து, அவன் தின்ற மிகு

தியை அவன் வேலைக்காரனாகிய பணக்காரனுக்குக் கொடுத்தார்கள்.

இப்படி மூன்றுமாதம் மனங்குன்றும்படி கஷ்டப்படவே உயர் குலத்தவனுக்குப் புத்திவந்து சரியான யோசனைகள் தோன்றின. ஒருநாள் இராத்திரி விழித்துக்கொண்டு கண்களில் நீர் பெருகித் துளிக்கும்படி துயரமுற்றுக் குறவனைப் பார்த்து, "நான் செய்தது தப்புத்தான்; இயற்கையாய் ஒருவனுக் குண்டாயிருக்கும் சற்குணத்துக்கும் அதிர்ஷ்டத்தால் உண்டாகும் நிலைமைக்கும் உள்ள பேதத்தைத் தெரிந்துகொள்ளாமற் போனேன்; இயற்கையான சற்குணத்தை மதிக்காமல் வீண்பெருமையைப் பொருளாக எண்ணினேன்; ஏதோ ஓரதிர்ஷ்டத்தால் உண்டாகும் பெருமை பிரயோசனமற்றதும் வீண்தோற்ற முடையதுமே; உண்மையான கௌரவத்தைக் கொடுப்பது பிரயோசனத்தைத் தரத்தக்க சற்குணம் ஒன்று தானென்று இப்போது தெரியவருகிறது; நான் உனக்குச் செய்த கொடுமைக்கும் அநியாயத்திற்கும் கைம்மாறாக நீ எனக்குத் தயையும் இரக்கமும் காண்பித்தாய்; இதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு நாணமாயிருக்கிறது; நான் செய்த குற்றத்தின் பலனை இப்போது அனுபவிக்கிறேன்; தெய்வானுகூலத்தால் நான் மறுபடி என் பழைய கௌரவத்தையும் சுகத்தையும் அடைவேனேயாகில் நான் கொண்ட இறுமாப்புக்குப் பிராயச்சித்தமாக உனக்கு என் செல்வத்திற் பாதி பகிர்ந்துகொடுப்பேன்" என்றான்.

அரசன் சிலநாளைக்குள் முன் அவர்களைக் கொண்டுபோய் விட்டுவந்த கப்பற்காரனை அனுப்பி, அத்தீவிலுள்ள காட்டு மனிதர்களுக்குப் பரிசு கொடுத்து அவர்களை மீட்டுக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். கப்பற்காரன் அழைத்துக் கொண்டுவர அவர்களும் தங்கள் சுதேசத்திற்கு வந்து சேர்ந்தவுடனே உயர்குலத்தான் தான் சொன்னபடி நிறைவேற்றினான். அத்தீவில் தாங்கள் உயர்குலத்திற் பிறந்தவர்கள் என்பது தவிர வேறே யோக்கியதை இல்லாமல் இறுமாப்புக் கொண்ட யாவரையும் குறவனிடத்திற்கு அனுப்புங்கள் என்னுஞ் சொல்லால் அவமானப்படுத்துவது நாளது வரையில் வழக்கமாக இருக்கிறது.

# செய்யுள் பாகம்

## 1. நளவெண்பா.

### (கலிநீங்கு காண்டம்.)

[நிடத நாட்டரசனாகிய நளன், விதர்ப்பநாட்டரசன் புதல்வியாகிய தமயந்தியை விவாகஞ் செய்துகொண்டான். இருவருமாய் நல்லறம் இனிதியற்றி வருநாளில் அவர்கட்கு இறைவனருளால் முதலில் ஓர் ஆண்மகவும் பின்னரோர் பெண்மகவும் பிறந்தன. அப்பால் கலியின் தொடர்பால் நளன் சூதாடி தன் நாடுநகரங்களை யெல்லாம் தோற்றனன். அதனால் அவன் தன் மனைவி மக்களுடன் தன் நாட்டை விட்டு அயல்நாடு செல்ல நேர்ந்தது. தன் அருமை மனைவியும் செல்வச் சிறுவரும் படுந்துயர் காணச் சகியாது நளன் அவர்களை விதர்ப்பநாட்டரசன் மனைக்கு அனுப்பிவிட விரும்பினான். தான் அங்குச் சென்றுறைய இசைந்திலன். தமயந்தி தன் காதற்கணவனைப் பிரிய உடம்படாது மக்களைமட்டும் தன் தந்தை அரமனைக்கனுப்பிவிட்டாள். அவள் தன்னைவிட்டுப் பிரிய இசையாவிடினும், தன்னோடு வருவதால் அவளுக்குண்டாகும் இன்னல்களை உன்னி, அவளை அவள் தந்தை வீட்டுக்குச் செல்லச் செய்யவேண்டி, ஓரிரா இருவருமாய் ஒரு பாழ்மண்டபத்தில் ஒற்றைத் துகிலோடு பள்ளி கொண்டிருந்த காலத்தில், தமயந்தி உறங்கும் சமயம்பார்த்து நளன் அவளை விட்டுப் பிரிந்துபோயினன். வழியில் ஒரு நாகத்தால் தீண்டப்பெற்று உடல்கறுத்தான். அவ்வுருமாற்றத்தோடு,]

முன்னீர் மடவார் முறுவல் திரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
யருகுடைக்கும் நன்னாட் டரசு. (1)

மான்தேர்த் தொழிற்கும்மடைத்தொழிற்கும்மிக்கோனென்(று)
ஊன்தேய்க்கும் வேலான் உயர்நறவத்—தேன்தோய்க்குந்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமின் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று. (2)

[அயோத்திமன்னன் அவனைத் தன் சபைக்கு வருவித்து அவன் வாய்மொழியைக் கேட்டபிறகு அவனைத் தனக்குச் சாரதியாகவும் சமையற்காரனாகவும் வைத்துக்கொண்டான். நளன் அயோத்தி நகரில் இவ்வாறிருப்ப, விதர்ப்பநாட்டரசன் அரமனையில், தமயந்தி தன் கணவனைத் தேடிக் கண்டுபிடிக்க எத்தனம் செய்துகொண்டிருந்தாள். அதற்காக,]

'என்னை யிருங்கானில் நீத்த இகல்வேந்தன்
தன்னைநீ நாடு'கெனத் தண்கோதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானாள் உணர்ந்து. (3)

'காரிருளில் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலில் நீத்தல் துணிவன்றோ—தேர்வேந்தற்(கு)!
என்றறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றம் தந்தாரைச்
சென்றறிந்து வா'வென்றாள் தேர்ந்து. (4)

[அங்ஙனமே புரோகிதன் சென்று,]

மின்னாடும் மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடும் கானகமும் நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர். (5)

'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தான்!" என்று
சாற்றினான்: அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர். (6)

'ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்;—தண்டாளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தான்என் றையுறேல் நீ.' (7)

[இவ்வாறு நளன் கூறியதைக் கேட்டுக்கொண்டுபோய், புரோகிதன் தமயந்தியை அணுகி,]

'வாக்கினான் மன்னவனை யொப்பான்; மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன்:—பூக்கமழுங்
கூந்தலாய், மற்றக் குலப்பாகன்' என்றுரைத்தான்
ஏந்துநூன் மார்பன் எடுத்து. (8)

'மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாள்என் றந்தண,நீ போய்உரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன்' என்றாள் பரிந்து. (9)

'எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரம்என்(று)
அங்கோர் முரசம் அறைவித்தான்—செங்கோலாய்!
அந்நாளும் நாளை யள'வென்றான் அந்தணன்போய்த்
தென்னனந் தாரானைச் சேர்ந்து. (10)

[உடனே அயோத்திமன்னன் விதர்ப்பநாட்டுக்குச் செல்ல ஆயத்த மாகி, இரதம்பூட்டும்படி நளனுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே நளன் இரதம் பூட்டிவந்து, அதில் மன்னனை ஏற்றிக்கொண்டு, விதர்ப்பநாடு நோக்கிச் செல்லும்போது, மன்னன்,]

'மேலாடை வீழ்ந்த தெடு'வென்றான்: அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. (11)

ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி யொன்றுடையான் ஆங்கு. (12)

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதில் அடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கும் நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. (13)

'இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத்தொழிலான் ஏன்றயிர்த்த கோமான்—மடைத்தொழில்கள்
செய்கின்ற எல்லாந் தெரிந்துணர்ந்து வா'என்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து. (14)

'கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதியரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்தன் மேற்செயல்நா' டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து. (15)

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—'மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள்?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (16)

'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்.
அன்னைதனைக் கான்விட் டவன்ஏக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம். எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்' என்றார் அழுது. (17)

ஆங்கவர் சொன்ன உரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்,—பூங்காவின்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்,
உள்ளம்போற் கண்ணீர் உகுத்து. (18)

'உங்க ளரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே!' என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. (19)

[அது கேட்டு அச்செல்வச் சிறுவன்,]

'நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அடுமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி! (20)

'எந்தை கழலிணையின் எம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு. (21)

'மன்னர் பெருமை மடைய ரறிவரோ!
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். (22)

[எல்லாவற்றையும் கவனித்திருந்த தாதியர், தமயந்தியிடம் சென்று,]

கொற்றக் குமரனையும் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்தான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தார் அம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது. (23)

'மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்று
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான்' என்றாள் குறித்து. (24)

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே—அக்காலங்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. (25)

[அப்பால், தமயந்தி முதலிய எல்லோரும் பெருங்களிகூர்ந்தனர். அயோத்திமன்னன் தான் ஏமாந்தது நினைந்து வெட்கினானேனும், நளன் நன்னிலை உற்றதுபற்றிச் சந்தோஷித்தான்.]

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. (26)

[பின்னர், அவர்களை நிடதநாட்டுக்கு அனுப்புவித்தான்.]

விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேல் தேவியொடும் போயினான்—முற்றும்பல்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன். (27)

[அங்ஙனம் சென்ற நளன் தன்னகர்ப் புறத்தே ஒரு சோலையில் தங்கி, புட்கரனை வருவித்து மறுபடியும் அவனோடு சூதாடினான். இச்சமயம் புட்கரன் தோல்வியுற்று.]

அந்த வளநாடும் அவ்வரசும் ஆங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லான் நளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து. (28)

ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 29)

கார்பெற்ற தோகையோ, கண்பெற்ற வாண்முகமோ,
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ,—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ உரைப்பன் எதிர்! (30)

## 2. தாயுமானவர் பாடல்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய் வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெது?மேற்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது?அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாம்மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய் குவாம். (1)

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோ?கொடிய
ஆலமமு தாக விலையோ?
அக்கடலின் மீதுவட வனல்நிற்க வில்லையோ?
அந்தரத் தகில கோடி

தாழாமல் நிலைநிற்க வில்லையோ? மேருவுந்
தனுவாக வளைய விலையோ?
சப்தமே கங்களும் வச்ரதர ளுணையிற்
சஞ்சரித் திடவில் லையோ?
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாக விலையோ?
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்க விலையோ?
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்க ருமையோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணுநந் தமே! (2)

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்.
கற்றுமறி வில்லா தஎன்
கன்மத்தை யென்சொல்வேன்! மதியையென் சொல்லுவேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோரு ரைக்கிலோ கன்மமுக் கியமென்று
நாட்டுவேன். கன்ம மொருவன்
நாட்டிஞ லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன். வடமொ ழியிலே
வல்லான்ஒ ருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவக ரிப்பேன்.
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்.
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே! (3)

எத்தனை விதங்கடான் கற்கினும் கேட்கினுமென்
இதயமும் ஒடுங்க வில்லை.
யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவிலை.
யாதினும் அபிமா னம்என்
சித்தமிசை குடிகொண்ட' தீகையோ டிரக்கமென்
சென்மத்தும் நானறி கிலேன்.

சீலமொடு தவவிரதம் ஒருகனவி லாயினுந்
தரிசனங் கண்டு மறியேன்.
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன். பிறர்கேட் கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே!
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை யுண்டோ? சொலாய்.
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே! (4)

கல்லேனு மையவொரு காலத்தில் உருகுமென்
கன்னெஞ்சம் உருக விலையே!
கருணைக்கி ணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொருக டவுளோ?
'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ?
வானமாய் நின்றின்ப மழையாய் இரங்கியெனை
வாழ்விப்ப துன்ப ரங்காண்.
பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிது முண்டோ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையேன் ஆவன் அந்தோ!
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை. மௌனியாய்ச்
சும்மா விருக்க வருளாய்.
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மே,பரஞ்
சோதியே, சுகவா ரியே! (5)

தந்தைதாய் தமர்தாரம் மகவென்னும் இவையெலாம்
சந்தையிற் கூட்டம்; இதிலோ
சந்தேக மில்லை.மணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோர் இந்த்ரஜா லக்கோலம்.
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாத கனவே.

எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை யென்கொலோ?
தேடறிய சத்தா கி,யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேஜோ மயானந் தமே! (6)

நானென்னும் ஓரகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடரும்இத்தால் வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்?
ஊனென்றும், உடலென்றும், கரண மென்றும்,
உள்ளென்றும், புறமென்றும், ஒழியா நின்ற
வானென்றும், காலென்றும், தீநீ ரென்றும்,
மண்ணென்றும், மலையென்றும், வனமதென்றும், (7)

மலைமலையாங் காட்சிகண் காணு மையாதி
மறப்பென்றும், நினைப்பென்றும், மாயா வாரி
அலையலையா யடிக்குமின்ப துன்ப மென்றும்,
அதைவிளைக்கும் வினைகளென்றும், அதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றும், தெய்வ மென்றும்,
சாதகரென் றும், அதற்குச் சாக்ஷி யாகக்
கலைபலவா நெறியென்றும், தர்க்க மென்றும்,
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும் போதும் (8)

காணரிய அல்லலெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையும். அதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காண, ஒரு விவேகங் காட்ட
ஊணுறக்கம் இன்பதுன்பம் பேரு ராதி
ஒவ்விடவும் எனைப்போல உருவங் காட்டிக்
கோணுறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென அருண்மௌன குருவாய் வந்தான்.

போனநாட் கிரங்குவதே தொழிலா, இங்ஙன்
பொருந்துநாள் அத்தனையும் போக்கினேன்;என்
ஞானநா யகனே!நின் மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கு நாள்எந் நாளோ?(10)

# 3. குசேலோபாக்கியானம்.

[குசேலமுனிவர் கண்ணனொடு ஒருசாலையிற் கற்றவர். சொல்ல முடியாத தரித்திரத்தினால் அவர்தம் மக்கள் படுந்துயர் கண்டு, அவர் மனைவி அவரைக் கண்ணன்பால் போய் பொருள்பெற்றுவர அனுப்பினள். குசேலர் அதன்மேல் துவாரகை சென்றார்.]

'பொருள்நனி யுளனென்றி யாரும் புகலுமோர் வார்த்தைவேண்டும்;
இருகையுங் கடகம்வேண்டும்; இலங்குகுண் டலங்கள்வேண்டும்;
வருவிர லாழிவேண்டும்; மார்பிடை மதாணிவேண்டும்;
உருவமுத் தாரம்வேண்டும்; உயர்ந்தபட் டாடைவேண்டும்:(1)

'சிவிகைமுன் னூர்திவேண்டும்;செழும்பொருட் செலவுவேண்டும்;
குவிகையே வலரும்வேண்டும்; கோலமார்ந் திருக்கவேண்டும்;
கவிகைதாங் குநரும்வேண்டும்; கையுறை சிறப்பவேண்டும்;
அவிகையில் விளக்கம்வேண்டும்: அரசவை குறுகுவார்க்கே'(2)

[என்று கண்ணன் அரமனைத் துவாரபாலகர் அவர்க்கு அறிவித்து 'உட்செல்ல விடோம்' என்றனர் அது கேட்டுக் குசேலர்,]

மின்செய்த மதாணியாம்,முத் தாரமாம், விளங்கு பட்டாம்,
பொன்செய்த வூர்தியாம்! இப் போதியாம் பெறுவதெங்கே?
நன்செயல்!நம் மூதாதை நாளினுங் கேட்டதின்றால்.
என்செய்வாம்!எண்ணுதொன்றை யியற்றுதல்என் றுந்தீதே(3)

[என்று உள்ளம் நைந்து முகம் வாடி யிருந்தனர். அப்போது அங்கு நின்ற ஏவலாளரில் ஒருவன், குசேலர் அருந்தவ சீலர் என்பதை உன்னி, மற்றவரை அடக்கித் தானே அவர்பாற் சென்று, அவர் ஊரும் பெயரும் பிறவும் வினவி அறிந்துகொண்டுபோய்க் கண்ணபிரானை அணுகி,]

'மாமறைத் தலைவபோற்றி! மதிக்குல விளக்கேபோற்றி!
காமரிந் திரன்முன் னோர் காண்பதற் கரியாய் போற்றி!
தாமரைக் கண்ணாய் போற்றி! தரியல ரேறே போற்றி!
தோமறு செல்வம்வாய்ந்த துவாரகைக் கிறைவாபோற்றி! (4)

'ஆதிநா ளையநின்னோ டருங்கலை கற்று ளானும்,
போதவுஞ் சிறந்தநட்புப் பூண்டுகொண் டவனும், கந்தை
மேதகக் கொண்ட நீரான், மெய்ம்மறை யவர்கு லத்தான்,
கோதறு குணத்தின்மிக்கான், குசேலனென் றியம்பினான்பேர்'

[என்றனன். உடனே கண்ணன் அவரைத் தன்பால் அழைத்து வரக் கட்டளையிட்டான். ஏவலாளன் அங்ஙனமே குசேலர்பால் திரும்பிவந்து,]

ஆதரம் பெருக, நெற்றி யணிநிலந் தோயத் தாழ்ந்து,
'மாதவ ரேறே போற்றி! மறைக்குலச் சுடரே போற்றி!
காதரம் பெருக்குஞ் சன்மக் கடல்கடந் தவனே போற்றி!
நாதனுக் கினிமை மிக்க நண்புடை யவனே போற்றி! (6)

'தாயது வருகைகேட்ட தனியிளங் குழவிபோன்று
நேயமிக் குடையனாகி நெஞ்சினுள் உவகைபூப்பப்
போயழைத் திடுமினின்னே! போயழைத் திடுமினின்னே!!
போயழைத்திடுமினின்னே!!! எனவிரைபொருளிற் சொற்றான்.

'இலக்கண மின்மைநோக்கி இதற்குமேற் சொற்றானல்லன்.
மலக்குறும் பறுத்துயர்ந்த மாதவத் தலைவரேறே,
பலப்பல சொல்லியென்னே? பாணித்தல் கருமமன்று.
நலக்கநீ விரைவினெய்தா விடின்அவன் நண்ணுமிங்ஙன்'. (8)

[என்றனன். குசேலர் மனமகிழ்ந்து அவனோடு சென்று கண்ணன் திருமுன் அடைந்தார். கண்ணன் அவரைக் காணவும்,]

'பாக்கிய முற்றதிந்நாள்! பாக்கிய முற்றதிந்நாள்!!
ஆக்கிய அறம்பலித்த! ஆக்கிய அறம்பலித்த!!
யோக்கிய மடைந்ததிந்த மனைபு'மென் றுரைத்துரைத்துத்
தேக்கிய புகழினான்கொண் டாடினான் சிலைவலோயே. (9)

'ஆயின்மறைமுதற்கலைகள் அனைத்துமுணர்ந் தறமறம்பார்த்(து)
ஏயினிது நன்றிதுதீ தென்றுணர்த்தும் அவர்நட்பை
வீயினுந்தாம் மறப்பர்களோ மேதையோர்? மறப்பரேல்,
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள் அவர்காணிந் நானிலத்தே. (10)

'நல்லார்சொல் விரும்புவதும் நல்லாரைக் காண்பதுவும்
நல்லார்க்கொன் றுதவுவதும் நல்லாரைப் புகழ்வதுவும்
நல்லார்நன் றென்றுரைப்ப நவிற்றியவிவ் வெலாமடங்க
நல்லார்நட் பென்றுமுறல் நன்றன்றே? நான்மறையோய்!(11)

‘பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளான் ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன், இருந்தவர்தம் நட்பிலனேல்?
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லான் ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன், இருந்தவர்தம் நட்புளனேல்?(12)

‘பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால். தூயோரும் புகழ்தூயோர்
ஆயோர்கள் பெருநட்பை யருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோவெண் மையிற்கிடைப்பின் இகழ்வரோ இகழ்வில்லார்?

‘சமயம்வரின் இடித்துரைப்பார், தக்கவழிச் செலச்செய்வார்,
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமையவறி வுறுத்துவாரந் தோ,நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும்? அரிதரிது!()

‘கூடுதற்குக் கூடாத கூட்டத்துப் படுநட்பு
வீடுதற்குத் தக்கதாய் நாடோறும் மெலிந்தொழியும்
நீடுதற்குத் தக்கதுநல் நெறிநின்றோர் நட்பொன்றே:
தேடுதற்குக் கிட்டாத திரவியமும் அஃதாமால். (15)

‘முத்திக்கு வித்தாகும் முழுதுணர்ந்தோர் பெருநட்பே;
தித்திக்கும் நாடோறும்; தேவர்பெறற் கருந்திருவும்
சித்திக்கும் படிஅருளும்; செப்பரிதால். அதுநிற்க,
எத்திக்கும் புகழ்நினக் கியல்மணம்நன் காயிற்றே? (16)

‘நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய வுயிராநின் தனைப்பேணுந் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே.? (17)

‘சொன்னகா ரியமனைத்துஞ் சொன்னபடி யியற்றுவளே?
என்னமிடி வரினும்வெளி யெடுத்தியம்பா வியலினளே?
தன்னருநா யகன்பழிதூற் றுதமையத் தக்கவளே?
பன்னருமா மறையுணர்ந்த பளகறுநற் குணக்குன்றே! (18)

‘பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே,
எங்குமரும் புகழுடையாய்! எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்துஞ்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்? (19)

'இவர்தந்தை யென்ளேற்றுன் என்றறிஞர் உரைக்கும்வகை
இவர்கின்ற மனத்தினராய் இருங்கலேகற் றுணர்வரே?
உவர்கொண்ட கடலாடை புடையுடுத்த உலகமெலாம்
உவர்கொண்ட குணமெவர்க்குண் டெனமொழிய உயர்வரே?

'நிறைகின்ற சிறுமைந்தர் நினைத்தவையெ லாங்கொடுத்துக்
குறைவின்றி நடத்திவரு கின்றனையே? கொடும்பகலில்
உறைகின்ற பசிவருத்தத் துறுநர்மால் எனச்சுருதி
அறைகின்ற தாலவருக் கன்னமிடு கின்றனையே? (21)

'சீரார்நின் ஊர்நின்று சேரஇவண் வருவாரால்
நீரார்நின் தன்மையெலாம் நென்னல்வரைக்கும் தவறு(து)
ஆராய்ந்து கொண்டிருந்தேன். அகன்றபல நாள்களின்பின்
ஏரார்இன் பம்சிறப்ப இருவேமும் கூடினேம். (22)

'நானமுதற் சந்திசெப நன்குநடக் கின்றனவே?
ஆனவினை செயமெய்திட மாகியிருக் கின்றதே?
மானமுறு மறைப்பொருளில் வைத்ததியா னஞ்சிதறு(து)
ஈனமற நிற்கின்ற தே?எவருஞ் சொலற்கரியாய்!' (23)

[என்று யோகக்ஷேமங்கள் விசாரித்தபின்னர்,]

'பந்தனே யகன்ற மேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனே. எனக்கென் கொண்டு வந்தனே? அதனே யின்னே
தந்தனே யாயின் நன்று. தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனே நின்ற' தென்ருன், தெரிவரும் வஞ்சக் கள்வன். (24)

'இனியசிற் றுணவே தேனும் இன்றிநீ வருவாய் கொல்லோ?
இனியநின் உள்ள மின்றே வெண்ணியான் அறிதல்வேண்டும்?
இனியநின் மனேவிவாளா ஏகிவா வென்பளோ?மற்(று)
இனியவெற் கன்றியார்க்குக் கொண்டுவந் திருக்கின்ருயே? ()

'திருந்தவிங் களித்தி'என்று செங்கர மலர்த்திநீட்டப் [திட்
பொருந்தவின் பாலுண்பான்பாற் புளித்தகா டியைக்கொடுத்
டருந்திடென் றுரைத்தல்போலிவ் வவற்கொடை யென்றுவாளா
இருந்தனன் குசேலமேலோன் இவனுள மறிந்தகண்ணன். (26)

[தானே அவர் சந்தையை ஆராய்ந்து அவல் முடிப்பைக் கண்டு கொண்டான். உடனே,]

மலிதரும் அன்பின்வந்த வண்பொதி அவிழ்த்து நோக்கி
வலிதரும் அவற்றுணன்று வாய்த்தது நமக்கிதென்று
ஒலிதரு கழற்காலையன் ஒருபிடி யவலைக்காதல்
பொலிதர எடுத்துவாயிற் போகட்டுக் கொண்டான்மாதோ.

[அப்பால், இருவரும் பலபல பேசியிருந்தனர். கண்ணன் முனிவர்க்குத் தைலமாட்டுவித்துத் தன்னோடு உடனிருந்துண்ணச் செய்து, இரவு பஞ்சணையமளியிற் படுத்து நித்திரைகொள்ளச் செய்தான். மறுநாட் காலை முனிவர், தம் ஊருக்குச்செல்ல விடைபெற்றுப் புறப்பட்டனர்.]

அக்காலைக் கண்ணனுந்தன் அணிவாயில் வரைவந்து
மிக்கார்வத் தொடுமடியில் வீழ்ந்துவணங் கிடமகிழ்ந்து
தொக்காசி பலகூறித் துவாரபா லகர்வாயில்
எக்காலும் இன்பமுறுன் கடந்தப்பால் ஏகிடுங்கால். (28)

விண்டார்தம் மணிமௌலி மிதித்துழக்குங் கருங்கழற்கால்
வண்டாடு நறுந்துளப மாலைதுயல் வருதடந்தோட்
கொண்டாடும் புகழ்க்கண்ணன் களிகூர்ந்து கோயில்புகக்
கண்டார்கள் ஆங்கிருக்குங் கார்க்குழன்மின் னார்பலரும். (29)

'தாயெதிர் வுற்ற சேயென வுள்ளந் தழைவுற்றான்;
போயெதிர் கொண்டான்; காலில்வி ழுந்தான்; புனைவித்தான்;
நேயமு ளானென் றூரறி வித்தான்; நீங்கென்றான்;
சேய்மைய னைத்தான்; நன்றிது' என்றார் சிலமாதர். (30)

'எளியோன் பாவம் இத்தனை தூரம் ஏன்வந்தான்?
அளியார் தேனே, பாலே,யென இனிதாப்பேசிக்
களியா நின்றோர் காசும் ஈயான், கழிகென்றான்;
தெளியார் நல்லோர் இவனுரை' என்றார் சிலமாதர். (31)

'எத்துணைய செல்வமிகுத் திருந்தாலும்
ஈத்துவத்தல் இவன்பா லில்லை;
மெத்துநய மொழிகளான் மயங்கியொன்றுங்
கேளானாய் விரைந்து போனான்

பித்துறுமா மறையவனும் இவனுமகிழ்ந்
தாறனுப்பிப் பெயர்ந்து வந்தான்.
கொத்துறுமிந் நட்பிருந்தென்? இராதொழிந்தா
லென்?என்று குயின்றார் சில்லோர். (32)

'என்னினைத்து வந்தானோ அவன்?இவனும்
யாதுநினைத் திருக்கின் றானோ?
பன்னரிய இவன்செய்யும் மாயையெவ
ராலறியப் படும்?'வாய் வந்த,
இன்னனவெ லாம்பேசல் அறிவன்று
நமக்,கெனவண் டிரங்குங் கூந்தன்
மின்னனைய நுண்ணிடைப்பே ரமர்க்கண்மட
மாதர்சிலர் விளம்பி னாரே. (33)

[இதுநிற்க. குசேலர் தம் நகரணுகுங்காலை அவர் உடல் பூரித்து அழகிட்டது; கந்தையுடை பட்டுப் பீதாம்பரமாயது. தாம் இருந்த சிறு குடில் மறைந்து அவ்விடத்தில் பெரிய மாளிகை ஒன்று காணப் பட்டது. இவற்றையெல்லாம் கண்ட முனிவர், ஆச்சரியம் மிக வெய்திப் பிரமித்து நிற்கும்போது, அவர் தர்ம பத்தினி,]

காலணி செம்பொற் சதங்கையந் தொடருங்
கதிர்மணித் தண்டையுஞ் சிலம்புஞ்
சாலவும் ஒளிர்ந்து கலின்கலி னென்னத்
தழைந்தபூங் கற்பகக் கொம்ப
ராலென நடந்து மங்கல மேந்தி
யளவறு பாங்கிய ராய
கோலமா மடவார் சூழ்ந்தனர் நடப்பக்
கொழுநனை யெதிர்கொள்வான் வந்தாள். (34)

[உடனே முனிவர் அம்மாளிகை தம்மனையே யென்று உட்சென்றனர்.]

குருமலர் செம்பொற் கலமெதிர் வைத்துக்
கோதறு வெள்ளிய மூரல்,
பருகுதற் கமைந்த வின்சுவைக் குழம்புப்
பால்விரா யுபசரித் தூட்டத்,
திருகுபு வேண்டா என்மரும் அதனைத்
திரும்பிப்பா ராதுசெல்குநரும்
அருகிய பசியும் இல்லையென் மருமாய்
அணிமகார் செருக்குதல் கண்டான். (35)

வயிரவொண் சுட்டி நுதன்மிசைப் பொலிய
மார்பிடை யைம்படை விளங்கக்
கயில்செறி தொடருங் கடகமுங் கரத்திற்
காதிலம் பொற்குழை தயங்கச்
செயிரறு பொன்னுண் அரைமிசைக் கதிர்ப்பச்
சிறுசிலம் படிகளிற் கவினப்,
பயிறரு மைந்தர் கலகல கலெனப்
பண்பினின் றுடுதல் கண்டான். (36)

[இவ்வாறு அரும்பெருஞ் செல்வம் தமக்குற்றது கண்ணனருளால் என்பதை முனிவர் உணர்ந்தார். ஆயினும், இச்செல்வ மெல்லாம் மேலும் மேலும் தம்மைப் பந்தத்தில் அழுத்துமென் றஞ்சி அவர் தம் முன்னைய நிலையை அடையவிரும்பி மகா விஷ்ணுவைத் தோத்தரித்தார். அப்போது மகா விஷ்ணு அவர் கண்முன் தோன்றி,]

'திருவநன் களித்ததுன்னைச் சேர்ந்தவர் நிமித்தங்கண்டாய்.
ஒருவினின் னுளம்போலன்னூர் உள்ளமுந் துறவிற்றேயோ?
மருவிநிற் சார்ந்தார்துன்பின் வயங்குதல் அழகிதாமோ?
பொருவிலா முனிவரேறே! அஃதெண்ணிப் புந்திமாழ்கேல். ()

'மெய்ப்பொரு ளுணர்ந்ததூயோர் மேவியெங் குறைவரேனும்
பொய்ப்பொருள் பற்றுவாரோ? பொய்ப்பொரு ளேனும்வந்து
கைப்படப் பற்றுங்கொல்லோ வவரை? அஃது தசத்துக்கண்டாய்.
வைப்பென நமதுபூசை வாஞ்சித்து வயங்குமேலோய்! (38)

'சாற்றுமெய் யறிவினோர்கள் தகுதொழி லியற்றுங்காலை
மாற்றுத லின்றுய்த்தாந்தா மரையிலை நீர்போல் நிற்பர்.
போற்றுநின் றனக்கிப்பந்தம் பொருந்ாது. பன்னாள்வாழ்வுற்(று)
ஈற்றுநம் உலகஞ்சார்ந்தின் பெய்திட வரந்தந்தேமால்' (39)

[என்றருளி மறைந்தனர்.]

ஒப்பிலா முனிவன்பின்ன ரொருதினம் வானநாடர்
வெப்பிலாக் கற்பகப்பூ விரைகெழு மாரிபெய்ய
வைப்பின்மெய் யடியார்க்காய வைகுந்த உலகஞ்சார்ந்து
திப்பிய வுருவமாயன் சேவைசெய் தின்புற்றனே. (40)

## 4. திருவருட்பா.

ஈயென்று நானொருவர் இடநின்று கேளாத
இயல்பும், என்னிடம் ஒருவர் ஈ(து)
இடுவென்ற போதவர்க்(கு) இலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும், இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும்,நான் என்றும்உள்
நினைவிடா நெறியும், அயலார்
நிதியொன்று நயவாத மனமும்,மெய் நிலையென்றும்
நெகிழாத திடமும், உலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்,
திரமொன்று வாய்மையும், தூய்மையும், தந்துநின்
திருவடிக் காளாக் குவாய்;
தாயென்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி! உண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வ மணியே. (1)

தேசகத்தி லினிக்கின்ற தெள்ளமுதே! மாணிக்க
வாசகனே! ஆநந்த வடிவான மாதவனே!
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவநான் அனுபவிக்க அருளுதியே. (2)

வான்கலந்த மாணிக்க வாசக!நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்
ஊன்கலந்(து) உயிர்கலந்(து) உவட்டாம லினிப்பதுவே. (3)

வருமொழிசெய் மாணிக்க வாசக!நின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையுமென் னுடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன்? சஞ்சலமேன்?
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன்? கூறுதியே. (4)

பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ? புண்ணியனே!

வாட்டமிலா மாணிக்க வாசக! நின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே! (6)

நான்படும் பாடு, சிவனே! உலகர் நவிலும்பஞ்சு
தான்படுமோ, சொல்லத் தான்படுமோ, எண்ணத்தான்படுமோ,
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கிநின்றேன்:
'ஏன்படுகின்றனை' என்றிரங் காயென்னில் என்செய்வனே? (7)

எண்ணுகின்றேன் எண்ணங்கள் எல்லாம் தருகின்றான்;
உண்ணுகின்றேன் உண்ணஉண்ண ஊட்டுகின்றான்;—நண்ணுதிருச்
சிற்றம் பலத்தே திருநடஞ்செய் கின்றான்'என்
குற்றம் பலபொறுத்துக் கொண்டு. (8)

## 5. அரிச்சந்திர புராணம்.

[புண்ணிய பூமியாகிய பரதகண்டத்து, கோசல நாட்டுக்குத் தலை நகராய சிறப்பினது அயோத்திமா நகர்.]

அத்திரு நகர்க்குள்நிரை ஆயிர மணித்தூண்
பத்திகளும் அத்தொகைய பைம்பொனுறு கோயில்
சித்திர மணித்தவிசின் முத்தணி செழும்பொற்
சத்திர நிழற்றஅரிச் சந்திரன் இருந்தான். (1)

[அந்நாளில் கோசல நாட்டைப்போலவே பலவளங்களாற் சிறந்ததும், கன்னமாபுரியைத் தலைநகராக உடையதுமானது கன்னோசிநாடு.]

அந்த நாட்டினிற் கன்னமா புரிநகர் ஆள்வோன்
சந்தி ரன்வழிச் சந்திர தயன் தவம் புரிந்து
கந்த வார்சடைக் கடவுள்தன் வரத்தினாற் பயந்த
தந்த மேனியள், தையல்சந் திரவதி யென்பாள். (2)

[அவள் அரிச்சந்திரனையே தன் தவப்பயனால் மணாளனாக வரித்தாள். அரிச்சந்திரனும் சந்திரமதியும் அயோத்திமாநகர்க்கு அரசனும் அரசியுமாயிருந்து அறநெறி இனிதுசெலுத்தி வந்தனர். நாளடைவில் அவர்கட்கு ஒரு புதல்வன் பிறந்தான் அவனுக்கு லோகிதாசன் என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தார்கள். நிற்க.

இந்திர சபையில் முனிவர்கள் பலர்கூடி யிருந்தபோது தேவேந் திரன் அவர்களை நோக்கி,]

'பாய்மைக்க லோலக் கடல்சூழ்புவி பார்த்தி வர்க்குள்,
தீமைக்கும் வேகச் சிலுகுக்கும் இடங்கொ டாது
வாய்மைக்கும் நன்னூல் வளனுக்கும் மனத்தி னுற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமைஆய்ந்தனிர் சொன்மின்'என்றான்.

[அப்பொழுது வசிஷ்டர்,]

'பாருக்கொருவன், பரதார சகோத ரன்,வெம்
போருக்கொருவன், புகழுக்கும் மறைப்பொ ருட்கும்
நேருக்கும்வீடாம் மனுநூல் நெறிக்கும், பொறைக்கும்
ஆருக்குமிக்கான் அரிச்சந்திரன் ஆகும்' என்றான். (4)

[அப்போது விசுவாமித்திரர்,]

'வெய்யன், பதகன், பரதார விருப்பன், வீணன்,
பொய்யன், நிறையும் பொறையுஞ் சிறிதுமில் புல்லன்,
கையன், கபடன், கயவன் றனைநல் லன்என்றிவ்
வையன் திருமுன். உரைத்தாய். இதென்னை?' என்றான். (5)

[இதுகேட்டு வசிட்டர் மனம் வருந்தி,]

'தீவெந் தொழிலின்றி. ஒப்பற்ற மெய்ச்செவ்வி யோனைக்
காய்வெந் திறலால் இவைகூறிய கௌசிகா! நின்
வாய்வெந் திலை,நின் மனம்வெந்திலை, வம்பு சொன்ன
நீவெந்திலை, தெய்வமும் நின்வயிற் பொய்த்த' தென்றான்.(6)

அன்பாற் கடலாய வசிட்டன் அழன்று 'மன்னன்
தன்பால் தவறுண்டெனக் கௌசிகன் சாய்க்கின் அன்றே
என்பால் தவம்விட் டிழிகட் டலையோட்டின் ஏந்தித்
தென்பால் தனிச்செல்குவன் யான்இது திண்ணம்' என்றான்.(7)

நன்றாகு கவென்றவன் நாரதனுக் குரைத்துப்
'பின்றா திவன்போற் பெரும்பாடை பிதற்ற மாட்டேன்;
வென்றான் எனின்,யான் செய்தமெய்த் தவந்தன்னிற் பாதி
குன்றாமல் ஈவேனெனக் கௌசிகன் கூறி னானால். (8)

[உடனே விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய் சொல்விப் பதற்காக வேண்டிய சூழ்ச்சிகள் செய்யத் தொடங்கி அதற்காகத் தம் சீடர்களையும் தேவர் பலரையும் துணைகொண்டார். முதலாவதாக

அவர் அரிச்சந்திரனை வேள்விக்குப் பொருள்வேண்டுமெனக் கேட்டார். 'வேண்டும் பொருள் எத்துணை?' என,]

மான வன்சொல மாமுனி நோக்கியே
'யானை மேல்நின் றெறிந்த கவண்சிலை
போன தூரம் பொருள்குவிப் பாயெனின்
மோன வேள்வி முடித்திட லாம்'என்றார். (9)

[அரிச்சந்திரன் அதைத் தருவதாக இசைந்தபின் முனிவர் 'அப்பொருள் நின்பாலே இருக்கட்டும். வேண்டும்போது பெறுவல்' என்று போய்விட்டார். பிறகு அவர் ஒரு பன்றியைச் சிருட்டித்து, காட்டை அழிப்பித்தனர். அதுகேட்டு அரசன் வேட்டம் மேற்கொண்டு சென்று பன்றியைக் கொன்றான். அஃதறிந்த முனிவர் வெகுண்டு இரு நீசமாதரைச் சிருட்டித்து அரிச்சந்திரன்பால், அவன் சந்திரவட்டக் குடையைப் பரிசாகப் பெற்று வரும்படி அனுப்பினர். அம்மாதர் அவ்வாறே அரிச்சந்திரன்பா லணுகி,]

காவியங் கண்ணு மூடா, கவரிதழ் தானுங் கோடா,
வாவியங் கமல மன்ன வதனமும் நுதலு மேரு,
தூவியந் தோகை நல்லார் சுவரின்மேல் எழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப் பாடினர் உருக யாரும். (10)

[அரிச்சந்திரன் அவர்கள் இசையை மெச்சி வேண்டும் பரிசு யாதென, அவர்கள் 'சந்திரவட்டக் குடைவேண்டும்' என்று கூறினர். அரசன் அது கேட்ப தடாதென, அவர்கள் வேறுபல அக்கிரமச் செயல்களுக்கு அரசனை உட்படுத்த முயன்றனர். அம்முயற்சிகளும் பயன்படாதொழியவே, அவர்கள் விசுவாமித்திரர்பால் திரும்பிச் சென்று,]

'ஐய,கேள் நின்னருட் படியினால் அரசன்மாட் டணுகி நின்றே
பையவே யிசைகளும் பாடிநீ சொன்னவப் பரிசு ரைத்தோம்:
கையனெங் களையடித் துமரெனச் செய்தவக் கண்ட னத்தால்
உய்யவும் போகுமோ? உரையுமுண்டோ? எமக் குயிரு முண்டோ?' ()

[என்றனர். உடனே கௌசிகர் வெகுண்டெழுந்து அரிச்சந்திரன்பாலுற்று,]

'கொய்து மாக்களைக் கொன்றதும், பன்றியை
எய்த தும்,இசை கேட்டடித் தீனமாய்
வைத தும்,என்றன் மக்களை நீமணஞ்
செய்தி டிற்பொறுப் பேன்'என்று செப்பினான். (12)

[அதற்கு மன்னன்,]

'கண்ணை வேண்டினும் ஈகுவன்; காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்;
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யான்'என்று பேசினன். (13)

['ஆயின், நின் அரசைக் கொடுப்பையோ?' என விசுவாமித்திரர் வெகுண்டு வினவ,]

'வைய நின்னது; மாநகர் நின்னது;
வெய்ய வாசியும் வேழமும் நின்ன;பொற்
செய்ய தேர்களுஞ் செல்வமுஞ் சேவிக்குந்
தைய லார்களுந் தானையு நின்னவே.' (14)

[என்று மன்னன் தன் நாடுநகரெல்லாம் அவர்க்குத் தத்தஞ் செய்தான். அவற்றைப் பெற்றுக்கொண்ட பிறகு கௌசிகர்,]

'செந்தே னோடுந் தண்பணை சூழுந் திருநாடா!
வந்தே நானும் மாமுனி வோரும் வளர்வேள்விக்(கு)
உந்தேம் நண்ணி இரந்தப சும்பொன் உளவெல்லாந்
தந்தே போவாய்' என்றிறை யோனைத் தடைசெய்தான். (15)

[அதற்கும் மன்னன் இசைந்து ஒரு தவணைபெற்று அத்தவணைக்குள் அதைத் தருவதாக வாக்களித்தனன். அதை அவனிடம் குறித்த தவணைக்குட் பெற்று வரும்படி நட்சத்திரேசனை நியமித்தனர் முனிவர். பின்னர்,]

தேரி லேறிமா முனிசெலச் சேனைபின் செல்லப்
போரில் வீரனுந் தேவியும் புதல்வனும் நடுவே
பாரின் மேல்நடந் தடிபொரு துடல்பதை பதைக்க
வேரி வாவிவிட் டயோத்தியை நோக்கியே விரைந்தார். (16)

தலமுழுதுந் தவமுனிவன் தனக்களித்தேம்
இனியுறைதல் தகுதியன்றென்(று)
இலகுமணி மண்டபமும் எழின்மணிச்சிங்
காதனமும் இழிந்துபோந்து
பலவரச ருடன்அமைச்சர் அழுதுடன்போய்ப்
பரதவிக்கப் பதாதிமொய்க்கக்
குலமகனும் மடமயிலும் முன்னடக்கப்
பின்னடந்தான் கொற்றவேந்தன். (17)

மயிரோடுஞ் சிறையிழந்த போகில்போல்,
வேலியொடு வரம்பிழந்த
பயிரேபோல், கரமிழந்த கரியேபோல்,
பொறியிழந்த பாவையேபோல்,
உயிரேபோய்ப் பரதவிக்கும் உடலேபோல்,
மத்தாலுள் ளுடைந்தலம்புந்
தயிரேபோல், தளர்ந்தலைந்து தத்தமக்குள்
நிகழ்ந்தவெலாஞ் சாற்றலுற்றார். (18)

அக்காலத் தமைச்சரெலாம் அடல்வேந்தன்
அடிபோற்றி 'அரசேநீமீண்(டு)
எக்காலம் எழுந்தருள்வ' தென்றுரைக்க
ஆங்கவரை யிருகணோக்கி
'முக்காலங் களும்உணரும் முனிவனுக்கின்
றியான்கொடுத்த மூதூர் தன்னில்
எக்கால மும்வருவ தில்லை'யென்றான்
அமைச்சரெலா மேங்கிவீழ்ந்தார். (19)

'கோதிலாப் பெருங்குணத்தாய்! குற்றேவல்
இந்நெடுநாள் கொடியேன் செய்தேன்.
ஆதலால் நீயேகும் அருஞ்சுரத்திற்
பணித்தபணி யார்தான் செய்வார்?
மாதரா ருடனேக, மகனேக,
நின்னுடன்யான் வாரே னாகில்
ஏதிலான் ஆனேன்நான்' என்றிடியே
றுண்டமர மென்ன வீழ்ந்தான் (20)

[சத்தியகீர்த்தி. மன்னன் அவனை எடுத்துத் துயராற்றி,]

'வாழ்வினை வளர்ந்தபொழு தென்னின்மிக வாழ்ந்தாய்;
தாழ்வினை நிகழ்ந்தபொழு தென்றனொடு தாழ்ந்தாய்;
சூழ்வினை நமைக்கடிது சுற்றினவை யெல்லாம்
ஊழ்வினை' எனச்சொலி உடன்கொடு நடந்தான். (21)

நண்பினொடு மின்புரிசை நன்னகரை நோக்கி,
விண்புல மெழுந்தமதில் வேலிதனை நோக்கித்,
தண்புனல் வழங்கிடு தடங்களையு நோக்கிக்,
கண்புனல் சொரிந்தழுது காரிகை நடந்தாள். (22)

[அதுகண்டு வருந்திய மன்னன், அவளைத் தன் தோள்மீ தேறிக் கொள்ளும்படி வற்புறுத்தினன். அதற்கவள்,]

‘பூமகளும் மண்மகளும் ஏறுதல் பொறுமல்
மாமுனிவ னுக்குற அளித்தநின் மணித்தோள்
நாமநெடு வேலிறைவ! நாயினிகழ் பெண்பால்
ஆமெளியள் ஏறின்நர காழ்ந்தழிவன்’ என்றாள். (23)

[இடைவழியில் பெருங் காட்டுத்தீ ஒன்று தோன்றியது. அதைக் கடந்து செல்ல அவர்களால் இயலாதது கண்டு சந்திரமதி,]

‘மறைவழி கடந்தே மாகில், வரும்விருந் திகழ்ந்தே மாகில்,
முறைவழி செய்யே மாகில், மூப்பரை யிகழ்ந்தே மாகில்,
பிறர்மனை நயந்தே மாகில், பிறர்மனம் வைத்தே மாகில்,
குறைசில செய்தே மாகிற் கொல்’எனக் கனலிற் பாய்ந்தாள்.()

[உடனே தீ அவிந்தது. அனைவரும் காடு தாண்டிக் காசியம்பதி யடைந்தனர். அங்கே மன்னன் தன் தேவியை விலை கூறலானான்.]

‘தாலத்தறம் உணராதுயிர் தளரும்படி பலசெய்
மேலைப்பழ வினைபற்றிட விற்கின்றனன் வினையேன்,
வாலச்சிறு பருவத்தெனன் மாபிற்புதல் வனையும்
நீலக்கயல் விழியாளையும் நிதியுள்ளவர் கொண்மின்’ (25)

[என்று கூறக்கேட்டுக் காலகண்டன் என்னும் வேதியன் அவளை விலைகொண்டான். விலைப்பட்டுப் போம்போது, சந்திரமதியைப் பிரியமாட்டாது மன்னன் வருந்தினன்.]

கழுத்தைப் பூண்டழுங் காவலன் கைகளை
யழுத்த மாம்பற் றறவிடு வித்தனன்
விழித்த கட்பொறி சிந்திட வேதியன்
இழுத்துப் போய்த்தன தில்லிட மெய்தினன். (26)

[அப்பால் நட்சத்திரேசன்,]

‘முனிக்கு முன்ன மொழிந்தபொன் ஈந்தனை;
எனக்குக் கூலிநீ ஈகுவ தென்?’என
‘உனக்கு மீகுவன் வா’என உத்தமன்
தனக்குப் பின்னடந் தான்வினைச் சல்லியன். (27)

[பொருள் பெறவந்த நட்சத்திரேசனுக்குத் தரகுகொடுப்பதற்காக மன்னன் தன்னை விலைப்படுத்துமாறு சத்திய கீர்த்திக்குக் கூற அவன்,]

ஆதி நூலின ராயினும் அல்லது
சாதி யீனர்க ளாயினுஞ் சால்புடைக்
'கோதி லான்றனைக் கொண்மின்' எனப்பல
வீதி தோறும் விலையது கூறினான். (28)

[வீரவாகு என்னும் வெட்டியான் அரிச்சந்திரனை விலைக்குக் கொண்டான். அப்பொருள் பெற்று நட்சத்திரேசன் போய்விட்டான். அப்பால் சத்திய கீர்த்தி,]

'கொற்ற வா,நின் குளிர்மலர்த் தாளிணை
உற்ற நாள்தொட்டும் உன்பணி யேசெயப்
பெற்ற மாதவப் பேறெனக் கின்றொடும்
அற்ற தோ?'என் றயலழு தேகினான். (29

[வீரவாகு தனக்கு அடிமைப்பட்ட மன்னனை நோக்கி,]

'தூங்கிருள் கடியுஞ் செந்தீச் சுடலையிற் சுடும்பி ணத்துக்(கு)
ஓங்கிய புலைப்பே றுடை ஒன்றுண்டு; பணங்கா லுண்டு;
வாங்கியீ தெனக்கு வைத்து வாய்க்கரி சியைநீ யிட்டுண்(டு)
ஆங்கிரு' என்று கொற்ற அண்ணலுக் கவனு ரைத்தான். (30)

[இது நிற்க.]

வல்லியும் மகனும் அந்த மறையவன் மனையிற் சேர்ந்து
சொல்லிய பணிக ளெல்லாஞ் சோர்வறச் செய்த பின்னும்
எல்லியோர் சாமம் என்ன எழுந்திருந் தேவன் முற்றி
அல்லிரு சாமஞ் சென்றால் அளித்தகூ ழுண்டு றங்கி (31)

[தம் நாளைக் கழித்துவந்தனர். ஒருநாள் தருப்பைகொய்யச்சென்ற லோகிதாசன் அரவு கடித்திறந்தான். அஃதறிந்து சந்திரமதி காடு சென்று நள்ளிருளில் பாலன் பிணத்தை எடுத்துத்தோள்மீது சார்த்திக் கொண்டு,]

'பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவாய்,
அனியாய் வெங்கண் அரவா லிறந்த
அதிபாவம் என்கொல்? அறியேன்.

தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானு மவமே! (32)

'நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள்
நாலெட்டில் ஒன்று குறையேம்;
இல்லோரை அற்ப மிகழோம்; இறுக்கும்
இறையன்றி ஏற உகவேம்;
சொல்லோ மறுத்தும் உரையோம்; உரைத்த
துறவோர்கள் புத்தி கடவேம்;
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்
ஏதாக வந்த திதுவே! (33)

'மறைநீதி யுற்ற புறநா டழித்து
வருசேனை யாள்வ தறியேம்;
மறைநீதி முற்றும் உணரா அமைச்சை
அணிவாயில் வைத்தும் அறியேம்;
குறையே யிழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்தும் அறியேம்,
இறையே தவத்தின் விளைவே எமக்கும்
இதுவோ விதித்த விதியே!' (34)

[என்று பலவாறு புலம்பிக்கொண்டு, அவனைத் தகனஞ் செய்வதற்காகச் சுடலைநாடிச் சென்றாள் அரிச்சந்திரனும் சந்திரமதியும் அங்கு ஒருவரையொருவர் கண்டு தமக்கு நேர்ந்த விதியை எண்ணித் துக்கித்தனர். அப்பால் மன்னன், பிணஞ்சுடு கூலிபெற்று வருவதற்காகத் தேவியைக் காலகண்டன்பால் அனுப்பினான். அவள் அவ்வாறே வரும்வழியில் காசிமன்னன் புதல்வன் இறந்துகிடக்கத் தன் மகனோ என்று ஐயுற்று அதன் கிட்டச்சென்று பார்த்தாள். அச்சமயம் ஊர்க் காவலர் அவளைப் பிடித்து அவளே அப்புதல்வனைக் கொன்றதாக நிரூபித்தனர். அதன்மேல் அரசன் அவளைச் சிரச்சேதம் செய்யுமாறு கட்டளையிட, அரிச்சந்திரனே அக்கட்டளையை நிறைவேற்ற வேண்டியவனானான். மனையாளேயாயினும் கடமை தவற லாகாதென்று மன்னன் அவளை வெட்டத் துணிந்தான்.]

அந்தவேளையிற் கௌசிகன் விரைந்துவந் 'தரசே,
இந்தநோதக வெய்தலென்? எனக்குநீ முன்னந்
தந்தநாடியான் தந்திலேன் எனுமொழி சாற்றி
உந்தநாடுமிவ் வுயிர்களும் பெறு'கென வுரைத்தான். (35)

[அப்போது அரிச்சந்திரன்,]

'செய்மையம்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மையாலகந் தூய்மையாம் மற்றிலே; புறத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ?
நோய்மைசெய்யினும் வாய்மையே நோன்பெனக் கருதி. (36)

'புலையனும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெனுமருண் டுயிரினு நெடிதுறச் சிறந்தே
தலைமைசேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்:
கலையுணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ? (37)

'இம்மையம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மையுந்தரும் முறையுடைத் தெனுநிலே முரணி
எம்மையாழ்வயிற் றடக்கிநீ டுமிழ்கலா வெரிவாய்
வெம்மைகூர்நர குய்க்கினும் மெய்ம்மையை விடேமால். (38)

'பதியிழந்தனம்; பாலனை யிழந்தனம்; படைத்த
நிதியிழந்தனம்; இனிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலேம்' என்றான்.
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். (39)

[பின்னர் அரிச்சந்திரன் தனது கடமையை நிறைவேற்றத் தொடங்கி,]

'உலகுயிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயின்,
அலகில்சீருடை யவன்மொழி மறையெனின், அதன்கண்
இலகறம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்,
விலகுறுமலவ் வாய்மையை விரதமாக் கொளின்யான், (40)

'நெறியி னன்னவென் றனைவிடா நிறையிவட் குளதேல்
இறுதி யின்மையைப் பெறுக;இல் லெனினிவள் இறுதி
பெறுக' என்றுவாள் வீசினன் பேதைதன் கழுத்தில்:
மறுமணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள். (41)

[உடனே மும்மூர்த்திகளும் தேவரும் முனிவரும் அச்சுடலையில் தோன்றினர். சுடலை நறுமலர்ச் சோலையாக மாறியது. கடவுளர் அரிச் சந்திரன் வாய்மையை மெச்சி ஆசீர்வதித்தனர். விசுவாமித்திரர் நடந் தவை யாவும் தம்மாலேயே என்று ஆதிமுதல் அந்தம்வரையில் யாவற் றையும் விளங்க உரைத்துத் தமது தோல்வியை ஒப்பி, அரிச்சந்திரனை முன்போல் அரசேற்க வேண்டினர். அப்போது அரிச்சந்திரன் அதற்கிணங்காது,]

'வேதியர்க் காளாய் மனையையும் மைந்தன்
தன்னையும் விற்றனன்; யான்போய்ச்
சாதியிற் கீழாம் புலையனுக் காளாய்ச்
சவஞ்சுடு காடுகாத் திருந்தேன்;
சோதிமண் டபத்தின் மணித்தவி சேறிச்
சுடர்முடி கவித்து மண்புரக்க
நீதியன் றென்றே யானர சளித்தேன்.
நினக்கதே எனக்கிதே' என்றான். (42)

[ஆயினும் பின்னர் தேவர் உரைக்கிசைந்து அரசை ஏற்றுக்கொள்ள இசைந்தான்.]

பன்முடி வேந்தர்தாழ்ந்து பணியப்பொற் றவிசினேற்றிச்
சொன்முடி வற்றநீர்மைத் தாபதர் சூழ்ந்துவாழ்த்த
நென்முடி சாயப்பாயும் நீர்வயல் நாடன்தன்னைப்
பொன்முடிசூட்டிவாழ்த்திப் புரந்தரன்விசும்பிற்போனான். (43)

'காருள சோலைசூழுங் கௌசிகன் தீமைநன்கே:
நீருள வளவும்சூரேழ் நிலமுள வளவும் உன்றன்
பேருள தொருகாலத்தும் பிழைப்பில துனக்குநேர்வே(று)
ஆருளர்!' என்னுவாழ்த்தி அருந்தவ முனிவர்போனார். (44)

'மைந்தனை நின்னைமாதை யித்தனை வருத்தங்கண்டேம்;
நிந்தனை சிறிதுநின்பாற் கண்டிலேம். நீதிவேந்தே!
எந்தமா தவத்திற்பாதி யாவருங் காணவின்றே
தந்தன முனக்கே' என்று கௌசிகன் தாரைவார்த்தான். (45)

'ஊற்றறிந் தளவிட்டோரா தும்மையான் இகழ்ந்து பேசப்
பெற்றவை பொறுத்திர்' என்னு வசிட்டனுக் கினியபேசிக்
கொற்றவன் தன்னையாற்றிக் குமரனை மயிலைத்தேற்றி
மற்றுமந் திரியைவாழ்த்திக் கௌசிகன் வனத்திற்போனான். (46)

# 6. நீதிச் செய்யுள் திரட்டு.

## 1. நீதிநெறி விளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன்(று)
உற்றுழியுங் கைகொடுக்கும்; கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (1)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்,
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்:—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா, புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. (2)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல். (3)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்,
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்:—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா. யாரே
அழகுக் கழகு செய்வார்? (4)

முற்று முணர்ந்தவ ரில்லை: முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க.—சிற்றுளியால்
கல்லுந் தகரும்; தகரா, கனங்குழாய்,
கொல்லுலைக் கூடத்தி னால். (5)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க:—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநாம் என்று. (6)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்:—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். (7)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே: மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்: அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம்: அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. (8)

## 2. நன்னெறி.

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே.
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (1)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க:—வெள்ளந்
தடுத்த லரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ? விளம்பு. (2)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின், இலையாம்:—எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. (3)

அறிவுடையா ரன்றி யதுபெறுூர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்:—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு? (4)

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்:—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்? (5)

## 3. நீதி வெண்பா.

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே: நல்லோர்கள்,
எங்கே பிறந்தாலும் என்? (1)

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்:
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். (2)

ஈக்கு விடந்தலையில் எய்தும்: இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே:—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே: துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். (3)

சத்தியத்தை வெல்லா தசத்தியந்தான்: நீள்பொறையை
மெத்திய கோபமது வெல்லாது:—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது: போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்? (4)

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமுஞ்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்: நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (5)

தீயவர்பாற் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க:—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடி. (6)

---

## 4. திரிகடுகம்.

உண்பொழுது நீராடி யுண்டலும்: என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்:—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை: இம்மூன்றுந்
தூஉயம் என்பார் தொழில். (1)

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்:
இல்லது காமுற் றிருப்பானும்:—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானும்: இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். (2)

தன்னை வியந்து தருக்கலும்: தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்:—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும்: இம்மூன்றுஞ்
செல்வம் உடைக்கும் படை. (3)

வைததனை யின்சொல்லாக் கொள்வானும்: நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்:—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும்: இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (4)

கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்: காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை:—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வி: இம் மூன்றுங்
குறியுடையார் கண்ணே யுள. (5)

இளைஞர்க் குதவாதான் செல்வமும்: பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்:—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும்: இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். (6)

முறைசெய்யான் பெற்ற தலைமையும்: நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்:—நிறையொழுக்கந்
தேற்றாதான் பெற்ற வனப்பும்: இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து. (7)

சான்றாருட் சான்றான் எனப்படுதல்; எஞ்ஞான்றுந்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்:—பாய்ந்தெழுந்து
கொள்ளாருட் கொள்ளாத கூறாமை: இம்மூன்றும்
நல்லாள் வழங்கு நெறி. (8)

ஈதற்குச் செய்க பொருளை: அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை:—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை: இம்மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. (9)

நண்பிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்:
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும்:—பண்பில்
இழுக்கான சொல்லாடு வானும்: இம்மூவர்
ஒழுக்கங் கடைப்பிடியா தார். (10)

..................... ...............

## 5. நான்மணிக்கடிகை.

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்: மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்: பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்: அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி? (1)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை: கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை: மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை: ஈன்றாளோ
டென்ன கடவுளு மில். (2)

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை: நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை: அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை: தங்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர். (3)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்:
* மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்:
அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்: கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். (4)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்:
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்:
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்: குற்றம்
தமரல்லார் † கையகத் தூண். (5)

மாசு படினும் ‡ மணிதன்சீர் குன்றாதாம்:
பூசிக் கொளினும் இரும்பின்கண் — ¶ மாசொட்டும்:
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். (6)

மனைக்கு விளக்கு மடவாள்: மடவாள்
தனக்குச்சால் பாகும் புதல்வர்:—மனைக்கினிய
காதற் புதல்வர்க்குங் கல்வியே: கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு. (7)

---

* மெல்லிய, † இல்லகத்தூண், ‡ மணிதஞ்சீர் குன்றாவாம், ¶ மாசோடும்.——இவை பாடபேதங்கள்.

## 6. ஏலாதி.

கற்றுரைக் கற்ற துணரா ரெனமதியார்:
உற்றுரை யன்னணமே யோராமல்,—அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று. (1)

பொய்யான், புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான், சிறியா ரினஞ்சேரான்,—வையான்,
கயலியலுண் கண்ணாய்! கருதுங்கால் என்றும்
அயல அயலவர் நூல். (2)

இளமை கழியும், பிணிமூப் பியையும்,
வளமை வலியிவை வாடும்;—உளநாளால்
பாடே புரியாது, பால்போலுஞ் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி. (3)

இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல: எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு. (4)

---

## 7. பழமொழி.

ஆற்றவும் கற்றார் அறிவுடையார். அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை; அந்நாடு
வேற்று நாடாகா: தமவேயாம். ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில். (1)

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்:—நலமிக்க
பூம்புன லூர! பொதுமக்கட் காகாதே.
பாம்பறியும் பாம்பின் கால். (2)

பூத்தாலும் காயா மரமுள: மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர்: பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள: பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. (3)

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்.—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும். (4)

தற்றூக்கித் தன்றுணையுந் தூக்கிப் பயன்றூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்.—அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண் டியாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும். (5)

புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்சிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில். (6)

மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார், பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை,
நாய்காணின் கற்காணு வாறு. (7)

---

## 8. நாலடியார்.

இளையா னடக்கம் அடக்கம்: கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்:—எல்லாம்
ஒறுக்கும் மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. (1)

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்,
தேற்ரு ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றுந் துணையும் பொறுக்க: பொருனுயின்
தூற்ருதே தூர விடல். (2)

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்,
நடுவண தெய்த இருதலையும் எய்தும்:
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர். (3)

ஆவே றுருவின வாயினும், ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம்:—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி, ஆபோல்
உருவு பலகொள லீங்கு. (4)

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல: தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே, நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து (5)

அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். (6)

நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை:—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ? தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றான் ஆகுங் குலம். (7)

## 7. சீராமர் தாலாட்டு.

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே! [சேர்
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ. (1)

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே!
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்!
கண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென் கருமணியே!
எண்டிசையும் ஆளுடையாய்! இராகவனே! தாலேலோ. (2)

கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே!
எங்கள்குலத் தின்னமுதே! இராகவனே! தாலேலோ. (3)

தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே! தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன் மணவாளா! வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும் கணபுரத்தென் கருமணியே!
ஏமருவும் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (4)

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி
ஆராவன் பிளையவனே டருங்கானம் அடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீண்முடியென் தாசரதீ! தாலேலோ. (5)

சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே! அயோத்திநகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா! தாலேலோ. (6)

ஆலினிலைப் பாலகனா யன்றுலக முண்டவனே
வாலியைக்கொன் றரசிளைய வாநரத்துக் களித்தவனே!
காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே!
ஆலிநகர்க் கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ. (7)

மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே!
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே!
கலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ. (8)

தளையவிழும் நறுங்குஞ்சித் தயரதன்றன் குலமதலாய்!
வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே!
களைகழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே!
இளையவர்கட் கருளுடையாய்! இராகவனே! தாலேலோ. (9)

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே!
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே!
ஏவரிவெஞ் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (10)

கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன்
தன்னடிமேல் தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை
கொன்னவிலும் வேல்வலவன் குடைக்குலசே கரன்சொன்ன
பன்னியநூல் பத்தும்வல்லார் பாங்காய பத்தர்களே. (11)

## 8. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.

அன்னவி சாரம் அதுவே விசாரம்;
அதுவொழிந்தாற்
சொன்னவி சாரம் தொலையா விசாரம்;நற்
றோகையரைப்
பன்னவி சாரம் பலகால் விசாரம்;இப்
பாவிநெஞ்சுக்
கென்னவி சாரம்வைத் தாய்!இறை வா,கச்சி
ஏகம்பனே! (1)

என்செய லாவதி யாதொன்று மில்லை;
இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேன்;இந்த
ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை;
பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ, இங்ஙனே வந்து
மூண்டதுவே! (2)

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தி லேந்திக் கலசப்பால் தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி! (3)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்! (4)

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோண்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்! (5)

நொந்து சுமந்துபெற்று நோவா தெனக்கமுதம்
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்! (6)

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே, அமிர்தமே, செல்வத் திரவியபு
மானே, எனவழைத்த வாய்க்கு! (7)

அள்ளி யிடுவ தரிசியோ? தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்?—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி, 'என்றன்
மகனே' எனவழைத்த வாய்க்கு! (8)

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே;
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்;
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே;
யானு மிட்டதீ மூள்க மூள்கவே! (9)

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை! (10)

வெந்தாளோ? சோணகிரி வித்தகா, நின்பதத்தில்
வந்தாளோ? என்னை மறந்தாளோ?—சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய். (11)

வீற்றிருந் தாள்அன்னை; வீதி தனில்இருந்தாள்;
நேற்றிருந்தாள்; இன்றுவெந்து நீறானாள்;—பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள், ஏதென் றிரங்காமல்.
எல்லாம் சிவமயமே யாம். (12)

# 9. தமிழ்

(சீகாளத்திப் புராணம்)

மறைமுதற் கிளந்த வாயான், மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே,
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றாரியத்தோ(டு)
உறழ்தரு தமிழ்த் தெய்வத்தை * உண்ணினைந் தேத்தல் செய்வாம். (1)

(காஞ்சிப் புராணம்)

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, † அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்,
கடல்வரைப்பின் இதின்பெருமை யாவரே கணித்தறிவார்! (2)

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண் ணுருவாக்
கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர். (3)

(மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி)

*    *    *    *

யாரறிவார் தமிழருமை என்கின் றேன்;என்
அறியாமை யன்றோ? மதுரை மூதூர்
நீரறியும்; நெருப்பறியும்: அறிவுண் டாக்கி
நீஅறிவித் தாலறியும் நிலமுந் தானே! (4)

(நால்வர் நான்மணிமாலை)

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்த(து)? என்குவீ ராயின்,
வேதம் ஓதின், விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசகம் இங்(கு) ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப் பெய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை உலகில், மற்றையர் இலரே. (5)

---

* 'உன்னினைந் தேத்தல்' என்பதும் பாடம். † பாணினி காலம் கி.மு. 10-ஆவது 7-ஆவது நூற்றாண்டுகட் கிடைப்பட்ட தென்பர்.

செய்யுள் பாகத்தின்

# அருப்பத விளக்க உரை.

## 1. நளவெண்பா.

**பக்கம் —108.**

செய்யுள் 1. முன்னீர்—கடல் (முன் + நீர் = முன்னுற்பவடைக்கப்பட்ட நீர்). [முந்நீர் என்று பாடங்கொண்டு (மூ + நீர்) ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்யும் நீர் எனவும்; ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என்னும் மூவகை நீரின் சேர்க்கை எனவும் பொருள் கொள்வாரும் உளர்]; முறுவல்—புன்னகை (இங்கே புன்னகையில் தோன்றும் பற்களையொத்த முத்துகள் எனப் பொருள்படும்); பொன் நீர் முருகு உடைக்கும்—பொன்னைப்போன்ற அழகைத் தோற்கச் செய்யும்; மொய்—நெருங்கியுள்ள; தும்பி—வண்டு; அருகு உடைக்கும்—அருகே சென்று அலர்த்தும்.

செ. 2. மான் தேர் தொழில்—குதிரை (கட்டிய) தேரைச் (செலுத்தும்) தொழில்; மடைத்தொழில்—சமையற்றொழில்; ஊன் தேய்க்கும்—(பகைவருடைய) மாமிசத்தை நாசப்படுத்த வல்ல; நறவம்—வாசனை.

**பக்கம்—109.**

செ. 3. இரும் கான்—பெரிய காடு; இகல்—வலிமை; மின்புரை கதிர்—மின்னலை ஒத்த பிரகாசம் (உடைய); (மின்னு—'உ' சாரியை).

செ. 4. கார் இருள்—கரிய இருள்; சோர் துயில்—அயர்ந்த தூக்கம்; எதிர்மாற்றம்—மறுமொழி.

செ. 5. மின் ஆடும் மால் வரை — மின்னல்கள் விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் பெரிய மலைகள்—(மின் நாடும்—எனப் பிரித்து 'மேகமண்டலத்தை அளாவிய' என்பதும் உண்டு); வேலை—கடல்; மன்னு கடம்தாழ் களியானை காவலன்—நிலைபெற்ற மதம் ஒழுகுகின்ற மதயானை(யையுடைய); அரசன்—நளன்.

செ. 6. சாற்றினான்—சொன்னான்.

செ. 7. ஒண் தொடி—பிரகாசமான வளையல்களை (அணிந்த தமயந்தி); தண் தரள பூ தாமம்—குளிர்ச்சியான முத்துக்களாலான அழகிய மாலை; பொன்மகள்—இலக்ஷ்மி(யைப்போன்ற தமயந்தி); வெம்வனம் — வெப்பமான காடு; நீத்தான்—விட்டான்; ஐயுறேல்—சந்தேகப்படாதே.

செ. 8. மறித்து ஒருகால்—திரும்பி ஒருதரம்; நூல் வந்து—பூணூல் தங்கிய.

**பக்கம்—110.**

செ. 9. 'கோடை வேந்தன்' என்றது அயோத்தி மன்னனை; 'படை வேந்தன்' என்றது நளனை.

செ. 10. தென் ஆளும் தாரான்—அழகை ஆளும் (அதாவது அழகிய) மாலையை யுடையவன் (அயோத்தி மன்னன்).

செ. 11. நாலாறு—நான்கு அல்லது ஆறு காத தூரம். (நால் ஆறு [அதாவது இருபத்து நான்கு] காத தூரம் என்றும் பொருள்கொள்ளலா மெனினும் அஃது அசம்பாவிதமாம் என்பதுணர்க); வெம்மை — கொடுமை (யுடைய); மால்—மயக்கம்.

செ. 12. அலவன்—நண்டு; காமர்—அழகிய; பொன் நகரி—அழகிய நகரம்; வேட்டு—விரும்பி; கூற்றம் அன்ன கரி—யமனை ஒத்த யானை.

செ. 13. கோது இல்—குற்றமில்லாத; மேதி—எருமை; கார் நீலம்—கரிய நீலோற்பல மலர்கள்; மடைவாயில்—சமையலிடத்தின் வாயில்.

செ. 14. அயிர்த்த—சந்தேகிக்கப்பட்ட.

செ. 15. கோதை நெடு வேல்—மாலையணிந்த நீண்ட வேல்.

**பக்கம்—111.**

செ. 16. வெய்துயிரா — வெப்பமாக மூச்சுவிட்டு; புக்கு — போய்; வன்மம் கரி யானை—பகைக்கும் குணமுடைய மதங்கொண்ட யானை.

செ. 20. மாற்றம்—சொல்; அடு மடையன் — சமைக்கும் சமையற் காரன்; எஞ்சாது—குறையாது.

செ. 21. கந்து சுளியும் கடா களிற்றின்—கட்டுத்தறிகளோடு கோபிக்கிற ஆண் யானைகளின்மேல்; பணி முடியிற் பார்—(ஆதிசேடனாகிய) பாம்பின் தலைமேலுள்ள பூமியை; மணி முடியின்—இரத்தின கிரீடங்களினாலே.

செ. 22. முனிந்தருளல்—கோபிக்கவேண்டாம்.

**பக்கம்—112.**

செ. 23. கொற்றக் குமரன்—அரச லக்ஷணமுள்ள மகன்.

செ. 25. மால் நகத் தேர்ப்பாகன் வடிவு—பெரிய மலையையொத்த தேரை ஓட்டும் சாரதியின் நிறம்.

செ. 27. முற்று ஆம்பல்—முதிர்ந்த ஆம்பற் பூக்கள்; மாநீர்—மிகுந்த நீர்வளம் (உடைய).

செ. 28. நா எய்ந்த—நாவுக்குப் பொருந்தின; ('நா வேய்ந்த' எனப் பிரித்து 'ந வினைற் புனைந்த' எனப் பொருள் கூறலும் பொருந்தும்).

**பக்கம்—113.**

செ. 29. புரந்தரன்—இந்திரன்.

செ. 30. கார் பெற்ற தோகை — மேகம் வரப்பெற்ற மயில்; வாண் முகம்—ஒளிபொருந்திய முகம்; புலம்—வயல்; எதிர்—ஒப்புமை.

## 2. தாயுமானவர் பாடல்.

செ. 1. கங்குல்—இரவு ; அஞ்சலி செய்தல்—கும்பிடுதல்.

செ. 2. ஆலம்—விஷம் ; வடவனல்—வடவாக்கினி ; தனு — வில் ; வச்ரதரன்—இந்திரன்.

**பக்கம்—115.**

செ. 5. சேய்—பிள்ளை ; நீதம் — நியாயம் ; புகலிடம் — சேரிடம் ; புன்மையேன்—அற்பனுகியயான் ; பரம் சோதி—மேலான ஜோதி ; சுகவாரி—ஆனந்த சமுத்திரம்.

செ. 6. தமர்—பந்துக்கள் ; கிருமி—புழு.

செ. 7. நலிந்தவுடன் — சரிந்துவந்துபற்றியவுடன் ; சாகரம்—சமுத்திரம் ; நானுவாகி—பலவாகி ; கால்—காற்று.

செ. 8. வாரி—சமுத்திரம் ; தலை பலவாம்—பல தலைமைகளையுடைய.

செ. 9. அல்லல்—துன்பம் ; ஒவ்விட—ஒப்பாக ; இர்க்கும் – இழுக்கும்.

---

## 3. குசேலோபாக்கியானம்.

பக்கம்—117.

செ. 1. நனி—மிகவும் ; இலங்கு—பிரகாசிக்கும் ; ஆழி—மோதிரம் ; பதாணி—பதக்கம் ; உருவ—அழகிய.

செ. 2. கைகுவி ஏவலர்—கைகுவித்து (நமஸ்கரிக்கும்) ஏவலாளர் ; கோலம் ஆர்ந்து—தோற்றச்சிறப்பு நிறைந்து ; அரசு அவை—ராஜசபை.

செ. 3. மின்செய்த—பிரகாசம் உள்ள ; பொன்செய்த — பொன்னுற் செய்த ; இயற்றுதல்—செய்தல்.

செ. 4. மாமறை தலைவ—பெருமை பொருந்திய வேதங்களுக்குத் தலைவனே ; மதிக்குலம் — சந்திரவம்சம் ; காமர் — அழகு (மிக்க) ; தரிபலர் ஏறு—பகைவர்களுக்குச் சிங்கம் ; தோம் அறு—குற்றம் இல்லாத.

**பக்கம்—118.**

செ. 5. ஆதிநாள்—முன்னுள் ; போதவும்—மிகவும் ; நீரான்—தன்மையன் ; கோது அறு—குற்றம் இல்லாத.

செ. 6. ஆதரம்—அன்பு ; காதரம்—தீவினைத்தொடர்பு.

செ. 7. மலக்குறும்பு அறுத்து—மும்மலங்களாகிய குற்றத்தை நீக்கி ; பாணிதத்தல்—தாமதித்தல்.

செ. 8. தேக்கிய—நிறைந்த.

செ. 10. ஆயின்—ஆராய்ந்தால் ; அறம் — தர்மம் ; மறம் — பாவம் ; ஏயின்—பொருந்தயானுல் ; வீயினும்—இறந்தாலும் ; மேதையோர்—அறிவுடையோர் ; நானிலம்—பூமி (நால் + நிலம் = குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்குவகைப்பட்ட நிலம்).

பக்கம்—119.

செ. 12. இரும் தவர்—பெரிய தவத்தையுடையோர்.

செ. 13. எண்மையின்—சுலபத்தில்.

செ. 14. கமை—பொறுமை.

செ 15. வீடுதற்கு—அழிதற்கு; நீடுதற்கு—நீடித்திருப்பதற்கு.

செ. 17. மன்—தலைவன்—கணவன்; உஞற்றுவளே—செய்வாளா.

செ. 18. மிடி—தரித்திரம்; இயலினள்—தன்மையள்; டன்னரும்—சொல்லுதற்கரிய; பளகு அறு—குற்றமில்லாத.

செ. 19. பைங்குதலை—பசிய (=இளைய) மழலை; பேர் அவையோர்—பெரிய சபையோர் (நடுவில்); அணிதர—அலங்காரம் பெற; சிங்கல் அற—சிக்கல் நீங்க—தெளிவுபெற (சிக்கல், சிங்கல் என மெலித்தல் விகாரமாயிற்று.)

பக்கம்—120:

செ. 20. இவர்கின்ற—ஏறுகின்ற; இரும் கலை—பெரிய கலைகள்; புடை—பக்கம்.

செ. 22. ஏரார்—சிறப்புப் பொருந்திய.

செ. 24. பந்தனை—(உலக) பந்தங்கள்; இன்னே—இப்பொழுதே; பக்கணம்—பக்ஷணம்.

செ. 25. வாளா—சும்மா.

பக்கம்—121.

செ. 27. மலிதரும்—நிறைந்த; வண்பொதி—வளமுடைய மூட்டை.

செ. 28. மிக்கார்வம்—மிகுந்த அன்பு; தொக்காசி—நிறைந்த ஆசீர்வாதம்; எக்காலும் இன்பம் அருன்—எப்பொழுதும் (பக்தி ஞான தவ சீலங்களால் வரும் உயர்ந்த இன்பத்தினின்றும் நீங்காதவன், (இது குசேலரைக் குறிக்கும்). [கண்ணன் வந்து வீழ்ந்து வணங்கிட, எக்காலு மின்பமருன் (குசேலன்) மகிழ்ந்து கூறி ஏகிடுங்கால் எனக் கூட்டுக.]

செ. 29. விண்டார்—பகைவர் [விள் (=வேறுபடு) பகுதி]; மௌலி—கிரீடம்; உழக்கும்—கலக்கும்; சரு கழல் கால்—நிறம (பொருந்திய வீரக்கழல் அணிந்த) கால்; உழக்கும்—கலக்கும்; கோஇல்—ராஜ கிரகம்; கார் குழல் மின்னார்—மேகம் (போன்ற அல்லது கரிய) கூந்தலையுடைய மின்னற்கொடி (போன்ற ஸ்திரீகள்) [மின்னலும் மேகமும் சேர்ந்துறல் இயற்கை.]

செ. 30. சேய்—பிள்ளை; தழைவு உற்றான்—மலர்ச்சியடைந்தான்; புனைவித்தான்—(புஷ்பாதிகளால்) அலங்காரம் செய்வித்தான்—பாராட்டிப் பேசினான் எனலுமாம்: சேட்மையன்—தூரமானவன்—நெருங்கிய பழக்கமில்லாதவன்.

செ. 31. அளி ஆர்—வண்டுகள் உண்ணும்; சழிகென்றான்—(சழிக+என்றான்: நிலைமொழி யீற்றுயிர் தொக்கது)—போ என்றான்; தெளியார்—தெளிவாக அறியார்.

செ. 32. இத்து உவத்தல்—கொடுத்து சந்தோஷப்படுதல் ('ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாம் உடைமை—வைத்திழக்கும் வன்கணவர்'—திருக்குறள்); மெத்து நயமொழி—மிக இனிய சொல்; பித்து உறு—பைத்தியம் கொண்ட: ஆறு அனுப்பி—வழியனுப்பி; பெயர்ந்து—திரும்பி; கொத்து உறும்—சேர்ந்து உள்ள (கோத்து எனற்பாலது கொத்து எனக் குறுக்கல் விகாரமாயிற்று); குயின்றார்—சொன்னார்.

பக்கம்—122.

செ. 33. வண்டு இரங்கும்—வண்டுகள் ரீங்காரம் செய்யும்; பேர் அமர் கண்—பெரியவும் போர் விளைப்பனவுமான கண்களையுடைய; மடமாதர்—(நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களில்) மடமையைப் (பெரிதாப்ப்) பாராட்டிய ஸ்திரீகள்: (மடமையாவது அறிந்தும் அறியாதுபோ லிருத்தல் அவ்வாறிருக்குமாறே இந்த ஸ்திரீகள் தம்மையொத்த பிறருக்குப் போதித்தமை காண்க)—யௌவன மாதர் எனவும் கூறுவர்.

செ. 34. சாலவும்—மிகவும்; கோலமா (மாகோல)—மிகவும் அழகிய.

செ. 35. குருமலர்—நிறம் சிறக்கும்; கலம்—பாத்திரம்; திருகு—(முகத்தைத்) திருப்பி; என்மரும்—என்று சொல்பவர்களும்; திருமி—திரும்பி; அருகிய—சிறு; அணி மகார்—ஆபரணங்கள் (பூண்ட) பிள்ளைகள்—அழகிய பிள்ளைகள் எனவுமாம்; செருக்குதல்—பெருமிதங்காட்டுதல்.

பக்கம்—123. 3416

செ. 36. ஒண்சுட்டி — பிரகாசிக்கும் சுட்டி யென்னும் ஆபரணம்; நுதல் மிசை — நெற்றி மேல்; பொலிய—விளங்க; கயில் — ஆபரணப் பூட்டு முகப்பு; செறி—பொருந்திய; தொடர்—சங்கிலி; கடகம்—கையாபரணம்; அம்பொன்குழை — அழகிய பொன்னாலாகிய காதாபரணம்; தயங்க—பிரகாசிக்க; செயிர்—குற்றம்; பொன் நாண்—பொற்சரடு; அரை மிசை—இடுப்பின்மீது; எதிர்ப்ப—பிரகாசிக்க; கவின—அழகு செய்ய; பயில்தரு—கூட்டமாயுள்ள; ஆடுதல்—விளையாடுதல்.

செ. 37. திருவம்—செல்வம் (அம்—சாரியை); ஒருவில்—நீங்குதல் இல்லாத; துறவிற்றேயோ—(உலக ஆசைகளினின்றும்) ஒழிவுடையதாமோ; மருவி—நெருங்கி; வயங்குதல்—இருத்தல்; பொருவிலா—ஒப்பில்லாத; புந்தி மாழ்கேல்—அறிவு சலங்காதே.

செ. 38. அசத்து—சத்தல்லாதது (உலகம் சத்து அசத்து என இரு வகைப்படும்: சத்தாவது அறிவுடையது: அசத்தாவது அறிவில்லாதது: சத்து அழியாதது, அசத்து அழிவது. ஆன்மா ஒன்றே சத்தெனப்படும்; பிற வெல்லாம் அசத்தாம்); வைப்பு—தேடிவைக்கும் திரவியம்; வாஞ்சித்து—விரும்பி.

செ. 39. தாமரையிலை நீர்போல் நிற்றலாவது பற்றியும் பற்றில்லாமல் இருத்தல்; பன்னாள்—பல் + நாள்—பலநாள்.

செ. 40. வெப்பிலா—வெப்பம் இல்லாத—குளிர்ந்த; விரை கெழு—வாசனை நிறைந்த; திப்பிய—திவ்விய—தெய்வத்தன்மை பொருந்திய.

## 4. திருவருட்பா.

செ. 1. நிதி—செல்வம்; நயவாத — விரும்பாத; நெகிழாத — தளராத; திரம்—ஸ்திரம்—உறுதி.

செ. 2. தேசகத்தில் — (தேசு + அகத்தில்) — (அருள்) பிரகாசமுடைய மனத்தில்; மாசு—ஆசு—குற்றம்.

செ. 3. தீம்சுவை—இனிய சுவை; உவட்டல்—தெவிட்டல்.

செ. 4. என் உடையன் — என்னை உடையன் — எனது தலைவன்—கடவுள்; ஒன்றுவித்து—ஒன்ருகச் செய்து; சாதகம்—பிறப்பு.

செ. 5. மா—குதிரை; எண்சுமந்த எளிமையுடைய — கேவலமான; மாறன்—பாண்டியன்.

**பக்கம் 125.**

செ. 6. வேட்டம் உறும்—வேட்டையிற் (கொல்லப்) படுவதற்கேற்ற; விலங்குகள் — மிருகங்கள்; (விலங்கு—குறுக்கு: மிருகங்கள் குறுக்காக வளர்வதால் விலங்குகள் எனப் பெயர்பெற்றன. கால்விலங்கு, கைவிலங்கு, வில்லங்கம் என வரும் வழக்குச் சொற்கள் இண்டு கவனிக்கற்பால.)

செ. 7. கான்படு—காட்டில் (வைக்கப்)படும்; கண்ணி—பொறி—வலை

## 5. அரிச்சந்திர புராணம்.

செ. 1. நிரை—வரிசை; பத்தி — ஒழுங்கு; அத்தொகைய — அதே எண்ணுள்ளன: (தூண்களும் ஆயிரம்; தூண்பத்திகளும் ஆயிரம் என்றபடி); சத்திரம் நிழற்ற—வெண்குடை நிழல் செய்ய.

செ. 2. கந்தவார்சடை கடவுள்—வாசனை (பொருந்திய) நீண்ட சடை (யையுடைய) கடவுள்—சிவபெருமான்; தந்த மேனியள்—தந்தம் போன்ற நிறமுடையவள்.

**பக்கம் 126.**

செ. 3. பாய்—(கரைமீது) மோதுகின்ற; மை—கறுத்த; கல்லோல—கல்லென்று சப்திக்கும்; வேகச் சிலுகு—விரைவாய்ப்பற்றும் துன்பம்.

செ. 4. பார்—பூமி; பரதாரம்—அன்னியன் மனைவி; போர்—சண்டை; மறைப் பொருள் — வேதத்தின் பொருள்; நேர்—நடுவுநிலைமை; வீடா—விடாத; மனுநூல்—மனு என்பவரால் செய்யப்பட்ட தர்ம சாஸ்திரம்; நெறி—வழி; பொறை—பொறுமை; மிக்கான்—சிறந்தவன்.

செ. 5. வெய்யன்—கொடியன்; பதகன்—(பாதகன்) பாவி; நிறை—(மனத்தை) நிறுத்துதல்; புல்லன்—அற்பன்; கையன்—வஞ்சகன்; கயவன்—கீழ்மகன்; ஐயன்—தலைவன் (இங்கே இந்திரன்); ஈது என் ஆக—இது யாது பயனைக் கருதி.

செ. 6. செவ்வியோன்—செம்மையான குணமுடையவன்; காய் வெம் திறல்—கோபிக்கின்ற கொடிய வல்லமை.

செ. 7. அழன்று—கோபித்து; சாய்க்கின்—(என்னைத்) தோற்கச் செய்தால்.

**பக்கம்—127.**

செ. 9. மானவன்—பெருமையுடையவன் : சிலை—கல் ; மோனவேள்வி—மோன (விரதம் பூண்டு செய்யவேண்டிய) யாகம்.

செ. 10. காவி—நீலோற்பலம் ; கவர் இதழ்—(பாடுவதால்) திறப்புண்ட உதடுகள் (கவர்தல்—பிரிபடுதல்)— (கண்ணைக்) கவரும் (அத்துணை அழகு வாய்ந்த, இதழ்கள் எனலுமாம் ; கோடா—கோணமாட்டா ; தூவி அம் தோகை—மென்சிறகுகளையுடைய அழகிய மயில் (போன்ற) ; நல்லார்—ஸ்திரீகள் (அழகாகிய நலமுடையவர்கள்) ; ஓவியம்—சித்திரம்.

செ. 11. பைய—மெல்ல ; கையன்—கீழ்மைக்குணமுடையான் ; உமர் என—ஊமர் என (குறுக்கல் விகாரம்)—ஊமையர் என்னும்படி—வாய் பேசாதிருக்கும்படி ; உய்யவும் போகுமோ—பிழைக்கவும் கூடுமோ.

செ. 12. மாக்கள்—மிருகங்கள்.

**பக்கம்—128.**

செ. 13. பண்ணை வேண்டிய—இசையை விரும்பிய.

செ. 14. வையம்—பூமி ; நின்னது—உன்னுடையது ; வெய்ய—மூர்க்கமுடைய ; வாசி—குதிரை ; வேழம்—யானை ; நின்ன—உன்னுடையன ; தானை—சேனை.

செ. 15. தண்பணை—குளிர்ச்சி (பொருந்திய) வயல்கள் ; உம்தேம்—உம்மிடம் (தேம்—தேசம் அல்லது இடம்) ; நண்ணி—அடைந்து.

செ. 16. வேரி வாவி—மணம் (நிறைந்த) பொய்கை ; விரைந்தார்—விரைந்து சென்றார்.

செ. 17. தலம்—நாடு ; இலகு—விளங்குகின்ற ; எழில்—அழகுடைய ; இழிந்து போந்து—இறங்கிப் போய் ; பதாதி—காலாட்கள் ; மொய்க்க—திரண்டு சேர ; குலமகன்—குலம் (விளக்கவந்த) மகன்—(சிறந்த மகன் என்றும் கூறலாம்).

செ. 18. சிறை—சிறகு ; போகில்—பறவை ; கரி—யானை (கரத்தையுடையது கரி : யானைக்குக் கரமாவது தும்பி : தும்பிக்கை என வழங்கலும் காண்க) ; பொறி—யந்திரம் (பாவையை இயங்கச் செய்வது) ; அலம்பும்—கலங்கும்.

செ. 19. அடல் வேந்தன்—வலிமை பொருந்திய அரசன் ; முக்காலங்களும் உணரும்—மூன்று காலங்களையும் அறியும் ; மூதூர்—(முது + ஊர்) பழமையான ஊர்.

செ. 20. பணித்த பணி—இட்ட வேலை ; ஏதிலான்—அன்னியன் ; இடி ஏறுண்ட—இடி வீழப்பெற்ற.

செ. 21. வாழ்வினை—வாழ்வதற்கு (ஏதுவான) நல்வினை ; என்னின்—என்னோடு ; தாழ்வினை — தாழ்வதற்கு (ஏதுவான) தீவினை ; கடிது — விரைவாய் ; ஊழ் வினை—விதிப்பயன்.

செ 22. நண்பினொடு—பிரியத்துடன் ; மின்—மின்னுகின்ற ; புரிசை—மதில் (சூழ்ந்த) ; விண்புலம்—ஆகாயம் (வரையில்) ; தண்புனல்—குளிர்ந்த நீர் ; வழங்கிடு—பாய்கிற ; தடம்— தடாகம்.

பக்கம்—130.

செ. 23. பூமகள்—திருமகள் (லக்ஷ்மி); மண்மகள் — பூமிதேவி; உற—(மனம்) பொருந்த—திருப்தியாக; நாம நெடுவேல்—கீர்த்தி (வாய்ந்த), அல்லது (பகைவருக்கு) அச்சந் (தரக்கூடிய) நீண்ட வேலையுடைய: (நாமம் = அச்சம், கீர்த்தி); நாபின் இகழ்—நாபினும் (கீழாக) இகழப்படும்.

செ. 24. மறை—வேதம்; வழி—நெறி; முறைவழி—முறைப்படி; மூப்பரை—(வயது) முதிர்ந்தவர்களை; பிறர்மனை நயந்தேமாகில்—அன்னியர் மனைவியரை விரும்பினோமானால்; பிறர் மனம் வைத்தேமாகில்—அன்னிய புருஷர்கள் மீது இச்சை வைத்தோமானால்.

செ. 25. தாலத்து—உலகத்தில் (தாலம்—தலம்—பூமி); அறம் உணராது—தர்மத்தை அறியாது; 'பருவத்து என் நன் மரபிற் புதல்வன்' எனப் பிரிக்க; கொண்மின்—கொள்ளுங்கள்.

செ. 26. கட்பொறி—கண்கள் (நெருப்புப்) பொறி.

செ. 27. சல்லியன்—சுக்கிரன் (நட்சத்திரேசன்).

செ. 28. ஆதிநூலினர்—ஆதிநூலாகிய வேதத்தை உணர்ந்தவர் (வேதியர்—பிராமணர்); சால்பு—பெருமை.

செ. 29. மாதவப்பேறு—பெரிய தவத்தாற் கிடைத்த செல்வம்.

செ. 30. தூங்கு இருள் கடியும்—தங்கிய இருளைப் போக்கும்.

செ. 31. வல்லி—கொடி (போன்றவள்) — சந்திரமதி; பணிகள்—வேலைகள்; சோர்வு அற—மறதியில்லாமல்; எல்லி ஓர் சாமம் என்ன—இரவு (இன்னும்) ஒரு சாமம் இருக்கும்பொழுதே; ஏவல் முற்றி—ஏவிய வேலைகளைச் செய்து முடித்து; அல் இரு சாமம் சென்றால்—இரவு இரண்டு சாமங்களான பிறகு.

செ. 32. உலவாய்—வாடாமல் இருந்தாயே: (உலவுதல்—அழிதல்); அனியாய வெம்கண் அரவால் இறந்த அதிபாவம் என்கொல் அறியேன்—(யாரையும் கடிப்பதான) அனியாயச் செய்கையுடைய கொடிய கண்களோடு கூடிய பாம்பினால் இறந்துபோகும்படி (செய்த) அவ்வளவு அதிக பாவம் யாதோ தெரியேன்; செறிந்து—மிகுந்து; அவமே—வீணே.

பக்கம் --132.

செ. 33. குறையேம்-நன்னூலுணர்ந்த பெரியோர்கள் சொன்ன தருமங்கள் முப்பத்திரண்டிலே ஒரு தருமமாயினுங் குறையாது செய்தோம். [அறம் 32. ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், பிறர் துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் முதலியன.] இல்லோரையற்பமிகழோம் — எளியவர்களைக் கொஞ்சமேனும் இகழ்ச்சி செய்திலோம்; இறுக்குர் இறையன்றி ஏற உகவேம்—முறைப்படி விதிக்க

வேண்டிய ஆறிலொரு பங்கான இறையையல்லது அநியாயமாக விரும்பினோமல்லோம்; சொல்லோம், மறுத்துப் உரையோம், உரைத்த துறவோர்கள் புத்தி கடவோம்—பொய் சொல்லியறியோம், கேட்டவர்களுக்கு இல்லையென்று மறுத்துச் சொல்லிலோம், துறவறத்தார்கள் சொன்ன புத்தியைக் கடந்து சென்றிலோம; எல்லோரா தமக்கும் இனிதே விளைப்பம் ஏதாகவந்ததிதுவே—யாவருக்கும் நன்மையையே செய்துவந்தோம், (இப்படியிருக்க) எந்தக் காரணத்தினாலே இந்தத் துன்பம் வந்தது.

செ. 34. மறை நீதியுற்ற புறநாடழித்து வருசேனை யாள்வது அறியேம்—வேதநீதிப்படியே நடக்கிற அன்னியர் நாட்டைக் கெடுத்து அங்கிருந்துவந்து கூடுவனவான சேனைகளை ஆளும் செய்கையை அறியோம்; அறை நீதி முற்று முணரா அமைச்சை யணிவாயில் வைத்தும் அறியேம் — பெரியோர்கள் சொன்ன நீதிமுழுதுந் தெரியாத மந்திரியை எங்களழகியதான அரண்மனை வாயிலிலே வைத்தாளவுந் தெரிந்திலோம்; குறையே இழைத்த வினையே விளைத்த குடிவைத்திருந்தும் அறியேம்—குறைவானவைகளையே செய்து பாவச் செய்கைகளையே மேன்மேலும் வளர்க்கிறகுடிகளை எங்கள் நாட்டிலே குடி வைக்கவும் தெரிந்திலோம்; இறையே—ஓ தெய்வமே! தவத்தின் விளைவே—(ஓ எங்கள்) தவப்பயனே! எமக்கு மிதுவோ விதித்தவிதியே — இப்படிப் பாம்பு கடித்திறப்பதோ எங்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட விதி.

## பக்கம்—133.

செ. 35. நோதகவு—வருத்தம்; எய்தல் என்—அடைதல் ஏன்; நாடியான்—'நாடு + யான்' எனப் பிரிக்க; சாற்றி—சொல்லி.

செ. 36. சேய்மை — தூரம்; அண்மை — சமீபம்; உயிர்க்கொரு துணை—உயிருக்கு ஒப்பற்றதுணை; வாய்மை—சத்தியம்; அகம்—மனது; தூய்மை—பரிசுத்தம்; நோய்மை—துன்பம்.

செ. 37. புலையன்—நீசன்; புன்புலால்—இழிவாகிய மாமிச (பிண்டமான); யாக்கை—சரீரம்; நிலையெனு—நிலையென்று; மருண்டு—மயங்கி; தலைமைசேர் — முதன்மைகொண்ட; கலையுணர்ந்த — கலைப்பொருள்களெல்லாம் தெரிந்த; கழறுவது—சொல்லுவது.

செ. 38. இம்மை அம்மை வீடு—இப்பிறப்பு, வருபிறப்பு, மோக்ஷம்; மறை—வேதங்கள்; புலங்கொள—தெளிவாக; மும்மையும்—மூன்றையும்; முரணி—விரோதமாக; வெம்மை—வெப்பம்; நரகு உய்க்கினும் — நரகத்திலே வீழ்த்தினும்; மெய்ம்மை—சத்தியம்.

செ. 39. பதி—ஊர்; நிதி—செல்வம்; கட்டுரை—சத்தியம்.

செ. 40. அலகில்—அளவில்லாத; சீருடைய—சிறப்புடைய; வாய்மை—மெய்; ஈடிலதேல் — ஒப்பில்லாததானால்; விலகுறாமல் — விலகவிடாமல்.

செ. 41. நெறியின் அன்ன—ஒழுக்கத்தில் (அவனைப்) போன்ற; நிறை—கற்பு; உளதேல் — இருக்குமானால்; இறுதியின்மை — அழிவில்லாமை; இறுதி பெறுக—அழிவடைக; பேதை—பெண் (இங்கே சந்திரமதி); வடிவாள்—வடித்த வாள்.

பக்கம்—134.

செ. 42. மனை—மனைவி ; சவம் சுடு — பிணஞ்சுடுவதற்கான, மணித் தவிசு—மணிகள் (பதிக்கப் பெற்ற) ஆசனம்—சிம்மாசனம் ; மண்புரக்க—உலகைக் காக்க.

செ. 43. பல் முடி வேந்தர் — கிரீடந் தரித்த பல அரசர்கள் (முடி பல் வேந்தர் என மொழிமாற்றிப் பொருள் கொள்க) ; சொல் முடிவற்ற நீர்மை—(முடிவற்ற சொல் நீர்மை) — எல்லையற்ற கீர்த்தியும் ஒழுக்கமும் (உடைய) ; தாபதர்—முனிவர் ; புரந்தரன்—இந்திரன் ; விசும்பு—ஆகாயம்.

செ. 44. காருள—மேகங்கள் நிறைந்துள்ள ; பேர்—கீர்த்தி ; பிழைப்பு —அபகீர்த்தி ; நேர்—சமானம்.

செ. 45. வருத்தங் கண்டேன்—வருத்தம் செய்தேன் (உரைகண்டேன் என்பது போல).

செ. 46. ஓராது—அறியாது ; கொற்றவன்—அரசன்—அரிச்சந்திரன் ; குமரன்—லோகிதாசன் ; மயில்—மயில் போன்றவள்—சந்திரமதி.

# 6. நீதிச் செய்யுள் திரட்டு

## 1. நீதிநெறி விளக்கம்.

பக்கம்—135.

செ. 1. வீடு — மோக்ஷம் ; பயக்கும் — கொடுக்கும் ; புறங்கடை—தலைவாயில் ; இசை — கீர்த்தி ; கவல் — கவலை ; உற்றுழியும் — நேரிட்டவிடத்தும் ; ஊங்கு—மேற்பட்டது.

செ. 2. கலைமகள்—சரசுவதி ; மலரவன்—பிரமன் ; ஒவ்வான் — ஒப்பாகான் ; மாய்வன—அழிவன.

செ. 3. ஓம்பாது—பாதுகாக்காமல் ; பரிந்து—வருந்தி ; கரு—மிக்க ; உய்த்து — தாங்கிக்கொண்டு போய் ; சொரிந்திட்டு — எறிந்து ; எய்த்து—இளைத்து.

செ. 4. நலன்—அறிவு ; கலன்—ஆபரணம் ; அணிகலம்—ஆபரணம்; பூண்—ஆபரணம்.

செ. 5. களியற்க—செருக்குக் கொள்ளாதே ; கல் — மலை ; தகரும்—உடையும் ; கொல்லுலை—கொல்லனது உலைக்களம் ; கூடம்—சம்மட்டி.

செ. 6. மெலியார்—எளியவர்; அகம்—மனம்; எற்று—எத்தன்மையானது.

செ. 7. இரந்து — யாசித்து ; தாழப்பெறின் — தாழ்மையுடையவராயிருப்பின்.

பக்கம்—136.

செ. 8. குலமகள்—குலதர்மத்தையுடைய பெண் ; கொழுநன்—கணவன் ; அறவோர் (பிரமசரிய முதலிய) தரும நிலையில் நின்றவர் ; அடிகள்—குரு ; இறை—அரசன்.

## 2. நன்னெறி.

செ. 1. அனையம்—ஒப்போம்; அடல்—வல்லமை; ஏறு — ஆண்சிங்கம்; செருக்கு—கர்வம்; முழங்கும்—ஒலிக்கின்ற; முகந்து—மொண்டு.

செ. 2. உள்ளங்கவர்ந்து—மனதைத் தன்வசமாக்கிக்கொண்டு; நடம்—விசாலம்; பேர்த்து—உடைத்து.

செ. 3. பெருக்கம்—மிகுதி; ஆயும் — ஆராய்கின்ற; வீயும்—நீங்கிவிடும்; சுரநீர்—ஆகாய கங்கை.

செ. 4. செறி—நெருங்கு; வண்ணம்—அழகு; வாள்—ஒளி.

செ. 5. தக்கார்—யோக்கியர்; விழுமியோர்—மேலோர்; மிக்கார்—நன்னெறி கடந்த அயோக்கியர்; உதவார்—கொடார்; முளி—உலரும்.

---

## 3. நீதிவெண்பா.

செ. 1. சவரம்—சாமரை; அழல் — நெருப்பு; எள்ளார்—அவமதியார்.

**பக்கம்—137.**

செ. 2. வருத்த—வளைக்க; வேய்—மூங்கில்; வேழம்பர்—கழைக்கூத்தாடிகள்; மேதினி—பூமி.

செ. 3. விடம் — விஷம்; பைங்கணரவு — பசுமையாகிய கண்களையுடைய பாம்பு; துர்ச்சனர்—துஷ்டர்.

செ. 4. பொறை—பொறுமை; மெத்திய—மிகுந்த; அரக்கர் — இராக்ஷதர்கள்.

செ. 5. சின்னம்—துன்பம்; நலிந்தாலும் — வருத்தப்படுத்தினாலும்; நயந்து—மிகுந்து.

செ. 6. தூயவர்—நல்லவர்; துன்னற்க—சேராதொழிக; நண்ணுவர்—அடைவார்.

---

## 4. திரிகடுகம்.

செ. 1. நீராடி — நீரில் ஸ்நானஞ்செய்து; தோல்வற்றி — உடல் இளைத்து; சாபினும்—அழிவதாயிருப்பினும்; சான்று — நிறைந்து.

செ. 2. வெகுண்டு — கோபித்து; நோன்பிலியும் (தவமில்லானும்) தீயோனும்; காமுற்று—விருப்பங்கொண்டு.

**பக்கம்—138.**

செ. 3. வியந்து—நன்கு மதித்து; தருக்கு—அகங்காரம்; கொன்னே—பயனில்லாது; வெஃகும்—வெளவக் கருதுகின்ற.

செ. 4. பெய்த—வார்த்த; கட்டி — சற்கண்டு; மெய்ப்பொருள்—மெய்ம்மையாகிய பரம்பொருள்.

செ. 5. கண்ணோட்டம் — தாக்ஷணியம்; மறுமை — மறுபிறப்பு; குறியுடையார்—ஆராயும் இயல்புடையார்.

செ. 6. கிளைஞர்—உறவினர் ; பைங்கூழ்—பசிய பயிர் ; குடிமை—குடிப் பிறப்பு.

செ. 7. முறை—நீதி ; தேற்றாதான்—தெளியாதவன் ; தூறு—புதர்.

செ. 8. சான்றோர்—(நற்குணங்களால்) நிறைந்தார் ; தோய்ந்தார்—கட்டுக்கொண்டு கலந்தவர்.

செ. 9. செய்க—சம்பாதிக்கக்கடவன் ; இருளுலகம்—நரகலோகம்.

செ. 10. நசைக்கிழமை—அன்புரிமை ; பண்பு—பயன் ; இழுக்கு—குற்றம் ; கடைப்பிடி—உறுதியாகக் கொள்.

---

## 5. நான்மணிக்கடிகை.

**பக்கம்—139.**

செ. 1. அகில்—அகிற்கட்டை ; நல்லான் — நற்குண நற்செய்கைகளையுடையவன்.

செ. 2. உறுப்பு—அவயவம் ; கொண்டான் — கணவன் ; கேளிர்—உறவினர் ; இன்றாள்—தாய்.

செ. 3. நல்லார்—கல்வி யறிவுடையார் ; கடைகள்—கீழானவர்.

செ. 4. கூற்றம்—யமன் ; அல்லவை—பாவத்தொழில்.

செ. 5. வளம்—பொருள் ; வள்ளன்மை — ஈகைக்குணம் ; தமர்—உள்ளன்புள்ளவர்.

செ. 6. மாசு—அழுக்கு ; மணி—இரத்தினம் ; சீர்—ஒளி ; கீழ்—கீழ் மகன் ; பாசம்—தளை.

செ. 7. மனை—இல்லறம் ; தகை — நற்குணம் ; உணர்வு — அறிவு; மடவார்—கற்புடைய பெண்டிர்.

---

## 6. ஏலாதி.

**பக்கம்—140.**

செ. 1. கற்றாரை — கற்று வல்லவர்களை ; கற்றது—(நாம்) கற்றதை ; உணரார்—(அவர்) அறியார் ; என மதியார்—என்று (தாழ்வாக) மதியாதவர்களாய் ; உற்றாரை—அன்புடையவர்களை ; அன்னணமே—அப்படியே (அதாவது, நம்மைப்போல அவர்கள் அன்புடையரல்லர் என்று) ; ஓராமல்—(குறைவாக) எண்ணாமல் ; அற்றார்கட்கு—(பொருள்) அற்ற ஏழைகட்கும், (பற்று) அற்ற துறவியர்க்கும் ; உண்டி—உணவு ; உறையுள்—இருப்பிடம் ; உடுக்கை—வஸ்திரம் (உடுக்கப்படுவது உடுக்கை : 'உடுக்கை யிழந்தவன் கைபோலவாங்கே—இடுக்கண் களைவதாம் நட்பு'—திருக்குறள்) ; ஈந்தார்—கொடுத்தவர்கள் ; பயின்று வாழ்வார்—(பகையில்லாமல்) கூடி வாழ்வார்.

செ. 2. பொய்யான்—பொய் சொல்லாதவனாய் ; புலாலொடு கள் போக்கி—மாமிசத்தோடு கள்ளையும் நீக்கி ; தீயன செய்யான்—தீய காரியங்களைச் செய்யாதவனாய் ; சிறியார் இனம் சேரான்—கீழ்மக்கள் கூட்டத்தைச் சேராதவனாய் ; வையான்—(பிறரை) நிந்தியாதவனாய் (இருக்கும் ஒருவ

னுக்கு); அயல அயலவாம் நூல்—(நூல் அயல அயலவாம்)—(பிறர் ஆராய்ந் துணரும் நீதி) சாஸ்திரங்கள் வேண்டுவனவே யல்ல: (அயல—அன்னிய மானவை—வேண்டாதவை); கயல் இயல் உண் கண்ணாய்—மீனின் இயல் பாய்(ப் பிறழும், லப) உண்ட கண்ணையுடையவளே (இது மகடூஉ முன்னிலை).

செ. 3. இயையும்—(வந்து) சேரும்; உள நாளால்—(உயிரோடு) உள்ள நாளில்; பாடே புரியாது—துன்பம் (தரும் செயல்களையே) விரும் பாமல்; வீடே புரிதல் விதி—வீடடைவதொன்றையே விரும்புதல் கடமை; பால்போலும் சொல்லினாய்—மகடூஉ முன்னிலை.

செ. 4. வனப்பு — அழகு; ஈடு — பெருமை; புடைசால் — இடம் நிறைந்த; எண்—தருக்கம்; எழுத்து—இலக்கணம்.

## 7. பழமொழி.

செ. 1. ஆற்றவும்—மிகவும்; தமவே—தம்முடைய (நாடே); ஆற் றுணா—வழியில் (சாப்பிடுவதற்குக் கொண்டுபோகும்) உணவு — கட்டுச் சாதம்; வேண்டுவதில்—வேண்டுவதில்லை.

செ. 2. புலம் மிக்கவரை—அறிவு மிகுந்தவரை; புலமை தெரிதல்— (அவர்) அறிவினை (ஆராய்ந்து) அறிதல்; புலனாம்—தெரியும்; நலம் மிக்க— நன்மைமிகுந்த; பூ—அழகிய; புனல் ஊர—நீர் (வளமுள்ள) ஊரனே; பாம்பின—பாம்பினுடைய.

செ. 3. நனி உளர்—மிகுதியாக இருக்கிறார்கள்; பாத்தி—(பதர் முத லியன நீக்கிப்) பாகுபாடுசெய்து; நாறுத—முளையாத; வித்துஉள—விதை கள் உள்ளன.

பக்கம்—141.

செ. 4. பொல்லாத — (பிறரைப்பற்றி அவதூறான) தீயமொழிகளை; மறைந்து ஒழுகும்—(தன் குற்றம் வெளிப்படாவண்ணம்) மறைவாக (போலி யாக) நடக்கும்; பேதை—மூடன்; துயர்ப்படுக்கும்—துன்பத்தில் அகப் படுத்திக் கொள்வான்; நுணல்—தவளை.

செ. 5. தன் தூக்கி—தன் (வலிமையை) ஆராய்ந்து; தன்துணை— தனக்கு உள்ள துணைவலிமை; அற்று அன்றி—அப்படியல்லாமல். [மற்று— அசை.]

செ. 6. புன்சொல் — தாழ்வான சொல்; பொய்யின்று — பழுதில்லா மல்; வன்சொல் வழியராய்—(பிறரைக்) கடியசொல் சொல்லி ஒழுகும் நெறி யுடையவர்களாய்—சுடுசொல் உரைப்பவர்களாய்; இடர்ப்படுப்பது—துன் பத்துக்குள்ளாக்குவது.

செ. 7. மாய்வது — இறப்பது; வகைப்பட்ட — (பல) வகையான; ஆய்வு இன்றி — (எப்பொழுது செய்யலாம் என்றெண்ணித் தாமதித்தற்கிட மான) ஆராய்ச்சி இல்லாமல்; வழிநினைந்து — வழி (ஏற்படும் என்று) நினைத்து; காணா ஆறு—காணாதவிதம் (போலும்).

## 8. நாலடியார்.

செ. 1. இளையன் — வாலிபன்; கிளை — பெருகும்; ஒறுக்கும் — வெல்லும்; மதுகை—தேகபலன்; உரன்—மனஉறுதி; பொறை—பொறுமை.

செ. 2. நட்டக்கால்—சினேகித்தால்; தேற்றா—தெளிவில்லாத—(மாசுடைய); ஆற்றும் துணையும்—பொறுக்குமளவும்; தூற்றாதே தூரவிடல்—(பிறரறியத்) தூற்றாமல் அவன் நட்பைத் தூரத்தில் விடுக.

செ. 3 வடுஇலா வையத்து—குற்றம் இல்லாத உலகத்தில்; மன்னிய மூன்றில்—நிலைபெற்றுள்ள (அறம், பொருள், இன்பம் என்னும்) மூன்றில்; நடுவணது எய்த—நடுவில் உள்ளதாகிய (பொருளை ஒருவன்) அடைந்தால்; இருதலையும்—இரண்டுபக்கத்திலுமுள்ள (அறம் இன்பம் என்னும்) இரண்டையும்; உலைபெய்து அடுவது—(கொல்லன்) உலைக்களத்திலிட்டுக் காய்ச்சுவது.

செ. 4. ஆ—பசு; உருவின—நிறமுடையன; பயந்த—கொடுத்த.

செ. 5. தெள்ளிதின் — விவேகத்தினால்; அமைவுடைய — (தமக்குப்) பொருந்தியவைகளை; குருகின்—அன்னத்தைப்போல.

செ. 6. அறிமின்—அறியுங்கள்; கூற்றம்—யமனை; போற்றுமின்—(சேராதபடி) பாதுகாவுங்கள்; கேண்மை—சினேகம்; பெறுமின்—ஏற்றுக்கொள்ளுங்கள்.

செ. 7. தொல் — பழமையான; ஒண்பொருள் — சிறந்த பொருட்செல்வம்; தவம்—ஒழுக்கம்; ஆள்வினை—முயற்சி.

---

## 7. சீராமர் தாலாட்டு.

செ. 1. மன்னு—நிலைபெற்ற; வாய்த்தவன் — அடையப்பெற்றவன்; செம்பொன் சேர் கன்னி நல் மா மதிள் புடைசூழ்—செம்பொற்றுகள் கொழிக்கும் கன்னிநதியும், அழகிய பெரிய மதிலும் எல்லையிற் சூழப்பெற்ற.

செ. 2. புண்டரீகம்—தாமரை; திண் திறலாள்—மிகுந்த பலமுடையவள்; உரம்—மார்பு; மனம் வழங்கும்—மனத்தில் (மாறாமல்) நிற்கும்; ஆள் உடையாய்—ஆளுதலை யுடையானே.

செ. 3. கொங்கு மலி—வாசம் நிறைந்த; குலமதலாய்—சிறந்தபுதல்வனே; கங்கையிலும் தீர்த்தம் மலி—கங்கையைப் பார்க்கிலும் (புனிதமான) தீர்த்தங்கள் மிகுந்த.

பக்கம்—143.

செ. 4. அயன் அவனை—பிரமன் (என்னும் படைத்தற் கடவுளாகிய) அவனை; மைதிலி—சீதை (மிதிலையிற் பிறந்தவள்); காமரம் — இசைப்பாட்டு; ஏ மருவும் சிலைவலவா—அம்பு கோத்தற்கான வில் (வித்தையில்) வல்லவனே.

செ. 5. படர்—மிகுதியான; ஆரா அன்பு—(பிறரால்) அனுபவிக்க முடியாத அன்பு; வரை—மலை; தார்—மாலை.

செ. 6. சிற்றவை—சிறிய தாயார்.

செ. 7. கால்—(நீர்க் கால்) ஆறு.

செ. 9. தளை அவிழும் நறும் குஞ்சி—முடிப்பவிழ்ந்த மணம்பொருந்திய சிகையையுடைய; களைமருங்கு கழுநீர் மலரும்—களைகட் சருகாக கழுநீர்ப்புஷ்பங்கள் மலரும்; இளையவர்கட்கு அருள் உடையாய் — தம்பிகளிடத்தே அன்புடையாய்.

செ. 10. ஏ வரி வெஞ்சிலை—அம்பு (செலுத்தற்குரிய நாணாற்) கட்டப்பட்ட கொடிய வில்.

செ. 11. கொல் நவிலும் வேல் வலவன்—கொல்லுதலைக் கூறும் (அதாவது குறிப்பிக்கும்) வேலைக் கையாள்வதில் வல்லவன்; குடை—(வெண்கொற்றக்) குடை (யை யுடைய); பாங்காய—(விஷ்ணுபிரானுக்கு) உரிமையான. ['நூல்' என்பது இங்கே செய்யுளைக் குறிக்கும். பாடியவர் தம் பெயரையும் பாடிய பொருளையும் பயனையும் இங்ஙனம் ஒரு செய்யுளிற் பாடி இறுதியிற் சேர்ப்பது மரபு.]

---

# 8. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.

**பக்கம்—144.**

செ. 1. சொன்னம்—சொர்ணம் — பொன் — பணம்; பன்ன—(பலபடப் புகழ்ந்து) பேச.

செ. 2. ஊன்—மாமிச(த்தாலாகிய உடல்).

செ. 3. திங்கள்—மாதம்.

செ. 5. வட்டில்—(தங்கத்) தட்டு; மார்—மார்பு (மரூஉ); முட்டச் சிறகிலிட்டு—(என் உடம்பு) முழுவதையும் (பட்சிகள் தம் குஞ்சுகளைச்) சிறகுக்குள் வைத்து(க் காப்பாற்றுவதுபோல அணைத்துவைத்து).

**பக்கம்—145.**

செ. 6. தாழாமே—குறைவு வராமல்; மெய்யிலே—உடம்பிலே.

செ. 7. புமான்—ஆண்மகன்.

செ. 8. (சிவபெருமான்) முன்னையிட்டதீ; (அனுமார்) பின்னையிட்டதீ.

செ. 10. மாகம்—ஆகாயம்.

செ. 11. சந்ததமும்—எப்பொழுதும்.

செ. 12. நீறுநாள்—சாம்பலாநாள்; பால் தெளித்தல், இறந்தவரைத் தகனஞ்செய்த மறுநாள் செய்யப்படும் கருமம்: 'காடாற்றல்' என்பதும் மரபு.

---

# 9. தமிழ்.

**பக்கம்—146.**

செ. 1. மறை — வேதம் ; இளந்த — சொன்ன ; முகிழ் — அரும்பு (இங்கே 'மதிமுகிழ்' என்றது பிறைச் சந்திரனை) ; வேணி—சடை ; அறை—சப்திக்கும் அல்லது மோதும் ; வரைப்பு—எல்லை ; உறழ்தரு—ஒப்புமை பெற்றிருக்கும்.

செ. 2. தொண்டர் நாதன்—சிவபெருமான் ; கன்னி தண் தமிழ்—புதுமையும் குளிர்ச்சியுமுடைய தமிழ் (அதாவது பழமையாய் வழக்கு வீழ்ந்தொழியாததும், செவி சுடும் கடிய ஓசையில்லாததுமான தமிழ்) ; மறுபுலர்—வேறிடம்.

செ. 3. குடமுனி—அகஸ்தியர் ; வற்புறுத்தார்—கற்பித்தார் ; கொல் ஏற்று பாகர்—கொல்லும் ரிஷபத்தை வாகனமாக உடைய (பார்வதி)பாகர் ; கணித்து—அளவிட்டு.

செ. 4. நீர் அறிதலாவது, வைகையில் சம்பந்தர் இட்ட ஏடு எதிரேறி வந்தது ; நெருப்பறிதலும் அவ்வாறே சம்பந்தர் தீயில் இட்ட ஏடு எரியாதிருந்தது.

செ. 5. விளங்கு இழை பகிர்ந்த மெய் உடை முக்கண் காரணன்—பிரகாசிக்கும் ஆபரணமணிந்த (பார்வதி தேவியைப்) பாதி சரீரத்தில் உடையவரும், மூன்று கண்கள் உடையவரும், ஆதி காரணருமான சிவபெருமான் ; ஆரணம்—வேதம் ; ஆதிசீர்—(தாம் உரைத்த வேதத்திற்கும் யாவற்றிற்கும்) மூலமான (சிவபெருமான்) சிறப்பை ; பரவும்—போற்றும் ; கரைந்துக—கரைந்து உருக ; தொடு—தோண்டப்படும் ; கேணியின்—கேணியைப் போல் ; விதிர்விதிர்ப்பு—நடுக்கம் ; மன்பதை—மனிதர்கள்.

3416

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY, MADRAS—B. 10278.

# தமிழ் இலக்கியத் திரட்டு.

திவான்பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

(எப்.ஆர்.எச்.எஸ்.—லண்டன் :) (எம்.ஆர்.ஏ.எஸ்.—லண்டன் :) தொகுத்தது.

நம் முன்னோர் தேடிவைத்த எல்லையற்ற செந்தமிழ்ச் செல்வக் களஞ்சியத்தின் உட்புகுந்து உள்ளதை அனுபவிக்க விரும்பும் மாணவர்க்கு இது பொக்கிஷத் திறவுகோலாகும்.

இத்தொகுதியில் இதுகாறும் இரண்டுபகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றுள், பூண்டி—அரங்கநாத முதலியார், எம்.ஏ., ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை, தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ., திவான் பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை, வித்வான்—தாண்டவராய முதலியார், பி. விஜயரங்க முதலியார், எப்.எம்.யு., திவான்பஹதூர்—வி. கிருஷ்ண மாச்சாரியார், பி. வி. ராமசாமி ராஜு, பி.ஏ. முதலிய பிரபல வித்வசிகாமணிகள் எழுதிய பிற்கால இலக்கியங்களினின்றும், — நளவெண்பா, குசேலோபாக்கியானம், கபிலரகவல், அரிச்சந்திரபுராணம், தாயுமானவர், பட்டினத்தார், தேவாரம், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், அருட்பா, வில்லிபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடி, நான்மணி, ஏலாதி, திரிகடுகம், நீதிநெறிவிளக்கம் முதலிய முற்கால இலக்கியங்களினின்றும் இனிமையும், அருமையும், சுலபமுமான பல பகுதிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பகுதி I .... .... .... .... அணு 8.

(இதில், இராஜபக்தி, அறிவுவளர்ச்சி, சீதாகலியாணம், சகுந்தலை முதலிய 14 வசன பாடங்களும், 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

பகுதி II .... .... .... .... அணு 8.

(இதில், கல்வியின் பெருமை, மந்தரையின் சூழ்ச்சி, போலிவைத்தியர் முதலிய 15 வசனபாடங்களும் 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

குறிப்பு : இவை நான்காவது ஐந்தாவது பாரங்களுக்கு ஏற்றவை

திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

## தமிழ் இலக்கண விளையாட்டு.

## PICTORIAL PLAY GRAMMAR.

பாகம்—1. நான்காம் வகுப்புக்கு.

பாகம்—2. ஐந்தாம் வகுப்புக்கு.

மிகவும் சலிப்பைத் தரக்கூடிய தமிழ் இலக்கண ஞானத்தைச் சிறு பிள்ளைகளுக்கு விளையாட்டுப்போல இன்பம் பயக்குமாறு போதிப்பதற்கென்றே இவை எழுதப்பெற்றுள்ளன. இவற்றால் பிள்ளைகளுக்கு இலக்கணங் கற்பதில் ஊக்கமும் உற்சாகமும் உண்டாவது திண்ணம். அச்சிலிருக்கின்றன.